# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

**ஜனவரி – 2016**

**AYIDHA EZHUTHU**

காலாண்டிதழ்

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550




| visit us: www.pallavipathippakam.in |

ISSN : 2278-7550

2278-7550

**பல்லவி பதிப்பகம்**

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1



**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**சிறப்பாசிரியர்**
**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**ஆசிரியர்**
**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**
**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**துணை ஆசிரியர்கள்**
**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**பதிப்பாசிரியர்**
**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.








**0424**
**4562211,2263197**
**94422 51549**
**89251 45386**

***pallavipublications@gmail.com***
***ayidhaezhuthu@gmail.com***

**பல்லவி பதிப்பகம்**

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.

# பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்!

பழையன கழிதலும்
புதியன புகுதலும் நலமேயாம்
வாழையடி வாழையாய் வந்த
நல்லதோர் முதுமொழியாம்
தைமாதமதில் தைதிருநாள் பொங்கலதில்
விடியும் வேளை நாமெழுந்து நீராடி
நாற்காலைப் பொழுதினிலே
பொங்கல் விழா தனிப்பெருந்
திருவிழாக்கோலம் பூணுகிறது.
தைப்பொங்கல் திருவிழா என்பது
ஒரு சமய விழா அல்ல!
தமிழரின் பண்பாட்டு விழா!
தமிழரின் தமிழ்ப் புத்தாண்டு
கொண்டாடும் நாள்!
வாசகர்களுக்கு இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!




## ஆலோசனைக் குழு — ADVISORY BOARD

**முனைவர் உ. அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

**முனைவர் ப.சு. மூவேந்தன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் இரா. விஜயராணி**
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

**முனைவர் பா. ஆரோக்கியதாஸ்**
போப் ஜான் பால் கல்வியியல் கல்லூரி, புதுச்சேரி.

**முனைவர் மு. அமிர்தகடேசுவரர்**
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

திரு.செல்லத்துரைசுதர்சன்,எஸ்.எம்.ஜெயசீலன்
பேராதனைப் பல்கலைக் கழகம், இலங்கை.

**வெ.ச.சீனிவாசன்**
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**இரா. சந்திரசேகரன்**
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

**முனைவர் க.தமிழ்ச் செல்வன்**
வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்.

**முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன்**
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.

**முனைவர் வ.முகம்மது யூனுஸ்**
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.

**முனைவர் துரை.மணிகண்டன்**
பாரதிதாசன் உறுப்பு கல்லூரி, திருச்சி.

**முனைவர் தா.க. அனுராதா**
**முனைவர் ஷே. நாகூர்கனி**
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

ஆய்த எழுத்து - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013 ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**1. பொருள்:** சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

**2. அளவு:** எம்.எஸ். வேர்டில் (MS Word),ல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில்(Lining Space), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஆறு பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

**3. முகவரி:** கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரை முடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெற வேண்டும்.

**4. கட்டுரை அனுப்பும் முறை:** கட்டுரையை pallavipublications@gmail.com (Or) ayidhaezhuthu @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

**5.** தனி இதழ் விலை ரூ. 200/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 4 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | ரூ. 800/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம்/ கல்வி நிறுவனங்கள்/ | ரூ. 1000/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 5000/- |
| புரவலர் கட்டணம் | ரூ. 10, 000/- |

**6. கட்டணம் செலுத்தும் முறை:** உறுப்பினர் (சந்தா)/ கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக(DD) ஈரோட்டில் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் **(Payable at ERODE)** அனுப்பலாம். இணையவழி, **(Net Banking),** அலைபேசி **(Mobile Banking)** வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம். **A/C Name: PALLAVI PATHIPPAKAM. A/C Type: CA, A/C No : 33679969977. Bank: STATE BANK OF INDIA, Sathy Road, Erode -638 011. IFSC : SBIN0016100.**


## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.
பேசி: 0424-2251545, 94422 51549,
97919 51549.
மின்னஞ்சல்: ayidhaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம்(Download) செய்து கொள்ளலாம்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1.இலக்கியங்களில் மகளிர் நிலை | - | முனைவர் மோ.ஜ.மகேஸ்வரி | 6 |
| 2.உளவியல் நோக்கில் ஔவையார் பாடல்கள்(குறுந்தொகை) | - | க..கோப்பெருந்தேவி | 10 |
| 3..புறமாகிய அகம் கொடுத்தல் பெருதல் எனும் அதிகாரத்தின் வழி | - | முனைவர்.சு.அரங்கநாதன் | 13 |
| 4.தொல்காப்பியத்தில் களவும் கந்தருவ மணமும் | - | மு.க.மகேஸ்வரி | 16 |
| 5.தெருக்கூத்தும் நம்பிக்கையும் | - | கோ.சுப்பிரமணியன் | 19 |
| 6.கதாப்பாத்திர உருவாக்கம் நாவலிலிருந்து சினிமாவுக்கு | - | கு.விஜயலட்சுமி | 22 |
| 7.பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் இல்லறம் | - | மு.க.ராதிகா | 25 |
| 8.வாலியின் திரையிசைப் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள் | - | இரா.சுரேஸ் | 27 |
| 9.இறையனார் அகப்பொருளும் பிற அகப்பொருள் நூல்களும் | - | முனைவர்.து.சேகர்,கா.செந்தில் | 31 |
| 10.வைரமுத்துவின் கவிதைகளில் சமூகச்சித்தரிப்பு | - | மு.ம.பிரேமா | 34 |
| 11.திருமங்கையாழ்வாரின் பாடல்களில் கட்டளையடி | - | மு.எ.கற்பகம் | 37 |
| 12.நாட்டுப்புற விளையாட்டுகள் | - | வி.ம.ரம்யா | 40 |
| 13.அம்பை படைப்புகளில் பெண்ணியம் | - | சி..பிரபாவதி | 42 |
| 14.இனியவை நாற்பது காட்டும் சமுதாய நெறிகள் | - | க.ஜெனிபர் | 45 |
| 15.நல்லாதனார் பாடல்களில் பெண் | - | த.ரேணுகா | 51 |
| 16.தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாடு | - | உ..அலிபாவா | 55 |
| 17.சி.ஆர்.ரவீந்தரனின் மணிபேராவில் கர்ணப்பரம் -பரைக் கதைகள் கூறும் வாழ்வியல் சிந்தனைகள் | - | பெ.அசோகன் | 59 |
| 18.சு.சமுத்திரத்தின் புதினங்களில் புரட்சிப் பெண்பாத்திரங்கள் | - | தா.பேகம் | 62 |
| 19.ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் சமய நெறி | - | முனைவர்.க.இரமேஸ் சு.கணேசன் | 65 |
| 20.சங்ககால நிலப்பாகுபாடும் தொழில்களும் | - | s.கனகராஜ் | 68 |

21.எஸ்.ரா.வின் சாக்கியனின் பல் சிறுகதையை முன் வைத்து - முனைவர்.அ.மரியசெபஸ்தியான் 72

22.போகர் சித்தர் பாடல்களின் அறிவியல் - க.இரமேஷ் 75

23.அமுதத்தமிழும் அப்துல்ரகுமானும் - கோ.சாந்தலட்சுமி 80

24.அண்ணாவின் சிறுகதைகளில் தொழிலாளர் சிந்தனைகள். - ஆ.ராஜசேகர் 82

25.பெண் கவிஞர்களின் நவீனக் கவிதைப் புனைவுகள். - மு.அபிராமி 85

26.மனுமுறை கண்ட வாசகத்தில் இராமலிங்க வள்ளலாரின் உரைநடைச் சிறப்பு. - மு.மு.அமிர்தகடேசுவரர் 88

27.புலம்பெயர்ந்தோர் தமிழ்ச் சிறுகதைகளில் கல்வி, பணி வாய்ப்பு, பணியிடம் தொடர்பான இன்னல்கள். - ஜெ.அனிதா 92

28.புறநானூற்றில் மானுடநேயம் - வி.நிஷா 96

29.நான்மணிக்கடிகையும் வாழ்வியல்மும் – முனைவர் ப. பூஞ்சோலை (மற்றும்) முனைவர் போ.சத்தியமூர்த்தி 98

30.சங்க இலக்கியங்களில் சோழர்களின் ஊர்ப்பெயரும் ஆட்சிச்சிறப்பும் - முனைவர் கே.எம்.சுப்பிரமணியம் 105

# இலக்கியங்களில் மகளிர் நிலை

**முனைவர் மோ.ஜ.மகேஸ்வரி,**
**தமிழ்த்துறை,**
**ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி**
**(தன்னாட்சி),**
**சேலம்** - 636 016.

**முன்னுரை**

**“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா’’**

என்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை. ஆனால், இன்றோ பெண்களாகப் பிறப்பதே பாவம் என்ற நிலை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் ஆணாதிக்கம் என்றே சொல்லலாம். சங்க காலத்தில் பெண்களுக்கு இருந்த மதிப்பு தற்பொழுது இல்லை என்றே கூறலாம். சங்க கால முதல் தற்காலம் வரையிலுள்ள இலக்கியங்களில் காணப்படும் பெண்களின் நிலைகளைக் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**புறநானூறு**

சங்க இலக்கியங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. அக்காலக்கட்டத்தில் அகப்பாடல்களையும் புறப்பாடல்களையும் மிகுதியாகப் பாடியவர் யார் என்று சொன்னால் ஔவையார் தான். ஔவையாரிடம் புலமையும், தைரியமும், நாவன்மையும் இருந்த காரணத்தினால் தான் அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே ஏற்பட இருந்த போரை தடுக்கமுடிந்தது. மதிப்பும் தன்னம்பிக்கைக்கும் உரியவராக விளங்கிய ஔவையாரை அதியமான் தன் சார்பில் தூது செல்ல அனுப்பினார். இவர்தான் முதல் பெண் தூதர் என்றே கூறலாம்.

அதியமான் தனக்கு அரிதாக கிடைத்த நெல்லிக் கனியை தான் உண்டு வாழ்வதைவிட தமிழ்ப்புலமையுடைய ஔவையார் நீண்ட நாள் வாழ்வதே நல்லது என நினைத்து வழங்கினான்.

“................................

**நீலமணி மிடற்று ஒருவன் போல்**

**மன்னுக பெரும நீயே**

...................................

**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**

……………………………..

**சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே''**

என்ற பாடலில் ஔவையார் நெல்லிக்கனியைக் கொடுத்த அதியமானைப் போற்றுகின்றார். இந்த காலத்தில் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நட்பு இருந்தால் அதை காதல் என்று கூறிவிடுவார்கள். ஆனால், அதியமானும் ஔவையாரும் சிறந்த நட்புக்கு இலக்கணமாக விளங்கினார்கள் என்றால் அந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்தவர்களின் நல்ல எண்ணங்கள் என்றே கூறலாம்.

**சிலப்பதிகாரம்**

பெண்ணுக்குப் பெருமை தரும் முதல் தமிழ்காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்'' என்ற வரிக்கேற்ப கண்ணகியை அனைவரும் போற்றுகின்றனர். கண்ணகி காப்பியத்தொடக்கம் முதல் இறுதிவரை அனைவராலும் போற்றப்படுகிறாள். "மாதர் தொழுதேத்தும் குணம் கொண்ட அவளை சாலி ஒரு மீன் தகையாள்'' என்றே இளங்கோ குறிப்பிடுகின்றார். தெய்வமேறப் பெற்ற சாலினி "இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி தென்றமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து ஒருமா மணியாய் உலகில் தோன்றிய திருமாமணி'' என்று கூறுகின்றாள். பிறகடவுளின் பெயரை கூறாத கவுந்தியடிகள் கூட தன்னிலை மறந்து "கற்புக் கடம்பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம் கண்டிலமால்'' என்று போற்றுகின்றார். கண்ணகி பேசா மடந்தையாக இருந்தவள் தன் கணவனாகிய கோவலன் இறந்தவுடன் கோபத்துடன் மன்னனிடம் சென்று முறையிட்டு மதுரையை அழிக்கின்றாள். இதன் வாயிலாக கண்ணகியின் கற்பின் மேன்மை புலப்படுகின்றது.

மாதவி கணிகையர் குலத்தில் பிறந்து இருந்தாலும் கூட ஒழுக்க நெறியிலும், கற்பு மாண்பிலும் கண்ணகிக்கு இணையாப் பேசக்கூடியவளாவாள். கோவலன் பாடிய கானல் வரியில் கற்பு நெறி பெண்களுக்கேயுரியது என்னும் கருத்து தோன்றப் பாடினான். அவனுக்கு பதிலளிப்பது போல் ஆடவரின் கற்பொழுக்கமே பெண் கற்புக்குக் காவலாகும் என்ற கருத்துத்தோன்ற "கருங்கயல் கண் விழித்து ஒங்கி நடந்த எல்லாம் நின் கணவன் திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன், வாழி காவேரி'' என்று பாடினாள். இதன் மூலம் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான கற்புநெறி வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். மாதவி கோவலன்பால் உண்மைக் காதல் கொண்டிருந்தமையால் உலகம் போற்றும் பேரறச் செல்வியாகிய மணிமேகலையை ஈன்றெடுக்கின்றாள். சிலப்பதிகாரத்தில் கற்பில் கண்ணகியும், ஒழுக்கத்தில் மாதவியும் சிறந்து விளங்கினார்கள் என்பது புலனாகின்றது.

**சீவகசிந்தாமணி**

கி.பி. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய காப்பியம் சீவகசிந்தாமணி ஆகும். சமண சமயம் பெண் கல்வியினைப் போற்றியதற்கு சீவகசிந்தாமணியே சான்றாக அமைகின்றது. சிந்தாமணியில் நிகழக்கூடிய திருமணங்கள் அனைத்தும் தமிழ் அகத்திணை கொள்கையான களவு மணம் என்ற அடிப்படையில் நிகழ்கின்றன. தன் கணவனைத் தானே தெரிவு செய்யும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. திருமணங்கள் பெண்களின் திறமை, கல்வி இவற்றை அடிப்படையாக வைத்து நிகழ்த்தப் பெறுகின்றன. சீவகன் யாழ் போட்டியில் வென்று காந்தருவதத்தையைத் திருமணம் செய்து கட்டியங்காரன் யானையை அடக்கி குணமாலையைக் காப்பாற்றினான். பிறகு குணமாலையின் தந்தை குபேரமித்திரன் சீவகனுக்கு தன் மகளைத் திருமணம் செய்து வைக்கிறான். இவ்வாறு சீவகன் எட்டுத் திருமணங்களை செய்வதாக திருதக்கதேவர் படைத்துள்ளார்.

**பெரியபுராணம்**

சைவ சமயத்தைப் பரப்பவும், சிவனின் பெருமையை உலகிற்குக் காட்டவும், அவனைப் பணிந்து அவன் தாள் வணங்கி இன்புறும் சிவனடியார்களின் பக்தியை சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியிருக்கின்றார். பெண் பிறவிக்கு வீடு பேறு இல்லை என்பது சமணர் கொள்கையாக இருந்தது. இந்நிலையில் காரைக்கால் அம்மையார் ஆண்டவனின் அருள்வேண்டி வணங்கி வீடு பேற்றை எய்தியுள்ளார். இல்லத்தில் ஈடுபாடு இருந்தும், கணவனை நாட்டங்கொள்ளச் செய்யும் எழில் மேனியைப் பெற்றிருந்தும் இல்லறத்தில் தொடர்ந்து ஈடுபடமுடியாத நிலை புனிதவதிக்கு ஏற்படுகின்றது. இதற்கு காரணம் ஆழ்ந்த இறைபற்று எனலாம். இந்த இறைபற்றினால் தான் கணவன் இவளைவிட்டு நீங்குவதற்கு காரணமாகின்றது. மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு தன் மகளுக்கு புனிதவதி என்று பெயர் வைத்துக்கொண்டு இல்லற வாழ்க்கையை நடத்துகின்றான். இவளை தனிமைபடுத்திவிடுகின்றான். புனிதவதி தன் அழகு மிளிரும் உடலுடன் இருந்தால் இச்சமுதாயம் தன்னை

பழிக்கு ஆளாக்கும் என்றெண்ணி ஊனுடம்பைத் தவிர்க்கும்படி இறைவனிடம் வேண்டி எலும்புக்கூடாக மாறுகின்றாள். இறுதியில் புனிதவதி கயிலாய மலைக்கு தலையினால் நடந்து செல்கின்றாள்.

புனிதவதியைக் கண்ட சிவன் ‘அம்மையே’ என அழைக்க அம்மையார் அவரை ‘அப்பா’ என்று அழைத்து தன் தூய்மைத் தன்மையை நிரூபிக்கின்றார். மேலும், தன் கற்பை நிலைநாட்டத் தன் உருவத்தையே பலி கொடுக்கின்றார். ஆடவர் மட்டும் இறைவனிடம் பக்தி உடையவராகவும் முக்தியடைபவராகவும் இருப்பார்கள் என்பதை மாற்றி பெண்ணும் முக்தியடைவார்கள் என்பதை காரைக்காலம்மையார் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**கம்பராமாயணம்**

கம்பராமாயணத்தில் கம்பர் பல்வேறு நற்பண்புகளை ஒருங்கே இணைத்து கதைநாயகனான இராமனைப் படைத்திருப்பது போலவே சீதையை நற்பண்புடையவளாக கம்பர் காட்டுகின்றார். இராமன் கைகேயினால் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லுகின்ற பொழுது இராமன் சீதையிடம் அரண்மனையில் இருக்கும் படி கூறுகின்றான். அதற்கு சீதை ‘நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு’ என்று கூறி இராமனுடன் செல்கின்றாள். கணவனோடு இருப்பது தான் மனைவிக்கு பெருமை என்பது இங்கு உணரமுடிகின்றது.

வனவாசத்தில் இருக்கின்ற பொழுது மாரீசன் அழகான மான்வடிவத்தில் வந்து சீதையின் மனதைக் கவர்கின்றான். இராமனை மான் பிடிக்க சீதை அனுப்புகின்றாள். இராமனால் மாரீசன் இறக்கின்றபொழுது ‘சீதா’ என்று கூறி இறக்கின்றான். சீதை இராமனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டது என்று கூறி இலட்சுமணனை அனுப்புகின்றாள். இலட்சுமணன் அரக்கர்களின் சூழ்ச்சி என்று கூறியும் சீதையின் மனம் ஏற்கவில்லை. கணவன் குரல் போல் ஒலித்த காரணத்தினால் இராமனுக்கு தீங்குநேரிட்டுவிட்டதென்று எண்ணி அச்சப்படுகின்றாள். அதனால் இலட்சுமணனை தவறாகப் பேசுகின்றாள். இலட்சுமணன் அண்ணனைத் தேடி செல்கின்றான்.

இராவணனால் சீதை கவரப்பட்டு அசோக வனத்தில் பத்து மாதம் சிறையிருக்கின்றாள். இராமன் இராவணனோடு போர் செய்து வெற்றிபெறுகின்றான். இராமன் சீதையின் கற்பின் திறத்தைச் சோதிக்க இலட்சுமணனை அனல் மூட்டச் செய்கின்றான். சீதை தீக்குளிக்கின்றாள்.

> **“அங்கியான் என்னை இவ்
> அன்னை கற்பு எனும்**
>
> **பொங்கு வெந் தீச்சுடப்
> பொறுக்கிலாமையால்**
>
> **இங்கு அணைந்தேன்’’**

என்ற பாடலில் கம்பர் சீதையின் கற்பின் கனல் அக்கினித்தேவனை சுட்டுவிடுகின்றது என்கிறார். சாதாரண மக்களிடம் இருக்கக்கூடிய சந்தேகப்புத்தி ஏகபத்தினிவிரதன் இராமனிடமும் இருப்பதை அறிய முடிகிறது. ஒவ்வொரு யுகத்திலும் பெண்கள் அதர்மம் அழியவும் தருமம் நிலைபெறவும் செய்திருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது.

**பாஞ்சாலிசபதம்**

கம்பருக்குப் பின் ஆயிரம் ஆண்டுகள் தமிழ்த்தாய் தவம் கிடந்து பெற்ற தெய்வப் புலவர் மகாகவி பாரதியார் ஆவார். பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி என்பவள் ஐவரின் மனைவியாக இருந்த போதிலும் அவள் பாரதத்தின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் தெய்வமாகத் திகழ்கின்றாள்.

ஆசையே அனைத்து துன்பத்திற்கும் காரணம். இது சான்றோர்களின் வாக்காகும். பாஞ்சாலி சபதம் ஆசையினால் எழுந்த துன்பியல் காப்பியமாகும். ‘பொம்பள சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்சாப் போச்சு’ என்ற பழமொழிகேற்ப. பாஞ்சாலி இந்திரப் பிரஸ்தத்தில் துரியோதனனின் தடுமாற்றத்தைப் பார்த்து சிரித்துவிடுகின்றாள். இதனால் கோபம் கொண்ட துரியோதனன் பாஞ்சாலியை பழிவாங்க நினைக்கின்றான். துரியோதனன் பாண்டவர்களை சூதாட வைத்து அனைத்தையும் இழக்கவைக்கின்றான். பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரிந்த போது கண்ணனிடம் சரணடைகின்றாள். அதனால் பல வண்ணச் சேலைகள் வளர்ந்துகொண்டே இருக்கிறது. இதனால் துச்சாதனன் சோர்வடைந்து விழுகின்றான். இறைவனை நம்பினால் கைவிடமாட்டார் என்பது பாஞ்சாலியின் மூலம் அறியலாம்.

பாஞ்சாலி பராசக்தியின் மீது ஆணையிட்டு உரைக்கின்றாள். அரசவையில் ஆன்றோரின் முன்னிலையில் அஞ்சாது நின்று, எனது நாட்டை அபகரித்து, என் நாயகரை அடிமை கொண்டு அன்னைக்குச் சமமான என்னையும் அவையில்

நிறுத்தி அவமானம் விளைவித்த துரியோதனன் துச்சாதனன்ஆகியோரின் இரத்தத்தை எண்ணையாகத் தடவி என் கூந்தலை வாரி முடிப்பேன் என்று கூறி சபதம் செய்கிறாள். சபதம் செய்தபடி கௌரவர்களை பாண்டவர்கள் அழிக்கின்றனர். இதன் மூலம் பெண் நினைத்ததை நடத்தி முடிக்கக் கூடிய ஆற்றல் இருப்பதை அறியலாம். மேலும், இறைவன் நல்லவர்களுக்குத் துணைபுரிவான் என்பதும் புலப்படுகிறது.

**புதுக்கவிதைகள்**

இருபதாம் நூற்றாண்டு கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் வரிசையில் கவிஞர் வைரமுத்துவும் சிறந்த இடத்தைப் பிடித்திருக்கின்றார். இவரது துணைவியார் பொன்மணி வைரமுத்து சிறந்த கவிஞராவார். இன்றைய பெண்களுக்கு பொறுமை, சகிப்புத்தன்மை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்றவை குறைந்து வருகின்றது. இதனை,

> **“வேகமாய்க் காதல்/ வேகமாய்ட்திருமணம்**
>
> **அதைவிட வேகமாய் விவாகரத்து**
>
> **இதுதான் நவயுகப் பெண்கள் சிலருக்கு**
>
> **நாகரிகமென்றால் அந்த நாகரீகம் உனக்கு வேண்டாம்’’**

என்ற கவிதையில் பொன்மணி இன்றைய பெண்கள் சுதந்திரம் என்ற பெயரில் அடிக்கடி விவாகரத்து கோரும் நிலை நிலவுகிறதைச் சுட்டிக்காட்டுகின்றார். கைப்பிடித்தவனோடு விட்டுக்கொடுத்து இறுதிவரை வாழ்ந்து காட்டுவதே சிறந்த பெண்ணுக்குரிய இலக்கணமாகும் என்கிறார். இத்தகையவளாகப் பெண் இருக்க வலியுறுத்துகிறார்.

இன்றைய பெண்கள் வேலைக்குப் போவது ஓர் அடிப்படை பொருளாதாரத் தேவையாக மாறிவிட்ட நிலையில் ஒரு நடுத்தரக் குடும்பத் தாயின் மன உளைச்சலையும் வேதனையும் பின்வரும் கவிதையில் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

> **“பேருந்தில் நசுங்கிப் / பிதுங்குகின்ற வேளையிலும்**
>
> **எடை கொஞ்சம் இழந்து/ இறங்குகின்ற வேளையிலும்**
>
> **கோப்புக்குள் மூழ்கிக்/ குடியிருக்கும் வேளையிலும்**
>
> **பூப்பூவாய் உனது முகம்/ புறப்பட்டு வரும் கண்ணே!**
>
> **................................................................/ .........................................**
>
> **தாயென்று காட்டுதற்கும்/தழுவி எடுப்பதற்கும்**
>
> **ஞாயிற்றுக்கிழமை வரும்/ நல்லவளே! கண்ணுறங்கு’’**

**முடிவுரை**

சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் ஔவையார், சிலம்பில் கண்ணகி, மாதவி, சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தை, குணமாலை, கம்பராமாயணத்தில் சீதை, பெரியபுராணத்தில் காரைக்காலம்மையார், பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி போன்ற பெண்கள் இருபதாம் நூற்றாண்டு பாரதி கண்ட புதுமை பெண்களாக மட்டுமில்லாமல் புரட்சிப் பெண்களாக விளங்கியிருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. புதுக்கவிதையில் வேலைக்குச் செல்கின்ற பெண்களின் வேதனையை வைரமுத்து படம் பிடித்துக் காட்டுகின்றார். பொன்மணி வைரமுத்து படித்த பெண்களிடம் வேகம் இருக்கிறது. விவேகம்இல்லை என்பதனை எடுத்துரைக்கின்றார். இதன் மூலம் பெண்கள் வாழ்வில் எவ்வளவு போராட்டங்களைச் சந்தித்து வருகிறார்கள் என்பது புலனாகின்றது.

# உளவியல் நோக்கில் ஔவையார் பாடல்கள் (குறுந்தொகை)

**க.கோப்பெருந்தேவி**
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
அ.வ.அ. கல்லூரி
மன்னன்பந்தல்.

**முன்னுரை :-**

தமிழின் சிறப்பையும் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பையும் உலகுக்கு பறைசாற்றும் உயரிய இலக்கியம் சங்க இலக்கியம் ஆகும். சங்ககாலப் புலவர்கள் காதல், வீரம், கொடை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு பாடல்களை .இயற்றியுள்ளனர் இப்பாடல்களில் இன்ப துன்ப உணர்வுகளின் வெளிப்பாடுகள் உரையாடல்களாகவோ, தனக்குத்தானே கூறிக் கொள்வனவாகவோ அமைந்தாலும் மனஉணர்வுகள் வலுப்பெற்றுள்ளன. இதனால் அகஇலக்கியங்கள் முழுமையும் உளவியல் சிந்தனை நிறைந்து காணப்படுவதை அறியலாம். மேலும், ஆண்களுக்கு இணையாக பெண்களும் கல்வி கற்றிருந்த நிலையினை சங்கப்பாடல்களில் பெண்பாற்புலவர்களின் பாடல்களும் இடம்பெற்றிருந்ததன் வழி உணரமுடிகிறது.

**சங்ககாலப் பெண்பாற்புலவர்கள் :-**

நானூற்று எழுபத்து மூன்று சங்கப்புலவர்களில் நாற்பத்து ஐந்து (45) புலவர்கள் பெண்பாற்புலவராக அறியப்படுகின்றனர். இவர்களில் இருபத்து ஐவர் அகப்பொருள் மட்டும் பாடினர். புறப்பொருள் மட்டும் பாடியோர் பதினொருவர், அகமும் புறமும் மட்டும் பாடியோர் ஒன்பதின்மர். பெண்பாற் புலவர்களில் ஔவையாரே அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். இவர் அகமும் புறமுமாக 59 பாடல்களைப் பாடியுள்ளார்.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய ஐந்து நூல்களில் பெண்பாற்புலவர்கள் இயற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் அகப்பொருள் துறையையே பெண்பாற்புலவர்கள் அதிகமாகப் பாடியுள்ளனர். அதிலும் தலைவி கூற்று பாடல்களே மிகுதியாக இடம்பெற்றுள்ளன ஏனெனில் தன்மையிடத்தில் தான் தன் ஆழமான உணர்வுகளை எளிதில் வெளிப்படுத்த இயலும்.

**ஔவையார் பாடல்கள் :-**

ஔவையார் அகமும் புறமும் பாடிய சங்கப்புலவர். அகவிலக்கியங்களில் நற்றிணையில் 7 பாடல்களும் (129, 187, 295, 371, 381, 390, 394), குறுந்தொகையில் 15 பாடல்களும் (15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388), அகநானூற்றில் 4 பாடல்களுமாக (11, 147, 273, 303) இருபத்தாறு பாடல்களைப் பாடியுள்ளார்.

ஆண் பெண் நட்பிற்கு சிறந்த இலக்கணமாக ஔவையாரும் அதியமானும் வாழ்ந்த நிலையை அவர்தம் புறப்பாடல் வழி உணரமுடிகிறது

புறநானூற்றில் 33 பாடல்களைப் பாடியுள்ளர்.

**அக இலக்கியமும் உளவியலும் :-**

மக்களின் காதல் வாழ்வை இன்றளவும் உலகிற்கு எடுத்துரைக்கும் வல்லமை படைத்தவை அகஇலக்கியங்கள். அக்காதல் வாழ்வில் களவு மற்றும் கற்பு காலத்தில் ஏற்பட்ட இன்ப துன்ப உணர்வுகளில் மகளிரே மிகுந்த பாதிப்புக்குள்ளாயினர். தலைவனின் பிரிவு, தலைவனைச் சந்திக்க இயலாத தனிமை, அத்தனிமைக்குக் காரணமான சுற்றம், தலைவனின் மாறுபட்ட செயல்பாடு (பரத்தையர் பிரிவு) போன்ற நிலைகளிலிருந்து விலக முடியாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதால் மனஇறுக்கம் ஏற்படுகின்றது. அந்த மன இறுக்கத்தின் வெளிப்பாடே உறக்கமின்மை, பகற்கனவு, திரிபுணர்ச்சி, மனவெழுச்சி வடிவாகவும் மனநோயாகவும் உருவெடுக்கிறது.

**மனக்காயம் :-**

தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேள்வியுற்ற பரத்தைக்குச் சினம் வந்தது அதனால் பரத்தையின் சுயமோகம் காயம்பட்டு விட்டது. இந்நிலையை மனக்காயம் (Trauma) என்று மன ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

> “பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
> யாம.்.தயர்கம் சேறுந்தான.்.து
> அஞ்சுவது உடையாளாயின் வெம்போர்
> ......................................................................
> கிளையொடுங் காக்கதன் கொழுநன்
> மார்பே” (குறுந். பா. 80)

இப்பாடல் தலைவி தன்னைப் பழித்துக் கூறியமைக்கு விடை கூறும் முகமாக பரத்தை கூற்றாக அமைகிறது. பரத்தை தலைவன் தன்னுடன் புனலாட வருவதை காண இயலாதவளாக தலைவி அஞ்சுவதாகவும். தலைவனைத் தன்னிடமிருந்து காக்க வேண்டுமாயின் வள்ளல் எழினி பகைவர்களிடமிருந்து தன் ஆநிரைக் கூட்டத்தைக் காத்ததுபோல் தலைவியும் தன் சுற்றத்தாரோடு வந்து தன் கணவனைக் காத்துக் கொள்ளட்டும் என்கிறாள்.

இந்நிலையைப் பற்றி “ஒவ்வொரு தனிநபருக்கும் எது உண்மை அல்லது யதார்த்தமோ அதைச் சுற்றியே வாழ்க்கையானது சுழல்கிறது. அதாவது என்னவென்று சொல்லமுடியாத ஒன்று, மேலும் நம்முடைய தனி நபருக்கான குறிகள் நம்மில் அனைவருக்கும் உண்டு. எது யதார்த்தமோ அல்லது உண்மையாக நமக்கு உள்ளதோ அது குறியீடாக வெளிப்படுகிறது” ஐ.க.பாண்டியன், (ஔவையின் உளவியல் ப்ராய்டு லெக்கானின் மன அலசல். ப.181) என்று உளவியலறிஞர் லெக்கான் குறிப்பிடுகின்றார்.மனக்காயத்தின் வெளிப்பாடாக பரத்தை தலைவியால் தலைவனை மீட்க முடியாது என்பதன் மூலம் தலைவியின் இடத்தில் தான் இருப்பதாக தன் நனவிலி ஆசையை வெளிப்படுத்துகிறாள்.

**உள்ளப் போராட்டம் :-**

ஒரு விருப்பத்தை நிறைவு செய்ய எண்ணும் மனம் உள்ளப்போராட்டத்திற்கு ஆளாகின்றது. தன் விருப்பம் சரியா தவறா என்றும் சமூகம் இதனை ஏற்றுக் கொள்ளுமா என்றும் போராட்டம் நிகழ்கிறது. உள்ளப் போராட்டம் பற்றி .்.ப்ராய்டு “ பாலுணர்ச்சிக்கு முரண்பட்ட பண்பாட்டு உணர்ச்சி உளப்போராட்டத்தில் பங்கு கொள்கின்றது. இவ்விரு உணர்வெழுச்சிகள் இயல்பிலேயே முரண்பட்டிருப்பதால் ஒற்றுமைக்கு வாய்ப்பின்றி ஒன்றை மற்றொன்று ஆளுகைக்கு உட்படுத்துவதில் முனைப்பாகச் செயல்படும். இதில் தத்தமது வலிமையைக் காட்ட தீவிரமாகப் போராடுகின்றன. இவ்விரண்டும் வலிமையானவை என்பது குறிப்பிடத்தக்கது. உடலியல் மனிதனுக்குப் பாலுணர்ச்சியும், சமூக மனிதனுக்குப் பண்பாட்டு உணர்ச்சியும் மூலங்களாக இருப்பதால் இவ்விரண்டில் எதையும் விட்டுக்கொடுக்க அதே வேளையில் முழுமையாகச் சார்ந்திருக்க முடியாத இக்கட்டான நிலை மனிதனுக்கு ஏற்படுகின்றது” (தி.கு. இரவிச்சந்திரன் சிக்மண்ட் .்.ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், ப.152) என்கிறார்.

தலைவன் பொருள் தேடச் செல்கிறான். செல்லும் வழியெல்லாம் தலைவியை நினைத்துக் கொண்டே செல்கின்றான். இதனால் தலைவி மீது ஏற்படும் காமஉணர்வானது வெள்ளப்பெருக்கு போன்று பெருகுகின்றது, எனினும் பொருள் தேடிச் சென்று இடையில் திரும்பமுடியாத இவ்வுலகத்து இயல்பினால் ஏற்படும் தலைவனின் உள்ளப் போராட்ட நிலையை

> “நினைத்தனென் அல்லனோ பெரிதே
> நினைத்து
> மருண்டனென் அல்லனோ,
> உலகத்துப்பண்பே
> ................. ................. ....................... .
> ........................
> அனைப் பெருங்காமம் ஈண்டுகடைக்
> கொளவே” (குறுந்.பா.99)- என்று

ஔவையார் திறம்பட விளக்குகின்றார்.

**திரிபுணர்ச்சி :-**

பிறழ்ந்த நடத்தைகளில் ஒன்றாக இருப்பது திரிபுணர்ச்சி. இத்திரிபுணர்ச்சி கொண்டோர் தற்செயலாக இயல்பான நிகழ்ச்சிகளிலும் மறைபொருளையே காண்பர். ஒருவர் அவரைச் சாதாரணமாகப் பார்ப்பதை எச்சரிக்கும் முறைப்பாகவும் இயல்பாக நடைபெறும் இயற்கை நிகழ்வுகளைத் தன்னைப் பயமுறுத்துவதாகவும் எண்ணுவர். இத்துன்புறு எண்ணங்கள் பெரும்பாலும் புறத்தெரியப்படுவனவாகவே வருகின்றது. “திரிபுக் காட்சிகள் என்பன இருக்கும் புலன் தூண்டல்களைத் தவறாகப் புலன் உணர்வதால் ஏற்படுவனவாகும்” (பெசன்ட் கிரீப்பர்ராஜ் (தமிழாக்கம்) பிறழ்நிலை உளவியல், ப.78)

பருவ மாற்றத்தின் அடிப்படையில் கார்ப்பருவம் இயல்பாக வருகின்றது. இந்நிலையில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைத் தேற்றிய தோழியிடம், பாம்புகள் இறந்துபடுமாறு மிகுந்த வேகத்தோடு இடிக்கப்படும் இடியோசையும், புயற் காற்றோடு வரும் பெருமழையும் தலைவனைப் பிரிந்திருக்கும் என் மீது

இரக்கம் காட்டாது துன்புறுத்துகின்றன என்கிறாள்.

"ஆர்அளி இலையோ நீயே? பேர்இசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர், அளியர், பெண்டிர் இஃது
எவனோ? " (குறுந் பா.158)

இயற்கை பருவ மாற்றமாகிய கார்காலம் தன்னைத் துன்புறுத்தவே வந்தது என நினைப்பது தலைவியின் திரிபுணர்ச்சி நிலையேயாகும்.

**மனவெழுச்சி :-**

மனிதனின் உள்ளமும் உடலும் எழுச்சிப்பெற்றுச் செயல்படுகின்ற நிலையை மனவெழுச்சி என்பர். இம்மனவெழுச்சி அகப்புறக் காரணிகளால் தோற்றுவிக்கப்படுகின்றன. அச்சம், கவலை, பிரிவு, துன்பம், உறக்கமின்மை போன்றவை இனிமையற்ற மனவெழுச்சிகளாகும்.

**கவலை :-**

கவலையால் உள்ள விறைப்பு நிலை, உள்ளவிறைப்பு நிலையால் கவலை என ஒன்று காரணமாகவும் மற்றொன்று விளைவாகவும் மாறி மாறி அமைகின்றது தலைவனுக்கு வழியிடை நேரும் துன்பம் பற்றிய அச்சம், இரவுக்குறி மறுத்ததால் தலைவனுக்கு நேரும் வருத்தம், தலைவியைக் காண விரும்பும் ஆர்வம் கலந்த அன்பு, கண்டால் பெறலாகும் இன்பம் பற்றிய விழைவு ஆகிய பல்வேறு உணர்வுகளின் மோதலில் உள்ள இறுக்கம் அடைகின்றது. அடிப்படை உணர்வுகள் சில தம்முன் ஒன்றை ஒன்று பாதித்துச் செயல்பட்டுச் சிக்கல் உருவாவதே கவலையாகும்.

மணம் புரியும் வேட்கையால் தலைவனை வரைவு கடாவுதற்காகத் தலைவியும் தோழியும் இரவுக்குறி மறுப்பர். அந்நிலையில் குறையுற்ற தலைவனின் மனக்குமுறலாக ஔவையார்,

"பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீங்கி
அரிதவா உற்றனை" (குறுந்.பா.29)

என்று குறிப்பிடுகின்றார். அன்புடையாராலேயே மறுக்கப்பட்டமையால் தலைவனால் எதிர்த்துப் போராட இயலவில்லை. ஒப்புக் கொண்டு ஏற்கவும் இயலவில்லை. தலைவனின் உள்ள நெருக்கடியானது மழைநீரால் உருகும் பச்சை மண் பாத்திரத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. ''கவலை என்பது வலிமையின்மையையும் காப்பின்மையையும் ஒத்துக் கொள்வதே'' (பெசன்ட் கிரீப்பர்ராஜ், பிறழ்நிலை உளவியல், ப.88) என்னும் உளவியல் கருத்தின் விளக்கமாக இவ்வுவமை விளங்குகிறது.

**உள்ளநிலை உடல்நிலையாதல் :-**

உள்ளத்தின் அமைதி இன்மை உடலின் அமைதியின்மையாக மாறுகிறது. இதனால் உறக்கமின்மை, வெப்பப் பெருமூச்சு போன்றவை ஏற்படுகின்றன.

உள்ளம் துன்புறும் போது உறக்கக்கேடு நிகழ்கிறது. உடல்நலக்கேடும், உறக்கமின்மையும் இணைகின்றன. தலைவன் மீது விருப்பு கொண்டு காதல் நோயால் துன்புறும் தலைவி உறக்கமின்றித் தவிக்கிறாள். அதனால், உறங்கும் ஊர்மக்கள் மீது சீற்றம் கொள்கிறாள். தலைவியின் செயல்பாட்டினையும் புலம்பும் நிலையினையும்

"ஆஅ! ஒல்! எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே"
(குறுந்.பா.28)

- என்று அழகுற காட்சிப்படுத்துகின்றார் ஔவையார்

**வெப்ப பெருமூச்சு :-**

துன்பநிலையிலும், உள்ளத்தின் ஆரவாரக் கிளர்ச்சியினால் நேரும் உடலின் இயலாமையாலும் வெப்ப பெருமூச்சு ஏற்படும். தலைவனின் பிரிவால் ஆற்றாது வருந்தும் தலைவி தோழியிடம் தலைவனின் பிரிவினை எண்ணினால் தன் உள்ளமானது வெந்துபோகிறது என்றும் அதற்கு அஞ்சினால் இத்துன்பம் தன்னால் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு உரியது அன்று என்றும் குறிப்பிடும்நிலையினை.

"உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது
இருப்பின் எம் அளவைத்து அன்றே
வருத்தி" (குறுந். பா. 102)

- என்ற பாடலடிகள் வழி அறியமுடிகின்றது

**முடிவுரை :-**

புறமனத்தில் உண்டாகும் இயல்பான ஆசைகளை, காமஉணர்வுகளை அடக்கி வைக்கும் போது அவை உள்ள இறுக்கமாக, உடல் பிணியாக, மனவெழுச்சியாக உருமாற்றம் பெறுகின்றன. உள்நோய்க்குத் தீர்வாக இயற்கை நிகழ்வைத் தன் நிலையோடு ஏற்றிக் கூறுகிறாள், தோழியிடம் தன் கவலையை, ஏக்கத்தை வெளிப்படுத்துகிறாள், தன் நிலை அறியாது இன்பமாக உறங்கும் ஊரினை சாடுகிறாள், உறக்கமின்றித் தவிக்கின்றாள். மேற்குறிப்பிட்ட செய்திகளை ஔவையார் பாடல்கள் புலப்படுத்துகின்றன. காதல் உணர்வினை ஔவையார் குறுந்தொகையில் தலைவி கூற்றாக 8 பாடல்களிலும், தலைவன் கூற்றாக 2 பாடல்களிலும், தோழி கூற்றாக 2 பாடல்களிலும், பரத்தை, இற்பரத்தை கூற்றாக தலா 1 பாடல்களிலுமாகப் பாடியுள்ளார் ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண்ணின் காம உணர்வை துணிவுடன் பாடிய பெண்பாற் புலவர்களுள் ஔவையாரும் ஒருவர் ஆவார்.

# புறமாகிய அகம் - கொடுத்தல் பெறுதல் எனும் அதிகாரத்தின் வழி

**முனைவர் சு. அரங்கநாதன்**
உதவிப்பேராசிரியர்,
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,
தமிழ்நாடு திறந்தநிலைப்
பல்கலைக்கழகம்,
சென்னை - 15

**த**மிழ் இலக்கியங்கள் எப்போதும் பன்முகப் பட்டவையாக இருக்கின்றன. காரணம் அதன் எடுத்துரைப்பு அழகியல். எந்த ஒரு இலக்கியத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் படைப்பாளனின் தனித்தவம், அல்லது தன்வயப்பட்ட அரசியல் புலப்பாடு வெளிப்படை அல்லது மறைபொருளாக இருப்பதை மறுக்க முடியாது. காரணம் படைப்பாளி (புலவர்) ஏதோ ஒரு காரணத்திற்காக ஒர அதிகார பீடத்தை சார்ந்தே இருந்திருக்கிறான். சில இடங்களில் அந்த அதிகார பீடத்தின் மீது சில கோபக் கணைகளைத் தொடத்திருக்கிறான். அதில் கூட படைப்பாளியின் சுயகொளரவம் அடங்கியிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இதை ஒருமுறை படிப்பதால் சொல்லிவிடவோ நிரூபித்துவிடவோ முடியாது. காரணம் அதை அவ்வளவு நேர்த்தியாக யாரும் வெளிப்படையாக விமரிசனம் செய்துவிடாதபடி தனது படைப்பை படைத்திருக்கிறான். அந்த அடிப்படையில் பத்துப்பாட்டு அகநூற்களை அனுகுகின்றபோது அது புறமாகவும், அகமாகவும் இருப்பது ஏன்? என்ற கேள்வியோடு மூத்த தமிழ் அறிஞர்கள் அவற்றை அகமாக கற்பிதம் செய்கின்றனர். இந்த குழப்பான சூழலை ஒரு படைப்பாளி தன் படைப்பில் கொண்டவருவதன் நோக்கம் என்ன என்பதை தெளிவுபடுத்தும் போதுதான் அந்த மாதிரியான இலக்கிய உத்தியை நாம் புரிந்து கொள்ள முடியும்.

சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை அவை ஒரே காலகட்டத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் படைக்கப்பட்டவை அல்ல. ஒரு கவிதைக்கும் மற்றொரு கவிதைக்கும் கால இடைவெளி என்பது சில நூறு ஆண்டுகள் என்று கூட சொல்லப்படுகிறது. ஆனால் அதன் அடிப்படையிலிருந்து அது மாற்றங்கொள்ளவில்லை. காரணம் அன்று புலவர்கள் ஒன்று கூடி ஒரு அதிகாரத்தின் கீழிலிருந்து தமது திறமையை அரங்கேற்றியும், விமர்சித்தும் வந்து உள்ளனர். அதற்கான அகப்புறச் சான்றுகள் நமக்கு ஏராளமாகக் கிடைக்கின்றன.

இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விஷயத்தை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய நான்கும் அகம்பற்றியது. இதில் நெடுநல்வாடை மட்டுமே அகம்புறம் இரண்டும் கலந்த நூல் என்று வித்துவான் எம். நாராயணவேலுப்பிள்ளை குறிப்பிடுகிறார். பத்துப்பாட்டில் உள்ள ஒவ்வொரு நூலாகும். பத்துப்பாட்டு புறநூற்கள் ஒரு கொடையாளனின் புகழைப் பாடுபவையாக அடிப்படையில் உள்ளன. அவை வெளித்தோற்றத்தில் கொடை பெற விழைவோருக்கு

கொடையாளனின் முகவரியை அடைய வழிகாட்டுவதான அமைப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது. அதே அடிப்படையை பத்துப்பாட்டு அகநூற்களிலும் தேட முடியாது. மாறாக அதிலிருந்து சற்று மாறுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக பட்டினப்பாலையை இங்கே எடுத்துக்கொள்வோம்.

அக நூற்களில் குறிஞ்சிப்பாட்டைத் தவிர்த்து ஏனைய மூன்றினையும் நோக்குகிறபோது சில நுண் வேறுபாடுகளுடன் ஒன்றுபட்டே இருப்பதைப் பார்க்கமுடிகிறது. அதாவது, இதில் பட்டினப்பாலை தனித்துவம் பெற்று விளங்குகிறது. நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு இரண்டும் மழையோடு தொடங்குகிறது.

வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ

பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென

என்று நெடுநல்வாடையும்,

நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு

வலம் புரி பொறித்த மாதாங்கு தடக்கை

என்று முல்லைப்பாட்டும் தொடங்குகிறது. ஆனால் பட்டினப்பாலை சற்று வேறுபடுவதைப் பார்க்கிறோம். இங்கே காவிரியின் வற்றா சிறப்பு சொல்லப்படுகிறது. அதாவது, குற்றம் இல்லாத புகழையுடைய விளங்கும் வெள்ளிமீன், தான் நிற்பதற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்திசையில் சென்றாலும், தன்னைப் பாடிய நீர்த்துளியையே உணவாக உடைய வானம் பாடி என்ற பறவை வருந்த மழை பெய்யாமற் போக, மேகம் மழை பெய்யாது வற்கடம் உண்டாயினும், தான் பொய்க்காமல் நீர்ப்பெருக்கொடு ஓடிவரும் குடகு மலையில் தலையையுடைய கடலிடத்தில் புகும் காவிரியாறு நீர் பரவிக் கரையில் பொன்னைச் சேர்க்கும் என்று வருகிறது.

வசை இல் புகழ் வயங்கு வெண்மீன்

தீத் தெறுவின் கவின் பாடி. (ப.பாலை 1-10)

இப்படி தொடங்கினாலும் இயற்கையைப் பாடக்கூடிய ஒரு பொது மரபு இங்கே வெளிப்படுகிறது. இதனைத் தொடர்ந்து காவிரி, மருதவளம், பகையற்ற ஊர்கள், தோட்டங்கள், பூம்பொழில்கள், பொய்கைகள், ஏரிகள், அறம் பொருந்திய அட்டிற் சாலைகள், எருத்துச் சாலை, தவப்பள்ளிகள், மறவர் செய்கை, மாதவர் இருக்கை, வருணன் வழிபாடு என்று வருகிறது. அதோடு நீராடல், இரவு இன்ப நிகழ்ச்சிகள் என்றும் வருகிறது. அதாவது, தம் கணவரைக் கூடிய மடப்பம் பொருந்திய மகளிர் அப்புணர்ச்சிக்குப் பின்னர் தாம் முன்பு களைந்து நீக்கிய பட்டாடையைத் தவிர்த்துத் தம் கணவர் ஆடையை உடுப்பர் என இல்லற மகிழ்ச்சி சொல்லப்படுகிறது.

துணைப் புணர்ந்த மட மங்கையர்

பட்டு நீக்கித் துகில் உடுத்தும்

மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்

மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்

மகளிர் கோதை மைந்தர் மலையவும்
(பட்டினப்பாலை 106-110)

இதனைத் தொடர்ந்து உலகு செய்வோர், சுங்கம் வாங்குபவர் இயல்பு, கடைத் தெரு, பல்வேறு கொடிகள், பிறகொடிகள், பலபொருள்கள், வேளாளர் குடிச்சிறப்பு, வணிகர், பட்டினம் சிறப்பு என்று பட்டினப்பாலை பல நிலைகளைக் கடந்து வருகிறது. உலகத்தில் உள்ள பல்வேறு மக்கள் கூட்டங்களுடன் பல நாடுகளிலும் போய் வேறு வேறான உயர்ந்த அறிவுகள் நிரம்பப் பெற்ற சுற்றத்தையுடைய சான்றோர், விழாக் கொண்டாடும் பழைய ஓர் ஊரிலே போய் ஒன்றாகக் கூடினாற் போல், பல நாட்டுக்கும் போய்ப் பழகுதல் காரணமாகத் தம் தம் தாய் மொழியே அல்லாது வேறு மொழி அறிவும் பெருகப் பெற்றுத் தம் நாட்டினின்று வந்த வணிகர் தன் கண் வாழும் மக்களொடு அன்பால் உள்ளம் கலந்து இனிதாக வாழ்வதற்கு இடமான குறையாத மற்ற சிறப்புகளையும் உடைய காவிரிப் பூம்பட்டினம் என்கிறார் ஆசிரியர்.

'வேறு வேறு உயர்ந்த முது வாய் ஒக்கல்

சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு

மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப்

புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்
(பட்டினப்பாலை - 113-116)

முதல் வரி தொடங்கி இதுவரை பல்வேறு விதமான வருணனைகள் வருவதைப் பார்க்கிறோம். நாட்டு வளம், மக்களின் மகிழ்ச்சி, இயற்கையின் செழுமை என பல்வேறு நிறைவுகள் பேசப்படுகிறது. இதனைத் தொடர்ந்து சுங்கம் வாங்குபவர் இயல்பு, கடைத் தெரு நிகழ்வுகள், பல்வேறு கொடிகள், பிற கொடிகள், பல பொருள்கள், வேளாளர் குடிச்சிறப்பு, வணிகர், முட்டாச் சிறப்பின் பட்டினம் என்று வருகிறது. இதுவரை முழுக்க முழுக்க புறம் சார்ந்த விசயமாக வர அதனை அடுத்த இரண்டு வரிகள் கவனிக்கத்தக்கது.

புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்

வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய

வாரேன் வாழிய நெஞ்சே கூர் உகிர்க்

என்று வருகிறது. அதாவது, குறைவு இல்லாத காவிரிப் பூம்பட்டினத்தையே எனக்கு உரியதாய் நான் பெறுவதாயினும் நீண்ட கரிய கூந்தலையுடைய விளங்கும் அணியை அணிந்த இவள் இங்கு என்னைப் பிரிந்திருக்க, யான் நின்னுடன் உடன்பட்டுக் கூட வருவேன் அல்லேன். என் நெஞ்சே, நீ வாழ்க! என்கிறான். இதில் காவேரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும், அங்கு வாழும் மக்களின் நிலையும் சொல்லப்படுகிறது. இதில் முழுக்க முழுக்க கரிகாற் பெருவளத்தானின் ஆட்சித்திறன் காட்டப்படுகிறது. அமைதியான ஆரவாரம் இல்லாத இந்த வாழ்க்கை சொல்லப்படுவதன் உள்நோக்கம் கரிகாற்பெருவளத்தானை நேரிடையாகப் பாராட்டாமல் அகத்தின் வழியே பாராட்டும் ஒருமரபாகத்தான் பார்க்கமுடிகிறது. அதற்கு அடுத்த வரிகள் 221 முதல் 295 வரை சிறையினின்று தப்பித் தாயம் பெறுதல், உழிஞைப் போர்செய்தல், மருதநிலம் பாழாதல், மன்றங்கள் பாழாயின, பகைவர் நாடு அழித்தமை, எண்ணியதை முடிக்கும் திறன், வெற்றிச் செயல்கள், நாட்டைப் பண்படுத்தல், இன்பமாக இருத்தல் போன்ற தொடர் நிகழ்வுகள் சொல்லப்படுகிறது. இப்படி சோழ நாட்டின் வளமும், அமைதியான வாழ்க்கை முறை ஒரு பக்கமும், மறுபக்கம் கரிகாற் பெருவளத்தானின் வீரமும் சொல்லப்படுகிறது. அதாவது,

திருமாவளவன் தெவ்வர்க்கு ஒக்கிய

வேலினும் வெய்ய கானம் அவன்

கோலினும் தண்ணிய தட மென் தோளே

என்று முடிகிறது. இவ்வரிகளை மிகக் கவனாக ஆள வேண்டும். அதாவது தன் பகைவர் மீது எறிந்த வேலைக்காட்டிலும் கொடுமையுடையவாய் இருந்தன யாம் செல்ல எண்ணிய காடுகள். அவன் செங்கோலைவிடக் குளிர்ந்திருக்கின்றன யாம் இப்போது அடைந்துள்ள இவளுடைய பெரிய மென்மையான தோள்கள்! என்பதாகும். இதனை திருமாவளவன் பகைவர் மீது எறிந்த வேலைவிட நான் செல்ல எண்ணிய காடு வெம்மையுடையது. நாம் இப்போது அடைந்துள்ள இவள் தோள்களோ அவன் தன் செங்கோலைவிடக் குளிர்ந்தனவாய் உள்ளன. ஆதலால் இவளைப் பிரிந்து நெஞ்சே நாம் போகவேண்டாம் என்று தலைவன் கூறினான்.

இதில் மொத்தம் உள்ள நான்கு வரிகளைத் தவிர மற்றவைகள் கரிகாற் பெருவளத்தானின் நாடும், ஆட்சிச் சிறப்பும், போர்த்திறமும் பேசப்படுகிறது. இதில் சங்க இலக்கியங்களை ஒட்டுமொத்தமாக அணுகுகிற போது அகத்தை தனியாகப் பாடுவது, புறத்தைத் தனியாகப் பாடுவது என்ற இரண்டு நிலைப்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ள முடியும். ஆனால் ஒரு கட்டத்தில் அகமும் புறமும் இணைகிற போது அதன் நோக்கம் என்ன என்பதான குழப்பம் நிகழ்வது இயல்பு. இதில் குழப்பமடைய தேவையில்லை என்பதே இக்கட்டுரையின் முடிவாகும். அதாவது அகத்தை சொல்ல புறச்செய்திகளை உவமையாக, உள்ளுறையாகப் பயன்படுத்துவது என்பது வெளிப்படையாக ஒரு மன்னனை புகழ்வது கூட அந்த மன்னனுக்கு சிறு குறைவைத் தந்து விடும் என்பதால்தான். எனவே இவ்வாறான உத்தி என்பது முதன்மை நிலையில் அகத்தைப் பாடுவதல்ல. அகத்தை வெளிப்படையாகப் பாடுவதன் மூலம் அகத்தைப் பாடுவதாகும். இந்த உத்திமுறை பட்டினப்பாலையில் நேரடியாகப் பொருந்தும், ஆனால் நெடுநல்வாடையிலோ அல்லது முல்லைப்பாட்டிலோ, பொருந்துவதாக இல்லை. இதில் புலவர்கள் அகத்தைப் பாடுவதானாலும் கொடையைப் பெறுவதில் இந்த மாதிரியான உத்தி என்றும் தேவையாகத்தான் இருக்கிறது.

**பயன்கொண்ட நூற்கள்**


1. **தொல்காப்பியம், பொருளதிகாரம். - முனைவர் தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், சிங்கார தெரு, பாரிமுனை, சென்னை - 108**

2. **நெடுநல்வாடை, ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், 53 - புதுத்தெரு, சிதம்பரம் - 01**

3. **பட்டினப்பாலை, மு. சாயபு மரைக்காயர், கங்கை புத்தக நிலையம், 23- தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17**

4. **பத்துப்பாட்டு - 2, மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ், 141 உஸ்மான் சாலை, தி.நகர்., சென்னை - 17**

# தொல்காப்பியத்தில் களவும் கந்தருவ மணமும்

**முனைவர் க. மகேஸ்வரி,**
உதவிப் பேராசிரியர்,
எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம்,
காட்டாங்குளத்தூர், சென்னை.

**உ**லகில் உள்ள எல்லா மொழிகளிலும் இலக்கியங்கள் காணப்பெறுகின்றன. அவை அந்தந்த மக்களின் சமுதாயப் பின்னனியை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. பழந்தமிழரும் தங்கள் வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்து நெறிப்படுத்தி வாழ்ந்துள்ளனர்,

அகத்திணை, புறத்திணை சிறப்பைப் புலப்படுத்தவே தொல்காப்பியர் பொருள் இலக்கணம் படைத்துள்ளார். இவ்வகத்திணைப் பொருளான காமம் பருவம் நிரம்பிய உயர்திணை, அஃறிணை உயிர்களுக்கெல்லாம் பொதுவாக அமைவது ஆகும்,

**எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்** (தொல்.பொருள்.219)

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய இன்ப உணர்வினை நெறிப்படுத்திய பொருளாகக் கொண்டவை அகத்திணைப் பாடல்கள் ஆகும்.

**ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்தது எனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம்1**

என்று நச்சினார்க்கினியர் விளக்குகிறார்..

இத்தகைய சிறப்புடைய அகப்பொருளில் களவொழுக்கத்தை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்று நான்கு வகையாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

**பிணி மூப்புகளின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்னையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணமும் அன்பு முதலியவற்றால் ஒப்புமை உடையவராகத் தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றி ஊழ்வகையால் எதிர்ப்பட்டுக் கூடுவது களவாகும்.2**

களவு என்பதற்குப் பிறர்க்குரிய பொருளை மறையிற்கோடல் என்று இளம்பூரணர் பொருள் கூறுவர்.

வேதத்தை மறைநூல் என்று கூறுவது போலவே, களவு காமக் கூட்டமாயினும் பொய்யும் வழுவும் உட்புகாத வகையில் அறநிலை

வழுவாமல் காதலர்கள் கரந்து ஒழுகும் நிலையை களவு என்று பண்டையோர் குறித்துள்ளனர் என்பதை அறிதல் வேண்டும்.

**களவு என்னும் சொற்கேட்டுக் களவு தீதென்பதூவும், காமம் என்னும் சொற்கேட்டுக் காமம் தீதென்பதூஉம் அன்று, மற்று அவை நல்ல ஆமாறும் உண்டு3**

என்று களவியல் உரைகாரர் கூறுவது நோக்கத்தக்கது.

**யாயும் ஞாயும் யார் ஆகியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**

**யானும் நீயும் எவ்வழி அறிதும்**

**செம்புலப் பெயல் நீர் போல**

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்.40)

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டு களவில் புணர்ந்து மகிழ்ந்தனர். குறிஞ்சித் திணைப் பாடலாகிய இது புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்னும் உரிப்பொருள் சார்ந்ததாகும். தன்னைக் கூடி மகிழ்ந்த தலைவன் பிரிவைக் கண்டு அஞ்சிய தலைவிக்கு தலைவன் கூற்றாக இக்குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

பொதுவாக தமிழர் வாழ்வில் மணமுறை என்பது அது காதல் மணமாக இருந்தாலும் அகமணமுறையாகவே இருந்துள்ளது. அக மண முறை என்பது நெருங்கிய உறவுக்குள் அமைவதாகும். மாமன், அத்தை, அக்காள் என்னும் உறவுடையவர்களின் ஆணுக்கும் பெண்ணுக்கும் நடக்கும் திருமணத்தையே அக மண முறை என்பர்.

ஆனால், இந்தக் குறுந்தொகைப் பாடலில் உறவில்லாத ஒரு புற உறவுக் காதலைக் காணமுடிகிறது. இவ்வாறு பழந்தமிழரின் புறமணத்தை அறிய முடிகிறது

தலைவியை ஒருவரும் அறியாமல் தலைவன் உடன் அழைத்துச் சென்று அவள் சுற்றத்தார் கொடுத்தலின்றியே மணம் செய்து கொள்வது முற்காலத்தில் அறநெறியாகவே கருதப்பெற்றது.

**கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**

**புணர்ந்துடன் போகிய காலை யான** (தொல்.பொருள்.கற்.2)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். களவு வெளிப்பட்ட பின் தலைவியின் சுற்றத்தார் உடன்பட்டு கொடுத்தலே முற்காலத்தில் பெருவழக்கமாக இருந்தது. இதனை,

**மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**

என்ற தொல்காப்பியரின் கூற்றால் அறியமுடிகிறது, இதுவே களவின் வழி வந்த மணம் ஆகும்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே திராவிட ஆரிய இன நாகரிகங்கள் ஒன்றோடு ஒன்று கலந்திருக்க வேண்டும் என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர்.

**தொல்காப்பியர் காலத்தில் தமிழர்க்கும் வடமொழியாளர்க்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. தொல்காப்பியர் வடமொழியாளரை மறையோர் என்று குறிப்பிட்டுள்ளார். வடமொழியாளர் தம் நூல்களுள் சிலவற்றை தமிழர்க்குப் புறம்பாக மறைத்து வைத்துக் கொண்டமையின் மறையோர் என அழைக்கப்பட்டனர் போலும்4**

என்று சி.இலக்குவனார் விளக்கியுள்ளார். மறையோர் நாட்டில் எட்டு வகையான மணமுறை இருந்ததாகத் தொல்காப்பியம் கூறுகிறது, இதனை,

**மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்**

**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே** (தொல்.பொருள்.89)

என்னும் தொல்காப்பிய அடிகளின் மூலம் அறியலாம். ஆரியரின் எண்வகை மணமாவன,

1. **பிரமம்:** ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணைப் பூப்பு அடைந்தவுடன் இரண்டாம் பூப்பு வருவதற்கு முன்னர் அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது,
2. **பிரசாபத்தியம்**: மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்தப் பரிசத்தைப் போல இரண்டு மடங்கு கொடுத்து மணம் முடிப்பது.
3. **ஆரிடம்:** தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறுத்திப் பொன் அணிந்து நீரும் இவைபோல் பொலிந்து வாழ்வீர் என நீர் பெய்து கொடுப்பது.
4. **தெய்வம்:** பெரு வேள்வி செய்கின்றார் பலருள்ளும் ஒத்த ஒருவனுக்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கினையாகக் கொடுப்பது.
5. **அசுரம்:** கொல்லேறு கோடல், திரிபன்றியெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து ஒருத்தியை மணப்பது
6. **இராக்கதம்**: தலைமகள் விருப்பத்தையும் அவள் பெற்றோர் விருப்பத்தையும் பெறாது வலிதிற் கொண்டு சென்று மணப்பது.

7. **பைசாசம்** வயது முதிர்ந்தோர், கள்ளுண்டு களித்தோர், உறக்க நிலையில் உள்ளோர் இவர்களைக் கூடுவதும் இழிந்தோளை மணஞ்செய்தலும் பிறவுமாம்.

8. **கந்தருவம்** கந்தருவ குமாரரும் அவர் மகளிரும் தம்முள் எதிர்பட்டு மனமியைந்து கூடுதல் போலத் தலைவனும் தலைவியும் எதிர்பட்டு மனமியைந்து கூடுவதாகும்.

> **ஆரியர்களின் மனுநீதி நூலில் பெற்றோர் உற்றார் இசைவு இல்லாமலும் எவ்வித சடங்குகள் இல்லாமலும் தாமே கூடி வாழ்பவராகக் கந்தருவர் கூறப்பட்டுள்ளனர். திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் இவர்களிடம் இல்லை**

> **ஒருவனும் ஒருத்தியுமாக எதிர்பட்டார் இருவர் புனலொடு புல் சாய்ந்தார் போலத் தம் தலைமைக் குணங்களை இழந்து, மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழும் இயல்பே கந்தர்வமணம் என்பது. இங்ஙனம் கூடினோர் தம் வாழ்நாள் முழுவதும் கூடி வாழ்வர் என்ற கட்டாயம் இல்லை. எதிர்பட்ட அளவில் வேட்கை மிகுதியால் கூடிப் பின் அன்பின்றிப் பிரிந்து மாறும் வரம்பற்ற நிலையும் இவ்வகை மணத்திற்கு உண்டு**

தமிழர் கூறும் களவொழுக்கமோ, இருவர் உள்ளத்தும் உள் நின்று சுரந்த அன்பின் பெருக்கினால், தான், அவள் என்ற வேற்றுமையின்றி, இருவரும் ஒருவராயொழுகும் உள்ளப்புணர்ச்சியாகும்,இதனை இறையனார் களவியல்,

அதுவே

**தானே அவளே தமியர் காணக்**

**காமம் புணர்ச்சி இருவயின் ஒத்தல்**என்று குறிப்பிடும்.

> **கந்தர்வ வழக்கில் மெய்யுறு புணர்ச்சி முதற்கண் தோன்றுவதாகும். இதனால் உள்ளப்புணர்ச்சி நிலை பெற்றுச் சாகுமளவும் கூடி வாழ்தலும் உண்டு. உள்ளப் புணர்ச்சி தோன்றாது தம்முள் எதிர்பட்டாரைக் கூடி மாறுதலும் உண்டு. என்றும் பிரியாத நிலையில் நிலையான அன்பினால் கூடும் உள்ளப்புணர்ச்சியே களவொழுக்கத்தின் சிறப்பியல்பு ஆகும். இதுவே தமிழியல் வழக்காகிய களவுக்கும் வடநூல் மணமாகிய கந்தர்வத்துக்கும் உள்ள உயிர்நிலையாய வேறுபாடாகும்7**

என்ற லெ.ப.கரு.இராமநாதனின் விளக்கத்திலிருந்து அறியலாம்.

தமிழர்க்கு மணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பாக நிகழ வேண்டிய வாழ்வின் இன்பக் கூறுகளுள் ஒன்று. வாழ்வின் தலையாய இன்பம் அதுவே என்று கருதினர் ஆதலின் அதனை இன்பம் என்றே அழைத்தனர். இதனை,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

என்று தொல்காப்பியர் இன்பத்துக்கு முதன்மை கொடுத்துக் கூறியிருப்பதன் வழி அறியலாம்.

> **தலைவனும் தலைவியும் புணர்ச்சியின் பின் இல்வாழ்க்கை நிகழ்த்தினாலொழியப் புணர்ச்சியை மாத்திரம் மணமென்று கூறுதல் தமிழ் வழக்கில்லை. இராக்கதம், கந்தருவம், பைசாசம், என்பனவற்றுள் புணர்ச்சியை மாத்திரம் மணமெனக் கருதப்படுவதால் களவிற்கும் கந்தருவத்துக்கும் உள்ள வேற்றுமை பெரிதாகும்8**

என்று கா.சு.பிள்ளை குறிப்பிடுவதும் அறியத்தக்கதாகும்.

ஒற்றுமை உடையவை போலக் காணப்பெறும் களவும் கந்தருவமும் வேறுபாடு உடையன என்பது பலரால் விளக்கப் பெறுகின்றது. கந்தருவத்தில் புணர்ச்சி மட்டுமே உண்டு. தமிழில் புணர்ச்சி, இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல் என்பன உள்ளன. மேலும்,

**கந்தருவருக்குக் கற்பின்றி அமையவும் பெறும்**

**ஈண்டுக் கற்பின்றிக் களவு அமையாது9**

என்ற நச்சினார்க்கினியரின் உரை விளக்கத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு தமிழரின் களவு வாழ்விற்கும் வடமொழியில் கூறப்படும் கந்தருவ மணத்திற்குமுள்ள வேறுபாடு இவ்வாய்வில் விரிவாக விளக்கப்படுகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1.நச்சினார்க்கினியர்,தொல்காப்பியம் பொருளதிகாரம்1

2.மு.இராகவையங்கார், தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, ப.39

3.இறையனார் களவியல் உரை நூற்பா 1 உரை

4.சி.இலக்குவனார் தொல்காப்பிய ஆராய்ச்சி ப.154

5.இரா.மதிவாணன் தொல்காப்பியர் காலம் பக்.57,58.

# தெருக்கூத்தும் நம்பிக்கையும்

**கோ.சுப்பிரமணியன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்,
திருச்சிராப்பள்ளி - 24

**நா**ட்டுப்புற மக்களின் உள்ளத்தை படம் பிடித்துக்காட்டும் வகையில் பல்வேறு கலைகள் அமைந்துள்ளன. அவற்றில் தெருக்கூத்து நகர்புற மக்களையும் கவர்ந்து தனது செல்வாக்கினை வெளிப்படுத்துகின்றது. நாட்டாரின் வாழ்நிலையினையும், மனப்போக்கினையும் எடுத்துக்காட்டி வாழ்வில் வெற்றி கிடைப்பதையும் தெளிவு படுத்துகின்றது. இவ்வாறு நடத்தப்படும் கூத்துகள் அனைத்தும் கோயில் சார்ந்தவையாக உள்ளன. மக்கள் தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் வேலையில்மகிழ்வுடன் இருக்கவும் இக்கூத்தினை ஏற்பாடு செய்து கண்டு மகிழ்கின்றனர். எனவே இத்தெருக்கூத்தின் நிலைபாடுகளை பல்வேறு வகையில் காணலாம்.

***கூத்து விளக்கம் :***

கூத்து என்பது ஆடம்பரம், நடனம், நாடகம், விளையாட்டு என்று பல்வேறு வகையில் வழங்கப்படுவதாக தமிழ் அகராதி கூறுகின்றது. மேலும் [ நடனம், நாடகம் ] குழப்பம், வேடிக்கை என்றும் கூறுவதைக் கூத்து என்றே அறியமுடிகின்றது. மேலும் மனிதர்களின் நிலைப்பாடுகளைக் கொண்டு அடுப்பது, அனுகாரம், ஒருத்தன் வேறுபாஷையை அனுசர்க்கை என்று கூறுவதிலிருந்து கூத்தின் விளக்கத்தினை அறியலாம்.

கூத்து என்ற சொல்லும் நாடகத்தைக் குறிப்பதாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே பயின்று வருவதைக் காண்கிறோம். கூத்து என்பதற்கு நடனம், இறைநடனம் மேலும் [ Divine Dance ] என ஆங்கில அகராதிக் குறிப்பதையும் காணமுடிகின்றது.

***தெருக்கூத்தும் வளர்ச்சியும் :***

தெருக்களில் நடிக்கப்பெற்று வந்த ஒருவித விளையாட்டு 19-ஆம் நூற்றாண்டில் தெருக்கூத்து என்று அழைக்கப்பட்டது. இக்கூத்திற்கு மேடை என்பதே கிடையாது. தெருவே மேடையாகப் பயன்படுத்துகின்றனர். தெருக்கூத்தின் கதைகள் அதிகப்படியாக தமிழகக் கிராமப் பகுதியில் இருந்தே எடுக்கப்படுகின்றது. இதில் கல்வி அறிவு இல்லாதவர்களே அதிகமாகப் பங்கு பெறுகின்றனர் என்று தென்னிந்திய பண்பாட்டு தொகுப்பு நூல் கூறுகின்றது. தற்காலத்தில் படித்தவர்களும் நடிகர்களாக இருப்பதை கள ஆய்வில் காண முடிந்தது.

தெருக்கள் சந்திப்பு, கோயிலின் முன்புறம் ஆகிய இடங்களில் மூன்று புறம் மக்களால் சூழப்பெற்று தென்னை ஓலையால் வேயப்பெற்ற பந்தலின் கீழ் வேடம் புனைந்து, பந்தலின் முன்னால் தோன்றி பாத்திரங்களின் சுய அறிமுகத்தோடு, இரவு 10 மணி தொடங்கி காலை 6 மணி வரை நடக்கும் கலையாக தெருக்கூத்து அமைகின்றது.

தெருக்கூத்து வளர்ந்து நாளடைவில் மேடை நாடகமாக உருப்பெற்றது. இதற்கு தஞ்சை கோவிந்தசாமி ராவ் என்பவர் முதற்காரணமாவார். சங்கரதாஸ் சுவாமிகள் இதற்கு ஒத்துழைப்பு தந்து பலவித மாற்றங்களை செய்து மிளிரச் செய்தார். ஒருமுறை சுவாமிகள் கூத்தாடுகளத்தில் தோன்றி எமதர்மனாக வேடமிட்டு வரும்போது ஒரு கர்ப்பமடைந்த பெண்ணிற்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. அதனால் சுவாமிகள் மேடையில் தோன்றுவதாக இருந்தால் இது போன்றவர்கள் வெளியில் சென்று விடுங்கள் என அறிவிப்பு கொடுத்து விட்டே நடிக்கத் தொடங்குவார். தினமலர்-[ ஜுலை 2002 ] எனப் பத்திரிக்கைச் செய்தி கூறுவதன் மூலம் தெருக்கூத்தில் மக்களுக்கு இருந்த நம்பிக்கையினை உணரலாம். இது கூத்துக்கலையின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

“பாரதக் கதா

பாவ விமோசனா’’

என்பது பழமொழி, தெருக்கூத்தில் பாரதக்கதையின் முழுமையாகவும், அல்லது கிளைக் கதைகளைக் கொண்டும் கூத்து நடத்துகின்றனர். இக்கதைகளைக் கேட்டால் வாழ்வில் மகிழ்ச்சி நிலவுவதாகவும் நம்புகின்றனர். அதனால் இக்கதையினைக் கேட்பவர்கள் தூங்காமலும், வேறு வேலைகளில் ஈடுபடாமலும் இருப்பதால் மட்டுமே வாழ்வில் நன்மை பெற முடியும் என்று நம்பி இக்கூத்துகளைக் காண்பதைக் கள ஆய்வில் பெரம்பலூர் மாவட்ட புதுவேட்டக்குடியில் காண முடிந்தது.

கிராம மக்கள் காசு கொடுத்துப் பார்க்காமல், இலவசமாக பார்த்துத் தெளிவும், சிந்திக்கும் எண்ணமும் ஏற்படும் வகையில் அமைவதே தெருக்கூத்து என்று சடையப்பன் கலையுலகில் தெருக்கூத்து எனும் நூலில் கூறுவதை இங்கு சுட்டலாம். நாட்டுப்புறங்களில் மக்கள் தங்களுக்குத் தெரிந்த ஒருவராலும், தங்களுக்குப் பிடித்தக் கதையினையும் நடத்த ஏற்பாடு செய்வதால் மிகவும் ஈடுபாட்டோடு பார்த்து மகிழ்கின்றனர். இதனால் நாட்டுப்புற மக்கள் கூத்துக் கலைஞர்களை அப்பாத்திரங்கின் தோற்றமாகவே கண்டு மகிழ்வதால் விருந்து கொடுத்து உபசரிப்பும் செய்கின்றனர். இதன் மூலம் நாட்டுப்புறக்கலைகள் அம்மக்களின் அடையாளமாக உள்ளதை அறியமுடிகின்றது.

### *நம்பிக்கையில் தெருக்கூத்து :*

நாட்டுப்புறத்தில் பல்வேறு நம்பிக்கைகள் உண்டு. சகுனம் பார்த்தல், கண்ணேறு கழித்தல், கதைகேட்டல் போன்றுள்ளது. அதில் இம்மக்கள் தங்களது வாழ்வின் வழிகாட்டியாகவே தெருக்கூத்தை நம்புகின்றனர். அவ்வாறு நம்பிக்கையின் ஒரு பகுதியாக திருமணம் நடக்க வேண்டி, “மீனாட்சித் திருமணம்’’ என்பதையும், மழை வேண்டி “விராட பர்வம்’’ என்பதையும், இறந்தவர் மோட்சம் பெற “கர்ண மோட்சம்’’ என்பதையும், காதலின் பெருமையினைக் கூற, “வள்ளித் திருமணம்’’ என்பதையும், தர்மத்தின் பெருமையினையும், அதர்மத்தின் அழிவையும் காட்ட 18ம் போர் என்ற கூத்தின் கதைகளையும் நடத்தி தங்களது நம்பிக்கையினை மேலும் நிலை நாட்டுகின்றனர்.

### *விழிப்புணர்வில் கட்டியங்காரன் :*

திரைப்படங்களில் மக்களை விழிப்படையச் செய்வது நகைச்சுவையாளனின் வேலையாக இருப்பது போன்று தெருக்கூத்திலும் மக்களை விழிப்படையச் செய்வது அழிவில் இருந்து காத்துக் கொள்ள ஏதுவாகப் பாடுவதுண்டு; அப்போது

“நாதாங்கி ஏய் நாதாங்க

- நாதாங்கி கதவுலடி
உன்அண்ணன் தம்பி நாலுபேரும் காவலடி

நல்லதொரு வாசலடி நாயுந்தான் காவலடி
மனதும் மனதும் சேர்ந்ததடி
மயக்கம் கொள்ள வைக்குதடி
நானுமிப்போ ரொம்ப ரெடி
சேர்நது நல்லா போவோமடி’’

என்று இப்பாடலை பாடியவுடன் விழிப்புடன் இருப்பார்களேயானால் தங்களது தங்கையின் காதலை உணர்ந்து திருமண ஏற்பாடு செய்வது அவரவர் மனநிலையினைப் பொருத்து அமைகின்றது. இது போன்றக் கூத்து நடக்கும் காலங்களில் திருமண நிகழ்வுகள் பல நடந்துள்ளது என்பதைக் கள ஆய்வில் ஈடுபட்டபோது கேட்டறிய முடிந்தது.

கட்டியங்காரன் மக்களை விழிப்படையச் செய்யும் நோக்கில் பல்வேறு கலைச்சொற்களையும் கூறுவதுண்டு. அப்போது,

“வண்டி வட்ட போடுரான்’’

“கலப்ப சாத்துரான்’’

(கலப்ப சாத்துவான் என்றால் ஒருவன் மற்றவன் மீது கால் போடுவது. வண்டி வட்ட என்பது காலும் கையும் பக்கத்தில் பக்கத்தில் இருப்பர்கள் மீது போடுவது)

போன்ற வார்த்தைகளைக் கூறி விளக்கங்களும் கூறுகின்றான்.

***தெருக்கூத்தும் கட்டியங்காரனும் :*** தெருக்கூத்தின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துப்பாடல் பாடுவது அனைத்துக் கூத்துக் குழுக்களிலும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இவ்வாறு இறை வாழ்த்து முடிந்தவுடன் அவையில் தோன்றி மக்களை ஒருமுகப்படுத்தி கதை கேட்க தயார்நிலையில் வைப்பதே இவனது வேலையாகும். அப்போது பார்வையாளர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு தன்னைப் பார்க்க,

ஏய் வண்டியின்னா வண்டி
வடக்கப் போற வண்டி
வண்டி மேல குந்தி ஓட்டுறவன் நொண்டி
வந்திறங்கி குந்தி வாயாடுவோம் தம்பி!
என்றும்;நாங்க பணத்துக்காக
ஆடவல்ல ஆடவல்ல
குணத்துக்காக ஆட வந்தோம்
ஆட வந்தோம்!

என்றும் தனது கலை ஆர்வத்தினை வெளிப்படுத்தும்விதமாக இது போன்ற பாடல்களைப்பாடிப் பார்வையாளர்களைத் தன் வயப்படுத்துகின்றான்.

இது போன்று பாடல்களைக் கொண்டு மக்களை தன் வயம் இழுப்பதோடு தனது நாவின் வன்மையால் பலவிதமான இசை நுணுக்கங்களையும் செய்து மத்தளக்கட்டுக்காரன், ஆர்மோனியம் மற்றும் தாளக்காரர்களை உற்சாகப்படுத்துவதும் இவனது வேலையாக உள்ளது. கட்டியங்காரன் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தும்நிலையில் பல்வேறுவிதமான அன்பளிப்புப் பொருட்களைப் பெறுகின்றான். இவன் மக்களை மகிழ்விப்பது மட்டுமல்லாது கூத்து நடிகர்களுக்கு உதவி தேவைப்படுகின்றபோதும் அதனை செய்வதுண்டு. இவ்வாறானச் செயல்களுக்கு ஏதுவாக இவன் குழாய் சட்டை [ Pant ] அணிந்து கொண்டே அதிகம் நேரம் தென்படுவான். இவன் மற்ற வேடங்களான தோழி, தோழன், வண்டிக்காரன் எனப் பல வேடங்களுக்கும் ஏற்றவனாக அவையில் தோன்றி தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்துகின்றான்.

கட்டியங்காரனை பபுன், கோமாளி, நகைச்சுவையாளன், மிருதுகாமியன், விதூடகன் எனப் பல வகைப் பெயர்களையும் வைத்து அழைப்பதுண்டு. இவன் பல வேலைகளையும் செய்வதால் விகடகவி என்றும் கூறலாம். பெரம்பலூர் மாவட்ட மக்கள் இவனை பௌனுக்கு நிகராக வைத்துப் பார்ப்பதால் "பௌனாக்ட்" என்றே அழைக்கப் பெறுகின்றான்.

***கூத்தர்களும் நடிப்பும்:***

கூத்துக் கலைஞர்களைப் பார்க்கும் போது சாதாரணமாகத் தெரிவார்கள். அவர்கள் கதைப் பாத்திரத்தின் உடையை அணிந்துவிட்டால் சிலப்பதிகாரம் கூறுகின்ற 11 வகையான ஆடற்கலையினையும் காணலாம். கூத்துக் கலைஞர்கள் பார்வையாளர்களின் முகபாவங்களை வைத்து குரலை உயர்த்தியும், தாழ்த்தியும், சுருக்கியும் நடிப்பதே அவனது திறமையினுக்கு காட்டாகும். கூத்து நடிகர் மக்களிடத்து கைத்தட்டலும், அன்பளிப்பும் பெற்றுவிட்டால் அவன் வெற்றியின் உச்சத்திற்கு வந்தவனாகக் கருதப்படுகின்றான். இவ்வாறான கைத்தட்டலும், அன்பளிப்பும் கட்டியங்காரனுக்கு அதிகம் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. கதாப்பாத்திரங்கள் சற்று சிரமத்துக்கிடையிலேயே இதனைப் பெற முடியும். ஆனால் இவை நிலைத்தவையாக இருப்பதையும் காணலாம். இவ்வாறு நடத்தப்படுகின்ற கூத்துகள் அனைத்தும்,

"கூத்தாடி கிழக்கே பார்ப்பான்
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்"

என்பதற்கிணங்க சூரியன் உதிக்கும் வேலையில் நிறைவடைகின்றது.

***முடிவாக :***

1. தெருக்கூத்து என்பது எளிய முறையில் நடக்கும் கலையாகப் பல்வேறு மனநிலை கொண்ட மக்களும் பார்க்கும் கலையாகவுள்ளது.

2. தெருக்கூத்தின் வளர்ச்சியே நாடகமாகி இன்றையச் சூழலில் திரைப்படங்களிலும் இவை மிளிர்கின்றது.

3. தெருக்கூத்தில் கட்டியங்காரன் தோன்றி மக்களை விழிப்புணர்வு கொள்ள வைப்பதால் பௌனுக்கு நிகராக வைத்து பௌனாக்ட் என்று அழைக்கப்படுகின்றான்.

4. கூத்தின் வளர்ச்சியில் நாடகம் தோன்றியதால் இன்றையச் சூழலிலும் பலதரப்பட்ட மக்களையும் பார்வையாளராகக் கொண்டு விழிப்படையச் செய்வது தெருக்கூத்தே ஆகும்.

கூத்துக் கதைகளாக ராமாயணம், அரிச்சந்திரா, மகாபாரதம் போன்றவைகளும் அமைவதோடு சமூகக் கதைகளையும் கதைப் பொருளாக அமைக்கின்றார்கள். இதன் மூலம் மக்களின் உணர்வுகளை கண்டறிய ஏதுவாக தெருக்கூத்து அமைவதை காணலாம்.

# கதாப்பாத்திர உருவாக்கம் நாவலிலிருந்து சினிமாவுக்கு

**கு.விஜயலட்சுமி**
முனைவர்பட்ட ஆய்வாளர்(முழுநேரம்)
தமிழியலத் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
உறுப்புக் கல்லூரி
குரும்பலூர், பெரம்பலூர்

**நா**வலும் சினிமாவும் கதைகளை மையமாகக் கொண்டிருந்தாலும் அவைகள் கதாப்பாத்திரங்களால் இயங்குகின்றன. இரு கலை வடிவங்களையும் கொண்டு செலுத்துவது பாத்திரங்களே ஆகும். மனிதனின் இயல்பான குணங்களோடு படைக்கப்படும் பாத்திரங்கள் உயிரோட்டமுடையனவாக இருக்கும். நாவலோ, சினிமாவோ அவற்றின் கதைகளால் நெடுங்காலம் மக்கள் மனதில் நிலைத்திருப்பதில்லை. மாறாக, ஏதேனும் குறிப்பிட்ட பாத்திரத்தின் குணநலன்களால் அவை ஈர்க்கப்படுகின்றன. அப்பாத்திரங்களை படிக்கும் வாசகன் தன் வாழ்வோடு இணைத்துப் பார்க்கும் முயற்சியில் ஈடுபடுகிறான். எனவேதான் இரண்டு கலைவடிவத்திலும் பாத்திர உருவாக்கம் என்பது படைப்பாளனின் கவனத்திற்குரியதாகிறது.

ஒரு பாத்திரத்தின் பண்பு நலன்களை விளக்க நாவலாசிரியன் எழுத்தைத் துணைக்கொள்கிறான். இயக்குநர் காட்சிகளைக் கொண்டு விளக்குகிறார். நாவல் உரையாடல் மற்றும் வருணனைகளால் அப்பாத்திரத்தைப் படைக்கிறது. சினிமா உரையாடல் மற்றும் காட்சிப் பிம்பங்களால் கட்டமைக்கிறது.

### பாத்திரத் தெரிவு

படைப்பாளன் தன் மனதைப் பாதிக்கும் விஷயங்களைப் பாத்திரத்தின் மீது ஏற்றிக் கூறுகிறான். படைப்புத் தூண்டுதலினால் தன் வாழ்வில் ஏற்பட்ட துக்கமான, இன்பமான அனுபவங்களினாலும் இளமைக் காலங்களில் தன் மனதில் ஏற்படும் உணர்வைத் தூண்டிய பாதிப்புகளினாலும் பாத்திரங்களை உருவாக்குகிறான். மேலும், பிறரிடம் கேட்டவற்றைப் பதிவு செய்யும் நோக்கத்தோடும், வரலாற்றிலும் இலக்கியத்திலும் தான் படித்த, பாதித்த பாத்திரத்தினால் ஏற்பட்ட ஈர்ப்பு காரணமாகவும் படைப்பாளன் பாத்திரத்தைத் தேர்வு செய்கிறான்.

### பாத்திர வகைகள்

நாவலில் வரும் பாத்திரங்களைத் தட்டையான பாத்திரம், வட்டமான பாத்திரம் என்று அறிஞர்கள் பகுக்கின்றனர். இது சினிமாவிற்கும் பொருந்தும். **தனித்துவப் பாத்திரங்களை தட்டையான பாத்திரங்கள் (Flat characters)** (சாகசம் நிறைந்த பாத்திரங்கள்) **என்றும், இயல்புப் பாத்திரங்களை வட்டமான பாத்திரங்கள் (Round characters)** (சூழலுக்குத் தகுந்தார் போலத் தன்னை மாற்றிக் கொள்ளும் பாத்திரங்கள்) **என்றும் ஆய்வாளர்கள் அழைப்பர்1** என்று பாத்திர வகைகள் பற்றி அறிஞர் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

பார்த்திபன் கனவு நாவலில் வரும் பார்த்திபன், விக்கிரமச் சோழன், போன்ற பாத்திரங்கள் தட்டையானப் பாத்திரத்திற்கு உதாரணமாகும். இந்நாவல் திரைப்படமாக எடுக்கப்பட்டபோது இப்பாத்திரங்கள் தொடக்கம் முதல் முடிவு வரை ஒரே குணநலனோடு ரசிகன் எளிதில் இப்பாத்திரத்தின் குணத்தினை விளங்கிக் கொள்ளும் வகையில் தட்டையாகப் படைக்கப்பட்டுள்ளது.

ஜெயகாந்தனின் உன்னைப்போல் ஒருவன், யாருக்காக அழுதான், சில நேரங்களில் சில மனிதர்கள் போன்ற நாவல்களில் மனிதர்களின் இயல்பான சுபாவத்தோடு பாத்திரங்களாகப் படைக்கப்பட்டிருக்கும். அன்றாட வாழ்வில் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகிறார்கள், அதனால் ஏற்படும் பின் விளைவுகள், சிக்கல்களில் சிக்கித் தவிக்கும் பாத்திரங்களாக இவ்வகைப் பாத்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இந்நாவல் திரைப்படமாக எடுக்கப்பட்ட பொழுது அதே தன்மையோடு வட்டமான பாத்திரமாகவே படைக்கப்பட்டிருக்கிறது.

வாசகனோ ரசிகனோ தனித்துவமிக்கப் பாத்திரங்களைத் தங்களது இலட்சிய மாந்தராகவும், இயல்புப் பாத்திரங்களைத் தன் மனதிற்கு நெருக்கமான பாத்திரமாகவும் நினைத்துக் கொள்கின்றனர்.

**பாத்திர வார்ப்பு**

படைப்பாளி பாத்திரங்களைத் தெரிவு செய்தபிறகு தன் எழுத்தால், காட்சியால் அதற்கான வார்ப்புகளை உருவாக்குகிறான். பாத்திரத்தின் வயது, நிறம், குணம், தோற்றப்பொலிவு, நடை, உடை, பாவனை, அணிகலன்கள், சைகைகள், செயல்கள், பேச்சுமொழி போன்றனவற்றைக் கொண்டு பாத்திரத்திற்கு உயிர் கொடுக்கிறான். பாத்திரத்தின் பெயர் தெரிவு செய்யும்பொழுது தனித்த அடையாளமாகவும், பாத்திர குணாதிசயத்தை விளக்கும் முகமாகவும், சாதிய அடையாளத்தோடும் படைக்கிறான். ஒன்பது ரூபாய் நோட்டு நாவல் மற்றும் சினிமாவில் வரும் மாதவப் படையாச்சியின் பெயர் இதற்கு தக்க உதாரணமாகும்.

பாத்திர அறிமுகம் நாவலில் வருணனை, உரையாடல் வழியாக அமையும். பிற பாத்திரங்கள் மூலமாகவும், தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டும், நாவலாசிரியர் கூற்றாகவும் பாத்திரங்கள் அறிமுகமாகின்றன. சினிமாவில் நாயக, நாயகி பாத்திரங்கள் கண்முன் காட்சியாக நடப்பதால் நேரடியாக அறிமுகமாகின்றனர் இவையன்றி பின்னணிக் குரல் மூலமாகவும் (Voice over) அறிமுகமாதலும் உண்டு.

சுஜாதாவின் விக்ரம் நாவலில் வருகின்ற முதன்மைப் பாத்திரமான விக்ரம், உயர் அதிகாரிகளின் உரையாடல் மூலம் வாசகனுக்கு அறிமுகமாகின்றான்.

நாவலில் பாத்திரத் தோற்றம், தேவைப்பட்டாலொழிய விரிவுபடுத்தப்படுவதில்லை. ஆனால், சினிமாவில் பார்வையாளன் நேரடியாகக் காண்பதால் பாத்திரத் தோற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

நாவலில் பாத்திரத்தின் பண்புநலன் வளர்ச்சியானது, நினைவுகள், உரையாடல், வருணனை மூலமாக விளக்கப்படுகிறது. சினிமாவில் நடிப்பு, உரையாடல் வழி வெளிப்படுத்தப்படுகிறது.

**உரையாடல்கள்**

பாத்திரத்தின் பண்புநலனை அறிவதற்கு உரையாடல்கள் உறுதுணையாக இருக்கின்றன. நாவலில் வருகின்ற உரையாடலுக்கும், சினிமாவில் வருகின்ற உரையாடலுக்கும் அதைப் பயன்படுத்தும் விதத்தில் பெரும் வேறுபாடு உண்டு. நாவல் திரைப்படமாகும்போது இவ்வேறுபாட்டை உணராவிடின் காட்சி பிம்பங்களாலான சினிமா அதன் தனித்துவத்தை இழந்துவிடும். **சினிமாவின் முக்கியமான சாத்தியக்கூறு சொற்களால் விவரிக்க முடியாத பல அம்சங்களைப் படிமங்களின் துணைக் கொண்டு இயக்குநர் காட்சி ரூபமாகச் சித்திரிக்க முடிவது. ஒரு நாவலில் சொற்களால் விவரிக்கப்பட்டவற்றைக் காட்சிப் பிம்பங்களின் மூலம் உணர்த்த வேண்டும். அப்போதுதான் சினிமாவின் தனித்தன்மை வெளிப்படும்2** என்று தியடோர் பாஸ்கரன் கூறுகிறார். நாவலிலிருந்து சினிமாவாக்கப்பட்ட பல படங்களில் இத்தன்மை இல்லை என்றே கூறலாம். பார்த்திபன் கனவு, மலைக்கள்ளன், சில நேரங்களில் சில மனிதர்கள் போன்ற நாவல்கள் திரைப்படமாக்கப்பட்ட பொழுது அதில் வரும் உரையாடல்கள் திரையிலும் அப்படியே பயன்படுத்தப்பட்டன. ஆகையால் இப்படங்கள் நாடகத்தன்மையோடு உள்ளன. உதிரிப்பூக்கள், முள்ளும் மலரும் போன்ற நாவலிலிருந்து எடுக்கப்பட்ட திரைப்படங்கள் நாவலில் உள்ள உரையாடல்களைப் பயன்படுத்தாமல் அதன் சாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு காட்சிப் பிம்பங்களால் அவை படம்பிடிக்கப்பட்டுள்ளன.

**பேச்சு நடை**

நாவலிலும், சினிமாவிலும் பாத்திரங்கள் பேசும் பேச்சு நடைகள் அப்பாத்திரத்தின் உண்மைத் தன்மையை உணர்த்தும் விதமாக இருக்கும். நாவல்களில் பேச்சு நடைகள், செந்தமிழ்ப் பேச்சு, நடைமுறைப் பேச்சு, வட்டார வழக்குப் பேச்சு போன்ற நிலைகளில் உரையாடல்கள் அமைந்துள்ளன. பார்த்திபன் கனவு போன்ற பழைய திரைப்படங்களில் செந்தமிழ்ப் பேச்சு நடையே மிகுதியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்படங்களில் வருகின்ற நகைச்சுவைப் பாத்திரங்கள் இயல்பான பேச்சு நடையில் உள்ளன.

**இப்பம் இப்பம் வயத்துப்பாட்டுக்குன்னு எல்லா இடத்துக்கும் போயாச்சுலே ஆனா காவேரிப்பூம்பட்டணத்திலிருந்து நேரே இந்த ரணீலு கீளத்தெருவுக்கு வந்தவ ஆத்தியம் இந்த ஒரு ஊரில் மட்டும்தான் தாமதிச்சா**

இப்படி வருகின்ற தலைமுறைகள் நாவலின் கன்னியாகுமரி வட்டார பேச்சு வழக்கு 'மகிழ்ச்சி என்ற திரைப்படமாகும்போது வரவில்லை. ஆயினும், முள்ளும் மலரும், பரதேசி போன்ற திரைப்படங்கள் நாவலிலிருந்து உருவாக்கப்படும்போது அந்நாவலில் வருகின்ற பேச்சு நடைகள் போலவே திரைப்படத்திலும் பயன்படுத்தப்பட்டன.

தலைகீழ் விகிதங்கள் நாவலில் நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கைப் பயன்படுத்தி உரையாடல்கள் அமைந்திருக்கும். இந்நாவல் 'சொல்ல மறந்த கதை என்ற திரைப்படமாகும்போது அதன் இயக்குநர் தங்கர் பச்சான், தனக்கு நன்கு பரிச்சயமுள்ள கடலூர் வட்டாரப் பகுதியில் அக்கதை நிகழ்வதாக மாற்றியுள்ளார். அப்படத்தில் வரும் பாத்திரங்களும் கடலூர் வட்டார வழக்குப் பேச்சு நடையைப் பேசுகின்றன.

## கற்பனையும் வரையறையும்

வாசகன் நாவலில் வருகின்ற பாத்திரத்தின் தன்மையை அதன் செயல், குணநலன், வருணனை, உரையாடல் மூலம் உணர்ந்து, அவற்றைத் தன் வாழ்வில் கண்ட உண்மைப் பாத்திரங்களோடு இணைத்துக் கற்பனை செய்து கொள்கிறான். இக்கற்பனை வாசகனுக்கு வாசகன் மாறுபடும். ஆனால், திரைப்படத்தில் இப்பாத்திரங்கள் இயக்குநரால் பொதுமைப்படுத்தப்பட்டு, முன்னரே தீர்மானிக்கப்பட்டு பார்வையாளனுக்குக் காட்டப்படுகின்றன. இங்கு கற்பனைக்கு இடமில்லை. எனவே, சினிமாவின் பாத்திர உருவாக்கம் பொதுத் தன்மையோடு அனைத்து இரசிகனின் மனநிலையிலிருந்து கண்டறிய வேண்டிய கட்டாயம் இயக்குநருக்கு இருக்கிறது. உமாச்சந்திரனின் 'முள்ளும் மலரும் நாவல் அதே பெயரில் இயக்குநர் மகேந்திரனால் திரைப்படமாக எடுக்கப்பட்டது. அதில் வரும் காளி பாத்திரம் நாவல் படிக்கும்போது வாசகனுக்கு இருந்த கற்பனைக்குச் சற்றும் குறைவில்லாமல் திரைப்படத்திலும் படைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தலைகீழ் விகிதங்கள் நாவலில் வருகின்ற பாத்திரங்கள் சொல்ல மறந்த கதை என்ற சினிமாவாக வந்தபோது வாசகனின் மனதில் தோன்றிய உருவங்களையே படத்திலும் கொண்டு வந்தன என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

## பாத்திரங்கள் சேர்ப்பும் நிராகரிப்பும்

நாவல் சினிமாவாக எடுக்கப்படும் பொழுது சில புதிய பாத்திரங்கள் சேர்க்கப்படுகின்றன. முக்கியமில்லாத சில பாத்திரங்கள் நீக்கப்படுகின்றன. அப்புதிய பாத்திரங்கள் திரைப்படத்தை வேறோரு கோணத்தில் எடுத்துச் செல்வதாக அமைவதையே திரைப்பட அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால், அப்புதிய பாத்திர சேர்ப்பு, தமிழகச் சூழலில் வணிக நோக்கத்திற்காக சேர்க்கப்படும் நகைச்சுவைப் பாத்திரங்களாகவும், வில்லன் பாத்திரங்களாகவும் இருக்கின்றன என்பதே உண்மையாக இருக்கிறது. இதனால் இப்புதிய பாத்திரச் சேர்ப்பு நாவலின் தனித்தன்மையை குலைத்துவிடுவதாக உள்ளது.

'எரியும் பனிக்காடு' நாவலில் கருப்பன், வள்ளி பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரங்களாக வருகின்றன. இந்நாவல் 'பரதேசி' படமாக எடுக்கப்பட்டபொழுது இப்பாத்திரங்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு நாயக, நாயகி பாத்திரங்கள் புதிதாக இயக்குநரால் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் கதையின் சாரம் மாற்றமடையவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

திரைப்பட இயக்குநர் நாவலிலிருந்து திரைப்படத்தை எடுப்பதற்கான முக்கியக் காரணமாக அமைவது அந்நாவலின் பாத்திரப்படைப்பாகும். குறிப்பிட்ட அப்பாத்திரங்களின் தனித்தன்மையால் ஈர்க்கப்படும் இயக்குநர் அதன் காரணமாகவே அந்நாவலைத் திரைப்படமாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். அப்பாத்திரத்தின் பண்புநலன்களோடு தனது கருத்தையும் ஏற்றிச் சொல்லும் விதமாகவும் அப்பாத்திரத்தை மாற்றம் செய்வதும் இயக்குநருக்கான படைப்பு உரிமையாக அறிஞர்களால் கருதப்படுகிறது. அதே போன்று கதையில் சிற்சில மாற்றங்களைச் செய்கின்றனர். புதிய பாத்திரங்களைச் சேர்ப்பதும், நாவலில் முக்கியமில்லாத பாத்திரங்களை நீக்குவதும் சினிமாவின் கால எல்லை கருதியும், இயக்குநரின் விருப்பப்படியும் நடைபெறும் மாற்றங்களாகும். நாவலில் பாத்திரங்கள் பேசும் உரையாடல்களை அப்படியே சினிமாவிலும் பயன்படுத்தினால் சினிமாவின் தனிப்பண்பான காட்சிகளால் கதை சொல்லுதல் இல்லாமற் போய்விடும். நாவலில் வருணிக்கப்படுகின்ற பாத்திரத்தின் பண்புநலன்கள் அப்பாத்திர உருவாக்கத்தில் வாசகனின் கற்பனையைத் தூண்டுகிறது. சினிமாவில் அப்பாத்திரங்கள் நேரடியாகக் காட்டப்படுவதால் ஒரு பொதுத்தன்மைக்கு இயக்குநர் கொண்டு வருகிறார். நாவலில் ஏற்படுத்திய தாக்கம் சினிமாவில் உண்டாக்கவில்லையெனில் அப்படம் தோல்வியைத் தழுவும் அபாயமுள்ளது. ஆகவே, ஒரு நாவல் சினிமாவாகும் பொழுது பாத்திர உருவாக்கத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

## சான்றெண் விளக்கம்


1. E.M.Forster, Aspect of the Novel,p.85
2. சு.தியடோர் பாஸ்கரன், சொப்பன வாழ்வில் மகிழ்ந்தே, ப.18
3. நீல.பத்மநாபன், தலைமுறைகள், ப.35

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் இல்லறம்

**முனைவர் க. ராதிகா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை
காவேரி மகளிர் கல்லூரி,
திருச்சி – 18.

**ப**தினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் இல்லறத்தின் மாண்புகளையும் சிறப்புணக்களையும் பேசுகின்றன. இல்லறமே நல்லறம் என்ற மேலான கருத்தை நீதி நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் மனம் பொருந்தி நன்றாகப் புரிந்துகொண்டு தம் வாழ்க்கையைத் தொடங்குவதே இல்வாழ்க்கை ஆகும். நல்லறமாகிய இல்லறத்தின் சிறப்புக்களை எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திருக்குறள் காட்டும் இல்லறம்:**

ஒருவனது இல்வாழ்க்கை, அன்புத்தன்மையையும் அறச்செயல்களையும் கொண்டிருக்க வேண்டும். இல்வாழ்க்கையின் பண்பாக அன்பையும் பயனாக அறத்தையும் வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள் : 45)

என்பது திருவள்ளுவர் வாக்கு.

எல்லாம் தமக்கே உரிமையுடையது என்று அன்பில்லாதவர்கள் கூறுவர். ஆனால் அன்புடையவர்கள் தம்மையே பிறருக்குச் சொந்தமாக்குவர். இந்த அன்புப் பிணைப்பில் தான் வள்ளுவரின் தலைவனும் தலைவியும் வாழ்ந்தனர் எனலாம்.

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் : 72)

நாலடியார் காட்டும் இல்லறம் :

நாலடியார் அறத்துப்பாலை இல்லறவியல், துறவறவியல் என இரண்டாகப் பகுத்துப் பேசுகின்றது. இல்லறத்தை மெய்யான அறமென நாலடியார் எடுத்துரைப்பது உற்று நோக்கத்தக்கதாகும்.

மனைக்கு விளக்கு மனைவியே ஆவாள். மேகம் தவழும் உயர்ந்த மாடியையும், சிறப்புமிக்க பாதுகாவலையும் அணிகளே விளக்காக நின்று ஒளி வீசுவதாக இருந்தாலும் மாட்சிமைப்பட்ட மனைவியைப் பெறாதவனின் இல்லம் சுடுகாட்டிற்கு ஒப்பானதாகும் என்பதைப் பின்வரும் நாலடியார் பாடல் உணர்த்துவது சிந்தனைக்குரியதாகும்.

மழைதிளைக்கும் மாடமாய் மாண்பமைந்தகாப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னாம்? விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற்கு அரியதோர் காடு.
(நாலடியார், பன்னெறியியல் பா.எண். 361)

பழமொழி நானூறு காட்டும் இல்லறம் :

இல்லறத்தின் மாண்புகளைப் பேசும் பழமொழி நானூறில், இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண்களுக்கு நாணம் வேண்டும் என்கின்றார் முன்றுறையரையனார்.

நாணின்றி அமையாது பெண்மை ( பழமொழி நானூறு, பா. எண்.327 )

என்பது அவரது கூற்று. இல்வாழ்க்கையில் மனைவியின் விருந்தோம்பல் பண்பாடு சிறப்பாக அமைய வேண்டும். கணவனின் மனக்குறிப்பினை முகத்தைப் பார்த்து அறியும் பண்புடைய இல்லாள். வந்த விருந்தினரை
முகமலர்ச்சியோடு வரவேற்று உணவு கொடுத்து ஓம்ப வேண்டும். அத்தகையோரின் இல்வாழ்க்கையில் தான் செல்வம் பெருகும் என்கிறது பழமொழி நானூறு.

சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பி
பழமொழி நானூறு, பா.எண்.330)

என்பது அப்பாடல் வரிகளாகும். இல்லற வாழ்க்கையில் குடும்பத் தலைவனாகியத் தந்தை தம் மக்களைச் செந்நெறியில் ஒழுகச் செய்யவேண்டும். தந்தையின் தலையாய இல்லறக் கடமையைப் பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது.

எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச்
செந்நெறிமேல் நிற்பச் செயல் வேண்டும்
(பழமொழி நானூறு, பா.எண்.331)

இனியவை நாற்பது காட்டும் இல்லறம் :

கணவனது மனமும் மனைவியினது மனமும் வேற்றுமை இன்றி ஒன்றுபடுமானால் அதுவே சிறந்த இல்லமாகும். இதனை இனியவை நாற்பது,

உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன்இனிது மாணாதா மாயின்
(இனியவை நாற்பது, பா.எண்:1-2)

என்னும் பாடலடிகளால் உணர்த்துவது குறிப்பிடத்தக்கதாகும். சிறந்த இல்வாழ்க்கை என்பது இவ்வுலகத்தில் வாழும் நிலையற்ற உயிர்களுக்கெல்லாம் உரிமைப்படவும் உறுதிப்படவும் வாழ்வதாகும். இதனை,

மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியா வாழ்தல் இனிது
(இனியவை நாற்பது, பா,எண் 20: 3-14)

இனியவை நாற்பது பாடலடிகளால் அறிகின்றோம்.

இன்னா நாற்பது காட்டும் இல்லறம் :

கணவன் மனைவியரிடையே விட்டுக் கொடுக்கும் பண்பும் ஒருவர் கருத்தை ஒருவர் ஏற்று நடத்தலும் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். கணவனுக்கு மனைவி அடங்கி நடத்தலே சிறப்பான இல்லற வாழ்க்கைக்கு வழி வகுக்கும். அவ்வாறு மனைவி கணவனுக்கு அடங்காமல் நடத்தல் மிகுந்த துன்பதைத் தரும் என்பதையும் இன்னா நாற்பது, ஆர்த்த மனைவி அடங்காமை நன்கின்னா (இன்னா நாற்பது, பா.எண் . 2:2) எனக் குறிப்பிடுகின்றது.

உறைவிடம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். மழையின் துளி ஒழுகும் பழைய கூரையைக்கொண்ட வீட்டில் வாழ்வது துன்பத்தைத் தரும்.

உறைசேர் வழங்கூரை சேர்ந்தொழுகலின்னா
(இன்னா நாற்பது, பா.எண்.5:2)

நான்மணிக்கடிகை காட்டும் இல்லறம் :

ஒருவனுக்கு கண்ணைப் போன்ற சிறந்த உறுப்பு வேறொன்றும் இல்லை, ஒரு பெண்ணிற்குத் தன்னை மணந்து கொண்ட கணவனைப் போன்ற நெருங்கிய உறவினர் இவ்வுலகத்தில் வேறு எவரும்
இல்லை, இதனை விளம்பிநாகனார்,

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை
(நான்மணிக்கடிகை, பா.எண்.57:1-2)

எனச் சுட்டுகின்றார்.

**திரிகடுகம் காட்டும் இல்லறநெறி :**

நல்லாதனார் திரிகடுகத்தில் இல்லற நெறியை ஆங்காங்கே சிறுசிறு குறிப்புக்களாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். கணவன் தன் மனைவியை அடிக்கக்கூடாது.கணவன் உள்ள உறுதிகொண்ட தன் மனைவியை அடித்துத் துன்புறுத்தவதும் சிற்றறிவு உடையவர்களைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வதும் துன்பத்தைத் தரும் என்பதை,

இல்லாளைக் கோலால் புடைத்தலும் இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும்
(திரிகடுகம், பா. எண் 2:1-3)

எனத் திரிகடுகம் குறிப்பிடுகின்றது.

அறிவூட்டும் பல நல்ல நூற்பொருள்களைக் கற்றலும் பகுத்துண்டு இல்லறத்தைச் செம்மையாக நடத்துதலும் சிறந்த கல்வியாகும் என்பது திரிகடுகத்தின் கருத்தாகும்.

பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாம்
இல்லற முட்டாது இயற்றலும்
(திரிகடுகம், பா. எண்.31 : 1-2)

**சிறுபஞ்ச மூலம் சுட்டும் இல்லற நெறி :**

காரியாசான் சிறுபஞ்சமூலத்தில் இல்லற நெறியை ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார். கற்புடையப் பெண் அவள் கணவனுக்கு அமிழ்தம் போன்றவள் என்கின்றார். கற்புடைய பெண் அமிழ்து (சிறுபஞ்ச மூலம், பா. எண் : 4) என்பது அவர் வாக்காகும். கற்புடைய பெண்களின் ஒழுக்கச் சிறப்பை வியந்து போற்றும் காரியாசான், ஒழுக்கம் இல்லாத பெண்களின் இழி செயல்களைப் பழித்தும் பேசுகின்றார்.

கள்ளுண்டல் காணில் கணவன் பிரிந்துறைதல்
வெள்கில ளாய்ப்பிறர் இல்சேறல்-உள்ளிப்
பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமைத்
திறமதுதீப் பெண்ணின் தொழில்
(சிறுபஞ்சமூலம், பா.எண் : 25)

கள்ளுண்ணல், புணர்ச்சியை வேண்டாது தன் கணவனைப் பிரிந்து வாழ்தல், நாணம் அற்றவளாக மற்றவர் இல்லங்களுக்குச் செல்லுதல், பிறர் செயலை மற்றவர்களுடன் கலந்து ஆராய்தல், தீய பெண்களோடு நட்புக்கொள்ளல் என்ற ஐந்தும் ஒழுக்கக்கேடான பெண்களின் செயல்களாகும்.

**முடிவுரை :**

ஒழுக்கம் சார்ந்த அறநெறியில் இல்லறம் இருக்க வேண்டும் என்று நீதி நூல்கள் பரவலாக பேசுகின்றன. நீதி நூல்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களைப் பின்பற்றி வாழ்ந்தால் இல்லறம் நல்லறமாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# வாலியின் திரையிசைப் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்

**இரா.சுரேஸ்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
தேசியக் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி.

**ச**மூக வாழ்வில் தன் படைப்புகளை புகளுக்கு மட்டும் விட்டு விடாமல் இந்த சமுதாயத்தில் நடக்கும் இன்ப துன்பங்களையும் மக்களிடம் விழிப்புணர்வை தூண்டும் வகையிலும் தீய வழியில் இருந்து நல்வழிப்படுத்தவும் பாடல்களை கவிஞர் வாலி எழுதியுள்ளார்.

**அறிவுரையை கேட்க கேட்கத்தான் - அறிவுவளரும்**
**அறியாமையை உணர உணரத்தான் தெளிவுபிறக்கும்**

என்பதற்கினங்க பாடல்கள் மூலம் சமுதாயத்தில் நடக்கும் அவலங்களை திரையிசைப்பாடல்கள் மூலம் படைத்துள்ளார்.

இன்றைய நிலைகளில் அறிவியல் முறைப்படி மனிதனுக்கும் சமுகத்திற்கும் உள்ள தொடர்பையும் மனித குழுக்களில் உள்ள உறவு முறைகளையும் மனிதன் தினம் தினம் எதிர்கொள்ளும் சமூக பிரச்சனைகளையும் கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்கள் வழி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

சமுதாயம் என்பது நம்பிக்கைகள் பாரம்பரியங்கள் நடத்தைசெயல் பாடுகள் இடம் பொருள் இவற்றின் ஒட்டு மொத்தமேயாகும். பண்பாடும் நாகரிகமும் மனித சமுதாய வாழ்வு நிலைபாடுகளின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றது.

**பகுத்தறிவு :**

நாம் மூடபழக்கத்தை விட்டுவிட்டு காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப நாமும் மாறவேண்டும் நம்மால் இந்த சமுதாயமும் சமுதாயத்தினால் நாடும் மாற வேண்டும் என வழியுறுத்தியுள்ளார்.

**"மூடப் பழக்கத்தை விட்டு விடு**
**காலம் மாறுது கருத்தும் மாறுது**
**நாமும் மாறவேண்டும் - நம்மால்**
**நாடும் மாறவேண்டும்"**

**வாலி ஆயிரம் ப. 484**

பழங்காலத்தில் நடந்த நிகழ்வுகளை இன்றைய காலத்திற்கு பயன் படுத்தாமல்தன்னுடைய மூடப்

பழக்கத்தை விட்டு விட்டு காலம், கருத்து மாறுதலுக்கு ஏற்றார் போல் நாமும் மாற வேண்டும். நம்மால்

நம்மக்களும் நம் நாடும் முன்னேற வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

**“மாற்றம் உன்னிடமிருந்தே !**
**உனக்குள்ளிருந்தே**
**ஏனெனில் நீ தான் உலகமே”**
**மலரும் இந்திய சமுதாய கல்வி. ப. 3.33**

சமுதாயத்தை மாற்ற மனிதனாகிய உன்னிடம் இருந்துதான் வரவேண்டும் உனக்குள் இருந்துதான் வரவேண்டும். என்றும் நீ தான் இந்த உலகத்தையும் இந்த சமுதாயத்தையும்மாற்றக்கூடியவர் என்றும் ஜே. கிருஸ்ணமூர்த்தி கூறுகிறார்.

மனிதன் எந்த அளவு அறிவைப் பெருகிறானோ அந்த அளவு அறச்சிந்தனையை வளர்த்துக் கொள்ளவில்லையெனில் இந்த அறிவு பெருக்க துன்பத்தில் போய் முடியும் என்கிறார். பெர்ட்

**‘பந்தெடுத்து விட்டு எறிந்தால் - சுவர்மேல்**
**பட்டதுபோல் திரும்பி வரும் - இந்தத்**
**தத்துவத்தை தானறிந்தால் பிறர்க்குத்**
**தீங்கு செய்ய எண்ணம் வருமா’’**
**வாலி ஆயிரம் ப .484**

பந்தை சுவற்றில் அடித்தால் மீண்டும் நம்மிடம் வரும் இந்த தத்துவத்தைத் நாம் அறியாதிருந்தால் பிறருக்கு தீங்கு செய்யும் எண்ணம் வராது.பந்தை அடித்தால் மீண்டம் அதே இடத்திற்கு வரும் அதைப்போலவே உழைப்பாளர்கள் வியர்வையை உறிஞ்சும் முதலாளிகளும் அறிந்துகொண்டாள் ஏழை மக்களிடம்மிருந்து சுரண்டும் எண்ணம் வராது நாமும் ஏழையாக இருந்துதான் வந்தோம் என்ற உணர்வு வரும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

**பெண்களின் மாற்றம் :**

பெண்களின் புருவம் வில்லைப்போல் வளைந்து இருந்தது இன்று செல்லரித்து போனதென்ன என்றும் மஞ்சள் பூசிப் பார்த்த முகம் இப்பொழுது மாவைப் பூசிப் பார்கிறார்கள். இப்படிசமுகத்தில் பெண்களின் மாற்றத்தை வாலி வெளிப்படுத்துகிறார்.வறுமையால் வாடும் பெண்களின்நிலைகளையும் தனது அழகைப் புதுப்பிக்காமல் செயல் இழந்து இருப்பதை

**‘வில் வளைந்த புருவம் எல்லாம்**
**செல்லரித்துப் போனதென்ன**
**மஞ்சள் பூசிப் பார்த்த முகமோ**
**மாவைப் பூசிப் பார்ப்பதென்னசொல்’’**
**வாலி ஆயிரம் ப.499**

என்ற பாடல்களில் காணமுடிகிறது.

பிள்ளை அழுதால் தாயின் கண்கள் கலங்கும் இது இயல்பானது தாய்கொரு துயரம் என்றால் மகளுக்கும் பொருந்தும் என்ற உறவு முறைகளையும் பாசத்தையும் காட்டுவதாக

**‘ஒரு கண் அழுதாலே**
**மறு கண் கலங்காதோ**
**உனக்கோர் துயரென்றால்**
**எனக்குப் பொருந்தாதோ’’**
**வாலி ஆயிரம் ப. 502**

என்ற பாடலில் கூறுகிறார்.

**மானத்தைக் காத்தல் :**

நரிக்குறவர்கள் தனக்கென்று இடத்தையும் நிலையான வீட்டையும் வைத்திருக்கமாட்டார்கள் நாடோடிகளாக ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊறுக்கு செல்வார்கள் தன்னுடைய வேலையைமட்டும் பார்ப்பார்கள் பிச்சைகேட்டு செல்லமாட்டார்கள் என்பதை வாலி வெளிப்படுத்தியுள்ளார்.

**‘படி அரிசி கிடைக்கின்ற காலத்திலே – நாங்க**
**படியேறி பிச்சைக் கேக்கப் போவதில்லை’’**
**வாலி ஆயிரம் ப.367**

நரிக்குறவர்கள் பாசிமணி ஊசியெல்லாத்தையும் விற்றாலும் காசுக்காக தன்னுடையமானத்தை விக்காமல் வாழ்கின்றனர். ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு இடம்பெயர்ந்தாலும் மானத்தை பெரிதாக எண்ணி காத்து வருவதை காணமுடிகின்றது. காசுதான் முக்கியம் என்று பார்க்காமல் தன்னுடைய மானம் தான் பெரிது என்பதை

**‘பாசிமணி ஊசியெல்லாம் விப்போமுங்க–**
**ஆனா**
**காசுக்காக மானத்தையே விக்கமாட்டோம்’’**
**வாலி ஆயிரம் ப.367**

என்ற பாடல்கள் வழி வெளிப்படுத்துகிறார்.

**வாழ்க்கை நெறிகள் :**

மனம் போல் வாழ்வு என்பது ஆன்றோர் மொழி எண்ணங்களின் அடிப்படையில் தான்வாழ்க்கை அமையும் ஆதலால் என்றும் நல்லன எண்ண வேண்டும்.

ஒவ்வொருவரும் பல கனவுகளுடன் வாழ்க்கையில் போராடுவார்கள் தனக்கு வெற்றி கிடைக்கும் என்று அதற்கு பல வித தடைகள் வரும் அந்த தடைகளைத் தகர்த்து வாழ்ந்து காட்ட வேண்டும் .

**‘இடைவரும் பல வித தடைகளைத் தகர்த்திங்குவாழ்ந்து காட்ட வேண்டும்’**

**வாலி ஆயிரம் ப.61**

நீருக்குள்ளே மூழ்கினாலும் உயிர்போனாலும் நீதியாகிய உண்மை என்றுமே சாகாது மனசுக்குள்ளே வாழும் ஜோதியாகிய நெருப்பு சாகாது உண்மை என்றும் நிலைத்து நிற்கும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார்.

**‘நீருக்குள்ளே மூழ்கினாலும் நீதி சாகாது**
**நெஞ்சுக்குள்ளே வாழும் எங்கள் ஜோதி சாகாது’’**

**வாலி ஆயிரம் ப.469**

இயற்கையின் படைப்புக்கள் நம்மை ஆச்சரியப்படுத்துகிறது அன்னையின் மடிசுறப்பதுபோலஇயற்கையினால் மழைபெய்து அதனால் வற்றாமல் மலை இடுக்குகளில் இருந்து நீர் சுரந்து அதன்போக்கிற்கு ஏற்ப இருபக்கமும் கரைகளை அமைத்து தடுப்பணைகளை அமைத்து தேவைக்கு ஏற்ப நீரைப்பாய்ச்சி விவசாயம் செய்கின்றனர். விவசாயம் செய்வதனால் தான் நமக்கு சோறு கிடைக்கின்றது ஆறுதூங்கிவிட்டால் தண்ணீர் நின்று விட்டால் சோறு கிடைக்காது என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார்.ஒவ்வொருவர் வாழ்விலும் விதிதான் வாழ்க்கையை தீர்மானம் செய்கின்றது. நம்மால்முடிந்தால் அதை நிருத்த வேண்டும். நம் வாழ்வில் இன்பத் துன்பம் எது நடந்தாலும் வாழ்வில் நம்முடைய தலையெழுத்துதான். என்பதை

**“வாழ்விலே**
**விதி என்பதே விளையாடுதே**
**முடிந்தால் அதை நிறுத்து**
**கனவாவதும் நனவாவதும்**
**மனிதா உன் தலையெழுத்து”**
**வாலி ஆயிரம் ப.489**

ஒவ்வொருவர் வாழ்விலும் விதி விளையாடுகிறது என்பார்கள் இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும் விதியை சொல்லுவது வழக்கமாக உள்ளது என்று பாடலில் கூறுகிறார்.

**‘தூங்காது ஓடுதடா ஆறு**
**அது தூங்கிப்புட்டா நமக்கு ஏது சோறு’’**

**வாலி ஆயிரம் ப. 508**

உழவுதொழில் செய்து உழைத்து வியர்வை சிந்தியதால் அதில் வரும் வருமானம் குறைவாக உள்ளது பொருளை வாங்கும் வியாபாரி விற்பனை செய்து இலாபம் ஈட்டுகிறான். இதன் மூலம்கையில் பணப்பை கனக்கின்றது.இதற்கு காரணம் உழவனின் கலப்பைதான்.நம்மை போன்ற தோழர்கள் வழங்கிய உழைப்பின் பலனை முதலாளிவர்க்கத்தினர் உண்டு கொழுதத்து இரைப்பை என்று நகைப்போடு கூறுகிறார்.

**‘நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு’**

**திருக்குறள் வான் .20**

உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**‘உங்கள் கைகளில் கனத்திடும் பணப்பை**
**வந்த காரணம் உழவனின் கலப்பை**
**எங்கள் தோழர்கள் வழங்கிய உழைப்பை**
**உண்டு கொழுத்தது உங்கள் இரைப்பை’’**

**வாலி ஆயிரம் ப. 67**

படைப்புக்கள் பல படைத்து இருந்தாலும் பலருடன் கூடி உண்ணுகின்ற மகிழ்வு எவ்வளவு தான் செல்வம் வைத்திருந்தாலும் இந்த மகிழ்வு கிடைக்காது. ஒன்றாக சேர்ந்து உணவு உண்ணுகின்ற பொழுது இந்த உலகத்தில் தாம் வாழும் நாட்கள் நீண்டுள்ளது.

**‘படைப்பு பல படைத்துப் பலரோடு உண்ணு**
**உடைபெருஞ் செல்வராயினும்**
**- - - - - - - - - - - - - -**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை யில்லைத் தாம் வாழும் நாளே’**

**புறநா ப. 188**

**உறவு முறைகள் :**

காக்கை யின் கூட்டைபோல் தாய் படும் துயரத்தில் பிள்ளைகளும் பங்கெடுக்க வேண்டும் அப்பொழுதுதான் உறவுமுறைகள் சிறந்து இருக்கும் என்ற கருத்தைக் கூறுகிறார்.

**“பெற்ற தாய் படும்பாடு**
**பிள்ளைதான் அறியாது**
**இது காக்கையின் கூடு”**

**வாலி ஆயிரம் ப .53**

மண்ணில் பிறந்த குழந்தைகள் அனைவரும் நல்லவ்ராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்கிறார் அதைப்போல் நல்லபேரை வாங்க வேண்டும் குழந்தைகள் அதனால் நம் நாடு என்கின்ற தோட்டத்தில் நாளை முல்லை மலர்போல் மலர்வார்கள் என்று தெளிவுபடுத்துகிறது.

**‘நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே**
**நம் நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே’**

**வாலி ஆயிரம் ப. 323**

சமுகத்தில் கூட்டுக்குடும்பம் என்பது போய் தனி குடும்பத்திற்கு மாறி விட்டனர் ஆனால் கூட்டு

குடும்பத்துடன் ஒன்றாக இருந்து உண்மையைச்சொல்லி மகிழ்வாக இருக்கவேண்டும்.

**‘ஒண்ணா இருக்கக் கத்துக்கணும்**
**இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்’**

**வாலி ஆயிரம் ப. 62**

**மனத்துக்கண் மாசிலன் ஆதல்**
**அனைத்துக்கண் ஆகுல நீர பிற.**
**(திருக்குறள் .34)**

என்ற வள்ளுவர் வாக்கின் படி தனிநபர் ஒழுக்கம் பிறரிடம் நடந்துகொள்ளும் விதமுமெ சமுகத்தில் ஒரு மதிப்பைத் தேடித் தரும் கருவி என உணரமுடிகிறது.

**வறுமை :**

மனிதன் தன் வாழ்க்கையில் வருமையினால் பலத் துன்பங்களை பெறுகிறான். உழைப்பை மூலதனமாக கொண்டு போராடுகிறான். ஒரு பிடி சோற்றுக்காக ஏழைகள் படும் பாடு பெறும் பாடாக உள்ளது என்றும் ஒருசான் வயிறுக்காக போராடுகிற நிலையையும் ஒரு பிடி மண்ணுக்காக உரிமை இல்லாமல் எதிர் நீச்சல் போடுவதையும் பாடலில் அறிவுறுத்துகிறார்.

**‘ஒரு பிடி சோத்துக்கு ஒருசான் வயிறு**
**போராடுவது எதிர் நீச்சல்**
**ஒரு பிடி மண்ணுக்கு உரிமைகொண்டு**
**போர்க்களம் போவது எதிர்நீச்சல்’’**

**வாலி ஆயிரம் ப. 55**

மனிதன் மனிதனாய் வாழ நல்வழி காட்டுவது நல்லறமாகும்

**துணிச்சல் :**

மனிதனுக்கு துணிச்சல் இருந்தால் வெற்றியையும் தோழ்வியையும் சரிசமமாக எண்ணமுடியும். எந்த செயலையும் துணிந்து நின்று தொடர்ந்து செய்தால் தோல்விகள் இல்லை தம்பி என்றும் நடந்ததை சொன்னால் நல்லதைச் செய்தால் நமக்கு தெய்வம் இருப்பதை நம்ப வேண்டும்.

**துணிந்து நில்**
**தொடர்ந்து செல்**
**தோல்வி கிடையாது தம்பி**
**உள்ளதைச் சொல்**
**நல்லதைச் செய்**
**தெய்வம் இருப்பதை நம்பி**

**வாலி ஆயிரம் ப.48**

என்ற பாடல் வரிகளில் எடுத்துரைக்கிறார்.ஏழைகள் படும் பாட்டிற்கு காலம் தான் பதிலாக இருக்கிறது ஏமாற்றி பிழைக்கும் கூட்டங்களை கேள்விக் கேட்க மனசு துடிக்கின்றுத ஆனால் ஒருகாலம் வரும் என்று நம்பப்படுகிறது.

**ஏழைபடும் பாட்டுக்கெல்லாம்**

**காலம் ஒன்று இருக்குது**

**ஏச்சுப் பொழைக்கும் கூட்டத்தையே**
**கேள்விக் கேட்க துடிக்குது’**

**வாலி ஆயிரம் ப.79**

என்று பதிவு செய்கிறார்.

**ஏழைகள் யாருமில்லை செல்வம் ஏறியோர் என்றுமில்லை**
**வாழ்வுகள் தாழ்வுமில்லை என்றும் மாண்புடன் வாழ்வமடா**

**பாரதியார் கவிதைகள் ப.42**

ஏழைகளும் செல்வம் இருப்பவர்களும் எவரும் இல்லை நம் வாழ்கையைத் தாழ்வு இல்லாமல் மாண்புடன் வாழ்வோம் என்று பாரதியார் கவிதையின் மூலம் உணரமுடிகிறது.

**முடிவுரை:**

சமுதாயத்தில் குழுக்களாக மக்களோடு மக்களாக வாழவும் ஏழை பணக்காரன் என்றவேற்றுமை நீங்கிஒற்றுமையாக வாழவும் சமுதாய மக்களை நல்வழியில் நடத்தவும் வாழ்க்கைமுறைகளை மேம்படுத்தவும் கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்கள் எடுத்துரைப்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

# இறையனார் அகப்பொருளும் பிற அகப்பொருள் நூல்களும்

**முனைவர். து.சேகர்**
இணைப் பேராசிரியர்,
தமிழாய்வு துறை,
அரசு கலைக்கல்லூரி
அரியலூர் –621 713.

**கா.செந்தில்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அரசு கலைக் கல்லூரி,
அரியலூர் – 621 713.

**த**மிழில் அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்கள் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், களவியற் காரிகை ஆகியன. இக்கட்டுரை இறையனார் அகப்பொருள் பிற அகப்பொருள் நூல்களோடு எவ்வெவ்வகையில் ஒ துள்ளது என்பதை ஆராய்ந்து எடு துரைக்கின்றது.

**இறையனார் அகப்பொருள்**

இறையனார் அகப்பொருள் என்னும் இந்நூல் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. இறையனார் இயற்றியதாதலால் இந்நூல் இறையனார் அகப்பொருள் எனப் பெயர் பெற்றது. அகப்பொருள் இலக்கண திலும் களவு இலக்கண தை மிகு துக் கூறுவதனால் இந்நூல் இறையனார் களவியல் எனவும் பெயர் பெறும்.

இறையனாரை மதுரை ஆலவாய்ச் சோம சுந்தரக் கடவுள் என்று கூறுவர். இந்நூலின் உரையில் இந்நூல் செய்தார் யாரோ எனின், ''மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவாயில் பால்புரை பசுங்கதிர்க் குழவி திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள்'' எனக் கூறுகின்றது.

இறையனார் அகப்பொருள் உறையாசிரியர் நக்கீரரின் காலம் குறி து பல்வேறு கரு துக்கள் நிலவுகின்றன.

கடைச் சங்கப் புலவர் நக்கீரருக்குச் சிறிது முற்பட்டவர் எனக் கொள்ளின் கி.மு. முதல் அல்லது கி.பி. முதல் நூற்றாண்டு இவர் காலம் என இலக்கண வரலாறு என்ற நூலில் சோம.இளவரசு அவர்கள் கூறுகிறார்.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் நக்கீரர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பர். ச. தண்டபாணி தேசிகர் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்.

வரலாற்றாளர் தம் குறிப்புகளைக் கொண்டும், நக்கீரர் பாடல்களிலும், பிற சங்க இலக்கியங்களிலும் காணப்படும் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டும், சாசனச் சான்றுகள் கொண்டும், நக்கீரர் கால து வாழ்ந்த மன்னர், புலவர் வரலாறுகளின் துணைக்கொண்டும், நக்கீரர் காலம் கி.பி. 175 முதல் 240 வரை என்று நக்கீரர் ஓர் ஆய்வு என்ற நூலில் மு.பெரி.ராமசாமி அவர்கள் கூறுகின்றார்.

இந்நூல் களவியல் கற்பியல் என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. களவியலில் 33 நூற்பாக்களும் கற்பியலில் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்களை உடையது. இந்நூற் சூத;திரங்கள் பெரும்பாலும் ஒரு அடி இரண்டு அடிச் சூத;திரங்களாகவே காணப்படுகின்றன. பன்னிரண்டாவது சூத;திரம் மட்டுமே ப து அடிகளைக் கொண்டுள்ளது. ஏனைய நூற்பாக்கள் 10 அடிக்கு உட்பட்டனவேயாகும். சூத;திரங்கள் எளிமையுடையன. திட்ப நுட்பம் செறிந்தன.

உரைக்க உரைக்கப் பொருள் விரிய இடம் கொடுப்பன என்று இலக்கண வரலாறு என்ற நூலில் சோம.இளவரசு கூறுகிறார்.

**தொல்காப்பிய அமைப்பும் பகுப்பும்**

காலப் பழமையாலும் புலவர் பாராட்டும் சீர்மையாலும், ஒப்பு உயர்வற்று விளங்குவது தொல்காப்பியம் என்னும் பெரு நூலாகும். இந்நூலே தமிழரின் நாகரிகச் சிறப்பிற்கும் தமிழின் பெருமைக்கும் எடு துக்காட்டாய் விளங்குகின்றது. அமைப்பில் அழகு காண வேண்டும் என எண்ணிய தொல்காப்பியர், அதிகாரங்களிடையில் இயல்களுக்கு ஏற்ற தாழ்வு இல்லாமல் ஒரே வகையில் இயல்களை அமை துள்ளார். இந்தக் கலை உள்ளம் தொல்காப்பிய புறவமைப்பைச் செம்மைப்படு திவிட்டது.

தமிழில் முழுக்க கிடை த முதல் நூல் என்ற பெருமையை தொல்காப்பியம் பெறுகிறது. இது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நூல் எழு ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பகுப்புகளை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது ஒன்பது இயல்களால் அமைய 27 இயல்களைக் கொண்டு விளங்குகிறது. இந்நூல் இயல்பாகவும், விரைவாகவும், தெளிவாகவும், சூ திரம் அமைய வேண்டும் என்ற வரம்பு தழுவி தொல்காப்பியர் நூல் எழுதியுள்ளார் என்பர் வ.சுப.மாணிக்கம்.

**நம்பியகப் பொருள் அமைப்பும் பகுப்பும்**

இந்நூல் அகப்பொருள் இலக்கண தினை வரையறைப்படு தி, தெளிவாக்கி விளக்கமாகக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இந்நூல் ஆசிரியர் நாற்கவிராச நம்பியாவார். இவர் பெயருடன் சேர் து இந்நூல் நம்பியகப் பொருள் எனவும் வழங்கப்பெறும்.

இந்நூல் தொல்காப்பிய தின் அகப்பொருள் இலக்கண தையும், சான்றோரின் இலக்கிய தையும் தழுவி இயற்றப்பட்டது. செப்பமுற்று விளங்குகிறது. நூற்பாக்கள் எளிமையுடையன. வேண்டியாங்கு விரி துக் கூறப்பெறும் கரு துக்களை விரி தும், சுருக்கிக் கூற வேண்டியவற்றைச் சுருக்கியும் கூறுகிறது என்பர் சோம.இளவரசு.

இந்நூல் அக திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. 252 நூற்பாக்களையுடையது.

**களவியற்காரிகை அமைப்பும் பகுப்பும்**

களவியற் காரிகை என்னும் இந்நூல் அகப்பொருள் இலக்கணம் கூறுவது. இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. இந்நூலில் 60 நூற்பாக்கள் இருந்திரு தல் வேண்டும் என்பர் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. இந்நூலின் ஆசிரியர் பெயர் முதலிய விவரம் தெரியவில்லை. இந்நூல் பெயரும் கிடைக்கவில்லை. இதனைப் பதிப்பி த பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை இட்ட பெயரே ‘‘களவியற் காரிகை’’ என்பதாகும். இந்நூல் கட்டளைக் கலி துறையால் இயற்றப்பெற்றுள்ளது.

இப்போது கிடை துள்ள நூற்பாக்கள் 53 ஆகும். இந்நூலின் காலம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம் என இலக்கண வரலாறு என்ற நூலில் சோம.இளவரசு கூறுகிறார். களவியற்காரிகை இறையனார் அகப்பொருளை தழுவி எழுதப்பட்ட நூல். நூற்பாவால் அமைந்த யாப்பருங்கலம் என்னும் நூலை ஒட்டி கட்டளை கலி துறையால் எழுதப்பட்ட யாப்பிலக்கணநூல் யாப்பருங்கலக்காரிகை, என்று பெயர் பெற்றது போல, நூற்பாவால் ஆகிய களவியலை தழுவிக் கட்டளைக் கலி துறையால் ஆன நூல் களவியற்காரிகை என்று பெயர் பெற்றது.

**தொல்காப்பியமும் இறையனார் அகப்பொருளும்**

தொல்காப்பியம் பொருளதிகார தில் அக திணையியல், களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல் போன்ற இயல்கள் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. தொல்காப்பியப் பொருளதிகார தில் அமைந்துள்ள நூற்பாக்கள் சிற்சில மாற்ற துடன் இறையனார் அகப்பொருளில் எடு தாளப்பட்டுள்ளன.

* *‘‘இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்*
*காமக் கூட்டங் காணுங் காலை*
*மறையோர் தேஎட்து மன்றல் எட்டனுள்*
*துறையமை நல்யாழ் துணைமையோர் –*
*இயல்பே’’*

(தொல் –பொருள் –களவு நூ.1)

*‘‘அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது*
*அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்*
*கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்’’*

(இறையனார் அகப்பொருள்.நூ.1)

* *‘‘குறையுற உணர்தல், முன்னுற உணர்தல்*
*இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என*
*மதியுடம்படு தல் ஒரு மூவகை தே’’*

(தொல்.பொருள்.களவு நூ.35)

*‘‘முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்*
*இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென்று*
*அம்மூன்றென்ப தோழிக் குணர்ச்சி’’*

(இறையனார் அகப்பொருள் நூ.7)

* *‘‘குறியெனப் படுவது இரவினும் பகலினும்*
*அறிய தோன்றும் ஆற்றது என்ப’’*

(தொல்.பொருள்.களவு நூ.38)

*‘‘குறியெனப் படுவ திரவினும் பகலினும்*
*அறியக் கிளந்த இடமென மொழிப’’*

(இறையனார் அகப்பொருள் நூ.18)

**இறையனார்அகப்பொருளும் – நம்பியகப் பொருளும்**

இறையனார் அகப்பொருளில் இடம் பெற்றுள்ள நூற்பாக்கள் சிற்சில மாற்ற துடன் நம்பியகப் பொருளில் அமைந்துள்ளன. அவை,

*"அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தரு வழக்கம் என்மனார் புலவர்''*

(இறையனார் அகப்பொருள் நூ.1)

*"உளமலி காதல் களவெனப்படுவது
ஒரு நான்கு வேத து இரு நான்கு மன்றலுள்
யாழோர் கூட்ட து இயல்பினது என்ப''*

(நம்பி –117)

* *"அல்லகுறிப் படுதலு மவ்வயினுரி தே
அவன்வர வறியுங் குறிப்பினான''*

(இறையனார் அகப்பொருள் நூ.17)

*"அல்லகுறி வருந்தொழிற்கு அருமை என்றாங்கு
எல்லிக்குறி இடையீடு இருவகைட்து ஆகும்''*

(நம்பி....159)

*இரவுக்குறியே இல்வரை இகவாது''*

(இறையனார் அகப்பொருள், நூ.19)

* *"இல்வரை இகந்தது பகற்குறி, இரவுக்குறி
இல்வரை இகவா இயல்பிற்று ஆகும்''*

(நம்பி....138)

*"பர தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீ தகன் றுறைதல் அற தாறு அன்றே''*

(இறையனார் அகப்பொருள் நூ.43)

* *"பூ தகாலைப் புனையாழை மனைவியை
நீராடிய பின் ஈர் ஆறு நாளும்
கருவயிற்று உறூஉம் காலம் ஆதலின்
பிரியப் பெறா அன் பர தையிற் பிரிவோன்''*

(நம்பி – நூ. 91)

**இறையனார் அகப்பொருளும் களவியற்காரிகையும்**

இறையனார் அகப்பொருள் நூற்பாக்கள் களவியற்காரிகையில் மேற்கோள் செய்யுள்களாக இடம் பெற்றுள்ளன. அவை,

*"அதுவே
தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயினொ தல்''*

(இறையனார் களவியல் நூ.2)

இந்நூற்பாவானது களவியற் காரிகையில் மேற்கோள் செய்யுளாக களவொழுக்கம் என்ற இயலில் இடம் பெற்றுள்ளது.

*"ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன் வயின்
பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் தமியோள் இடந்தலைப் படலும் என்று
ஆங்க இரண்டே தலைப்பெயல் மரபே''*

(இறையனார் அகப்பொருள் நூ –3)

தொல்காப்பியப் பொருளதிகார தில் களவியலில் இடம் பெற்றுள்ள முதல் நூற்பா, இறையனார் அகப்பொருளில் முதல் நூற்பாவாகவும், நம்பியகப் பொருளில் 117–வது நூற்பாவாகவும் இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியம் – பொருள் –களவியலில் உள்ள 35–வது நூற்பா, இறையனார் அகப்பொருளில் 7வது நூற்பாவாகவும், நம்பியகப் பொருளில் 138 நூற்பாவாகவும் உள்ளது. தொல் –பொருள் –களவியலில் உள்ள 39–வது நூற்பா இறையனார் அகப்பொருளில் 19வது நூற்பாவாகவும் நம்பியப் பொருளில் 38–வது நூற்பாவாகவும் உள்ளது. தொல் –பொருள் –களவியலில் உள்ள 48 வது நூற்பா இறையனார் அகப்பொருளில் 24–வது நூற்பாவாகவும், நம்பியகப் பொருளில் 42வது நூற்பாவாகவும் உள்ளது. தொல் –பொருள் –களவியலில் உள்ள 95 வது நூற்பா, இறையனார் அகப்பொருளில் 43–வது நூற்பாவாகவும், நம்பியகப் பொருளில் 91–வது நூற்பாவாகவும் அமைந்துள்ளது. இறையனார் அகப்பொருளில் உள்ள 17–வது நூற்பா நம்பியகப் பொருளில் 159–வது நூற்பாவாக இடம் பெற்றுள்ளது. இறையனார் அகப்பொருள் சூ திரங்களை அடிப்படையாகக் கொண்டு பரந்து பட்ட அகப்பொரு செய்திகட்கெல்லாம் அரிய மேற்கோள் காட்டி விரிந்து செல்கின்றது களவியற்காரிகை. பிற்கால அகப்பொருள் இலக்கண நூல்களுக்கு அடிப்படையாக தொல்காப்பியம் அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. இறையனார் அகப்பொருள், கழகவெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சி தாந்த நூற்பதிப்புக் கழகம், 1969.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை), சாரதா பதிப்பகம், முதற் பதிப்பு –2010.
3. நம்பியகப்பொருள், நாற்கவிராசநம்பி, கழக வெளியீடு, சாரதா பதிப்பகம், சென்னை – 2010.
4. களவியற்காரிகை, கழக வெளியீடு, பதிப்பாசிரியர் புலவர் இரா.இளங்குமரன், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சி தாந்த நூற்பதிப்புக் கழகம், 1973.
5. இலக்கண வரலாறு, சோம.இளவரசு, மெய்யப்பன் பதிப்பகம், நான்காம் பதிப்பு, 2012.
6. இலக்கண வரலாறு, புலவர் இரா.இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம், 1999.
7. தமிழ் இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள், முனைவர் து.சேகர், சேமாபதிப்பகம், பெரம்பலூர், 2003.
8. நக்கீரர் ஓர் ஆய்வு டாக்டர் மு.பெரி.மு.இராமசாமி, பாரிநிலையம், 1983.

# வைரமுத்துவின் கவிதைகளில் சமூகச்சித்திரிப்பு

இருபதாம் நூற்றாண்டு படைப்புகளில் உன்னதமான படைப்பாக உயிரோவியமாக மிளிர்வது வைரமுத்துவின் கவிதைகள். இவரது கவிதைகளில் வாழ்க்கைக் கூறுகள், அறிவியல் சிந்தனைகள், நலம்சார் ஆலோசனைகள், கருத்துக்குவியல்கள் சமூகப்பற்று முதலியவை ஏராளமாக உள்ளடங்கியுள்ளன. அவற்றுள் சமூகப்பற்றினை ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**மானம் - பதிவு – பரிவு**

உலகத்து நிகழ்வுகளை உற்றுநோக்கி, உள்வாங்கி சமுதாயத்தின் குறைகளைக் களைந்து, நிறைகளாக மாற்ற சிந்தனையில் உதயமான எண்ணங்களையெல்லாம் எழுத்துக்களில் பதிவு செய்கின்றார். அத்தகைய பதிவுகளின் வெளிப்பாடே,

**முனைவர்.ம.பிரேமா**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி – 02

**“இந்த வானமும் ஏன்**

**என்னைப் போல்**

**ஒட்டுப்போட்டு ஆடை**

**உடுத்துகிறது” (137)**

என்பதாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முக்கியப் பங்கு வகிப்பது ஆடை. அனைவருக்குமுரிய பொதுமைப்பண்பாக இலக்கியங்கள் சுட்டுவது “உண்பது நாழி உடுப்பவை இரண்டு” என்பதே, தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ்வதற்குரிய கருவியாக ஆடைச் சுட்டப்படுகிறது. ‘ஆள்பாதி ஆடைபாதி’ என்ற வழக்காறும் இதனைத் தெளிவுப்படுத்துகிறது. பொருநராற்றுப்படையில் கரிகால்வளவன் பொருநனுக்கு மெல்லிய ஆடையையும், பட்டாடைகளையும் வழங்கி ஆதரித்தமைக்கான சான்றாதாரங்களும் காணப்படுகின்றது. தற்போது நெசவுத் தொழிலுக்குப் பஞ்சமில்லை. ஆடை விற்பனையில் எண்ணற்ற அதிசயங்கள் இருப்பினும் சமூகத்தின் ஒருசாரார் உடுத்துவதற்கே ஆடையின்றித் தவிக்கின்றனர் ‘கந்தையானாலும் கசக்கிக் கட்டு’ என்ற தூய்மைப்பேணும் தாரகை மந்திரத்தைக் கடைப்பிடிக்கும் பொருட்டு ஒட்டுப்போட்டு ஆடை அணிகின்றனர். இந்த அவலம் என்று மாறும்? என்ற வினாவைத் தொடுக்கின்றார். வினாவிற்கு விடை காண வேண்டிய சமூகமே! இனியும் சிந்திக்காதே! செயல்படு என்று எழுச்சியூட்டுகிறார்.

**“தனியொருவனுக்கு உணவில்லை யெனில்**

**ஜகத்தினை அழிப்போம்”**

என்பதோடு நின்றுவிடாமல் ‘உடையில்லையென்றாலும்’ அழிப்போம் என்ற வாக்குறுதி எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

**வறுமையின் கோரம்**

தேசியகீதத்திற்கு மரியாதை செலுத்த வேண்டியது அனைவரின் கடமை. ஆனால் காலி வயிற்றுடன் உள்ளவனிடம் இச்செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவது என்ன நீதி?

**“பசி மயக்கத்தில்**
**படுத்துக் கிடக்கும் பாரதத் தோழனை உன்**
**தேசியகீதத்திற்கு**
**நிற்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்காதே” – (146)**

என்று சிந்திக்ககத் தூண்டுகிறார்.

**ஆணாதிக்கம்**

தன்னை மட்டும் உயர்வாகக் கருதி. தனது காலடியின் கீழ் எதிர்பாலினத்தாரை மிதிக்கும் மனப்பான்மை மேலோங்குவதே ஆணாதிக்கம். ஆணாதிக்கத்தால் பருவமெய்திய பெண்கள் பருவங்களைத் தொலைத்துவிட்டு முதுமையிலும் ஒப்பனை செய்து கொள்ள வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. பொருட்செல்வம் இன்மையால் வாழ்க்கையே கனவாக மாறிவிட்டதை,

**“எங்கள் வீட்டுத்**
**தேநீர்க் கோப்பையில்**
**எத்தனை உதடுகள்**
**அவர்கள்**
**பலகாரம் மென்று**
**என்னைத் துப்புகையில்**
**நான் அலங்காரத்தில் ஆண்டாளாய்**
**ஆனால்**
**ஆடைகொண்டும் ஏவாளாய்......” – (456)**

என்ற வரிகளில் ஆண்களின் மனஇறுக்கத்தைப் புலப்படுத்துகின்றார். பெண்களைத் துகிலுரிக்கும் துச்சாதனனாக இரசித்து விட்டு இனிப்புகளை உள்ளே விழுங்கி, கசப்பினை வெளிக்கொணர்ந்து துன்புறுத்தாமல் இருந்தால் பெண்வர்க்கத்திற்கு வழிப்பிறக்கும்.

எந்தப் பெண்ணும் எந்த ஆடவனையும் இப்படி ஆணவத்தின் உச்சாணியில் அமர்ந்து கொண்டு உள்ளத்தையும் உடலையும் உரசிப்பார்க்கவில்லையே! ஆனால் ஆண்வர்க்கத்தின் அருவறுப்பான பார்வை, ஆதிக்க மனப்பான்மை, உள்ளங்களை நொறுக்கும் கயத்தன்மை மொத்தத்தில் இவற்றிற்கு ‘சம்பிரதாயம்’ என்று பெயர் சூட்டிடும் நிலையை வேரறுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

**கலப்பு மணம்**

வீரிய ஒட்டுவகைகளைத் தாவரங்களில் விரும்புகின்றனர். இவ்வகையை விலங்குகளில் கண்டு அதிசயிக்கின்றனர். கட்சிகளில் கலப்பினைக் காலூன்றச் செய்கின்றனர். அனைத்திலும் கலப்பினை விரும்புபவர்கள் திருமணங்களில் மட்டும் எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றனர். மனித மனங்களின் விநோதத்தை,

**“வர்ணங்களின் கலப்பு மணத்தை**
**வானவில் என்பீர்கள்**
**கட்சிகளின் கலப்பு மணத்தைக்**
**கூட்டணி என்று சொல்லிக்**
**கும்பிடுவீர்கள்**
**ஓர் ஆணும் பெண்ணும்**
**கலப்பு மணம் புரிந்தால் மட்டும்**
**காலி பண்ணச் சொல்வீர்கள்!” (241)**

என்று எள்ளி நகையாடுகின்றார். ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற உணர்வுகள் விதைக்கப்பட்டு வளர்ந்த பாரம்பரிய சமூகமா இது? மணங்களின் கலக்கத்திற்கு மீட்டுணர்வை ஏற்படுத்தும் விதத்தில் புதுமையை இழையோடவிடுகிறார்.

**சிக்கலை அவிழ்த்தல்**

சிக்கல்களுக்கு தீர்வு உண்டு. தீர்வில்லாத பிரச்சினைகளை இறைவனே மனித குலத்திற்கு தரவில்லை. அவ்வாறு இருந்தும் பகுத்தறிவினைச் சுயநலத்திற்குப் பயன்படுத்திவிட்டு உள்ளம் நொந்து மூலையில் முடங்கிக் கிடப்பவர்களைக் கண்டு,

**“எது விதி**
**முடிக்கத் தெரியாத சிறுகதையைக்**
**குறுநாவல் என்று**
**கூப்பிட்ட மாதிரி**
**தீர்க்கத் தெரியாத**
**பிரச்சனைக்கு**
**விதி என்று பேரிட்டு**

**விலகி விடுவதா?" (244)**

என்று உணர்வுகளைத் தட்டியெழுப்புகின்றார் கவிஞர்.

**"விதி எழுதப்பட்டது**
**எந்த லிபியில் என்றுதான்**
**இன்னும் இவர்கள்**
**மண்டையை உடைத்து**
**மல்லாடுகிறார்கள்" – (278)**

மனிதன் இயலாமைக்கு கொடுத்தப் புனைப்பெயர் விதி. விதியினை மதியினால் வெல்ல முடியும். முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும் என்ற நியதியை தாரக மந்திரமாக கொண்டால் வெற்றிகளைக் குவிக்க முடியும். இதனை மறந்துவிட்டு எந்த மொழியில் விதி எழுதப்பட்டுள்ளது என்று ஆராயும் போக்கினை களையும்படி எடுத்துரைப்பது சிறப்பாக உள்ளது.

## கல்வி

கல்வி முறையில் புதிய திட்டங்கள், பெரியமாற்றம், எதுவும் வகுக்கப்படவில்லை. இத்தகைய கல்வி முறையினால் எண்ணிக்கையில் அடங்கா பட்டதாரிகள் உருவாகியுள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது. கல்விப் பெருக்கத்திற்கேற்ற வேலைவாய்ப்பின்மைக்கான காரணத்தை,

**"வாழ்க்கைக்குள்**
**முக்குளிக்கச் சொல்லித்தராத**
**இந்தக் கல்வி**
**முத்துக்களென்று**
**குமிழிகளைத் தானே**
**கோக்கச் சொல்கிறது." (211)**

என்கிறார். வாழ்க்கைக்கு உறுதுணையாக தொழில்கல்வி முறைகள் புகுத்தப்பட வேண்டும் என்று புரட்சியைத் தூண்டுவது சமூகத்தைச் சிந்திக்க வைக்கின்றது.

## ஐம்பதுகளில்

ஐம்பதிலும் ஆசை வரும். அப்போது திரும்பிப் பார்க்க வேண்டியவை, சிந்திக்க வேண்டியவை, கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகள் எவை எவையென பட்டியலிட்டு கூறும் பாங்கு அருமை. தன்னைத்தானே அறியும் அறிவை பெறுவதே அறிவு நயம். திருமூலர் திருமந்திரத்தில்,

**"தன்னை யறிய தனக்கொரு கேடில்லை**
**தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை யறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்க தானிருந்தேனே"**

என்ற பாடல் வழி விளக்குவதையே வைரமுத்து,

**"வாழ்க்கை – வழுக்கை**
**கொழுப்பை ரசி**
**கொழுப்பைக் குறை**
**முட்டையின் வெண்கரு**
**காய்கறி கீரைகொள்**
**கணக்குப் பார்**
**நீ மனிதனா என்று**
**வாழ்க்கையைக் கேள்**
**இலட்சியத்தைத் தொடு**
**வெற்றியில் மகிழாதே**
**விழா எடுக்காதே" – (538)**

என்கிறார். வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையின் இரு சக்கரங்கள். சக்கரங்கள் சுழலும் சுழற்சியுனூடே எண்ண வேண்டியது இலக்கு மட்டுமே. நீ மனிதனா? என்று வாழ்க்கையையே வினவச் சொல்லும் எதிர்மறை சிந்தனையாளரை எங்கேயும் காணமுடியாது.

## முடிவுரை

மனம் போன போக்கில் நடவாது, படைப்புகளில் புகழாரத்தை மட்டும் எதிர்ப்பார்க்காது தன்னை சமூகத்தில் சங்கமமாக்கி ஒவ்வொன்றையும் ஆராய்ந்து வெளிப்படுத்தும் கவிஞனின் மேன்மையைச் சொல்வதற்கு வார்த்தைகளே வரங்களாகட்டும்.

# திருமங்கையாழ்வார் பாடல்களில் கட்டளையடி

**முனைவர். எ.கற்பகம்,**
இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை ,
அரசு கலைக்கல்லூரி,
கரூர்.

**த**மிழ் மொழி பக்தியின் மொழி என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. எல்லா மதக் கருத்துக்களை விளக்கும் இலக்கியங்கள் தமிழில் உள்ளன. தமிழிலில் உள்ள பக்தியிலக்கியங்கள் இறைவனின் புகழ்பாடுவதோடு இலக்கிய நயத்தையும், இலக்கணச் சிறப்பையும் பெற்றுத் திகழ்கின்றன. எந்த ஒரு மொழிக்கும் இல்லாத பக்தியின் மொழி என்று தமிழை அறிஞர்கள் கூறுவது தமிழில் உள்ள பக்திப் பாடல்களின் மிகுதியைச் சுட்டுகிறது. திருமங்கை யாழ்வார் பாடல்களில் இடம் பெற்றுள்ள அடி இலக்கணத்தை ஆராய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கட்டளையடி**

கட்டளைஅடி அல்லது இன்சீர் வகையின் ஐந்தடி என்பது எழுத்தெண்ணிப் பாடப்படும் அடி வகையாகும். ஒரே எழுத்தெண்ணிக்கையை ஒரு பாடலின் எல்லா அடிகளும் ஏற்று நிற்பின், அப்பாடல் கட்டளை வகைப்பாடல் ஆம். கட்டளை அடி மிகப் பழங்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த படியால் தொல்காப்பியர் கட்டளை அடி வகைகளுக்கு முன்னுரிமை தருகிறார். எழுத்தெண்ணிக்கையளவு நோக்கிக், கட்டளையடிகள் குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும் என்பதைத் தம் நூற்பாக்களில் விளக்கியுள்ளார். கட்டளையடிகளின் வகைகளின் விளக்கம் பின்வருமாறு:

குறளடி - நான்கு முதல் ஆறு எழுத்து வரை கொண்டது.

சிந்தடி - ஏழு முதல் ஒன்பது எழுத்து வரை கொண்டது.

நேரடி - பத்து முதல் பதினான்கு எழுத்து வரை கொண்டது.

நெடிலடி - பதினைந்து முதல் பதினேழு எழுத்து வரை கொண்டது.

கழிநெடிலடி - பதினெட்டு முதல் இருபது எழுத்து வரை கொண்டது.

எழுத்தெண்ணும் போது உயிர் எழுத்து அல்லாதவற்றை விட்டுவிட வேண்டும்.

பிற்காலத்தில் தோன்றிய கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா போன்ற பா வகைகள் கட்டளை அடிகளைக் கொண்டு அமைந்தவை.

**கட்டளையடிப் பாடல்கள்**

எழுத்தெண்ணிப் பாடப்படும் கட்டளையடி பாடல்களையே தொல்காப்பியர் விரிவாக வகைப்படுத்தி கூறுகிறார். அவர் காலத்திலும் அவருக்கு முன்பும் கட்டளையடிப் பாடல்கள் செல்வாக்குப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டளையடி அமைவு நாளடைவில் சிதைந்து,தாழிசையாகவும், அம்போதரங்க வகைகளான சிற்றெண், இடையெண், பேரெண்களாகவும், அராகமாகவும் மாறித் தனித் தன்மைக்கு வந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் பெரும்பான்மை இம்மாற்றம் நிகழ்ந்திருத்தலால் தொல்காப்பியர் கலிப்பாவிற்கு முதன்மை கொடுத்து விளக்கிக் கூறியுள்ளார்.

உலகச் செம்மொழிகளுள் பழைய சீன மொழி தவிர்த்து பெருவாரியான செம்மொழிகள் அனைத்தும் தொடக்க காலத்தில் கட்டளையடி பாடல்களினாலேயே ஆக்கப்பட்டன. நாற்சீரடி, ஐஞ்சீரடி என வரும் சீர்வகை அடிகள் அதற்குப்பின் தோன்றியவை. சீன மொழி மட்டும் மாத்திரையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தொல்காப்பியர் குறிப்பிடும் அடி வகைகளான குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகிய வகைகள் எழுத்தெண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்த கட்டளை வகையுடையவை. நாற்சீரடி, ஐஞ்சீரடி, அறுச்சீரடி, எழுச்சீரடி ஆகிய நான்கு வகையடிகளை குறிப்பிடுவதோடு முச்சீரடி பற்றியும் சுட்டியுள்ளார். ஆனால் யாப்பருங்கலத்தார் கூறுவது போல குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகிய குறியீடுகளை சீர்வகை அடிகளுக்கு (வரிகளுக்கு) சூட்ட வில்லை. கட்டளைவகை அடிகளின் பாகுபாட்டை உட்கொண்ட காக்கைபாடினிமரபினர் பிற்காலத்தில் சீர்வகை அடிகளின் வகைகளுக்கு இப்பெயர்களை சூட்டியிருக்க வேண்டும்.

**திருமங்கையாழ்வார் பாடல்களில் கட்டளைப்பாக்கள்**

திருமங்கையாழ்வார் பாடல்களில்வரும் கட்டளைப்பாடல்கள் தொகை 1094.கட்டளைப் பாக்கள் இருவகைப்படும்.

1.ஊசலாடும்கட்டளைப்பாடல்2. ஊசலாடாக் கட்டளைப்பாடல். திருமங்கையாழ்வார் பாடல்களில் இரண்டும் இடம் பெற்றுள்ளன.

**ஊசலாடும் கட்டளைப்பாடல்**

கட்டளைப்பாக்கள் பலவற்றில் சீர்வாய்பாடு தடுமாற்றம் அடைகிறது.சீர்கள் உறுதிப்பட்டு நில்லாது நெகிழ்ந்தோ பிரிந்திசையாது ஒழுங்கின்றி நிற்றல். இதனை சீர்நிலைஊஞ்சல் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஊசலாடும் கட்டளைப்பாடல் ஊசல் தன்மையையொட்டி, சீர்த்தொகை ஊசல், சீர்வரம்பு ஊசல், சீர் ஊசல் என மூவகைப்படுத்தற்குரிய.

**சீர்தொகை ஊசல்**

ஒரேயடி, வெவ்வேறு வகையாக ஓசையிடப்பட்டு தனக்குரியசீர் எண்ணிக்கையில் மாறுபட்டு நிற்பது சீர்த்தொகை ஊசல் எனப்படும். ஓர் அடியில் உள்ள சீர்களின் எண்ணிக்கை ஒரு நோக்கில் படிக்கும்போது, ஓர் எண்ணிக்கைப் பெற்றும், மற்றொரு முறை படிக்கும் போது சீர் எண்ணிக்கை குறைந்தோ, மிகுந்தோ வருமாயின் அது சீர்த்தொகை ஊசல் எனப்படும். திருமங்கையாழ்வார் பாடல்களில் சீர்த்தொகை 30 பாடல்களாகும்.

1218-1227 வரை 10 பாடல்களில் அமைந்த ஓசை வகைகள் வருமாறு

1. மாங்கனி கூவிளம் கூவிளங்காய்

2. மா 8

வகைக்கு எடுத்துக்காட்டு

"நந்தாவிளக் கேஅளத் தற்கரியாய்
நரநாரண னேகரு மாமுகில்போல'

என மாங்கனி கூவிளம் கூவிளங்காய் மாங்கனி கூவிளம் கூவிளங்காய் என்ற அமைப்பில் ஆறு சீர்களைக் கொண்டமைந்துள்ள பாடல் அடிகள்

நந்தா விளக்கே !அளத்தற் கரியாய் நரநா ரணனே கருமா முகில்போல்

என மாச்சீர் 8 கொண்ட அடிகளாகவும் பிரிந்திசைக்கின்றன. ஒரேயடி நான்கும் எட்டுமாக சீர்கள் பிரிந்திசைப்பதால் அவ்வடி வெவ்வேறு எண்தொகை அமைந்த வெவ்வேறு ஓசைப் பாடல்களாக உள்ளன.இவ்வாறு ஓரடியின் சீர் எண்ணிக்கையில் மாறுபடும் பாடல்களையே சீர்தொகை ஊசல் ஆகும்.

**சீர்வரம்பூசல்**

ஓர் அடியில் உள்ள சீர்களின் எண்ணிக்கை மாறாத போதும் சீர்களின் வெவ்வேறு வகையாக ஓசையிடும் பொழுது, சீர்களின் எண்ணிக்கை மாற்றம் அடைவதுண்டு. இதுவே சீர்வரம்பூசல். பாடல் அடிகளில் சீர்கள் தங்கள் எல்லையில் மாற்றிக்கொள்ளும் போக்கு, திருமங்கையாழ்வார் பாடல்களில் ஓரிடத்தில் கூட இடம்பெறவில்லை. இதனால் ஊசலாடும் கட்டளைப்பாக்கள் சீர்த்தொகை ஊசல், சீர் ஊசல் ஆகிய இருவகைகள் மட்டுமே திருமங்கை யாழ்வார் அமைத்துள்ளமைத் தெளிவாகிறது. பெரும்பாலும் இவ்வகையில் பாடல்கள் காப்பியங்களிலேயே வருதல் கண்கூடு. ஆகவே இவ்வகைப் பாடல்களுக்கு சீர்வரம்பூசல் காப்பிய கட்டளைப் பாடல் எனப் பெயர் சூட்டுதல் பொருந்தும்.

**சீருசல்**

கட்டளைப் பண்பை ஏற்று வரும் பாக்களில் ஒரு சீர்க்கு மாறாக அதே எழுத்தளவு மாற்றுச்சீர் இடம் பெறல் மிகுதி. இவ்வாறு ஒத்த எழுத்தளவுடைய இருவேறு சீர்கள் தமக்குள் தடுமாறி வருதல் சீருசல் எனப்படுகிறது. திருமங்கையாழ்வார் பாடல்களில் 30 பாடல்கள் சீருசல் பாடல்களாக அமைந்துள்ளன. 1548 முதல்1557 வரையுள்ள பத்துப் பாடல்கள் மா3 காய்1 என்ற அடிப்படையில் அமைந்தவை.

"தாரேன் பிறர்க்குன் னருளென் னிடைவைத்தாய்

ஆரே னதுவே பருகிக் களிக்கின்றேன்

காரேய் கடலே மலையே திருக்கோட்டி

யூரே உகந்தா யையுகந் தடியேனே"

என்னும் பாடலில் மாச்சீர்க்கு ஈடாக பதிலாகக் கூவிளம் இடம் பெற்றுள்ளது. இவற்றில் மாற்றுச்சீர்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று எழுத்தளவொத்து நின்றன. எனவே இப்பாடல் கட்டளைத்தன்மைப் பெற்றுத் திகழ்வன.

ஊசலாடும் கட்டளைப் பாடல்கள் தொடர்ந்து ஓசை நிலவுதலின் இனிமைப் பண்பு சிறக்கும். ஆதலின் தொல்காப்பியர் கட்டளையடிகளை மட்டும் இனிமை என்னும் அடைசேர்த்து இன்னுயிர் வகை ஐந்தடி எனக் குறிப்பிடுகிறார்.

ஊசலாடும் கட்டளைப் பாக்களில் சரியாக சீர் இருந்து நிற்றல் இன்மையால், இப்பாடல்களைச்சீர் பிரித்து எழுதுதலே பொருந்தாச் செயலாகிறது. சீர்கள் வலிமையிழந்து காணப்படுவதாலேயே தொல்காப்பியர் கட்டளையடிகளுக்கு எழுத்தெண்ணிக்கையை வற்புறுத்தினார்.

**ஊசலாடாக் கட்டளைப்பாக்கள்**

ஊசலாடாக் கட்டளைப் பாக்கள் கட்டளைத் தன்மையை மட்டும் கொண்டிராமல், சீர்வகை, தளைவகை என்னும் பண்புகளுள் ஒன்றையோ, இரண்டையுமோ எய்தி இருக்கும் இயல்பின. எனவே இவற்றைத் தளை வகைக் கட்டளைப்பா, சீர்வகைக் கட்டளைப்பா, மும்மைப்பா என மூன்றாகப் பகுத்தல் சாலும்.

**தளை வகைக் கட்டளைப் பா**

திருமங்கையாழ்வார் பாடல்களில் இயற்சீர் வெண்டளை, கலித்தளையும், கட்டளைத் தன்மையும் பெற்றுவருவன தளைவகைப் பாடல்களாகும். திருமங்கையாழ்வார் பாடல்களில் 230 தளைவகைப் பாடல்களாகும்.

" முந்நீரை முன்னாள் கடைந்தானை, மூழ்த்தநாள்

ஆந்நீரை மீனா யமைத்த பெருமானை,

தென்னாலி மேய திருமாலை யெம்மானை,

நன்னீர் வயல்சூழ் நறையூரில் கண்டேனே"

இப்பாடல் அடிதோறும் 12 எழுத்துக்களைப் பெற்றும், தளைவகைப் பண்பையும் பெற்று வருவதால் இது தளை வகைப் பாடலாகிறது.

**சீர்வகைக்கட்டளைப்பா**

சீர்கள் அழுத்தமும் முதன்மையும் பெறும்போது உருவாகும் அடிகள் சீர்வகை அடிகள் ஆகும். சீர்வகைப் பண்பும், கட்டளைப் பண்பும் ஒருங்கே இடம்பெறும் சீர்வகைக் கட்டளைப்பா ஆகும். திருமங்கையாழ்வார் பாடல்களில் 794 இவ்வகைப் பாக்கள் ஆகும்.

" கையிலங் காழி சங்கன் கருமுகில் திருநி றத்தன்

பொய்யிலன் மெய்யன் தன்தாள் அடைவரே லடிமை யாக்கும்

செய்யலர் கமல மோங்கு செறிபொழில் தென்தி ருப்பேர்

பையர வணையான் நாமம் பரவிநா னுய்ந்த வாறே ! " [32]

இப்பாடல் அடிதோறும் 16 எழுத்துக்களைப் பெற்று வருவதுடன் சீர் வகைப் பண்பையும் பெற்று வருவது சீர்வகைக் கட்டளைப் பாடலாகும்.

**மும்மைப்பா**

கட்டளை, தளைவகை, சீர்வகை ஆகிய மூன்று பண்புகளையும் பெற்று வரும் ஊசலாடாப் பாடல்கள் மும்மைப்பா என ஈண்டுக் குறிக்கப் பெறுகின்றன.

"நின்றார் முகப்புச் சிறிதும் நினையான்

வயிற்றை நிறைப்பா னுறிப்பால் தயிர்நெய்

அன்றாய்ச் சியர்வெண்ணெய் விழுங்கி யுரலோ

டாப்புண் டிருந்த பெருமான் அடிமேல்

நன்றாய தொல்சீர் வயல்மங் கையர்கோன்

கலிய னொலிசெய் தமிழ்மாலை வல்லார்

என்றானும் எய்தா ரிடரின்ப மெய்தி

இமையோர்க்கு மப்பால் செலவெய் துவாரே"

இப்பாடல் ஈற்றடி ஈற்றுச்சீரின் ஈற்றசை அளபெடுத்ததாகக் கொள்ளின். எல்லா அடிகளும் தனித்தனியே 23 எழுத்துக்களைப் பெற்ற கட்டளையடியாகின்றன.

தமிழில் முதலில் தோன்றிய யாப்பு கட்டளையாப்பே. பின்னர் தோன்றிய தளை வகையும், சீர் வகையும் கட்டளை வகையினின்று கிளைத்து எழுந்தனவே யாகும்.

# நாட்டுப்புற விளையாட்டுகள்

வி.ம.ரம்யா
தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),
திருச்செங்கோடு.

தமிழகத்தில் நாட்டுப்புறவியல் வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாகும். நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும், கலைகளையும், இலக்கியங்களையும் ஆராய்வதாகும். மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனலாம். மனிதர்கள் தம் உள்ளத்தில் கருக்கொண்டு உயிர்ப்பெற்று உலா வரும் உள்ளத்தில் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்.

உலகம் முழுவதிலும் விளையாட்டு என்பது மக்களின் இன்ப நினைவுகளின் நிலைப்பெற்று விளங்குவதாகும். எத்தனை வயது ஆனாலும் இளமை விளையாட்டு நினைவுகளின் மனம் இன்பம் காண்பது இயல்பாகும். நாட்டுப்புற நிகழ் மரபுகளில் விளையாட்டுகள் சிறப்பு இடம் பெறுகின்றன. போலச் செய்தல், உடல்திறம் காணல், அறிவு வெளிப்பாடு, சமூக உறவு, வாழ்க்கைப்பயிற்சி, சிந்தனை ஆற்றல் ஆகியவற்றை உள்ளாடக்கியதாக நாட்டுப்புற விளையாட்டுகள் திகழ்கின்றன. அதோடு அல்லாது விளையாட்டுக்கள் மண்ணின் பண்பாட்டை பல நிலைகளில் புலப்படுத்துக்கின்றன.

“விளை” என்றால் விருப்பம், “ஆட்டு” என்றால் ஆட்டம். ஆகவே, விரும்பி ஆடும் ஆட்டத்தை ‘விளையாட்டு’ என்று தேவநேயப் பாவணர் விளையாட்டிற்கு விளக்கம் தருகிறார்.

“விளையாட்டு வேறு, வேலை வேறு கருத்தை கவருவது விளையாட்டு, கவராதது வேலை. இரண்டிலும் கட்டுப்பாடுகளும் சட்டத்திட்டங்களும் உண்டு.” என்கிறது கலைக்களஞ்சியம்.

“களைப்புத்தீர இளைப்பாறுவதற்கு வேண்டுவதே விளையாட்டு” என பாட்ரிச் கூறுகிறார்.

“வேட்டை, போர், தொழில், போலச் செய்தல் போன்றவை விளையாட்டுகள் தோன்றும் நிலைகளன்களாக அமைகின்றன” என்பர் இரா.பாலசுப்ரமணியம்.

வீர விளையாட்டுகளாக சிலம்பம், மற்போர், மஞ்சு விரட்டு, சடுகுடு ஆகியவைக் குறிப்பிடப்படுகின்றன. நாட்டுப்புற விளையாட்டுகளில் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

**கிச்சுக்கிச்சு தாம்பளம்:**

மணற்பாங்கான இடத்தில் விளையாடும் விளையாட்டு. சிறுவர் முதல் பெரியவர் வரை விளையாடுவர். இரண்டரை அல்லது மூன்று அடி

இடைவெளியில் எதிர்எதிர் அமர்ந்து இரண்டு அடி நிளத்தில் மணலை கோடு போல் குவித்து

**"கிச்சுக்கிச்சு தாம்பாளம்**
**கியாகியா தாம்பாளம்"**

என பாடிக்கொண்டே விளையாடுவர். ஒருவர் கல்லையோ அல்லது ஏதேனும் ஒரு பொருளையோ ஒரு கையால் மறைத்துக்கொண்டே ஒளித்து வைப்பர். எதிரே இருப்பவர் பொருள் எங்கு உள்ளது என நினைக்கிறாரோ அவ்விடத்தை கையால் மூடிவைப்பர். மூடிய இடத்தைத்தவிர மற்ற இடத்தில் மண்ணைக் கலைப்பர். கலைத்த இடத்தில் கிடைத்தால் மறைத்து வைத்தவர் வெற்றிப்பெறுவார். மூடிய கையில் கிடைத்தால் அவர் வெற்றி பெறுவார். இதில் கையசைவை நுட்பமாக நோக்கிக் கண்டுப்பிடிக்க வேண்டும். இவ்விளையாட்டானது எதிர்காலத்தில் உற்றுநோக்கும் தன்மையினை வளர்த்துக் கொள்ளப் பயன்படுகிறது.

**தட்டாங்கல்:**

கல்லை மேலே தூக்கிப் போட்டு அதனைக் கீழே விழுகாமல் தரையினைத் தட்டி பிடிக்கும் விளையாட்டை தட்டாங்கல் விளையாட்டு என்பர். இதனை எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடாலம். தட்டாங்கல் ஆட்டத்தில் ஐந்து கற்கள் அல்லது ஏழு கற்கள் வைத்து ஆடுவர். ஆட்டத்தில் மூன்றாங்கல், ஐந்தாங்கல், பத்தாங்கல் என இருபாதங்கல் வரை ஆடுவர். சங்க இலக்கியங்களில் காணப்படும், 'கழங்காடுதல்' இன்றைய தட்டாங்கல் ஆட்டத்தை குறிக்கும்.

**கண்ணாமூச்சி:**

சிறுவர் சிறுமியர் இணைந்து விளையாடும் விளையாட்டு. கண்ணை மூடி விளையாடும் விளையாட்டிற்குக் கண்ணாமூச்சி என்று பெயர். இதில் ஒருவர் தலைமையாக உட்கார்ந்துக் கொண்டு அவரே ஒருவரின் கண்ணை மூடி பாடிக்கொண்டு விளையாடுவர்.

**கண்ணாமூச்சி ரேரே**
**காதடச்சான் ரேரே**
**ரெண்டு முட்டைய தின்னுப்புட்டு**
**ஒரு முட்டையப்**
**புடுச்சிட்டு வா**

இவ்வாறு பாடும் போது மற்ற சிறுவர் சிறுமியர் ஓடி ஒளிந்து கொள்வர். கண்ணிலிருந்து கை எடுக்கப் பட்டதும் அச்சிறுவன் ஒளிந்திருப்பவரைக் கண்டு படித்து விளையாடுவதாகும்.

**வினா விடைப் பாடல்கள்:**

ஒருவர் தானே வினாவினைத் தொடுத்து விடையையும் கூறுவர். அவ்வாறு அல்லாமல் பிறர் வினாவினைத் தொடுத்து எதிரே இருப்பவர் விடையைக் கூறுவதாகவும் இப்பாடல்கள் அமையும்.

ஒருவரை நடுவே அமர்த்தி மற்ற சிறுமியர்கள் அவரை சுற்றிக் கொண்டே 'குரங்கே குரங்கே மணியெத்தன' எனக் கேட்க அமர்ந்து இருப்பவர் 'ஒன்னு' என்பர். இவ்வாறு பத்து வரை கேட்பர். பின் அமர்ந்து இருப்பவர் எதையே தேடுவது போல் பாவனை செய்ய மற்றக் குழந்தைகள்

**பாட்டி பாட்டி என்ன தேடுற?**
**ஊசி**
**ஊசி எதுக்கு?**
**பை தைக்க**
**பை எதுக்கு?**
**காசு போட**
**காசு எதுக்கு?**
**கத்தி வாங்க**
**கத்தி எதுக்கு?**
**உன்ன குத்த**

எனக் கூறிக் கொண்டே ஓடிய குழந்தைகளை துரத்திப் பிடித்து விளையாட வேண்டும்.

**கொழுக்கட்டையே கொழுக்கட்டையே**
**ஏன் வேகல**
**அடுப்பு எரியல நான் வேகல**
**அடுப்பே அடுப்பே ஏன் எரியல**
**மழையும் வந்துச்சு நான் எரியல**
**மழையே மழையே ஏன் வந்த**
**புல்லு மொளைக்க நான் வந்தேன்**
**புல்லே புல்லே ஏன் மொளைச்ச**
**மாடு திங்க நான் மொளைச்சேன்**
**மாடே மாடே ஏன் தின்ன**
**பாலு கறக்க நான் தின்னேன்**
**பாலே பாலே ஏன் கறந்த**
**பாப்பா அழுகுது நான் கறந்தேன்**
**பாப்பா பாப்பா ஏன் அழுத**
**எறும்பு கடிக்க நான் அழுதேன்**
**எறும்பே எறும்பே ஏன் கடிச்ச**
**என் பொந்துகுள்ள கைய விட்ட சும்மா இருப்பேனா?**

இவ்வாறு ஒருவர் மட்டுமே வினாவினைத் தொடுத்து அவரே விடையையும் கூறுவார். இத்தகைய பாடல்கள் குழந்தைகளின் மொழித்திறனையும், அறிவையும் மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

இது போல தாயம், கூட்டாஞ்சோறு, பூசணிப்பூ, நொண்டி விளையாட்டு, பல்லாங்குழி, சிலம்பாட்டம், கிட்டிப்புள், வட்டத்திரி, குண்டு விளையாட்டு, பம்பரம், அச்சாங்கல் என எண்ணற்ற விளையாட்டுகள் உள்ளன. நாட்டுப்புற விளையாட்டுகள் தனிமனித மற்றும் சமூகப் பயன்பாட்டினைப் பல வகைகளிலும் நல்குகின்றன. தனிமனித ஆற்றல், கல்விஅறிவு, சமூக உறவு, கற்பனை ஆற்றல் முதலான பலவற்றை நாட்டுப்புற விளையாட்டுகள் இளம் தலைமுறையினருக்கு வழங்குகின்றன என்பதை அறியமுடிகின்றது.

# அம்பை படைப்புகளில் பெண்ணியம்

**சி.பிரபாவதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு கலைக்கல்லூரி
திருவெறும்பூர்- திருச்சி.

**முன்னுரை:-**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களில் அம்பை பெண் நிலை நோக்கினை வெளிப்படுத்தும் வகையிலான தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடியாவார். தமிழகத்தின் எல்லைக் கடந்த நிலப்பகுதிகளையும் களனாகக் கொண்ட இவரது கதைகளில் பெண்களின் உறவுச் சிக்கல்கள், பிரச்சினைகள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள், ஆண்,பெண் ஏற்றத் தாழ்வுகள் போன்றவை சிறுகதைகளில் சிறப்பாக ஆராயப்படுவதால் அம்பை பெண்ணிய சிந்தனைவாதியாக வெளிப்படுகின்றார். இவரது சிறுகதைகள் பெண்ணிய நோக்கில் ஆராயப்பட்டுள்ளது.

**அம்பையின் பெண்ணிய மொழி:-**

மொழியைப் பிரயோகிப்பதில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே வேறுபாடு இருந்தது. ஆணாதிக்க சமூகம் தோற்றம் பெற்றதில் இருந்தே ஆண்மொழி அதிகாரத்துடன் வெளிப்படுகிறது. ஆனால் பெண்ணின் மொழியோ மௌனமாகவே இருந்து வந்துள்ளது அம்பையின் பெண்ணியமொழி மற்றவர்களுடையதில் இருந்து வேறுபட்டதாக இருப்பதே அவருடைய சிறப்பம்சமாகும்.

**பெண்மை குறித்து எதிர்பார்ப்பு:-**

பெண்மை என்பதற்கான சில வரையறைகளை இந்தச்சமுதாயம் உருவாக்கி வைத்துள்ளது. நம் இலக்கியங்களும் புராண இதிகாசங்களும் பெண்களை கற்புக்கரசியாகவும் கணவனுக்கு அடங்கியவளாகவும் கொடுமைகளை பொறுத்துக் கொள்பவளாகவும் ஆக்கி வைத்துள்ளனர். இத்தகைய கருத்தாக்கங்கள் பெண்களின் மீது வலிந்து புகுத்தப்பட்டவை. பெண்மைக்கான வரையறைகளை மீறியவர்களை இந்தச்சமுதாயம் நோக்குகின்ற விதம் எதிர்மறையாக உள்ளது. பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பிறருடைய எதிர்பார்ப்புக்களை அம்பை தன் சிறுகதைகளை கதாபாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

**பிரசுரிக்கப்படாத கைப்பிரதி**

இச்சிறுகதையில் வரும் முத்துக்குமரன் தனக்கு மனைவியாக வருபவள் தான் துன்பப்படும் வேலையில் இன்பம் சேர்ப்பவளாக இருக்கவேண்டும். தன்னுடைய அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்பவளாக இருக்கவேண்டும் என்பது போன்ற எண்ணங்களைக் கொண்டவனாக இருக்கலாம் என்று திருமகள் கூறுகிறாள்.

“துன்பம் நேர்கையில் யாழெடுத்து இசைக்கும் ஒருத்தி காலையில் குளித்து பட்டுத்தி இன்னும் ஈரமான கூந்தலைத் தளரப்பின்னி பளிச்சிடும் குங்குமத்துடன் ஆவி பறக்க காப்பியுடன் எழுப்புபவள் மல்லிகைப்பூ போல் இட்லிகளை இலையில் வைத்து அவன் புசிக்கும் போது மகிழ்ச்சியுடன் நோக்குபவள் ஒரு பெண் அவன் மன ஆழத்தில் இருந்தாள்”.

**சிறகுகள் முறியும்:-**

இச்சிறுகதையில் வரும் சாயா தன்னுடைய ஆசையை வெளிப்படுத்தாமல் பிறருடைய சுமையையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு தியாக வாழ்க்கை வாழ்கின்ற பெண்களையே பெண்ணுக்குப் பொருமை சேர்ப்பவளாக இந்த உலகம் ஏற்கிறது என்கிறாள்.

“தன் மகிழ்ச்சியை அடைய பொங்கி எழாமல் தன்னையே பொசுக்கிக் கொள்ளும் தன்னைப் பெரிய தியாகியாகப் பாவித்துக்கொண்டு தன்னையே ஏய்த்துக்கொள்ளும் ஆத்ம துரோகம் தான் எல்லோர் கண்களுக்கும் பெண்மையின் பெருமையாகப்படுகிறது.

பெண்மை தொடர்பான இத்தகையக் கருத்தாக்கங்கள் போலியானவை இவையாவும் பொண்களை அடிமைப்படுத்தும் செயலாகவே அம்பை பார்க்கிறார்.

**பெண்கள் ஆண்களைத்தாக்குவது: -**

ஆண்கள் எவ்வளவுதான் பெண்களைக் கொடுமைப்படுத்தினாலும் அவள் அதைப் பொறுத்துக்கொண்டு வாழவேண்டும். இதனையே இச்சமுதாயம் பெண்களுக்குப் பழக்கப்படுத்தியுள்ளது. வாயளவில் எதிர்த்துப் பேசுவதுகூட குடும்பப் பெண்களுக்கு ஏற்றதல்ல. மரபு மீறியவளாக அவளை அடையாளப்படுத்திவிடும். இத்தகைய மரபுகள்தான் ஆணாதிக்கக் கட்டமைப்பை தாங்கி நிற்கின்ற அடிப்படைத்தூண்கள் அவற்றைத் தகர்த்தாலேயே ஆணாதிக்கம் வீழ்சியடைந்துவிடும். எனவே அம்பை தன் படைப்புகளில் இவ்வகையான மரபு மீறல்களையும் படைத்துள்ளார். பெண்கள் ஆண்களுக்கு எதிராக சொற்களின் மூலமும் செயல்களின் மூலமும் தன் எதிர்த்தாக்குதலை நிகழ்த்துவதாக ஓரிரு கதைகளில் பதிவு செய்துள்ளார்.

**வல்லூருகள்**

இச்சிறுகதையில் வரும் சைலுவின் அம்மா நண்பர் கோபால் பாபுவுடன் பேசிக் கொண்டிருந்தாள் அதைத் தவறாகப் புரிந்து கொண்ட சைலுவின் அப்பா அவளுடைய புனிதத்தை நிரூபிக்கச் சொல்லி கங்கைத் தீர்த்தச்செம்பைக் காட்டினார். இதனால் ஆத்திரம் அடைந்த சைலுவின் அம்மா தன் கணவனிடம் கீழ்கண்டவாறு நடந்துகொள்கிறாள்.

“கங்கை சொம்பை” அவர் கையிலிருந்து வாங்கி வீசி எறிந்தாள் அம்மா அன்று அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. அடி வயிற்றிலிருந்து ஓர் அவல ஓசையை எழுப்பியவாறே எச்சிலை காறி உமிழ்ந்தாள் அவர் முகத்தில் அவள் முகம் சிவந்து கண்கள் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன.”

பெண்கள் ஆண்களை எதிர்த்துப்பேசத் தயங்குகின்ற காலகட்டங்களிலேயே இத்தகைய நிகழ்ச்சிகளைத் தன் சிறுகதைகளில் படைத்துக் காட்டியுள்ளார். இது அம்பையின் துணிவைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

**உடல் வருணனை:-**

மனித உடலின் அழகை வருணிப்பதென்பது இலக்கியம் கலை போன்றவற்றில் நாம் படித்ததே அவை அழகியல் நோக்கிற்காக இலக்கியங்களில் படைக்கப்படுகின்றன. அத்தகைய இலக்கியங்கள்யாவிலும் முழுக்க முழுக்க பெண்களின் உடலை இன்ப நுகர்ச்சிக்குறியதாகவும், ஆண்களின் உடலை வீரம், வலிமைக்குறியதாகவும் வகைப்படுத்தி வருணித்திருப்பார் அம்பையின் படைப்புகளில் இத்தகைய வருணனைகள் இயல்பான மனத்தின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. ஒரு பெண் ஆணின் உடலை நோக்குகின்ற விதமும் பெண்ணின் உடலை நோக்குகின்ற விதமும் எவ்வாறு இருக்கும் என்பதைத் தன் படைப்புகளில் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளார். இவற்றிற்கும் மேலாக பால் சார்ந்த உறுப்புகளையும் தன் வருணனையில் படைத்திருக்கின்றார்.

**அடவி**

இச்சிறுகதையில் செந்திரு திருமலையை சந்திக்கிறாள் அந்த முதல் சந்திப்பிலேயே அவனுடைய உருவம் தன் மனதில் பதிந்து விட்டதாக அதனை வருணனை மூலம் வெளிப்படுத்துகிறாள்.

“நெடுநெடுவென்று உயரம், கரிய மேனி, பளீரென்ற வெள்ளை பின்னணியில் மினுமினுத்த கருப்புக் கண்கள், உதட்டைச் சற்றே மறைத்த மீசை, கடைந்தெடுத்தாற் போல் உடம்பு, உப்பிப் பருக்காத அடக்கமான பிருஷ்டங்கள், கால்சராயின் பின்பாகம் பிதிங்கிவழியாமல் சற்று தொளதொளத்தது போல் அதில் மடிப்பு விழச் செய்யும் பிருஷ்டங்கள், ஆண்களுக்குப் பின் பக்கம் முறுக்கிக் கட்டினாற்போல் அமுங்கி இருக்க வேண்டும் என்பது இவள் அபிப்ராயம்.”

இதன் மூலம் ஒரு பெண் ஆணை வருணிப்பதில் மிக இயல்பாக கற்பனைகளின்றி படைத்துக் காட்டியுள்ளார். ஆக, ஆண்கள் பெண்களின் உடலமைப்பு குறித்து கருத்துக்களைக் கொண்டிருப்பது போல பெண்களும் ஆண்களின் உடலமைப்பினை

குறித்து கருத்துக் கொண்டிருக்கலாம். அதுவும் இயல்பானதே என்று அம்பை கூறுகின்றார்.

**பாலியல் சுதந்திரமும், குடும்ப நிறுவன புறக்கணிப்பும்**

பெண்ணியவாதிகள் பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் உரிமைகளைப் பெற்றுத்தரவும் பல கோரிக்கைகளை முன்வைத்து செயல்படுகின்றனர். ஆனால் அவை முழுமையான தீர்விற்கு வழிவகுக்கவில்லை. பொதுவாக பிரச்சனைகளுக்குத் தற்காலிகமான தீர்வு காண்பதை விடப் பிரச்சனைக்குறிய மூலத்தைக் கண்டறிந்து அதனை வேரறுப்பதே சிறந்த தீர்வாக அமையும். இதனையே வள்ளுவர்,

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச்செயல்".

என்ற குறள் வரிகளின் மூலம் விளக்குகின்றார்.

தாய்வழிச் சமுதாயத்தில் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்த பெண்கள் இன்று ஆண்களுக்கு அடிமைகளாய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையை ஆராய முற்பட்டனர். வன்முறையற்ற பாலுறவு கொண்டிருந்தபோது பெண்களே அதிகாரம் செலுத்துகின்ற நிலையில் இருந்தனர். அவர்களுடைய பாலுறவை வரைமுறைக்குட்படுத்திப் பாலியல் சுதந்திரத்தைத் தடைசெய்ததன் மூலமே ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தினர். ஆண்கள் தங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள பெண்களுக்கான பாலியல் கட்டுப்பாட்டைக் கற்பு நெறி என்ற கருத்தாக்கத்தின் மூலம் செயல்படுத்தி வருகின்றனர். ஆனால் அத்தகைய கற்பு நெறியானது இருவருக்கும் பொதுவாக இல்லாததால் ஆண்களின் பாலியல் சுதந்திரத்திற்கு அது தடையாக அமையவில்லை.

அம்பையின் சிறுகதைகளில் திருமணத்திற்கு முன்பே ஆண்களுடன் உறவு கொள்ளும் பெண்களையும் குடும்ப அமைப்பை புறக்கணித்து விரும்பியவருடன் பிடிக்கும் வரை சேர்ந்து வாழலாம் என்ற கருத்துடையப் பெண்களையும் படைத்துக் காட்டியுள்ளார். இதன் மூலம் தீவிரவாதப் பெண்ணியக் கருத்தாகப் பெண்களின் பாலியல் சுதந்திரத்தை முன் வைப்பதாகப் படைப்புகளைப் பதிவு செய்துள்ளார்.

**ஸஞ்சாரி:-**

எனும் சிறுகதையில் வரும் ருக்மணிராஜனுடன் காதல் கொண்டு சேர்ந்து வாழ்கின்றாள். ராஜன் அவளை நிராகரித்தவுடன் அவனைவிட்டுப் பிரிந்து சென்று விடுகிறாள். பின்னர் ரங்காவுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறாள். ரங்கா அவளுடைய சுதந்திரத்திற்குத் தடையாக இருக்கிறான். அவளைச் சந்தேகப்படுகிறான். இதனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ரங்காவையும் பிரிந்துத் தனியே தன்வாழ்வை அமைத்துக் கொள்கிறாள்.

"கூடப்படுக்கும் பெண்ணையெல்லாம் மணக்க வேண்டும் என்று கட்டாயமா? என்று கேட்ட ராஜனிடம் கொண்ட குழந்தைத்தனமான காதல் முறிவுக்கா? ரங்கா என்னை அவமதிப்பதாலா? எதற்கென்று அழுகிறேன்."

**முடிவுரை:-**

பெண்படைப்பாளராகிய அம்பை பெண்களை அடிமைப்படுத்துதல் பெண்மை குறித்த எதிர்பார்ப்பு, பெண்கள் ஆண்களைத் தாக்குவது உடல் வருணனை, பாலியல் சுதந்திரமும் குடும்ப நிறுவனப் புறக்கணிப்பும் போன்ற பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டியதோடு பிரச்சனைகளிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்ற கருத்தைக் கொண்டு சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாறு அம்பை பிற பெண்ணிய எழுத்தாளர்கள் எழுதத் தயங்குகிறதும் எழுத அஞ்சுகிறதுமான பெண்ணியக் கருத்துக்களைத் தம்படைப்புகளில் வெளிப்படுத்துகிறார்.

# இனியவை நாற்பது காட்டும் சமுதாய நெறிகள்

**சு.ஜெனிபர்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

**முன்னுரை**

தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. இதில் அறநூல்கள் பதினொன்று, அகநூல்கள் ஆறு, புறநூல் ஒன்றாக அமைந்துள்ளன. இந்நூல் அறநூல்கள் பதினொன்றில் ஒன்றாக விளங்குகிறது. இந்நூலின் ஆசிரியர் பூதஞ்சேந்தனார். இவர் சிவன், திருமால், பிரம்மன் முதலிய மூவரையும் பாடியிருப்பதால் பொதுச்சமய நோக்குடையவர் என்பதை அறிய முடிகிறது. இந்நூலில் அமைந்துள்ள நாற்பது பாடல்களில் சில பாடல்கள் நான்கு கருத்துக்களையும், பல பாடல்கள் மூன்று கருத்துக்களையும் வலியுறுத்தியுள்ளன. இப்பாடல்களை பொதுவாக நோக்கும் போது ஒவ்வொருவரும் தம் வாழ்வில் ஒழுக வேண்டிய அறநெறிகளை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளதை நோக்கத்தக்கது. இந்நூலில் இடம்பெறும் சமுதாய நெறிகளை அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சமுதாயம் என்பதன் பொருள்**

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில அகராதி சொசைட்டி என்பது மன்னாயம், சமுதாயம், கூட்டுவாழ்க்குழு என்பனவற்றைக் குறிப்பிடுவதுடன் நட்புக்குழு, உயர்க்குழு என்பனவற்றையும் குறிப்பிடுவதாகும் என்று பொருள் கூறுகிறது. (**பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும்,ப.2)**

மதுரைத்தமிழ்ப் பேரகராதி, சமுதாயம் என்னும் சொல்லிற்குக் கூட்டம், சங்கம், ஊர்ப்பொது, மக்களின் திரள், பொதுவானது, பொதுவாகவேனும் அவ்வர்க்குப் பங்குப்படி பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப்பொதுச் சொத்து எனப் பல பொருள்களைக் குறிப்பிட்டுள்ளது. **(முதல் பாகம்,ப.728 )**

**பெற்றோரை மதித்தல்**

தாய் தந்தையரை போற்றி வாழ வேண்டும் என்பதே சிறந்த அறப்பண்பு ஆகும். பெற்றோரைப் போற்றி வணங்க வேண்டும் என்பதை,

**எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்**
**கண்டெழுதல் காலை இனிது (இனி.பா.19:3-4)**

என்ற பாடலடியால் அறியமுடிகிறது. இக்கருத்தையே ஆத்திசூடியும்

**தந்தை தாய்ப் பேண் (ஆத்தி.பா.20)**

கூறுகிறது.

அத்தகைய தந்தை தீய வழியில் செல்லுபவனாக இருந்தால் அவனுக்கு கட்டுப்படத் தேவையில்லை என்பதை,

**தந்தையே ஆயினும் தானடங்கான் ஆகுமேல்**
**கொண்டடையா னாகல் இனிது.(இனி.பா.8-3-4)**

என்ற பாடலடி உணர்த்துகிறது.

**தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை (கொன்.பா.37)**

என்னும் பிடிப்புள்ள மண்ணில் பூதஞ்சேந்தனார் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**இல்லறம்**

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதே இல்லறம் ஆகும். வள்ளுவர் இல்லறத்தை அறத்துப்பாலில் தனி ஓர் அதிகாரமாக வைத்துள்ளார்.

இல்லறம் என்பதற்கு செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலிய இல்லத்திலிருந்து செய்யும் அறம் என்று விளக்கம் அளிக்கிறது.

இனியவை நாற்பதில் இல்லறம் பற்றிய செய்திகள் இரண்டு பாடல்களில் அமைந்துள்ளன. கணவனும் மனைவியும் ஒத்து வாழ்வது இல்லறத்தின் தலையானது. இதிலிருந்து மாறுபட்டு வாழக்கூடாது என்பதை,

**ஒப்ப முடித்தால் மனைவாழ்கை முன் இனிது (இனி.பா.3 :2)**

என்ற பாடல் வரியில் அறியலாம். இக்கருத்தையே நன்னெறியும்,

**காதல் மனையாளும் காதலனும் மாறுயின்றி தீதில் ஒருகருமம் செய்பவே (இனி.பா.6 :1-2)**

கூறுகிறது. பெண்கள் கற்புடன் வாழ்வதே சிறந்தது. இல்லறத்தில் வாழும் பெண்கள் கற்புடன் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் நீங்கி வாழ்வது நல்லது என்பதை,

**நிறை மாண்டில் பெண்டிரை நீக்கல் இனிது (இனி.பா.11 :2)**

என்ற பாடல் வரியால் மணவிலக்கு வழக்காறு இல்லாத அக்காலத்தில் கற்பு இல்லாத பெண்ணை நீங்கி வாழ்ந்த செய்தியையும் அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்**

தமிழரின் தலைச்சிறந்ந பண்பாடு விருந்தோம்பல் ஆகும். இல்லத்திற்கு புதிதாக வருபவர்களை வரவேற்று உபசரிக்கும் பாங்கே விருந்தோம்பல் ஆகும். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி விருந்தோம்பல் என்பதற்கு புதிதாக வருபரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கை என்று பொருள் கூறுகிறது.

விருந்தோம்பல் பற்றிய செய்தியை ஒரு பாடலில் பூதஞ்சேந்தனார் கூறியுள்ளார். பொதுவாக எல்லா இலக்கியங்களும் விருந்தோம்பல் பற்றிய செய்திகளை கூறியுள்ளன. ஆனால் இனியவை நாற்பதில் விருந்தோம்பலில் யார் இல்லத்து விருந்து சிறந்தது என்பதை பதிவுச்செய்துள்ளது. இதனை,

**எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படும்**
**கற்றா உடையான் விருந்து ( இனி.பா.39:3-4)**

என்ற பாடலடிகள் பாலை மிகுதியாகக் கறக்கும் ஆவுடையான் அளிக்கும் விருந்து மிகவும் இனிது என்ற கருத்தை கூறுகிறது.

**பெரியோரைத் துணைக்கொள்ளல்**

பெரியோர்களைப் போற்றி ஒழுகுவதும் அவர்கள் வழி நின்று வாழ்வதுமே நல்ல அறச்செயலாகும். இனியவை நாற்பதில் ஒரு பாடலில் பெரியோரைத் துணைக்கொள்ள வேண்டும் என்கிறது. இதனை,

**தெற்றவும் மேலாயார்ச் சோர்வு**

**( இனி.பா.2:4)**

என்ற பாடலடி தெளிந்த அறிவுடைய பெரியோர்களோடு கூடி வாழ்வது நல்லது என்ற கருத்தை எடுத்தியம்பியுள்ளது. இதன் மூலம் பெரியோர்களைப் பின்பற்றி ஒழுக வேண்டும் என்ற செய்தியை அறியமுடிகிறது.

**கல்வி**

தனி மனித வாழ்வையும் நாட்டின் முன்னேற்றத்தையும் உயர்த்துவது கல்வி. அத்தகைய கல்வி மனிதனின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் அறியாமை இருளை அகற்றுகிறது. கல்வி பற்றி **அமுதன்** அவர்கள் கூறும் போது கல்வி என்ற சொல்லுக்கு மனத்தைப் பண்படுத்தல் என்பதே பொருள். கல் என்னும் அடிச்சொல்லிலிருந்தே கல்வி, கலை, கலாச்சாரம் முதலிய பண்பாடுகள் விளங்குகின்றன என்பார். இத்தகைய கல்வியை எத்தகு நிலையிலும் கற்க வேண்டும் என்பதை

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**
**(புறம்.183:1-2)**

கூறுகிறது.

சமுதாயத்தினரால் இழிவாக கருதப்படுவது பிச்சையெடுத்தல் ஆகும். இந்த நிலையை அடைந்தாவது கல்வியை கற்க வேண்டும் என்ற செய்தியை இனியவை நாற்பதும் கூறுகிறது. இதனை,

**பிச்சைபுக் காயினும் கற்றல் மிக இனிதே**
**(இனி.பா.2:1)**

என்ற பாடலடியில் அறியமுடிகிறது. இக்கருத்தையே வெற்றிவேற்கையும்

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே(பா.35)**

கூறுகிறது.

கல்வியைப் பற்றிய கருத்துக்கள் இனியவை நாற்பதில் ஏழு பாடல்களில் (2,4,13,17,21,33,41) இடம்பெற்றுள்ளன. குற்றம் இல்லாமல் கல்வியை கற்க வேண்டும் என்றும் அச்சம் இல்லாமல் தான் கற்ற கல்வியை அறிஞர் சபையில் அரங்கேற்ற வேண்டும் என்றும் கற்றறிந்த பெரியோர்களின் உரைகளைப் போற்றி வாழ வேண்டும் என்றும் நூல்களின் பயனை உணர வேண்டும் என்றும் நாட்கள் தோறும் நன்மை தரும் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற கல்வித் தொடர்பான கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளன.

**அன்புடைமை :**

நாம் வாழும் காலம் சிறிது என்றாலும் அக்காலம் வரையிலும் பிறருக்கு அன்பு செய்து வாழ்வதே சிறந்த ஒழுக்கம் ஆகும்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி அன்பு என்பதற்கு தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று, நேசம், கருணை, பக்தி, எனப் பொருள் கூறுகிறது.

இனியவை நாற்பதில் அன்பு பற்றிய கருத்து ஒரு இடத்தில் கூறப்பட்டுள்ளது.இதனை

**பங்கமில் செய்கையை ராகிப்**
**பரிந்துயார்க்கும்**
**அன்புடைய ராதல் இனிது**
**(இனி.பா.10:3-4)**

என்ற பாடல் வரிகளில்குற்றமில்லாத ஒழுக்கமுடையவராய், யாவர்க்கும் அன்புடையவராயிருத்தலே நல்லது என்ற கருத்தை வலியுறுத்தி கூறியிருப்பதை அறிய முடிகிறது

**உதவி செய்தல்**

பிறருக்கு உதவி செய்தல் என்பது மனிதனுக்கு இருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்று ஆகும். இனியவை நாற்பது தன்னை அடைந்தவரது விருப்பம் அழியாமல் உதவி செய்வது நல்லது என்று கூறுகிறது. இதனை,

**நச்சித்தற் சென்றார் நசை சொல்லா**
**மாண்பினிதே (இனி.பா.27:1)**

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

**நன்றி உணர்வு**

ஒருவர் செய்த உதவியை மறக்காமல் இருப்பதே சிறந்த பண்பு ஆகும். இக்கருத்தையே வள்ளுவர்,

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று (குறள்.108)**

என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தையே இனியவை நாற்பதும் கூறியுள்ளது. இதனை

**நன்றிப்பயன் தூக்கி வாழ்தல் நனி இனிதே**
**(இனி.பா.31:1)**

என்ற பாடலடி ஒருவர் செய்த உதவியை மறக்காமல் இருப்பதே நல்லது என்ற நன்றி உணர்வு

செய்தியை வெளிப்படுத்தியுள்ள பாங்கை அறியமுடிகிறது.

### நடு நிலைமை

ஒவ்வொருவரும் நடுநிலையுடன் வாழ்வது என்பது சிறந்த பண்பாகும். ஒவ்வொருவரும் நிறைக்கோல் போல் நடுநிலையுடன் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர்.

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கனி (குறள்.118)**

என்று குறிப்பிட்டுள்ளார். இனியவை நாற்பதில் மூன்று பாடல்களில் (6,23,31) நடுநிலையுடன் வாழ வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்தியுள்ளன. இதன். மூலம் நடு நிலையுடன் வாழும் பண்பே சிறந்தது என்பதையும் அறிய முடிகிறது.

முப்பத்தொன்றாம் பாடலில் நடுநிலை தவறாமல், ஒரு பக்கம் சார்பாக சோம்பல் இருப்பது நல்லது என்பதை,

**மன்றக் கொடும்பாடு உரையாத மாண்பினிதே (இனி.பா.31:2)**

என்ற பாடலடியின் மூலம் அறியமுடிகிறது.

### நட்பு

நட்பு என்பதற்கு தோழமை என்பது பொருள், சீவகசிந்தாமணி நட்பை சினேகம் என்ற பொருளில் கூறுகிறது (சீவக.253). மேலும் பால்ஸ் அகராதி தோழமை என்று பொருள் உரைக்கிறது. நட்பு பற்றிய கருத்துகள் நான்கு இடங்களில் (18, 20, 35) கூறப்படுகிறது. இதனை,

**நட்பார்க்கு நல்ல செயலினது (இனி.பா.18:1)**

என்ற பாடலடி கொண்டவர்க்கு நல்லனவற்றை செய்வது நல்லது, பகைவருடன் நட்பு கொள்ளாமல் இருப்பது நல்லது,நட்பில் புறங்கூறாமல் இருப்பது நல்லது, கயவருடைய நட்பை நீக்குதல் நல்லது என்ற கருத்துக்களை இயம்பியுள்ளன.

### ஈகை

பிறருக்கு கொடுத்து உதவும் தன்மையே ஈகை எனப்படுகிறது பிறர்க்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டவுடன் மனம் இரங்கி ஈயும் தன்மையுடையவர்கள் உண்மையில் பெரிதும் போற்றலுக்கு உரியவராவர்கள். ஈகையை பற்றி வள்ளுவர் குறிப்பிட்டிருப்பதை,

**வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகைமற் றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து (குறள்.221)**

என்ற குறளின் வழி அறியலாம்.

ஈகை பற்றிய கருத்துக்கள் இனியவை நாற்பதில் ஆறு பாடல்களில் (3,7,17,20,23,27) கூறப்படுகிறது. இக்கருத்துகள் பெரும்பாலும் ஈகை செய்வது நல்லது என்ற கருத்தையே வலியுறுத்தி கூறியுள்ளது.

### அரசனின் பண்புகள்

அரசன் தான் கற்றர்க்குரிய நூல்களைக் கற்று அறிவுடையவனாய் இருந்து, தன் உயிர்க்கே அன்றி மக்கள் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுவதே அரசனின் கடமை ஆகும். முறைசெய்து காப்பாற்றும் மன்னவனை பற்றி திருக்குறள்

**முறைசெய்து காப்பற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும் (குறள்.388)**

கூறுகிறது. இனியவை நாற்பதில் அரசன், அவனது படை, ஒற்றர், அரசனுக்கு ஒற்று ஆராயும் பண்பு, முறைச்செய்து தண்டனை அளிக்கும் பண்பு விருப்பு வெறுப்பின்றி எல்லா உயிர்களையும் சீர் தூக்கிப் பார்க்கும் பண்பு ஆகிய பண்புகள் இருக்க வேண்டும் என்பதை,

**ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரிதல் முன்இனிதே**

**…………………………………….**

**இனிது (இனி.பா.36)**

என்ற பாடலால் அறியமுடிகிறது.

### வேளாண்மை

இந்தியா மற்றும் உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாக ஆணி வேராக விளங்குவது உழவுத் தொழிலே. இவ்வுழவர்களே சமுதாயத்தில் வாழும் மனிதர்கள் எல்லாரையும் தாங்குபவர்களாகவும் விளங்குகின்றனர்.

இவ்வுழவர்கள் செய்யும் வேளாண்மை பற்றிய கருத்துக்கள் இரண்டு இடங்களில்

கூறப்படுகிறது. ஏருடையவன் வேளாண்மை செய்தல் நல்லது என்பதை,

**ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே (இனி.பா.4:3)**

என்ற பாடலடி உணர்த்துகின்றன.

வேளாண்மைக்கு என உள்ள விதைகளை குற்றி உண்ணாமல் இருப்பது நல்லது என்பதை,

**வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிக இனிதே (இனி.பா.41:1)**

என்ற பாடல் வரியில் அறியமுடிகிறது

**பிறர்மனை நோக்காமை**

பிறரின் மனைவியை விரும்பாமல் இருப்பதே ஒழுக்கங்களில் மிகவும் தலையானதாகும். அறத்தையே இலட்சியமாக கொண்டவர்கள் பிறரின் மனைவியை விரும்பும் இழிவான செயல்களில் ஈடுபடமாட்டார்கள். பிறர் மனைவியை விரும்பி நோக்காத ஆடவரின் சிறப்பு பற்றி திருவள்ளுவர்,

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு (குறள்.148)**

என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தே இனியவை நாற்பதிலும் இடம்பெறுகிறது. இதனை,

**பிறன் மனை பின்னோக்காப் பீடினி(து) (இனி.பா.16-1)**

என்ற பாடல்வரியால் பிறன்மனை நோக்காமையை அறியமுடிகிறது.

**விலைமகளிரை நாடாமை**

உள்ளத்து அன்பு இன்றி பொருள் ஒன்றேயே கருதும் பெண்கள் விலைமகளிர் ஆவார்கள். இளம்பூரணர் விலைமகளிர் பற்றி கூறும் போது ஆடலும் பாடலும் வல்லாராகி அழகுமிளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டு தங்காதார். (தொல்.பொருள்.பக்.53)

காண்பதற்கு தகுந்தவளாகவும், மெல்லிய தோள்களையும் உடைய விலைமகளிரின் வாயில் பிறக்கும் இன்சொல்லானது நரகத்தை அடைய வழிவகுக்கும் என்பதை,

**காண்தகு மென்தோள் கணிகைவாய் இன்சொல்லும்**
**..................அளறு (திரி.பா.24:1-4)**

என்ற பாடலடியின் மூலம் விலைமகளிரை நாடாமை அறியமுடிகிறது. இக்கருத்தே இனியவை நாற்பதிலும் ஒரு பாடலில் இடம்பெறுகிறது. இதனை,

**தடமென் பணைத்தோள் தளரிய லாரை**
**விடமென் றுணர்தல் இனிது (இனி.பா.38:3-4)**

என்ற பாடலடிகள் விலைமகளிரை நஞ்சு என நினைக்க வேண்டும் என்ற செய்தியை கூறுகிறது.

**புலால் உண்ணாமை**

உயிருள்ள உடலை கொன்று தம்முடைய ஊனைப் பெருக்கிக் கொள்வது அறச்செயல் அன்று. எல்லா உயிரையும் கொள்ளாமல் அன்பு செய்வதே சிறந்த பண்பாகும். இதனை பற்றி வள்ளுவர்

**தன்ஊண் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்(குறள்.251)**

குறிப்பிட்டுள்ளார்.

இனியவை நாற்பதில் புலால் உண்ணாமை பற்றிய கருத்துக்கள் இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளன. ஓர் உயிரை கொல்லக் கூடாது என்பதை

**கொல்லாமை முன் இனிது**
**(இனி.பா.6:1)**

என்ற பாடலடி கூறுகிறது.உயிரைத் தின்று தனது ஊனை பெருக்கிக் கொள்ளக் கூடாது என்பதை

**ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே (இனி.பா.5:2)**

என்ற பாடலடி மூலம் புலால் உண்ணாமை செய்தியை அறியமுடிகிறது

**சோம்பல் இன்மை**

சோம்பல் தன்மை ஒருவனுக்கு உள்ளச்சோர்வையும் உடற்சோர்வையும் உண்டாக்கும் தன்மை உடையது. வள்ளுவர் கெட்டுப் போவதற்கு வழிவகுக்கும் என்கிறார். இதனை,

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**

**கெடுநீரார் காமக் கலன் (குறள்.605)**

என்ற குறளின் வழி அறியலாம்.

பால்ஸ் அகராதி சோம்பல் என்பதற்கு முயற்சியின்மை ,சுறுசுறுப்பின்மை, வீண்பொழுது போக்குவது, உற்சாகமின்மை என பல்வேறு பொருள் கூறுகிறது.

சோம்பல் பற்றிய கருத்து இனியவை நாற்பதில் ஒரு இடத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை

**தானே மடிந்திராத் தாளாண்மை முன் இனிதே (பா.34:2)**

என்ற பாடலடி மூலம் சோம்பல் இல்லாமல் இருப்பது நல்லது என்ற செய்தியை அறியமுடிகிறது.

**சினமின்மை**

தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் அழிப்பது சினம். சினம் கொள்ளாமையின் நன்மையைப் பற்றித் திருவள்ளுவர்

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம் (குறள்.305)**

இனியவை நாற்பதில் சினமின்மை பற்றிய செய்திகள் மூன்று இடங்களில் கூறப்பட்டுள்ளது. இதனை,

**வெல்லுவது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே (இனி.பா.25:1)**
**செவ்வினாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே (இனி.பா.37:2)**
**பிச்சைபுக்கு உண்பான் பிளிறாமை முன் இனிதே (இனி.பா.40:1)**

என்ற பாடல் வரிகள் ஒன்றை வெல்ல வேண்டும் என்றால் சினத்தை அடக்க வேண்டும் மனத்தில் உள்ள கோபத்தை அடக்க வேண்டும் என்றும் யாசித்து உண்பவன் கோபம் படாமல் இருப்பது நல்லது என்றும் கூறுவதன் மூலம் சினமின்மையை பின்பற்றி ஒழுக வேண்டும் என்ற செய்தியை அறிய முடிகிறது.

**முடிவுரை**

வாழும் காலம் சிலகாலம் என்றாலும் அக்காலங்களில் நெறிமுறைகளுடன் வாழ்வது நல்லது என்பதை இனியவை நாற்பதின் வழி அறியமுடிகிறது.

சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் நல்ல பண்புகளுடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளன.

இல்லறம் நடத்தும் விதம்,விருந்தோம்பும் முறை, பெற்றோரை மதிக்கும் பாங்கு,பெரியோரைத் துணைக்கொள்ளும் விதம்,கல்வியின் சிறப்பு,நட்புடன் பழகல்,புலால் உண்ணாதிருத்தல்,சோம்பல் இன்மை,அரசனுக்கு இருக்க வேண்டியபண்புகள்,
சினம்இல்லாதிருத்தல்,பொறாமையின்மை,அன்புடன் பிறருடன் பழகல்,நன்றியுணர்வுடன் இருத்தல்,சொற்களை சொல்லும் முறைமை,பிறன்மனை நோக்காமை,விலைமகளிரை நாடாமை,பிறருக்கு உதவிச் செய்தல்,என்ற பாங்கில் சமுதாயத்திற்கு வேண்டிய நெறிகளை கூறி வழிநடத்தும் பாங்கு போற்றதலுக்கு உரிய ஒன்றாகும்.

# நல்லாதனார் பாடல்களில் பெண்

**த.ரேணுகா,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி -24

**முன்னுரை**

பழம்பெருமை வாய்ந்த தமிழ்மொழியில் தோன்றிய எண்ணற்ற இலக்கிய வகைகளுள் ஒன்று அறஇலக்கியமாகும். இவ்விலக்கியம் மனிதனை நல்வழிப்படுத்தி நல்முறையில் வாழ வழி வகுக்கின்றது.

**அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி**

**அறம்பொருள் இன்பம் அடக்கி அவ்வத்**

**திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும்.**

என பன்னிரு பாட்டியல் பதினெண்கீழ்க்கணக்கு நூலிற்கு இலக்கணம் கூறுகிறது. இவை பதினெட்டு நூல்களை கொண்டவை. அவற்றுள் அறநூல்கள் பதினொன்றும் அக நூல்கள் ஆறும் புறநூல் ஒன்றும் அமைந்துள்ளன. அறநூல்களுள் ஒன்று திரிகடுகம். இதன் ஆசிரியர் நல்லாதனார் ஆவார். இந்நூலில் 36 பாடல்களில் பெண் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன அவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**ஆசிரியர், நூல் - குறிப்பு**

திரிகடுத்தை இயற்றிய நல்லாதனார் இந்நூலுக்குரிய கடவுள் வாழ்த்துச் செய்யுள் திருமலைப் பற்றி இயற்றி இருப்பதால் இவர் வைணவ சமயத்தை சார்ந்தவராக இருக்கலாம். “இந்நூலுக்கு இரண்டு சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் அமைந்துள்ளன. அவற்றின் வழியே ஆசிரியர் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ‘திருத்து’ என்னும் ஊரைச் சார்ந்தவர் என்பதும் செருஅடுதோள் என்ற அடைமொழியின் வழி போர்த்திறம் மிக்கவர் என்பதும் புலனாகின்றது” என்று பதினெண் கீழ்க்கணக்கு எனும் நூலில் முனைவர். யாழ். சு. சந்திரா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திரிகடுகம் என்பதற்கு சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் சேர்ந்தது என்று பிங்கல நிகண்டு சூத்திரம் 352 விளக்குகின்றது. இம்மூன்று பொருளும் சேர்ந்து உடல் நோயை நீக்கி இன்பம் தருவதை போல இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ள மும்மூன்று கருத்தும் மன நோயாகிய அறியாமையை நீக்கி இன்பம் தருகின்றது. திரிகடுகம் கி.பி.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்நூல் கடவுள் வாழ்த்து பாடலைச் சேர்த்து 101 வெண்பாக்களைக் கொண்டு அமைந்துள்ளது.

**பெண் – விளக்கம்**

“பெண் என்னுஞ் தமிழ்ச் சொற்கு அழகு என்பது பொருள். பெண்ணை உணர்த்தும் மாதர் முதலிய சொற்கட்கும் அழகு என்று

பொருள் உள்ளது. நீலவானத்தில் திங்கள் போலவும், மலையில் பொழில் போலவும், பசுங்கொடியில் மலர் போலவும், மலரில் நிறம் போலவும், பறவைகளில் மயில் போலவும், விலங்களில் மான் போலவும், பெண் என்னும் அழகு இவ்வழகிய உலகை அழகு செய்கிறது" என்று திரு.வி.க அவர்கள் பெண்ணின் பெருமை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**நாணம்**

நாணம் என்பதற்கு கௌரா தமிழ் அகராதி அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம், பயப்பக்தி, மானம், தணிகை என பொருள் உரைக்கிறது.

நாணம் பெண்ணிற்கு மட்டும் உரியதாக பல இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. நாணத்தைப் பற்றி தொல்காப்பியர்,

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப**
**(தொலீ :1045)**

என்று குறிப்பிடுகிறார். 'அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுதல் நாணம்' என இளம்பூரணர் உரை கூறுகிறார்.

நான்மணிக்கடிகை பெண்ணிற்கு நாணமே முதன்மையானது என்றும் அந்த நாணத்தையே கணவன் விரும்புவான் என்றும் குறிப்பிட்டுள்ளது.

**பெண்மை நலத்துக்கு அணியென்ப நாணம்**
**(நான்.11)**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றது.

இந்நூலும் கணவனால் விரும்பப்படும் பெண்ணிற்கு அழகு நாணமுடைமை என்பதை,

**....................................காமுற்ற**
**பெண்ணுக் கணிகலம் நாணுடைமை**
**(திரி.52:1-2)**

என்ற அடிகள் மூலம், கணவன் நாணமுடைய பெண்ணையே விரும்புவான் என்ற கருத்து இடம்பெற்று இருப்பதை அறிய முடிகிறது.

**கற்புடைய பெண்ணின் கடமை**

கற்புடைய பெண்ணின் கடமையாக மூன்று கருத்துகளை கூறியுள்ளார், இதனை,

**நல்விருந்தோம்பலின் நட்டாளாம் வைகலும்**
**இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்**
**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி**
**இம்மூன்றும் கற்புடையாள் பூண்ட கடன்**
**(திரி.64)**

என்னும் வரிகள் நன்மையான விருந்தினரை உபசரிப்பதாலும், நாள்தோறும் இல்லறத்தை வழுவாது காத்தலாலும், குழந்தை பெறுதலும் கற்புடைய பெண்ணின் கடமையாக இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**தாய்ப்பாலின் சிறப்பு**

தாய்மை என்ற சொல்லுக்கு "தாயாந் தன்மை" என்று தமிழ் லெக்ஸிகன் பொருள் கூறுகிறது.

தாய்ப்பால் மனித வளர்ச்சிக்கு அடிப்படையாகும். தாய்ப்பால் அருந்தாத குழந்தை உடல் அளவிலும் மன அளவிலும் சீரான வளர்ச்சி பெறுவதில்லை. குழந்தையின் எதிர்கால வாழ்வை செம்மையுற செய்வது தாயப்பாலாகும்.

தாய்ப்பால் அருந்தாமலும் தாய்ப்பால் கிடைக்காமலும் வளரும் குழந்தை வறுமையில் வாடுவதாக இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

**...........வயிறாரத்**
**தாய்முலை உண்ணாக் குழவி (திரி.84)**

எனும் அடிகள் தாயப்பால் அருந்தாத குழந்தையின் நிலையை காட்டியுள்ளார்.

**பெண்ணின் மென்மை குணம்**

பெண் என்றாலே பொறுமையாகவும் அடக்கமாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்து காணப்படுகிறது.

இந்நூலும் மெல்லிய சொற்களை பேசக் கூடிய பெரிய தோள்களையுடைய பெண்களை தாழ்த்திக் கூறாமல் காத்தல் வேண்டும் என்று கூறுகிறது. இதனை,

**சில் சொற் பெருந்தோள் மகளிர்**
**(திரி.47:1)**

என கூறுகிறது. இக்கருத்தின் மூலம் மென்மையான குணமுடைய பெண்கள் மதிக்கப்பட்ட நிலையும், பெண்கள் மென்மையாக பேச வேண்டும் என்றும் மென்மையற்றச் சொற்களைப் பேசக் கூடாது என்ற நிலையும் புலப்படுகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பதற்கு கௌரா தமிழ் அகராதி வேளாண்மை, புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கை என்று விளக்கமளிக்கிறது.

விருந்தினரை உபசரித்தல் தமிழரின் பண்பாடாகும். பண்டைய காலம் முதல் தொன்றுதொட்டு வரும் பழக்கமாகவும் கருதப்படுகிறது. வீட்டிற்கு வரும் உறவினரை இன்முகத்தோடு வரவேற்று, அவர்களை மனமகிழ்வோடு உபசரித்தல் வேண்டும்.

**விருந்தே தானும் புகுவது கிளந்த யாப்பின் மேற்றே**
**(தொல்.1495)**
என்ற நூற்பாவின் வழி விருந்தோம்பலைப் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

விருந்தினரை உபசரிப்பதில் பெண் முக்கிய பங்கு வகிக்கிறாள். இந்நூலும் ஒரு நல்ல மனைவி விருந்தினரை உபசரிப்பதன் மூலம் தன் கணவனுக்கு நட்பானவளாக இருப்பாள் என்பதை,

**நல்விருந் தோம்பலின் நட்பாளாம்**
**(திரி.64:1)**

என்ற அடிகளின் மூலம் விருந்தோம்பலில் பெண்ணிற்கு இருக்கும் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது.

விருந்தினரை உபசரிக்கும் மனைவியை பற்றி குறிப்பிடும் நல்லாதனார் விருந்தினரை உபசரிக்காத மனைவியை பற்றியும் குறிப்பிடுகிறார். அவை

**.........விருந்தஞ்சும்**
**ஈர்வளையை யில்லத் திருத்தலும்**
**(திரி.63.1-2)**

என்னும் அடிகள் மூலம் விருந்தினருக்கு உணவிடாத மனைவி குடும்பத்தாரால் மறுக்கப்பட்ட செய்தி அறியமுடிகின்றது.

விருந்தினரை உபசரிப்பதில் கணவன்- மனைவி இருவருக்கும் இருக்கும் உறவு நிலை கூறப்பட்டுள்ளது.

**பெண்ணை இயற்கையோடு ஒப்பிட்டு கூறுதல்**

மனிதன் நல்ல முறையில் வாழ நல்கருத்துகளை கூறும் அற இலக்கியம், பெண்களுக்கான நீதிகளை இயற்கையோடு ஒப்பிட்டு கூறியுள்ளது. கற்புடைய பெண்கள் கூறினால் இயற்கையும் செவிமடுக்கும் என்பதை, இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. 'கண்ணகி சினந்துக் கூறியதால் மதுரை மாநகரம் தீ பற்றி எரிந்தது' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கற்புடைய பெண் கணவனை தொழுதெழுவாள், அவள் பெய் என்று சொன்னால் மழைப் பெய்யும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்,

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (குறள்.55)**
என்ற குறளின் வழி அறியலாம்.

கணவனின் குறிப்பறிந்து நடப்பவள் பெண்டாட்டி ஆவாள். அவள் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்று நல்லாதனார் கூறியுள்ளார். இதனை,

**கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி**
**(திரி.96.1)**
என்ற அடிகள் புலப்படுத்துகிறார்.

பெண்ணுக்குரிய குணம்கொண்டவள் தன் கணவனின் குறிப்பறிந்து அதன்வழி நடந்தால் மழை மும்மாரி பொழியும் என்பதை,

**பெண்பால் கொழுநன் வழிச் செலவும்**
**(திரி.98.3)**
என்ற வரிகள் மூலம் இந்நூலாசியர் கூறியுள்ளார்.

மற்றொரு பாடலில் கணவனின் சொல் கேட்காமல் அவன் வீட்டில் வாழும் பெண் உள்ள ஊரில் மழை பெய்யாது என இந்நூலாசிரியர் கூறியுள்ளார். இதனை,

**இல்லிருந் தெல்லை கடப்பாளும் (திரி.50.3)**
என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

மேற்கூறிய பாடலின் மூலம் பெண் கணவனின் குறிப்பறிந்து நடந்தால் மழை வரும் என்ற சிந்தனையும், குறிபறிந்து நடக்கவில்லை என்றால் மழை வராது என்ற சிந்தனையும் பெண்ணை மையமிட்டு அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

**முதிர்கன்னிகள்**:

ஒரு பெண் பல ஆண்டுகள் திருமணம் ஆகாமல் இருந்தால் அவளை "முதிர்கன்னிகள்" என்று இச்சமுதாயம் பெயர் சூட்டுகின்றது.

இந்நூலாசிரியர் குற்றமற்ற குணம் கொண்ட நெடுநாள் திருமணம் ஆகாத இளம்பெண் அரிய பொருள் என்று குறிப்பிடுகிறது

**............திருந்திய**
**மெய்ந்நிறைந்த நீடிருந்த கன்னியும் (திரி.69.1-2)**
என்ற அடிகள் மூலம் அக்காலத்தில் நீண்டநாள் திருமணம் ஆகாத பெண் இருந்த நிலையை அறிய முடிகின்றது.

**கணவனின் குறைகளை கூறும் பெண்**

கணவன் மனைவி இருவரும் தங்களுக்குள் இருக்கும் குறைகளை பார்க்காமல், தங்களுக்குள் இருக்கும் நிறைகளையும் பார்த்து சிந்தித்து வாழ்வதன் மூலம் மணவாழ்க்கையில் மகிழ்ச்சியை காணலாம்.

கணவனின் பெருமை குணத்தை விரும்பாமல் அவனுடைய குறைகளை மட்டும் கூறும் பெண் தர்மத்திலிருந்து நீங்கியவளாக இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

**..................பெருமை**
**வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும் (திரி.55.1-2)**
என்ற அடிகள் மூலம் அறியலாம்.

**பொய் கூறி செல்வத்தை அழிக்காமை**

குடும்பத்தை பேணுதல் பெண்ணின் கடமையாக கருதப்படுகிறது. அவற்றுள் ஒன்று செல்வத்தை பாதுக்காத்தல்.

ஒரு பெண் செல்வத்தை பாதுகாக்காமல் அழித்தால் யாருக்கும் பயனற்றவளாக ஆவாள் என்பதை,

**...............பொய்தள்ளி**

**அம்மனை தேய்க்கும் மனையாளும் (திரி.49.2-3)**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதன் மூலம் ஒரு பெண் வீட்டில் உள்ள செல்வத்தை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை காணப்பட்டு இருப்பது நோக்கதக்கது.

**பொதுமகளிர்**

"ஆடலும் பாடலும் வல்லாராகி அழகுமிளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெ௸கி ஒருவர்மாட்டு தாங்காதார்" என்று இளம்பூரணர் பொதுமகளிருக்கு விளக்கம் கூறுகிறார்.

பொதுமகளிரை வேசியர், விலைமாது, கணிகை, பொருட்பெண்டீர் என்ற பெயரில் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பலரிடம் செல்லக் கூடிய பொதுமகளிரை அன்புடையவள் என்று கூறுவது தாழ்வான செயல் என்றும், வேசையரின் இன்சொல்லானது நரகத்தை போன்றது என்றும், மனம் வேறொன்றின் மேல் சென்று பொருள் வருவாயினை மேற்கொள்வர் வேசையர் என்றும் பொதுமகளிரை இந்நூலாசிரியர் கடிந்துரைக்கிறார். இதனை,

**பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென் பானும் (திரி.73.2)**

**காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லுற் (திரி.24.1)**

**காரியத்திற் குன்றாக் கணிகையும் (திரி.76.1-2)**

என்ற பாடல் வரிகள் மூலம் நோக்கதக்கது.

**முடிவுரை**

பெண் குறித்த செய்திகளை ஆராயப்படபட்டுள்ள இக்கட்டுரையில் பெண்ணிற்கு சிறந்த பண்பாக நாணம் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

விருந்தோம்பல், குடும்பத்தைப் பேணுதல், குழந்தையைப் பெற்றெடுத்தல் போன்றவை பெண்ணிற்கு உரிய கடமையாகக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கணவனை சார்ந்தே பெண் இருக்க வேண்டும் என்ற சிந்தனை காணப்பட்டு இருப்பதை அறிய முடிகின்றது.

கணவனின் குறைகளை கூறும் பெண்ணையும், பொய் கூறி செல்வத்தை அழிக்கக் கூடிய பெண்ணையும் இந்நூலாசிரியர் கடிந்துரைக்கின்றார்.

முதிர்கன்னி நிலையை பற்றிக் கூறியுள்ளார்.

பொதுமகளிரை ஆசிரியர் இகழ்ந்துரைக்கின்றார்.

அறங்களை கூறவேண்டும் என்ற நோக்கில் தோன்றிய இவ்விலக்கியம், பெண்ணிற்கு மட்டும் வரையறை கூறாமல் ஆணிற்கும் சில வரையறைகளை கூறியுள்ளது.

நல்ல மனைவியை நீங்குதல் பாவ செயல் என்றும் (97.2-3) கற்புள்ள மனைவி அமைந்தால் அவன் சாவா புகழினை பெறுவான் என்றும் (16) நற்குணம் உடைய பெண்ணை காப்பாற்றுதல் ஒரு கணவனின் செயல் என்றும் (49) மனைவியை அடிப்பதனால் கேடுகள் ஏற்படும் என்றும் (13) பிறன்மனை நோக்குதல் தவறு என்றும் நல்லாதனார் கூறியுள்ளதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

# தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாடு

**உ.அலிபாவா**
பேராசிரியர்
தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி 620024
alibavapkm@gmail.com

திரை கடலோடியும் திரவியம் தேடு (கொன்றை வேந்தன் .39) என்பது தமிழில் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் ஔவைப் பெருமாட்டியின் முதுமொழி அந்த வகையில் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று தமிழர்கள் பழங்காலந்தொட்டு இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர் அவர்களுள் உலக நாகரிகத்தின் தொட்டிலாகக் கருதப்படும் தமிழையும் தமிழ் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் பேணி வாழ்வோரும் உண்டு மேலை மோகத்தால் புறந்தள்ளி வாழ்வோரும் உண்டு

தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் பேணி வாழ்வோரைப் பற்றித் தமிழறிஞர் பலர் பல்லாற்றானும் கண்டும் கேட்டும் ஆய்ந்தும் நூல் பல இயற்றியுள்ளனர் அந்நூல்களுள் தமிழ் நாயகமான தனிநாயகம் அடிகளார் இயற்றிய தமிழ்த் தூது ஒன்றே உலகம் அறிஞர் க.த திருநாவுக்கரசு இயற்றிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு தெ.பொ.மினாட்சி சுந்தரனாரின் உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு சோமலோயின் பயணம் கட்டுரைகள் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன

அந்த வகையில் தனிநாயகம் அடிகள் க.த. திருநாவுக்கரசு போன்றோர் தாய்லாந்தில் தமிழும் தமிழ்ப் பண்பாடும் பழக்கவழக்கங்களும் இன்றளவும் ஊடுருவியுள்ள பான்மையைத் திறம்பட எடுத்துரைக்கின்றனர்

இந்திய நாட்டில் பழம்பெரும் சிறப்பு வாய்ந்தது தமிழ்ப் பண்பாடு இப்பண்பாட்டினை வெப்ப மண்டல கிரேக்கப் பண்பாடு என அறிஞர் ரெனே குரோசெட் போற்றுகிறார் கிரேக்கர்களுக்கு முற்பட்ட பொனிஷியர் எனும் உலகக் கடலோடி இனத்தவரோடு ஒப்ப வைத்துப் போற்றத் தக்கவர் தமிழர் என்றும் அவர் ஆய்ந்துரைக்கிறார்

உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் குடியேறி வாழ்ந்தமைக்கும் வாழ்கின்றமைக்கும் பல்வேறு சான்றுகள் கிடைத்துள்ளன அக்குடியேற்றப் பகுதிகளுள் தென்கிழக்கு ஆசியா முதன்மை இடம் பெறுகிறது பண்டைக்காலத் தமிழகம் ஆயிரத்து இருநுறு கி.மி அளவிற்கு நிண்ட நெடுங்கடற் கரையைப் பெற்றிருந்தது இதனால் மேற்கு நாடுகளோடும் கிழ்த்திசை நாடுகளோடும் கடல் வாணிபம் செய்வதில் பண்டைத் தமிழர்கள் சிறப்புற்று விளங்கினார் என்பார் க.த திருநாவுக்கரசு.இதற்கு அரண் சேர்க்கும் வண்ணம்

**சிங்களம் புட்பகம் சாவக மாகிய**

**திவு பலவினுஞ் சென்றேறி அங்குத்**
**தங்கள் புலிக்கொடி மின்கொடியும் நின்று**
**சால்புறக் கண்டவர் தாய்நாடு**
**விண்ணை யிடுக்கும் தலையிமயம் எனும்**
**வெற்பை யடிக்கும் திறனுடையார் சமர்**
**பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் தமிழ்ப்**
**பார்த்திவர் நின்ற தமிழ்நாடு**
**சின மிசிரம் யவனரகம் இன்னும்**
**தேசம் பலவும் புகழ்விசிக் கலை**
**ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக**
**நன்று வளர்த்த தமிழ்நாடு**

என்று பாரதியார் பாடியுள்ளார் இத்துடன்,

**சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சினந் துளுக்குடகம் கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலிங்கங் கலிங்கம்வங்கம்**
**கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலம்**
**தங்கும் புகழ்த்தமிழ்பதி னேழ்நிலந் தாமிவையே**
எனும் பழம்பாடலும் உள்ளது

தமிழகத்தின் கிழக்கும் கடற்கரை சோழ மண்டலக் கடற்கரை எனப்படுகின்றது சோழ மண்டலக் கடற்கரைக்கு நேர்கிழக்காக கிட்டத்தட்ட இரண்டாயிரம் மைல் தொலைவில் உள்ள நாடுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்நாடுகளுள் மலேசியா சிங்கப்பூர் பர்மா வியட்நாம் காம்பூச்சியர் தாய்லாந்து சுமத்திர ஜாவா பாலி ஆகிய நாடுகள் அடங்கும். இந்நாடுகளில் பண்டைத் தமிழரின் வாழ்வியலும் கலைச் சின்னங்களும் இன்றளவும் காணக்கிடைக்கின்றன

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தை பிழிந்து எடுத்தால்

1 பாண்டிய பல்லவ சோழ அரசர் குடிமரபுகளின் அரசியல் உறவு

2 கடல் வாணிகத் தொடர்பு

3 சமயத் துறையில் சிவலிங்க வழிபாடு நடராசர் வழிபாடு காரைக்கால் அம்மையார் வழிபாடு அகத்தியர் வழிபாடு முதலியன

4 பாவை நோன்பும் விழாவும்

5 குடும்ப வாழ்க்கையில் இடம்பெறும் திருமணச் சடங்குகள் மகப்பேறு சடங்குகள் ஈமச்சடங்குகள் முதலியவற்றுள் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம்

6 கலைத்துறையில் தமிழகக் கோயிற் கட்டடக்கலையின் செல்வாக்கு

7 தமிழகச் சிற்ப கலையின் பாதிப்பு

8 கம்பராமாயணத் தாக்கம்

9 தென்கிழக்கு ஆசிய மொழிகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ச் சொற்கள்

10 பல்லவ கிரந்த எழுத்து தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பல்வேறு தொழில்களுக்கு அடிப்படை எழுத்து வடிவமாக அமைந்தமை

என்பன முதன்மைக் கூறுகளாகக் காட்சியளிக்கும் என்றும் வருங்காலத்தில் நடைபெறக்கூடிய ஆராய்ச்சிகளால் மேலும் பல புதிய உண்மைகள் புலனாகக் கூடும் என்றும் க.த திருநாவுக்கரசு குறிப்படுகிறார் இத்தகைய தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் ஒன்றான தாய்லாந்து நாட்டிலும் உள்ளது

தாய்லாந்து நாடு தென்கிழக்கு ஆசியாவில் மலேசியா திபகற்பகத்தின் மேற்குப் பகுதியில் இருக்கும் சுதந்திர நாடாகும் இந்நாடு சாயம் என்ற பெயரால் 1939 ஆம் ஆண்டு வரை குறிப்படப்பட்டது தாய்லாந்து இரண்டு இலட்சம் சதுர கிலோ மிட்டர் பரப்பளவினையுடையது தென்கிழக்கு ஆசியாவின் பெரு நிலப்பகுதியைப் பரப்பளவாகக் கொண்ட தாய்லாந்து தெற்கே மலேசியா தீபகற்பம் வரையும் மேற்கே பர்மா வரையும் கிழக்கே லாவோஸ காம்பூச்சியோ நாடுகள் வரைக்கும் பரந்து விரிந்து பரவியுள்ளது தாய்லாந்தின் நீர்ப்பரப்பு எல்லையாக அமைந்துள்ள சாயம் வளைகுடா இந்தியப் பெருங்கடலுடனும் பசிபிக் பெருங் கடலுடனும் தொடர்பு கொண்டுள்ளது சீனதேசத்தின் யுணான் மாநிலம் தாய்லாந்தின் வடக்கே அமைந்திருக்கின்றது

**தாய்லாந்து பெயர்க் காரணம்**

தாய்கள் எனப்படும் தொல்குடி மக்கள் இந்நாட்டில் வாழ்ந்து வருவதால் தாய்களின் நாடு என்னும் பொருளில் தாய்லாந்து பெயர் வழங்கத் தொடங்கியது தாய் என்னும் சொல்லிற்கு உரிமை அல்லது அருளுணர்ச்சி எனப்பொருள் கூறுவர் தங்கள் உரிமையை நிலைநாட்டி ஓர் அரசை நிறுவியதால் அப்பழங்குடி மக்கள் தங்களைத் தாய்கள் என்று கூறிக் கொண்டனர் இதனால் அவர்கள் வாழும் நாடு தாய்லாந்து என்னும் பெயர் பெற்றது என்பர் என்கிறார் க.த திருநாவுக்கரசு இந்நாட்டில் இந்தியர்களும் தமிழர்களும் கி.பி முதலாம் நுற்றாண்டு அளவிலேயே குடியேறினர் என்பதற்குரிய சான்றுகளாகத் சான்றுகளாகத் தொல்பொருள் சின்னங்கள் பல கிடைத்துள்ளன

**தாய்லாந்தின் இந்தியப் பண்பாடு**

தாய்லாந்தின் வரலாற்றுக் காலம் நெடுக இரண்டு நாகரிக அலைகள் அதை நோக்கி விசிக் கொண்டிருந்தன என்று குறிப்படும் க.த திருநாவுக்கரசு அவற்றுள் ஒன்று சீன நாகரிகம் என்னும் அலை மற்றொன்று இந்திய நாகரிகம் என்னும் அலையாகும் சாயமிய மொழியில் சீன நாகரிகத்தின் செல்வாக்கு மிகுதி பற துறைகளின் இந்திய நாகரிகத்தின் பாதிப்பே பேரளவினதாகும் இந்திய நாகரிகத்தின் குடியேற்ற நாடு என்ற வகையில் சாயம் இந்தியாவிலிருந்து பெற்ற நாகரிகப் பண்பாடென்று ஒளிவிளக்கைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இன்னும் ஒளிவிட்டுப் பிரகாசிக்குமாறு செய்து வருகிறது என்றும் குறிப்படுகிறார் இங்ஙனம் இந்தியப் பண்பாட்டுடன் தமிழ்ப் பண்பாடும் தாய்லாந்தில் இரண்டறக் கலந்து விட்டது

**விழாக்களில் தமிழ் மந்திரங்கள்**

பல்வேறு சமஸ்கிருத மந்திரங்களைப் போற்றிப் பாதுகாத்து வரும் தாய்லாந்தினர் தமிழ் மந்திரங்களையும் அவற்றுடன் சேர்த்துக் காத்து வருகின்றனர் இவர்களின் தமிழ் மந்திரங்கள் இந்திய எழுத்துமுறை ஒன்றில் எழுதப்பட்டது என்று குவாரிட்ச் வேல்சு குறிப்படுகிறார் அம் மந்திரச் சடங்குகளைச் செய்யும் வழிமுறைகள் மட்டும் சாயமிய மொழியில் உள்ளன என்றும் குறிப்படுகிறார் (Quaritch wales Siamese State Ceremonies,p.56)சயாமிய மன்னர்களின் முடிசூட்டு விழாக்களிலும் தமிழ் மந்திரங்கள் ஓதப்பட்டதற்கான குறிப்புகளும் காணப்படுகின்றன

இவ்விழாவில் சிவனை வழிபடும் தலைமைக்குரு அரசர் அருகில் வந்து “கயிலாசத்தின் திருக்கதவுகள் திறக்கட்டும்” என்ற தமிழ் மந்திரத்தை ஓதுவதுடன் திருநாவுக்கரசரின் கூற்றாயினவாறு விலக்ககிலீர் மாணிக்கவாசகரின் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் எனும் தேவாரத் பண்புகளையும் பாடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இதற்குச் சான்று பகரும் கருத்தொன்றைத் தம் நூலில் தெரிவித்துள்ளார் அதில் கயிலை கடைதிறப்புப் பாடுவது சிவனாரை வழிபடுவதற்காக அழைப்பதாகும் பட்டாபிகத்தன்று அதனைப் பாடுவது அரசரைச் சிவனாகக் கொள்ளுவதற்குறிய அறிகுறியாகும் தாய்லாந்து அரசர் பட்டங்களில் திவ்விய தேவாவதாரம் என்பதும் ஒன்று இங்கே தமிழ்ப் பாட்டு ஒன்றை மந்திரம் என்று பாராட்டுவதைக் குறிப்பிட வேண்டும் சிவன் கோவில் பார்ப்பனருக்கு முதலிடம் தந்தையும் மறந்து விடுதலாகாது முற்காலத்தில் சைவமும் வைணவமும் நாட்டின் தலைமை பூண்டதையும் அப்போது தமிழுக்கு இருந்து மந்திரச் சிறப்பையும் இவை கொண்டு உய்த்துணரலாம் என்று அவர் குறிப்படுகிறார்

தமிழகத்தில் உழவர் திருநாள் கொண்டாடுவதைப் போல் தாய்லாந்திலும் கொண்டாடப்படுகின்றது தாய்லாந்து மக்களின் வாழ்கையில் குழந்தைக்கு முடி எடுத்தல் பெயரிடுதல் காது குத்துதல் ஆகிய சடங்குகளைச் செய்யும் பழக்கங்களும் உள்ளன விருந்தோம்பும் உயர் பண்பனையும் அவர்கள் மகிழ்வுடன் மேற்கொண்டு வருகின்றனர் ஐயமிட்டு உண் என்பார் ஔவைப் பெருமாட்டி தாய்லாந்து மக்களும் கோயில்களில் உள்ள பிச்சைக் காரர்களுக்குக் கொடுத்து உதவுவதைப் புண்ணியச் செயலாகக் கருதிச் செய்து வருகின்றனர் விழாக்களில் பரதேசிகளுக்கும் துறவிகளுக்கும் அன்னமிடுவதைப் பார்க்கமுடிகின்றது

**சமயத் துறையில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்**

தமிழகத்திலிருந்து தாய்லாந்துக்குச் சமய உறவுகள் இருந்தமைக்கான தமிழ் கல்வெட்டு ஆதாரங்களைக் கல்வெட்டியல் ஆய்வறிஞர் குறிப்படுகிறார் (Journal of oriental research vol.6,p.304)

பல்லவப் பேரரசர்களுள் இறுதியாகப் புகழுடன் திகழ்ந்த முன்றாம் நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டான அக்கல்வெட்டு

**....(5)வர்மன் கு(ணா)ாாாாாமாந்தன்**
**நாங்கூருள யா(ன்)தொட்டகுளம் பேர்சிரி**
**அவனிநாரணம் மணிக்கிரா மாந்தர்க்(கும்)**
**சேனாமுகத்தார்க்கும் பதார்க்கம் அடைக்கலம்**
(Hultzsch J.R.A.S 1913,PP.339,1914,1914&397,ff T.A Gopinath Rao,Epigraphia Indica Vol.18,pp.71&714)

என்று அமைந்துள்ளது நாரணன் என்னும் பட்டப் பெயரையுடைய முன்றாம் நந்திவர்மன் காலத்தில் பொறிக்கப்பட்ட அக்கல்வெட்டு தமிழகத்து மணிக்கிராமம் என்ற வாணிகக் குழுவினைச் சேர்ந்த வாணிகன் ஒருவன் சயாமில் உள்ள திருமால் கோயிலில் குளம் ஒன்றை வெட்டி அதற்கு அவனி நாரணன் குளம் என்று பெயரிட்டான் என்னும் செய்தியினைக் குறிப்படுகின்றது இதனால் கி.பி ஒன்பதாம் நுற்றாண்டில் தமிழ்நாட்டு வாணிகக் குழு ஒன்று சயாமில் நிலையாகத் தங்கி இருந்தமையும் அவர்கள் அங்குத் திருமாலுக்குக் கோயில் அமைத்து குளந்தொட்டு விழாவெடுத்தமையும் புலனாகின்றன கி.பி ஆறாம் நுற்றாண்டு வரை தமிழகத்தில் பெருக்கெடுத்து ஓடிய சைவ வைணவ சமயங்களாகிய பக்தி வெள்ளத்தின் ஓர் அலை அலை கடல்களுக்கு அப்பால் நெடுந்தொலைவில் உள்ள சயாம் நாட்டில் சென்று வீசியதன் விளைவாக அங்கு வைணவ சமயத்திற்குறிய திருமாலில் கோயில் தமிழ்நாட்டு வாணிகர்களாலேயே கட்டப்பட்டமை தெரியவருகிறது அக்கல்வெட்டில் சேனாமுகம் என்றொரு சொற்றொடர் காணப்படுகிறது சேனாமுகம் என்பதற்கு ஒரு படையின் முன்னணி என்பது பொதுவான பொருளாகும் எனினும் படைவீரர் தங்கியிருக்கும் இடத்திற்கு அப்பெயர் வழங்கப்பட்டது உண்டு எனவே வாணிகக் குழுக்கள் வெளிநாடு சென்ற பொழுது தற்காப்புப் படையின் துணையோடு சென்றிருக்க வேண்டும் என்பது இதனால் புலனாகிறது என்று விளக்கம் தருகிறார் க.த திருநாவுக்கரசு

இக்கல்வெட்டுகளை ஆராய்ந்த கே. ஏ நீலகண்ட சாஸதிரியார் தமிழருடைய ஆதிக்கம் பல்லர் காலத்திலேயே சயாமிற்குச் சென்று பரவக்கூடிய அளவிற்குச் சிறப்புற்று விளங்கியது என்கிறார்

தாய்லாந்தில் நடைபெறும் கோயில் வழிபாடுகள் தமிழ்நாட்டுக் கோயில் வழிபாடுகளை ஒத்திருந்தன என்று தெ.பொ மினாட்சி சுந்தரனார் குறிப்படுகிறார் காப்பு கட்டுதல் நோன்பு இருத்தல் தீபதூப ஆராதனை செய்தல் பழங்களைப் படைத்தல் மலரினைத் தூவி வழிடுதல் திருவிழா ஊர்வலம் நடத்துதல் போன்றவை கோயில் வழிபாட்டின் பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவிக்கின்றார்

**திருவூசல் திருவிழா**

தாய்லாந்தின் தேசியத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்த திருவூசல் திருவிழா தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டு வந்த இன்றும் சில பகுதிகளில் கொண்டாடப்பட்டு வருகிற உரியடித் திருவிழாவை ஒத்த திருவிழாவாகும் திருவூசல் தமிழ்நாட்டு வைணவத் திருக்கோயில்களில் இன்றும் கொண்டாடப் பட்டு வருகிறது ஊசல் எனப்படும் இத்தகைய ஊஞ்சல் திருவிழா திருவில்லிப்புத்துரில் இன்றும் கொண்டாடப்பட்டு வருவது இவண் சுட்டத்தக்கது

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைத் திருநாளில் தஞ்சை மாவட்டத்திலும் புதுக்கோட்டை மாவட்டத்திலும் உள்ள சிவன் கோயில்களில்,

திருவூசல் திருவிழா நடைபெற்று வருகிறது மாணிக்கவாசகரால் சிறப்பாகப் போற்றப்பட்ட திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோயிலில்

திருவாதிரை அன்று மாலை இறைவனையும் உமாமகேசுவரியையும் ஊஞ்சலில் அமர்த்தி திருவாசகத்தில் உள்ள திருப்பொன்னுசல் பகுதிப் பாடல்களை பாடி ஊசலிலாட்டும் சடங்கு ஒன்று செய்யப்பட்டு வருகிறது என்று க.த திருநாவுக்கரசு குறிப்படுகிறார்

**பாவைப் பாட்டு**

பாவைப் பாட்டு தைந்நிராடல் மார்கழி நோம்பு எனப்படும் விழாக்கள் தமிழகப் பெண்களால் இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றன இவை தாய்லாந்திலும் கொண்டாடப்படுகின்றன திருப்பாவை திருவெம்பாவைப் பாடல்கள் தாய்லாந்தில் இன்றும் பாடப்பட்டு வருகின்றன இவற்றில் கடைதிறப்பு என்பதும் ஒன்று திருப்பாவையிலும் திருவெம்பாவையிலும் இது இடம்பெற்றுள்ளது இவற்றைத் தாய்லாந்து மக்கள் மந்திரப் பாடலாகப் போற்றப் பாடி வருகின்றனர் மார்கழி மாதத்தில் தமிழகத்தில் பாவைப் பாடல்களைப் பாடல்களைப் பாடி வழிபடுவதைப் போன்று அங்கும் பாடி வழிபடுகின்றனர் ஆனால் தாய்லாந்து மக்கள் இப்பாடல்கள் என்ன மொழியில் உள்ளனவை என்பதை அவர்களின் மொழியிலேயே எழுதி வைத்தும் பாராயணம் செய்தும் பாடி வருவது குறிப்படத்தக்கது

தமிழர் வேதமெனக் கருதும் தேவாரம் திருவாசகம் நாலாயிரத் திவ்வியப் பரபந்தம் ஆகிய நுல்களில் இடம்பெற்றுள்ள பண்களும் பாசுரங்களும் தாய்லாந்து மக்களிடம் பாடப்பட்டு வருவது தாய்லாந்து சென்று வந்த தனிநாயகம் அடிகள் போன்ற தமிழறிஞர்களால் கண்டறிந்து கூறப்பட்டுள்ளது

நாவுக்கரசரின் “கூற்றாயினவாறு விலக்கதிலீர்” ஞானசம்பந்தரின் தோடுடைய செவியன் சுந்தரரின் பத்தா பிறைசூடி ஆகிய முதற் பதிகங்கள் திருவாசகத்திலுள்ள திருச்சதகம் திருவெம்பாவை ஆண்டாளின் திருப்பாவை ஆகியன சிறிதளவு சிதைந்த நிலையில் பாடப்பட்டு வருகின்றன

சிறுதெய்வ வழிபாடும் தாய்லாந்து மக்களிடம் இருக்கின்றன மகாமாரியம்மன் கோயிலும் அங்கு நிகழ்த்தப்படும் வழிபாடும் இதற்குச் சான்றாதாரமாகத் திகழ்கிறது மாரியம்மன் கோயிலில் வேண்டுதல் கொண்டு கரகம் ஆடுவோரையும் மலர்கள் கொய்து மாலை கட்டுவோரையும் தேவாரம் திருவாசகம் ஓதுவோரையும் கருப்பூரம் கொளுத்தி மண்டியிட்டு வணங்குவோரையும் காணும்பொழுது நாம் தமிழ்நாட்டில் தான் இருக்கிறோமா என்ற எண்ணம் உதிக்கும் என்பது அதனை நேரில் கண்ட தமிழர் ஒருவரின் உணர்ச்சிமிகு கருத்தாகும் என்பது க.த திருநாவுக்கரசுவின் கருத்தாகும்

தமிழ்நாட்டில் சிவன் விநாயகர் ஆகிய கடவுளுக்கு மட்டும் சூட்டப்படும் எருக்கம்பூ தாய்லாந்து நாட்டின் தேசிய மலராக இருப்பதுடன் எல்லோராலும் விரும்பப்படும் மலராகவும் இருக்கிறது நன்னிகழ்ச்சிகளில் எல்லோராலும் அணியப்படும் தகுதியினையும் அது பெற்றிருக்கிறது

பொங்கலுக்கு முந்தைய நாளில் பழைய பொருட்களை எரித்து அழிக்கும் போகிக் கொளுத்துதல் தமிழ்நாட்டில் இன்றும் உள்ளது இதே வழக்கு ஸோங்ரான் பண்டிகைக்கு முன் அங்கும் செய்யப்படுகிறது

தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் தனித்ததொரு சிறப்பையுடைய தாய்லாந்து வோளாண்மையை நம்பி வாழும் நாடு தொல்பழங்காலத்திலேயே நெல்லினைப் பயிரிடும் முறையினைக் கற்றிருந்த நாடுகளுள் ஒன்று எனும் சிறப்பனையும் உடைய நாடு இங்கு கலைகள் பலவும் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தன சிவன் திருமால் சிற்பங்கள் தமிழகச் சிற்பங்களை ஒத்த நிலையில் அங்கும் உள்ளன கூடவே இராமாயணச் சிற்பங்களும் உள்ளன காஞ்சிப் பட்டைப் போன்று அங்கும் பட்டு நெசவு செய்யப்படுகின்றது

தமிழ் இலக்கிய வடிவங்கள் பலவும் தாய்லாந்தில் காணப்படுகின்றன இராமாயணம் பல்வேறு வடிவங்களில் தாய்லாந்தில் இருக்கின்றது இங்கு இராமன் பெரிதாகப் பேசப்பட அங்கு இலக்குவன் தியாகசிலனாகப் போற்றப்படக் கூடிய மரபு உள்ளது இவை தவிர நாட்டுப்பாடல் வடிவங்களும் இசைப் பாடல்களும் பாடப்படும் வழக்கமும் அங்கு உள்ளது

தாய்லாந்து மொழியில் ஐந்நுறுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இன்றும் உள்ளன. அவை தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்பை நிறுவுவதற்குத் தக்க ஆதாரங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

வேளா எனும் சொல் “வேளை” எனும் பொருளிலும், பார்வே எனும் சொல் “துக்கு” எனும் பொருளிலும், மாங்க் எனும் சொல் “மாங்காய்” எனும் பொருளிலும் வழக்கில் உள்ளன மேலும் காருணா எனும் சொல் “கருணை” எனும் பொருளிலும் நகான் எனும் சொல் “நகரம்” எனும் பொருளிலும் பட்டோம் எனும் சொல் “பட்டணம்” எனும் பொருளிலும் கோங்க் எனும் சொல் “கங்கை” எனும் பொருளிலும் சிந்தனா எனும் சொல் “சிந்தனை” எனும் பொருளிலும் தம்மசாட் எனும் சொல் “தருமசத்திரம்” எனும் பொருளிலும் ராஜ் எனும் சொல் “ராஜா” எனும் பொருளில் அதே வடிவத்தில் “ராணி” என்றே வழக்கில் இருக்கிறது இவை போன்ற பல்வேறு சொற்கள் அப்படியேயும் சிறிது திரிந்தும் வழக்கிலுள்ளதை அறிஞர் பெருமக்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்

தாய்லாந்து நாட்டின் சமுகப் பழக்க வழக்கப் பண்பாட்டுத் தளங்களில் எங்கு பார்த்தாலும் இந்தியப் பண்பாடும் அதில் குறிப்பட்டுச் சொல்லத்தக்க தமிழ்ப் பண்பாடும் பெரியதோர் நிலையில் நிக்கமற நிறைந்திருக்கிறது பன்னெடுங் காலங்களுக்கு முன்பே சென்ற தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் நாகரிகத்தையும் தமிழ் இலக்கிய வடிவங்களையும் பல தலைமுறைகளும் அப்பாலும் இவையெல்லாம் தமிழ் சார்ந்தவை என்று அறியப்படாத நிலையிலும் அவர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதும் தமிழ்ச் சொற்களைக் கிட்டத்தட்ட அதே வடிவங்களில் அவர்களுடைய மொழியில் சேர்த்துப் பேசி வருவதும் பெரிதும் போற்றத்தக்கது

# சி.ஆர்.ரவீந்திரனின் "மணியபேராவில்" கர்ணப் பரம்பரைக் கதைகள் கூறும் வாழ்வியல் சிந்தனைகள்

கர்ணம் - காது (அ) செவி. பரம்பரைப் பரம்பரையாக் செவிவழியாகச் சொல்லப்படுகின்ற கதைகள் "கர்ணப்பரம்பரைக் கதைகள்" இக்கதைகள் அந்தந்த சமூகத்திற்கு ஏற்ப "மக்களின் பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் முறை முதலிய பலவற்றையும் உள்ளடக்கியதாகக் திகழ்கின்றது. படைப்பாளரின் இப்புதினம் இருளர்களைப் பற்றியது என்பதால் இக்கர்ணப்பரம்பரைக் கதைகள் இச்சமூகத்திற்கென்றே சொல்லப்பட்டு வருகின்ற வாழ்வியல் நெறிகளை உள்ளடக்கியதாகக் காணமுடிகிறது. இக்கதைகள் கோயமுத்தூரை ஒட்டிய ஆனைகட்டி முதல் மன்னார்க்காடு வரையிலான மலைக்கிராமங்களில் வழங்கப்பெறும் கதைகள் என்பது குறிப்படத்தக்கது. அவ்வகையில் "இக்கர்ணப் பரம்பரைக் கதைகள்" மூலம் கூறவிழையும் வாழ்வியல் முறைகளை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**பெ.அசோகன்,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்),
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்.

**கதைகள்**

1. சாத்தன் கூறும் கதைகள்
2. நஞ்சிப்பாட்டி கூறும் கதை
3. மூக்கம்மா கூறும் கதை
4. வள்ளி கூறும் கதை

எனும் வகைபாடுகளின் கீழ் கர்ணப்பரம்பரைக் கதைகளை வகைபடுத்தி இருளர்களிடம் பரவி வரும் கதைகளை அறிய முடிகிறது.

**சாத்தன் கூறும் கதைகள்**

இப்புதினத்தின் கதைத் தலைவனான சாத்தன் பல கர்ணப் பரம்பரைக் கதைகளையும் கூறுகின்றார். அவற்றில் மணியபேரா கதை; ஒடியன்கள் கதை; கரடி கதை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**மணியபேரா கதை**

"மணியபேரா" என்பவன் பொருசங்காடு என்னும் பதியில் வாழ்ந்து வருகிறான். இவன் "சம்பெ" எனும் குலத்தைச் சார்ந்தவன். வேட்டையில் மிகவும் கெட்டிக்காரனாகத் திகழ்கின்றான். காட்டிற்குள் வேட்டையாட சென்று விட்டால் வெறுங்கையோடு ஒருநாளும் திரும்ப வராத பலசாலியாக இருக்கும் இவன் ஒரு நாள் ஆட்டு மலை என்னும் மலைக்கு மான் வேட்டையாடச் செல்கின்றான். வெடி வைத்து மானையும் படித்துவிடுகின்றான். இந்நிலையில் இருட்டு கட்டிவிடவே காட்டிலிருந்து இறங்கி ஊருக்குள் செல்வதில் சற்று சிரமம் இருக்க, அங்கேயே உள்ள குகை ஒன்றில் தங்குகின்றான். சுள்ளியை அள்ளி வந்து சிக்கி முக்கிக்

கல்லால் நெருப்பனைப் பற்றவைத்து அமர்ந்த போது அங்குள்ள பொந்தில் யாரோ இருப்பது போல் தோன்ற அருகில் சென்று பார்க்கின்றான். அங்கு நின்றிருப்பது நெட்டொடியன் என்பதை அறிகிறான். உடனே அவன் அவனிடம் இருந்த சூரிக் கத்தியால் குத்தி கொன்று விட்டு, அவனை தூரம் தூக்கி எறிகிறான். பின்னர் மானை அங்கேயே உறித்து கறிசெய்து சாப்படுகின்றான். அடுத்த நாளும் வேட்டைக்கு செல்லுகின்றான். அப்போது வேட்டைக்காக மறைந்திருந்த போது பொருசங்காட்டுக்கு அருகில் "பொரே" என்னும் கருவியில் சத்தம் வர, என்னவோ, ஏதோவென நினைத்து வேகமாக இரவோடு இரவாக ஊர் வந்து சேருகின்றான். வந்துப் பார்க்கும் போது "இருளப் பொண்ணுக கொகாலு, பொரே, தவுலுன்னு கழுத்துலயும், இடுப்புலையும் கட்டிட்டு கொட்டு முழக்கு போட்டுட்டு ஆடறாளுக. மணிய பேராவுக்குக் கோபமுன்னா கோபம்! ஏலே, பொண்டுகளா, நான் வேட்டையாடறதெ ஏங் கெடுத்தீங்கண்ணு" கேட்டுட்டு சண்டை போட்டான். ஆம்பளைக வாத்தியங்களெ எடுத்துக் கட்டிட்டு திமிரு பண்ணரீங்களாண்ணான். அப்பறம் அவஞ்சாபத்துல ஊரே அழிஞ்சு போச்சு. மணியபேராவும் ஒரு நாளு செத்துப் போனான். இருளச்சனங்க நாம அவனுக்கு கோயிலு கட்டிக் கொண்டாடறோம். மணியபேரா சாமியாகிப் போனான். அவன்தான் காடு வனாந்தரம் எல்லாம் சுத்தி சுத்தி காவலிருக்கிறான். மிருகச் சாதிக நம்மளெ அண்டாமப் பாத்துக்கிறான்" (424) என்று சாத்தன் கூறும் இம்மணியபேரா கதையானது "விளையாட்டு வினையாக மாறிவிடவும் செய்துவிடும் என்பதும், பெண்கள் பண்பாடோடு நடக்காத சூழலில் ஊரே அழியக் கூடும் என்னும் பொருண்மையும்" தாங்கியதாக இக்கர்ணப் பரம்பரைக் கதை வழங்கி வருவது அறிய முடிகிறது.

**ஒடியன்கள் கதை:**

ஒடியன்கள் மந்திரக்காரர்கள், தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொள்ளும் வல்லமையும் கொண்டவர்கள். இவர்கள் தலைப்பிரசவமாகப் போகின்ற கருத்தரித்தவளைக் கண்டு அவளுடைய வீட்டை மூன்று முறை வலம் வந்து அப்பெண்ணின் வயிற்றில் உள்ள குழந்தையை அல்லது கருவை எடுத்துச் சென்று பிள்ளைத் தைலம் பிளிந்து எண்ணெயாக்கி வைத்துக் கொள்வார்கள். இவர்கள் மலைக்கு அப்பால் வாழ்பவர்கள். இவ் விவரங்களையெல்லாம் அறிந்தவன் சாத்தன். இந்த ஒடியனைப் பற்றிய கதையை "பொன்னி" என்பவளிடம் சாத்தன் கூறுகின்றான்.

ஒரு குடும்பம் மலைமேல் தனியாக குடிசை கட்டி வாழ்கின்றனர். அவர்களுக்கு மூன்று வயதில் ஒரு குழந்தையும், 3 மாதத்தில் ஒரு குழந்தையும் இருக்கின்றது. ஒருநாள் அவளுடைய கணவன் கவுண்டர் வீட்டிற்கு சென்று வருவதாகக் கூறிச் செல்கின்றான். சற்று நேரத்தில் குழந்தை "அப்பா கூ கூ" என்று சத்தம் போட, இதோ வாறேன்" என்று ஒடியன் அப்பெண்ணின் கணவன் உருவத்தில் வருகின்றான்.

"உறுமுளி" என்று அழைக்கப்படும் "நாகிறிஞ்சி" விதையை அரைச் சாக்கு உருவி எடுத்து வருகின்றான். இதை மனிதர்கள் உட்கொள்ளக் கூடாது. பார்ப்பதற்கு "கொள்ளு" போல் இருக்கும். அதை கொள்ளு என்றே நினைக்கிறாள் இருளச்சி. இந்நிலையில் ஒடியன் அதை தீயிட்டு வறுத்து அவளிடம் கொடுத்து இடித்து எடுத்து வருமாறு கூற, அவள் தொட்டியில் படுத்திருக்கும் குழந்தையை அங்கேயே தூங்கவிட்டு, 3 வயது பிள்ளையுடன் வெளியே சென்று உரலில் இடித்துக் கொண்டிருக்கிறாள். இந்நிலையில் ஒடியன், தொட்டிலில் படுத்திருந்த குழந்தையின் தலையைத் திருகி எடுத்துவிட்டு, கால், கைகளை தனியாகப் பய்த்து எடுத்து அடுப்பல் வேக வைக்கிறான். உள்ளே வந்து பார்த்தவள் தன் கணவன் இவன் இல்லை என்பதையும், இவன் ஒடியன் என்பதையும் உறுதி செய்கிறாள். இருளும் சூழ்ந்து விடுகிறது.

பிள்ளைக்கு மலம் வருகிறது என்று கூற, ஒடியன் தலைவாசலில் அமர வை என்று கூறுகின்றான். உடனே இவள் என் தந்தை உண்ணும் இடத்தில் எப்படி மலம் கழிக்க வைப்பது என்று கூறிவிட்டு, எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியே வருகிறாள். அதை மரத்தில் ஊன்றி விட்டு தன் தந்தையின் ஊருக்கு இரவோடு இரவாக சென்றடைகின்றாள். நடந்ததைக் கூற அனைவரும் புறப்பட்டு வருகின்றனர்.

வந்து பார்த்த போது குடிசையில ஒடியன் நல்லாத் தின்னுட்டு தூங்கீட்டு கெடக்கறான். அப்படியே அவிய கதவெ இழுத்துச் சாத்தறாங்க. சிக்கி முக்கிக் கல்லெடுத்து ஒரசித் தீயெ வெச்சுக் கொளுத்தறாங்க! குடிசையே கருகி சாம்பலாப் போச்சு! (ப.406) என்று கூறுகின்றான்.

பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் பாதுகாப்போடும், எச்சரிக்கையோடும் இல்லாவிட்டால் ஒடியன்கள் பிள்ளைகளைக் கொன்று விடுவர் என்பதை அறிவுறுத்துவதாக இக்கதை வழங்கி வருகின்றது.

**கரடி கதை:**

ஒரு இருளனுக்கு ஏழு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் அறுவர் ஆண்மக்கள். ஒருத்தி பெண். ஆறு ஆண்களும் திருமணம் செய்து கொள்கின்றனர். இவளுக்கு மட்டும் திருமணம் ஆகவில்லை. இப்பெண்ணை அண்ணன்களின் ஆறு மனைவியரும் கொடுமைப்படுத்துகின்றனர்.

ஒருநாள் ஆறு பெண்களும் சேர்ந்து கொண்டு நாகப்பழம் பறிக்க அவளை காட்டுக்குள் அழைத்துச் செல்கின்றனர். ஆறு பெண்களும் நாகப்பழங்களைப் பொறுக்கி கொண்டு, அவளை மட்டும் காட்டிலேயே விட்டுவிட்டு வந்து விடுகின்றனர். பசியால் வருந்திய அப்பெண் மரத்தின் மீது அமர்ந்திருந்த கரடியிடம் பழங்களை கொஞ்சம் உலுக்கிவிடு என்று கூறுகின்றாள். ஆனால் கரடி அமைதியாகவே இருக்கிறது. நானு ஒனக்குக் கொழுந்தியாளா இருக்கறே. கிளையெ உலுக்குன்னு அப்பவும் கரடி கிளைய உலுக்குல. அப்புறஞ் சொன்னாளாம் அவ, நான் ஒன்ர சொந்தப் பொண்டாட்டியா இருக்கறே, கிளையெ உலுக்குன்னு சளசளன்னு கிளையெக் கரடி ஆட்டப் பொலபொலன்னு பழம் உழுந்துதாம். அவ, பழத்தெப் பொறுக்கையில கரடி அவளெத் தூக்கிட்டு மலெப் பொந்துக்குள்ளெ

போயிச்சாம் (ப.336) பிறகு, அதனோடு குடும்பம் நடத்தி கரடிப் பிள்ளைகளையும் பெற்றெடுக்கின்றாள். ஆனால் இந்நிகழ்வுகள் எதுவும் அவளுடைய சகோதரர்களுக்குத் தெரியாது இந்நிலையில்,

ஒருநாள் அவளுடைய சகோதரர்கள் காட்டுப் பக்கமாக வர, அங்கு ஒரு தூளியில் குழந்தை படுத்துக்கிடப்பதைப் பார்க்கின்றனர். மேலும், அவர்களுடைய சகோதரியையும் பார்க்கின்றனர். நடந்ததைக் கூறுகின்றாள். அப்போது அவளுடைய கணவனான கரடி வரவே தன் சகோதரர்களை மறைந்து கொள்ளுமாறு கூறி, கணவனிடம் அவர்களை எதுவும் செய்யக்கூடாது என சத்தியமும் வாங்கி, அவர்களை வெளிவரச் சொல்லுகின்றாள். மச்சினன்களைக் கண்ட கரடி அவர்களுக்கு வயிறு நிறைய தேன் எடுத்து வந்து தருகிறது.சாப்பட்ட பிறகு வெற்றிலை பாக்கு போட்ட மச்சினன்களைக் கண்ட, கரடி தனக்கும் வாய் சிவக்க வெற்றிலை வேண்டும் என்று கேட்கிறது. அதற்கு அவர்கள் வாய் செவக்க வெத்தல போட, உன்னோட நாலு கலையுங்கட்டிப் போடோனு அப்புடீன்னு அண்ணன்மாருக சொல்ல அப்புடியே செய்யுங்கன்னு கரடி சொல்லா (ப.336) அதனை கட்டிப் போட்டு இரும்பைக் காய்ச்சி அதன் வாயில் இழுக்க வலி தாங்க முடியாமல் கத்திக்கொண்டே இறந்து விடுகிறது. பன்னர் அவளுடைய சகோதரர்கள் அவள் பெற்ற கரடிக் குட்டிகளையெல்லாம் கொன்று விடுகின்றனர். ஆனால் ஒன்று மட்டும் தப்பித்து விடுகிறது. தப்பித்த அக்கரடி மாமா நான் பழிவாங்குவேன்னு (ப.336) சொல்லி விட்டு தப்பத்து விடுகிறது. அன்றிலிருந்து கரடிகளுக்கு மனிதர்களைக் கண்டால் படிக்காது. கொல்ல வரும்? என்று கரடிகள் மனிதர்களைக் கொல்வதற்குக் காரணமான கதையைக் கூறுகின்றான் சாத்தன்.

**நஞ்சிப்பாட்டி கூறும் கதை:**

பொன்னி நஞ்சிப்பாட்டி கூறிய கதையை நினைவுப்படுத்தி பார்ப்பதாக இக்கதை அமைந்துள்ளது. அந்தக் கிராமத்தில் ஒரு கணவனும், மனைவியும் வாழ்ந்து வருகின்றனர். அவ்விருவரும் சிறந்த உழைப்பாளிகள். அவளுடைய கணவன் தினமும் மாடுகளை மேய்த்துச் சென்று படித்து வருவான். பார்ப்பவர்கள் வியக்கும் அளவிற்கு பால் கரந்து அந்த ஊரில் உள்ள குழந்தைகளுக்கு எல்லாம் தருவான். அவளும் கெட்டிக்காரி.

ஒரு நாள் ஒருகால் பணத்தை எடுத்து வந்து தருகின்றான். அவள் இப்பணம் ஏது என்று கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. மறு நாளும் இதேபோல் எடுத்து வந்து தருகின்றான். அப்போதும் அவனும் இப்பணம் எப்படி வந்தது என்று கூறவும் இல்லை. இவளும் கேட்கவில்லை இவ்வாறு தினந்தோறும் கால்பணம் எடுத்து வந்து கொடுக்க இவளுக்கு சந்தேகம் ஏற்படுகின்றது.

மறுநாள் அவனுக்குத் தெரியாமல், அவனைப் பின் தொடர்ந்து செல்கின்றாள். மாடுகள் பச்சை கண்ட இடங்களில் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்க, அந்த இருளின் குகை ஒன்றினுள் செல்கின்றான். இவளும் அக்குகைக்குள் செல்ல கால் வைக்க, குகைத் தானாக மூடிவிடுகிறது. அதன் பின்னர், தன் கணவன் வருவான் என்று காத்திருக்கிறாள். ஆனால் வரவேயில்லை. செய்வதறியாமல் மாடு கன்றுகளை வீட்டிற்கு ஓட்டி வந்து விடுகின்றாள். இருளன் குகைக்குள்ளெ போனவன், போனவன்தான், செத்தானா, பொழைச்சானான்னு ஒண்ணும் தெரியலெ! இருளெ, திரும்ப வரவெ இல்லெ! (ப.48) என்று கதை முடிகிறது.

சந்தேகித்து பின் தொடர்ந்து சென்ற நிலையில் காணாமல் போகும் கணவன் பற்றிய கதை ஒரு மாயமந்திரக் கதையமைப்பை ஒட்டிய வகையில் வழங்கி வருவதை அறிய முடிகின்றது.

**மூக்கம்மா கூறும் கதை:**

வாளையாறு ஆற்றிற்கு வாளையாறு பெயர் வந்த காரணத்தைக் கூறுவதாக இக்கதை அமைந்துள்ளது. கிழக்குப் பகுதியை ஒரு ராசா ஆண்டுக்கொண்டிருந்த தருணத்தில் இப்பகுதியையும் ஒரு ராசா ஆண்டு வருகின்றான். அவனுக்கு இரண்டு ராணியர். முதல் ராணிக்கு இரண்டு பெண்களும், இரண்டாவது ராணிக்கு ஒரு பையனும் பிறக்கின்றனர். அவர்களும் வளர்ந்து ஆளாகி பெரியவர்களாகிய சூழலில் திருமணத்திற்கு ஆளனுப்புகின்றனர் பக்கத்து தேச அரசர்கள். ஆனால் இவர் ஒத்துக் கொள்ளவில்லை. இந்நிலையில் வெகுண்டெழுந்தகிழக்குப் பகுதி ராசா போர்த்தெடுகின்றான்.

இரண்டு ராசாக்களும் சண்டை போட பலரும் செத்து மடிகின்றனர். இறுதியில் கிழக்குப் பகுதியை ஆண்ட ராசா வெற்றி பெறுகின்றான். இந்நிலையில் சமாதானமாக சென்று விடலாம் என்று கிழக்குப் பகுதி ராசாவே கூற அவரும் போயரலாமுண்ணு சொல்லிப் பொண்ணு குடுக்கச் சம்மதமுண்ணுஞ் சொல்லறாரு! அப்பறந்தான் எல்லாருமா சண்டெக் கட்டறதெ நிறுத்திப்போட்டு கையிலிருந்த வாளுக் கேடயத்தையெல்லாம் கழுவறாங்க. ரத்தமுன்ன ரத்தம் அத்தனெ ரத்தம். தண்ணியெல்லாம் ரத்தமாய் போச்சு அப்பவெச்ச, பேரு வளையாறு. வாளெக் கழுவுன ஆறு வாளையாறு (ப.72) என்று கூறுகின்றாள்.

இக்கதை வரலாற்றுக் கதையாக வழங்கி வருகின்றது. இக்கதையின் பொருண்மை மறுக்க முடியாத அளவிற்கு மெய்ம்மைத் தன்மை உடையதாகத் தோன்றுகிறது என்றே கூறலாம்.

கதைகள் என்பவை மனித சமூகத்திற்கு பாடம் கற்பிக்கும் வகையிலேயே நம் முன்னோர் படைத்திருந்தனர். அவ்வகையில் மணியபேராவில் கூறப்படும் இக்கதைகள் அச்சமூகத்தில் வாழும் மக்களின் மனோநிலையை வெளிப்படுத்தி பண்பாட்டையும், வாழ்வியல் முறையையும் சிந்திக்கச் செய்கிறது. சாத்தன் கூறும் மணியபேரா, ஒடியன், கரடி கதைகள், இருளர் சமூகத்தில் காணப்படும் பண்பாடு மற்றும் நம்பக்கை கூறுகளை வெளிப்படுத்தியும், நஞ்சிப்பாட்டி கூறும் கதை இல்லறக் கட்டுக்கோப்பல் மனைவியின் சந்தேகத்தால் நிகழ்ந்த விபரீதத்தையும், மூக்கம்மா கூறும் வாளையாறு வரலாற்று அடிப்படையில் செவிவழியாக சொல்லப்படும் கதையாயகவும் வழங்கி வருவதை அறிய முடிகிறது.

# சு. சமுத்திரத்தின் புதினங்களில் புரட்சிப் பெண்பாத்திரங்கள்

**தா. பேகம்,**
விரிவுரையாளர் (தமிழ்),
அரசு கலைக்கல்லூரி (ஆடவர்),
கிருட்டினகிரி.

பெண் என்பவள் சக்தியின் வடிவம். இயற்கையிலேயே ஆணுக்கு நிகரான பலமுடையவளாகவே படைக்கப்பட்டுள்ளாள். வீரத்தின் அடையாளமாய் ஆணும், உணர்ச்சியின் வடிவமாய் பெண்ணும் படைக்கப்பட்டாள். உடல் பலம் பெற்றவன் ஆணாயின், மனோபலம் பெற்றவள் பெண், எனினும் இன்றும் சமூகத்தில் பெண் என்பவள் ஆணின் காப்பல் இருக்க வேண்டியவள் என்ற சூழலே நிலவுகிறது. இத்தகைய காப்பனை உடைத்தெறித்து முற்போக்குச் சிந்தனையை வளர்த்தும் சமூக அக்கறையும், தன்மானச் செறுக்கும் மிக்கவர்களாகத் திகழ்தல் வேண்டும். அவ்வகையில் படைப்பாளரின் படைப்புகளில் படைக்கப்பட்ட மென்மைத் தன்மையுடைய பெண்கள், சூழ்நிலையை எதிர்கொண்டு புரட்சிப்பெண்களாக எங்ஙனம் புடம் போடப்படுகின்றனர் என்பதை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**பெண் பாத்திரங்கள்**

சு.சமுத்திரத்தின் ஒரு கோட்டுக்கு வெளியே, இல்லம் தோறும் இதயங்கள், சாமியாடிகள் என்னும் புதினங்கள் முறையே படைக்கப்பட்ட பெண் தலைமைப் பாத்திரங்களான உலகம்மை, மணிமேகலை, கோலவடிவு ஆகிய பெண்பாத்திரங்கள் மட்டும் இவ்ஆய்வுக் கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

**உலகம்மை:**

ஒரு கோட்டுக்கு வெளியே என்னும் புதினத்தின் கதைத் தலைவி உலகம்மை. மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். கிடைக்கின்ற கூலி வேலைகளுக்குச் சென்று தன் தந்தையோடு வாழ்வியலை மேற்கொண்டு வாழ்கிறாள். இவளுடைய வறுமையின் உச்சத்தை ஆசிரியர் அவளுக்கு இரண்டே இரண்டு புடவைகள்தான். ஒரே ஒரு ஜாக்கெட் புடவைக்கு ஷிப்ட் டூட்டி ஜாக்கெட் மார்க்கண்டேயர் (ப.127) என்று குறிப்பிடுவதிலிருந்து அறிய முடிகிறது. அழகும், இளமையும், அதைவிட வறுமையும் அதிகமாகக் கொண்டவளாக இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

மாயாண்டி, பனைமரம் ஏறும்போது கால்தவறி கீழே விழுகின்றார். அதனால் மாயாண்டி மாரிமுத்து நாடாரிடம் ஐம்பது ரூபாய் கடன் வாங்குகிறார். வட்டி கட்டவும் முடியாத சூழலில் முழுத்தொகையும் தரவேண்டும் என மாரிமுத்து நாடார் கட்டளையிட, முடியாமல் போனதால் அவ்வூர் வழக்கப்படி மாயாண்டியை கோட்டுக்குள் நிறுத்துகின்றார். செய்தியறிந்த உலகம்மை ஊர் மக்களிடம் நியாயம் கோருகிறாள். ஆனால் பலனில்லை.

**கோப ரூபயானாள்:**

கூலி வேலைக்குப் போவதைத் தவிர, எதுவும் தெரியாத உலகம்மை அடிமை நிலையிலிருந்து முதல் கட்டமாக தன் தந்தையை கோட்டுக்குள் சிறைபடுத்திய மாரிமுத்து நாடார் மீது காவல் துறையிடம் புகார் மனு கொடுக்கிறாள். சட்டம் பணப்பையில் அடங்கிவிட, மேலதிகாரியிடம் புகார் செய்கிறாள். நீதியை நிலை நாட்டி கோட்டுக்குள்ளிருந்து தந்தையை வெளியேற்றுகிறாள்.

**கட்டுப்பாடுகளை உடைத்தெறிகிறாள்:**

இவளுடைய செயல்பாடு வசதிபடைத்த மாரிமுத்து நாடாருக்கு சபதமிட அவளை ஊரை விட்டே ஒதுக்கி வைக்கின்றார். ஊருக்குள் நடக்கவும் அனுமதி மறுக்கப்படுகிறது. தன்னிலை தாழாமையே மானம் என்னும் வைராக்கிய வரிகளின் அடிநாதம் ஒலிக்கவே மனதைத் திடப்படுத்துகிறாள்.

அருகிலுள்ள ஊர்களுக்கு வேலைக்குச் சென்று தந்தையைக் காப்பாற்ற முடிவுசெய்கிறாள். அவளுடைய ஊரை விட்டு வெளியே செல்லாதவள் வாழ்வாதாரத்திற்காக, தன்மானச் செருக்கால் யாரிடமும் தலைவணங்காமல் புறப்பட்டவளை, ஊர்க்கட்டுப்பாடு மேலும் நெருக்கடி கொடுத்து, அவளை அவள் வீட்டின் நான்கு சுவருக்குள் அடைக்கிறது.

**தந்தை இறப்பு**

இந்நிலையில் தந்தை இறக்கிறார். ஊராரின் நெருக்கடியால்தான் தன் தந்தை இறந்தார் என்பதை உணர்ந்தவள் எரிமலையாய் வெடித்து நிற்கிறாள். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள மாரிமுத்து நாடார் திட்டமிடுகிறார். இப்போதாவது செய்த தவறை எண்ணி காலில் விழுந்து மன்னிப்பு கேட்டால் மன்னித்து விடுவதாகக் கூறுகின்றார். ஆனால், உலகம்மை வெளியே வந்ததும், கூட்டத்தை ஒரு தடவை இளக்காரமாக ஏறிட்டுப் பார்த்துவிட்டு, கட்டில் சட்டத்தின் மத்தியப் பகுதியை, ஓரடி இடைவெளியில் இரண்டு கைகளாலும் படித்துத் தூக்கி, முதுகில் சாய்வாக வைத்துக்கொண்டு நடந்தாள். முதுகுப்பக்கம் தொட்டிலைக் கட்டி அதில் குழந்தையை வைத்துச் செல்லும் மலைஜாதிப் பெண்போல், அய்யாவைக் கட்டிக் கொண்டிருந்த அந்த கட்டிலை, அனாவசியமாகவும் அலட்சியமாகவும் தூக்கிக் கொண்டு (ப.184) போகிறாள். தந்தை இறந்த பறகு ஆண் தான் சுமக்க வேண்டும் என்ற நியதியை உடைத்தெறிகிறாள் பெண்ணாக இருந்தவள் புரட்சியாளியாக மாறுகிறாள்.

**புரட்சிப் பெண்ணானாள்:**

இச்சூழலில் மனிதநேயத்துடன் இறந்த சடலத்தை தூக்க முன் வருகின்றனர் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள். தடுக்கின்றனர் உயர் சமூக மக்கள். இந்நிலையில் மேல்ஜாதிகளின் மானத்தைக் காப்பதற்காக, ஒவ்வொருவரும் தத்தம் தன்மானத்தை இழக்கத் தயாராக இருப்பது போல் உலகம்மையைப் பாரத்துக் கண்களால் கெஞ்சினார்கள் (ப.194) ஆனால் உலகம்மை மேல்ஜாதியில் அடிமையாய் வாழ்வதை விட கீழ்ஜாதியில் மனுஷியாய் வாழ்வதே சிறந்ததென்று எண்ணியவளாய், ஊராரை நோக்கி என்னைப்பத்திக் கவலப்படாம ஒங்களப்பத்தி மட்டுமே கவலப்படுங்க. நான் மேல்ஜாதியில செத்து, கீழ்ஜாதியில பழச்சிக்கிட்ட பொம்பள! (ப.195) என்று கூறியவாறு பாரதிகண்ட புரட்சிப் பெண்ணாய் சாதிகளை உடைத்தெறிந்த தீப்பொறியாய் நடக்கலானாள்.

**மணிமேகலை:**

இல்லம் தோறும் இதயங்கள் என்னும் புதினத்தின் கதைத் தலைவி மணிமேகலை. இவளுக்கு திருமணம் முடிந்து ஒரு ஆண்குழந்தையும் இருக்கிறது. செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவள். பிறந்த வீட்டாலும், புகுந்த வீட்டாலும் போற்றப்படும் அளவிற்கு நற்குணம் படைத்தவளாய் வாழ்கின்றாள்.

**வெண்புள்ளி:**

இந்நிலையில் காதோரம் வந்த வெண்புள்ளி ஒன்றினால் பிறந்த, புகுந்த வீட்டாரால் தள்ளிவைக்கப்படுகிறாள். கணவனால் ஒதுக்கி வைக்கப்படுகின்றாள். நிலைமை தலைகீழாக மாறுகிறது. பெற்ற பிள்ளையையும் கையில் தூக்க மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

**வீட்டை விட்டு வெளியேறுகிறாள்:**

கணவன், குழந்தை, மாமனார், மாமியார், மச்சினன் என்று அனைவரிடமும் அன்பு பாராட்டி, விட்டுக்கொடுத்து வாழ்ந்த இவளின் வாழ்க்கையும், விட்டுக் கொடுத்தாக வேண்டிய சூழல் ஏற்படுகிறது. கணவனான ஜெயராஜ் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் மனோநிலைக்குத் தள்ளப்பட்டதை அறிந்தவள் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். நண்பரின் உதவியால் ஒருவர் வீட்டில் வேலைக்காரியாக பணிபுரிகிறாள். இந்நிலையில் தன்னுடைய கணவன் புதிதாகத் திருமணம் செய்து கொண்ட பெண்ணோடு மகிழ்வுடன் காரிலிருந்து இறங்குவதைப் பார்க்கிறாள்.

**மனமாற்றம்:**

எந்தத் தவறும் செய்யாத தான் ஏன் இதற்காகக் கவலைப்பட வேண்டும் என்று மனதைத் திடப்படுத்துகிறாள். பின்னர் காப்பகம் ஒன்றில் அடைக்கலமாகிறாள். அடைக்கலமானவள் அனைவரையும் அடைகாக்கும் பொறுப்பை ஏற்கிறாள். சூழல் அவளை பலவாறு சோதனை செய்கிறது.

நிதி நெருக்கடியால் தொடர்ந்து காப்பகத்தை நடத்த முடியாத சூழல் ஏற்படுகிறது. ஒரு நேர உணவுக்கும் தடுமாறுகின்றனர். அப்போது, செய்வதறியாது, கழுத்தைத் தடவிய மணிமேகலை, தன்

ஏழு பவுன் தங்கத் தாலியைப் பிடித்தாள். சந்தோஷம் தாங்காமல் தரையை மிதித்தாள். இதை விற்று இன்னும் ஒரு மாதத்தை எப்படியும் ஓட்டிவிடலாம் (ப.214) என்று மற்றவரை வாழ வைக்கும் தகுதி படைத்தவளாய் பரிணமிக்கின்றாள்.

இந்தத் தாலியைக் கட்டியவனே தனக்கு இல்லாமல் போனபோது ஏழு பவுன் தாலிக்காக அவனிடம் விட்டுவைத்திருந்த அறுபது பவுன் நகை ஏன் இருக்க வேண்டும்? அதோடு அவனிடம் ஜீவனாம்சம் ஏன் கேட்கக் கூடாது? சகோதரர்கள் அனுபவிக்கும் நிலத்தை ஏன் பரிக்கக் கூடாது? எதற்காக, விட்டுப்போன உறவை ஒரேயடியாய் விட்டுவிடக் கூடாது (ப.214) என்ற வினாக்களுக்கெல்லாம் விடையைத் தேடிச் செல்கிறாள்.

**புரட்சிப் பெண்ணானாள்:**

குடும்பம் என்ற ஒன்றைத் தவிர வேறு எதுவும் தெரியாத பெண்ணாக வாழ்ந்தவள் பலகுடும்பங்களையும் சுமக்கும் சுமைதாங்கியாக மாறுகிறாள். படிக்காதவனுக்கு மனைவியாக வாழ்வதை விட, பெற்றவனுக்கு பிள்ளையாக இறுதிவரை வாழ்கிறாள். இழந்த அனைத்தையும் திரும்பப் பெறுகிறாள். இல்லறத்தை துறக்கிறாள். ஆயிரம் பேர் அவளை அம்மா என்று அழைக்கிறார்கள்.

**கோலவடிவு**

“சாமியாடிகள்” என்னும் புதினத்தில் கதைத் தலைவி கோலவடிவு. கிராமத்தில் கட்டுப்கோப்பாடு வாழும் குடும்பத்தில் பிறந்தவள். அனைவரிடமும் அன்புடனும், மரியாதையாகவும் நடந்து கொள்பவள்.

**காதல்**

இந்நிலையில் திரைப்படத்துறையிலிருந்து வந்த, அதே கிராமத்தைச் சேர்ந்த துளசிங்கம் என்பவனைக் காதலிக்கின்றாள். ஆனால் துளசிங்கம் தன் சித்தியான அலங்காரியோடு சேர்ந்து கொண்டு அவளுடைய குடும்பத்தைப் பழிவாங்கும் நோக்கில் காதலிப்பதாக நடிக்கின்றான். உண்மையறியாத கோலவடிவு அவனோடு உடன்போக்கு மேற்கொள்கிறாள்.

**சூழ்ச்சியறிகிறாள்**

பக்கத்து கிராமமொன்றில் பாட்டியின் வீட்டில் அடைக்கலமாகின்றனர். இந்நிலையில் அலங்காரியும், துளசிங்கமும் உரையாடுவதைக் கேட்டவள், தன் தவறினை நினைத்து வருந்துகிறாள். இவர்களின் சதித்திட்டத்தில் தன் குடும்பத்திற்கு அவமானத்தை ஏற்படுத்திவிட்டதை நினைத்து, அங்கிருந்து தப்பித்து ஊருக்கு வருகிறாள்.

**தந்தை புறக்கணிக்கிறார்**

தந்தையின் கால்களில் விழுந்து மன்றாடி அழுகிறாள். ஆனால் அவர் அவளை ஏற்க மறுக்கிறார். “நான் ஒனக்கு அப்பனும் இல்ல. நீ எனக்கு மகளும் இல்ல.. ஏதோ பெத்த கடமைக்கு பொண்ணுக்குத் வழியே இழுத்துச் சென்று துளசிங்கத்தின் வீட்டில் விடுகின்றார். அவர்களும் ஏற்க மறுக்கின்றனர். வீதியில் நின்றவளை தோழி அழைத்து செல்கிறாள். திக்கற்றவளுக்குத் தெய்வம் துணை என்பதைப் போல கோயிலில் இருந்த அம்மனை கெட்டியாகப் படித்தபடி நின்றாள்.

**அதர்மத்தை அழித்தாள்**

துளசிங்கம் காவலர்களோடு உரையாடிக் கொண்டு வருவதை உற்றுநோக்குகிறாள். “ரஞ்சிதம் மட்டும் நான் சொன்னதைக் கேட்காட் காட்டால்.... அவள ராத்திரியோட ராத்தியா... ஏதாவது செய்யப்போறேன்... நீங்கதான் கண்ணை மூடிக்கணும்” (ப.309) என்று கூறியதைக் கேட்டவள் ஆயிரமாயிரம் ஆடு கோழிகளை வெட்டிய அம்மனின் வெட்டரிவாளை எடுத்துக் கொண்டவள் விரிந்த குழலோடு, துடிக்கின்ற உதடுகளோடு, கடிக்கின்ற பற்களோடு ஊழி நடனம் ஆடும் உடலாட்டத்தோடு கோழைத்தனத்தை கலைந்து ஆவேசத்தோடு, இலக்கு கண்ட பெண் சக்தியாய் ஓடினாள். துளசிங்கத்தின் தலையை மட்டும் வலது கையில் தூக்கிப் பிடித்தவளாய் “தந்தையை நோக்கி, அந்தத் தலையைத் தூக்கிக் காட்டினாள். காட்டிக் கொண்டே நின்றாள்...” (ப.312) யாரிடமும் அதிர்ந்து கூட பேசாதவள் கொலை செய்யும் அளவிற்கு மனமாற்றம் பெறுகிறாள். “கொலையும் செய்வாள் பத்தினி” என்பதை நிரூபப்பதாய் இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

ஒருகோட்டுக்கு வெளியே - உலகம்மையும், சாமியாடிகள் - கோலவடிவும் , சமூகத்தில் வாழும் சுயநலவாதிகளின் அழுத்தத்தால் புரட்சிப் பெண்களாகப் பரிமணமிக்கிறனர். இல்லம் தோறும் இதயங்கள் - மணிமேகலை குடும்பத்தினரின் அழுத்தத்தால் புரட்சிப் பெண்ணாக மாறுகிறாள்.பெண் என்பவள் நல்லதை ஆக்கவும், தீயதை அழிக்கவும் வல்லவை கொண்டவள் என்பதை இப்பெண் புரட்சிப் பாத்திரங்கள் வலியுறுத்துவதை அறிய முடிகிறது.

# ஸ்ரீசிவப்பிரகாச சுவாமிகளின் சமய நெறி

ம

**முனைவர்.க.இரமேஸ்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த் துறை
திருவள்ளுள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர் 632115

**முன்னுரை**

நமது பாரத நாட்டின் தொன்மைச் சமயம் அவை சைவம் வைணவம் ஆகும் சைவத்தில் நிலவிய மூட சிந்தனைகளை விலக்கி அகத்தைத் இவற்றில் துய்மைப்படுத்துவதற்காகத் தளைழத்தது விரசைவம் ஆகும் இந்த விர சைவத்தை சுமார் முந்நுறு ஆண்டிற்கு முன்பு ஸ்ரீசிவப்பரகாசசுவாமிகள் பல தலப்பயணம் மேற்கொண்டு சைவ சமய நெறிகளை பரப்பினார் இதனைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**சைவ சமயநெறி**

சைவ சமயம் என்பது சிவபெருமானின் சம்பந்தம் உடையது சிவன் சைவக்கடவுளாவர் இக்கடவுளுக்கு வீரக்கடவுள் எனும் மற்றொரு பெயரும் உண்டு வீர என்பன அடைமொழியாகும் இத்தகைய வீர சைவத்தை வளர்க்க சிவப்பரகாசர் தமிழகம் முழுவதும் பல கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் சென்று சைவசமய கருத்துக்களை பரப்பயும் சிவபெருமானின் சிறப்புகளை எடுத்துக்கூறியும் சைவ தொண்டு புரிந்தவர்களையும் போற்றியும் சைவ சமயத்தார் வளர்த்தவர் ஆவர்

**சோணசைவமாலை சிவப்பிரகாசர் விரும்புவது**

நினைக்க முக்தி தரும் நலமான திருவண்ணாமலையில் உள்ள அக்னி மலையை ஒருமுறை வலம் வருவதற்குள் நுறு பாடல்களை இயற்றி சைவக் கடவுளின் சிறப்பை வெளிப்படுத்துகின்றார் என்றால் இது ஒன்றே போதும் சிவப்பரகாசரின் சைவ பக்திக்கு எடுத்துக்காட்டு

**விரைவிடையிவரும் நினைப்பறவாமை**

**வேண்டுநர் வேண்டுக மதுரம்**

**பெருகுறு தமிழ்ச் சொன் மலர்நினக் கனியும்**

**பறவியே வேண்டுவன் தமியேன்**

**இருசுடுர் களுமேல் கிழ்வரை பொருத்த**

**விடையுறன் மணிக்குடக் காவைத்**

**தரையிடை யிருத்தி நிற்றனேர் சோண**

**சைலனே கைலைநா யகனே**

அதாவது ஞாயிறும் திங்களும் மேற்கு மலையிலும் கிழக்குமலையிலும் பொருந்த தேவரிர் நடுவில் பெரிய மலையுருவாக எழுந்தருளியிருத்தல் இரண்டு பக்கத்தும் மணிக்குடங்களையுடைய காவடியை புமியில் வைத்து நிற்கின்றவரை ஒத்து இருக்கின்ற சோணசைலனே கைலை நாயகனே விரைந்து செல்கின்ற இடத்தை உளர்ந்தருளுகின்ற தேவரிரை பறவாமையை விரும்ப வேண்டுகின்றவர் வேண்டக் கடவராக மிகுதியான தமிழ்ச் சொற்களாகிய மலர்களைத் தேவரிருக்குச் சாத்துகின்ற பிறவியையே அடியேன் விரும்புகின்றேன் என சிவப்பிரகாசர் சிவ பெருமானின் அருமை பெருமையை கூறுவது சிறப்பாகும்

**புலவர் போற்றும் கோவை**

புகழ்மிக்க முன்று கோவையில் சிவப்பதிகாசரின் திருவெங்கோவையும் சென்று தென்னாட்டிலுள்ள திருவெங்கை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளார் இறைவன் ஆனந்த நடனம் செய்கின்ற தில்லையம்பலம் பேரின்பத்தைத் தரும் அம்பலமாயினும் அதனைத் தரிசித்தும் பயன்பெற்றவர்கள் பேரம்பலம் எனக் கூறாமல் சிற்றின்பலம் என்னும் பெயரினாலேயே கூறகின்றது அதுபோல் தான் இத்தலைவி தர நான் பெற்ற இன்பத்தை உலகத்தார் பேரின்பம் எனக்கூறாமல் சிற்றின்பம் எனக்கூறுவது ஆகையால் சிற்றின்பம் என்ற சொல்வதனால் பேரின்பம் இதற்கு வேறாக உள்ளது என நினைத்தல் கூடாது எனத் தலைவன் கூறுவதாக சிவப்பிரகாசர் கூறுவதும் மேலும் சிற்றம்பலம் என்பது தில்லைப்பதியை குறிப்படுவதாக சிவப்பிரகாசர் இந்நுலில் சிவபெருமானின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது

**திருமடங்கல் வழியே சமய நெறி**

சிவப்பபரகாசர் பெரம்பலுர் மாவட்டத்தில் உள்ள துரைமங்களத்தில் பிறந்தாலும் தமிழகம் முழுவது பல கோயில்களுக்கும் மடங்களுக்கும் சென்றார் இவர் திருவெங்கனுரில் உள்ள திருவெங்கை மாநகர மடத்தில் சில காலம் தங்கி அங்குள்ள இறைவன் மிது திருவெங்கைக் கோவை திருவெங்கைக் கலம்பகம் திருவெங்கை உலா திருவெங்கை அலங்காரம் ஆகிய நுால்களை இயற்றி இதில் தன சமய தத்துவ கருத்துக்களை எடுத்துரைக் கூறியுள்ளார் மேலும் தில்லையில் விற்றிருக்கும் ஆடல்வல்லானைக் கண்டு மனிதப்பிறவியின் பயனடைதலை விளக்கியும் அப்பரடிகள் அத்தகு பெருமைமிகு சிதம்பரத்திற்கு சென்று இறைவனை வழிபடக் கருதினர் பின் சிலகாலம் தங்கி நான்கு நூல்களைப் பாடி இறைவனை மனதார வேண்டினர்

பின் தில்லையிலிருந்து திருக்காட்டுப் பள்ளி தலத்திற்கு சென்று அங்குள்ள இறைவனை வணங்கி காஞ்சிபுரத்தை வழிபட விரும்ப அங்கு சென்றார் அங்கு இறைதொண்டு செய்துவரும் அண்ணாமலை ரெட்டியார் என்பவரின் அறிமுகம் செய்து சிலகாலம் இவருடன் தங்கி திருபணி முதலிய வேளைகளை மேற்கொண்டார் மேலும் பொம்மைய பாளையம் சென்று அங்குள்ள தன் குருவின் மிது வெண்பா ஒன்றைப் பாடி தன் குருபக்தியையும் பரைசாற்றினர் எனலாம் மற்றும் விருத்தாசலம் சென்று அங்குள்ள பழமலைநாதரையும் பெரிய நாயகியம்மையும் வணங்கி வெங்கைப் பழமலையார் மிது எனத்தொடங்கி மங்குள் சிதம்பரபூபதி நல்கும் இடமிதுவே எனத் முடித்துப் பாடியருளிளார் தன் சிவபக்தியை வெளிப்படுத்தி இங்குள்ள கடவுளின் அருமையை வெளிப்படுத்தி சமயநெறியை போற்றினார் எனலாம்.

**நால்வகைப்பா**

வெண்பா கட்டளைக்கலித்துறை விருத்தம் அகவல்பா ஆகிய நால்வகைப் பாக்களால் இயற்றப்பட்ட குட்டி பெரியபுராணம் என போற்றப்படும் நூலை (நால்வர் நான்மணிமாலை)இயற்றிய சிவப்பதிகாரம் இதில் அணிவகைளை அணிந்த பார்வதிதேவியைச் செம்பாதியாகக் கொண்ட திருவாக்கு எனச் சொல்லப்படும் வேதமோ அக்கடவுளின் புகழத் துதிக்கும் திருவாதவுரில் தோன்றிய மாணிக்கவாசகரின் மலர் போலும் செவ்விய திருவாயில் தோன்றிய திருவாசகம் என்னும் தேனோ ஆகிய இவற்றுள் மேன்மையுள்ளது யாதோ என வினவுவிராயின் மக்கள் தொகுதியையுடைய இம்மா நிலத்திலே வேதத்தை பல முறை ஓதினாலும் அது கேட்டு கண்களின்றும் நிரைப்பொழிந்து மனம் கரைந்துருகி நிற்கின்றதை திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலும் கருங்கல் போன்ற வன்மனமும் உருகிக்கசிய தோண்டிய மணற்கேணி சுரக்குறமாறு போலக் கண்கள் நிர் பெருகிக் சுற்றும்பாய உடம்பலுள்ள ரோமம் சிலிர்க்க நடுநடுக்கம் அடைந்து அன்பர் ஆகுபவரல்லது அன்பர் ஆகாதவர் இலர் என்னும் வேதத்தினும் திருவாசகமே மேலானது என்றும் வேதம் என்பது இறைவனுடைய வாக்கு என்றது கற்பனையே உண்மையன்று.

இறைவனது வாக்காய் இருந்திருப்பின் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஆனால் வேதமோ பலருடைய கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளது மறைமலை அடிகள் தமது நூல்களில் பல இடங்களில் வேதத்தை மொழிப்பெயர்த்துத் தந்த அவற்றின் திமைகளை எடுத்துரைத்துள்ளது

**திருவெங்கை இறைவன்**

திருவெங்கை இறைவனைப் பற்றியவுலா என சிவப்பரகாசர் இயற்றிய நூலாகும் இதில் திருவெங்கை என்பன இறைவனுக்கு ஆகுபெயர் ஆகும் உலா என்பது உலா வருவதாகும் உலா வருவதுபற்றி பாடியபாட்டு என்பதாகும் அது நூலைக்குறிக்கும் ஆகுபெயர் திருவெங்கை என்பது இன்று வெங்கனுர் என வழங்கப்படுகிறது

வருமே என்பதில் ஏகாரம் அசைநிலை தா நிங்குதல் கல்வி செல்வ வளங்களால் மக்கள் அவ்வுரைவிட்டு நிங்குதல் இல்லை என்பதாகும் பதியெழுவறியாய் பண்பு என்னும் சிலப்பதிகாரம் தளை சங்கிலி யானைக்கு காலில் சங்கிலி புட்டிக் கம்பத்தில் கட்டுவர் விநாயகராகிய யானை காலில் சங்கிலி புணர்குரியர் ஆதலின் அவருடன் இறைவனும் உலாவாகிய சங்கிலி புணக் கும்பக்கடாகக் களிற்றைக் கொண்டு உலா வரும் என்பதாகவும் விருத்தாசலத் திருக்கோயில் போலவே திருவெங்கைக் கோயில் அமைக்கப்பட்டு அங்குள்ள பிள்ளையார் திருவுருவரும் போலவே எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளது இதனால் யானையைப் படிக்கப் பள்ளம் வெட்டி படிப்பது போல விநாயகரை உள்ளம் எனும் பள்ளத்தில் படித்து வைத்தல் வேண்டும் என்பன போல தன் கற்பனையால் சிவப்பரகாசர் பக்தியை காட்டுவது சிறப்பாகும்

**பஞ்சமூர்த்தி உலர்**

பெருவிழாக் காலத்தில் பஞ்ச மூர்த்திகள் உலா வருவர் அழகிய தேரில் உலா வருவர் இப்படி உலாவரும் தேரில் விநாயகர் உமாதேவியார் முருகன் சண்டிசர் எனும் சிவப்பரகாசர் இந் நூலில் கருத்தை அமைத்தும் மேலும் சிவனை முகத்தில் இடக்கண்ணும் வலக்கண்ணும் நடுவில் மேலே நெற்றிக் கண்ணும் அமையக்கிழ மூக்கு இருக்கும் தோற்றம் இரண்டு இலைகளுக்கு நடுவில் மேலே ஓர் இலையும் கிழே நிண்ட காம்பு உள்ள வில்வ இலையின் தோற்றத்தையும் சிவபரானின் தோற்றத்தையும் இணைந்து உவமைப்படுத்தி சிவப்பரகாசர் தன் சைவசமய நெறியை வளர்த்தது புலனாகிறது

**முடிவுரை**

ஸ்ரீசிவப்பரகாதவா சுவாமிகள் சைவ சமய நெறிகளையும் இறைவனின் பெருமைகளையும் இறைதொண்டு புரியவரின் சிறப்பையும் எடுத்துக் கூறி சைவ சமயநெறியை வளர்த்த செம்மல் என்பது புலனாகிறது

**அடிக்குறிப்பு**

1 நா.மகாலிங்கம்.சு சிவப்பரகாசம் ப 71

2 வ.ஞானப்பரகாசம் சோணசைவமாலை ப 53

3 ச.சினிவாசகம் திருவெங்கைக் கோவை ப 59

4 வ.இராசேந்திரன் படன நவமணிமாலை ப 9

5 மேலது ப 9

6 நா.மகாலிங்கம் சு சிவப் பிரகாசம் ப 79

7 ச.சினிவாசகம் திருவெங்கைக் கோவை ப 29

8 ஆ.சிவலிங்கனார் திருவெங்கையுலா ப 41

# சங்ககால நிலப்பாகுபாடும் தொழில்களும்

**S.கனகராஜ்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லுரி
திருச்சி 2

**குறிஞ்சி**

சங்ககால மக்களின் வாழ்க்கை இயற்கை அமைப்பற்கு ஏற்ப ஐந்து வகை நிலத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது ஐந்து வகை நிலத்தை தொல்காப்பியர்,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய திம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்"**

**முல்லை,குறிஞ்சி,மருதம்,நெய்தல் எனச் சொல்லிய முறையான் சொல்லவும் படுமே** என்னும் நூற்பாவால் குறிப்பட்டுள்ளார்

மலைகளும் குன்றுகளும் அவற்றைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி என்னும் பெயர் கொண்ட மலர்களே சிறப்பானவை. கானவர் இவற்றை விரும்பி அணிந்துள்ளனர் இக்காரணங்களால் இப்பகுதி குறிஞ்சி எனப்பெயர் பெற்ற தெனக் கூறுவர் இந்நிலப்பகுதி, அகில், சந்தனம், சிறுமூங்கில், பெருமுங்கில், பலா, சுரபுன்னை, வாழை, மா, கடம்பு, கருங்காலி முதலிய பல வகை மரங்கள் நிறைந்த காடுகள் கொண்டது. குரங்கினங்கள், யானை, புலி, கரடி, காட்டுப் பன்றி, காட்டுப் பசு, வரையாடு முதலிய விலங்குகள் உலாவும் இடமாகவும் இருந்துள்ளதை அறியமுடிகின்றது

**இப்பகுதியில் வாழ்ந்த மக்களைக் குறவர் என்பர். குறவர் என்ற சொல் மலைவாழ்நர், காட்டிலே வாழ்பவர் பாம்பாட்டிகள் சாத்திரம் சொல்பவர் முதலியோரை இக்காலத்திற் குறிக்கும் என்கிறார்** சு.வித்தியானந்தன் குறவருள் செல்வத்தாலும் குடியாலும் உயர்ந்தவர்கள் வெற்பன் பொருப்பன் சிலம்பன் என்னும் திணைப்பெயர் பெற்றுள்ளனர் பெண் கொடிச்சி எனப்பட்டாள், குடிமக்களுள் ஆடவர், கானவர், குன்றுவர், வேட்டுவர் எனப்பட்டனர் அவர்தம் பெண்டிர் குன்று வித்தியர், வேட்டு வித்தியர், குறத்தியர் எனப்பெயர் பெற்றமை தெரிகின்றது

**தொழில்கள்**

இந்நிலத்தவரின் தொழில், தினைபயிரிடுதல், வேட்டையாடல், தேன் எடுத்தல்,கிழங்கு அகழ்தல் கிளியோட்டுதல் முதலியன ஆகும்.

தினையே குறிஞ்சி நிலத்தில் விலையும் முக்கிய தானியமாகும். பயிரிட நிலமில்லாத போது நறிய அகில் மரங்களையும் சந்தன மரங்களையும் வெட்டி அவை இருந்த நிலத்தை உழுது சிர்படுத்தி விளைநிலமாக்கியுள்ளது எள், தினை, வரகு, அவரை, முங்கில், நெல், வெண்சிறு, கடுகு, இஞ்சி, மஞ்சள், வாழை, கூவைக்கிழங்கு, வள்ளிக் கிழங்கு, ஆசினிப் பலா,கரும்பு ஐவன நெல் வெண்நெல் இவற்றை வளமுரப் பயிரிட்டதை மலைபடுகடாம் (அடி 102 117) பகவதன் முலம் அறியமுடிகின்றது

**தம் உழைப்பின் பயனாக விளைந்த தினைப் பனங்களைக் காவல் காத்துள்ளனர் யானையாலோ புலியாலோ தாக்கப்படாத பெரிய மரக்கிளைகளினிடையே பரண் அமைத்துப் பயிர்களைத் தின்ன வரும் கிளி கரடி யானை காட்டுப்பன்றி முதலியவற்றைக் கவண்கல் எறிந்தும் பறையடித்தும் எரி கொள்ளியைக் காட்டியும் விரட்டியுள்ளமை தெரிகின்றது** யானைகள் மிது வீசிய கவணுமிழ் கற்கள் யானைகளின் பகைத்த நிலையைக் கெடுத்து உயிரைப் போக்கும் முறைமையாலே கூற்றத்தை ஒப்பன் என்று மலைபடுகடாம் (அடி 209 2010) கூறுகின்றது அவ்வாறு விசப்பட்ட கற்கள் அவரையினை உண்டு நிற்கும் காட்டுப்பசுவினையும் விரட்டியதை

**மணிப்பூ அவரைக் குரு உத்தளிர் மேயும்**
**ஆமாக் கடியும் கானவர் பூசல் (மதுரை.292 293)**

என்ற அடிகளால் உணரமுடிகின்றது

முற்றிய தினைப்புனத்தைக் காட்டுப் பன்றிகள் அழிப்பது இயல்பு எனவே அவை வரும் வழிகளில் கற்பொறிகளைப் பொருத்தி வருகையைத் தடுத்துள்ளனர் மேலும் அதனைப் பிடிக்கக் குழிகள் தோண்டிக் தழையிட்டு நிரப்பியுள்ளனர். இதனை அறியாது வந்து குழியில் விழ்ந்த பன்றியினைத் தாக்கிக் கொன்றதை மாங்குடி மருதனார்,

**சேணோ னகிழ்ந்த படிவாய்ப் பயன்பன்**
**விழ்முகக் கேழலட்ட பூசல் (மதுரை.294 295)**

என்று குறிப்படுகின்றார் இவற்றின் முலம் கானவர்களின் வேட்டையாடும் திறத்தினை நன்கு அறியமுடிகின்றது மூங்கிலால் செய்த ஏணியைக் கொண்டு மலை உச்சியில் உள்ள மரக்கிளையில் தேனெடுத்துக் களிப்புற்று வாழ்தமையும் தெரிகின்றனது இதன்வழி கானவர்களின் தொழில் திறத்தையும் விளைப்பொருள் உற்பத்தினையும் வேட்டையாடுதலையும் அறியலாகின்றது

**முல்லை**

மலைகளின் அடிவாரம் குன்றுகளும் காடுகளும் காட்டாறுகளும் நிறைந்த பகுதியாகும் காடு சார்ந்த பகுதியாதலால் இது முல்லை எனப்படுகிறது. **இங்குக் காடு என்பது குறிஞ்சி நிலக்காடு போன்ற மரச் செறிவுடைய காடன்று இளங்காடு என்ற சொல்லத்தகும் முறையில் அமைந்த நிலப்பகுதியாகும் என்பர்** கொன்றை காயா குருந்தம் முதலிய மரங்கள் மல்லிகை பரிவு முல்லை தளவம் முதலிய செடி கொடிகளும் நிறைந்த பகுதிகளாகும்.

இப்பகுதியில் மலரும் மலர்களில் முல்லையே சிறப்படம் பெற்றதாலும் ஆயரும் ஆய்ச்சியரும் விரும்ப முல்லை மலர்களைச் சூடிக் கொண்டதாலும் இந்நிலம் முல்லை எனப் பெயர் பெற்றது என்பவர்.

இந்நிலத் தலைவன் அண்ணல் தோன்றல் குறும் பொறை நாடன் எனவும் தலைவி மனைவி கிழத்தி எனவும் பெயர் பெற்றுள்ளனர். குடிமக்களுள் ஆடவர் ஆயர் கோவலர் இடையர் பொதுவர் எனப்பட்டனர். அவர்தம் பெண்டிர் ஆய்ச்சியர் கோவிச்சியர் இடைச்சியர் பொதுவிச்சியர் எனப்பட்டனர். இவர்களைப் புறநானுறு அறம்புரியும் நெஞ்சை உடையவர் (390 1)என்கின்றது.

**தொழில்கள்**

முல்லை நிலமக்கள் ஆடு மாடுகளை மேய்த்துள்ளனர். வரகு சாமை முதலியவற்றைப் பயிரிட்டு தங்கள் வாழ்வைச் செம்மையாக்கியுள்ளனர் கால்நடையால் கிடைக்கும் பால் தயிர் வெண்ணெய் முதலியவற்றை வேற்று நிலங்களுக்குச் சென்று விற்றும், அந்நிலப்பொருட்களை பெற்றும் வாழ்ந்துள்ளமை தெரிகின்றது.

இச்சிறூர் மக்கள் உழவுத் தொழிலில் நன்கு பயின்று பெரிய எருதுகளைப் கொண்டு நிலத்தை உழுதுள்ளனர். அகல உழாமல் உடும்பன் முகத்தை ஒத்த பெருங்கொழு நிலத்தின் மறைய நன்கு ஆழ உழுதுள்ளனர் பன்பு தானியங்களை விதைக்கும் முறையேகளை எடுத்தும் பயிர்களைக் காத்துள்ளனர் முற்றிய பயிர்களை முறையோடு அறுவடை செய்தும் தானியங்களைக் குதிர்களில் சேகரித்தும் வாழ்ந்தமையினை அறிவதன் மூலம் இவர்களது தொழிலினையும் தானியங்களையும்

சேகரிக்கும் முறையினையும் சங்க இலக்கியங்களின் வழி அறியக் கிடக்கின்றது.

**மருதம்**

நீர்வளம் மிக்க நிலப்பரப்பான வயலும் வயலைச் சார்ந்தப் பகுதியும் மருதம் எனப்படும். இந்நிலத்தில் மருத மரங்கள் மிகுதியாதலின் இது மருதம் எனப்பெயர் பெற்றுள்ளது. நெல் கரும்பு போன்ற உயரிய பயிர்கள் நன்கு பயிராகும் நிலம் உணவுப்பற்றாக்குறை இல்லாத நிலம் ஆதலின் ஐவகை நிலங்களின் மருதமே உயர்வாகக் கருதப்படுகிறது. பெரும் பாணாற்றுப்படை அடி(100 185) போன்ற நூல்கள் மருதநில இயற்கை அழகையும் சிறப்பையும் அந்நில மக்களின் வாழ்க்கை முறை,தொழிற்பண்பு முதலியவற்றையும் விரிவாகக் கூறியுள்ளமை குறிப்படத்தக்கது

இந்நிலத்துத் தலைமகள் மகிழ்நன் ஊரண் எனவும் தலைமகள் மனைவி எனவும் பெயர் பெற்றுள்ளனர். குடிமக்கள் உழவர், களமர், கடையர் என்று அழக்கப்பட்டுள்ளனர். அவர்தம் பெண்டிரை உழத்தியர், கடைசியர் என்றும் அழைத்துள்ளமை தெரிகின்றது.

**தொழில்கள்**

வேளாண்மையே இம்மக்களுடைய முதன்மைத் தொழிலாகும். நெல் பயிரிடும் முறையினைப் பெரும்பாணாற்றுப்படை விரிவாகச் சித்தரிக்கின்றது. எருதுகளையும் எருமைகளையும் கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தியதை,

**பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பற்**
**காரேறு பொருத கண்ணகன் செறுவி**
**னுழாஅ நுண்டுடொளி நிரவிய வினைஞர் (பெரும் 209 211)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

**முடிநா றழத்திய நெடுநிர்ச் செறு (பெரும் 212)**

என்ற அடி நாற்று நடுதலைக் குறிக்கின்றது. கரிகாலனைப் பாடிய முடத்தாமக் கண்ணியார் அவனது நாட்டு வளத்தினைப் பாடும் போது,

**சாலி நெல்லின் சிறை கொள் வேலி**
**ஆயிரம் விளையுட்டு ஆகக்**
**குவிரி புரக்கும் நாடு கிழ வோனே (பொரு 246 248)**

என்று ஒருவேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்ததைக் குறிப்பட்டுள்ளார். சங்ககாளப்புற இலக்கியம் தந்துள்ள மேற்கண்ட தரவுகளின் வழி அக்கால வேளாண்மை நிலையினையும் இத்தொழிலை மேற்கண்ட மருத நில மக்களின் வாழ்கைத் தரத்தினையும் அறிய முடிகின்றது.

**நெய்தல்**

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாகும். மலர் மிகுதியாதலின் இந்நிரம் இப்பெயர் பெற்றுள்ளது. கடற்கரை ஓரங்களில் வாழ்ந்த பரதவரே இந்நிலத்திற்குரிய குடிமக்களாவர் இவர்கள் பட்டினம் என்னும் பேரூர்களிலும் பாக்கம் என்னும் சிற்றூர்களிலும் வாழ்ந்துள்ளமை புலப்படுகின்றது இதனை,

**பனி நிர்ப்படுவிற் பட்டினம் (சிறு 153)**

எனச் சிறுபாணாற்றுப்படையும்,

**கட்கொண்டிக் குடிப்பாக்கத்து (மது 137)**

என்று மதுரைக் காஞ்சியும் சுட்டுவதால் உணரமுடிகின்றது.

இந்நிலத்தவருள் தலைவன் சேர்ப்பன் கொண்கன் புலப்பன் துறைவன் எனப்பட்டனர் குடிமக்களும் ஆடவர் பரதவர் நுளையர் திமிலர் வலையர் அளவர் எனப்பட்டனர். அவர்தம் பெண்டிர் பரத்தியர், நுளைச்சியர், அளத்தியர் ,வலைச்சியர் எனப்பெயர் பெற்றமை புலனாகின்றது.

**தொழில்கள்**

நெய்தல் நிலமக்கள் கடலில் மீன்களைப் படித்தல் அவற்றை உலர்த்துதல் உப்பு விளைத்தல் மீனையும் உப்பையும் விற்றல் கடலாடுதல் முதலிய தொழில்களை முறையே மேற்கொண்டிருந்தனர் இப்பரதவ மக்கள் முறுக்கேறிய நசையினையும் குன்றெனத் திரண்ட தோள்களையும் உடைய வலிமையான உடலமைப்புக் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர் இதனை

**படலைக் கண்ணிப் பருஏர் எறுழ்த் திணிதோள்**
**முடலை யாக்கை முழவலி மாக்கள் (பெரும் 60 61)**

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது தான் படித்த மீனை விற்கும் வலைஞனைப்பற்றி

**வள்ளை நிக்கி வயமின் முகந்து**
**கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர் (மதுரை 1)**

என மதுரைக் காஞ்சி பாடியுள்ளதைக் காண முடிகின்றது

மேலும் பரதவர்கள் முத்துக் குளித்தலில் ஈடுபட்டுக் கடல் வணிக உரிமையும் பெற்று விளக்கியுள்ளனர் செல்வமும் செல்வாக்கும் மிக்க இவர்கள் பல்

வகைப்பட்ட பண்டங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்துள்ளனர் என்பதும் தெரிகின்றது இதனை,

**முழங்கு கடல்தந்த விளங்குகதிர் முத்தம்**

**அரம் போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை**

**பரதர் தந்த பல்வேறு கூறும் (மதுரை 315 317)**

என்ற மாங்குடி மருதனார் கூற்றினாலும்,

**நாவாய் சூழ்ந்த நளி நிர்ப் படப்டைமாட மோங்கிய மணல் மலி மறுகின் பரதர் மலிந்த பல்வேறு தெரு (பெரும் 321 323)**

என்ற கடியலுர் உருத்திரங் கண்ணனார் கூற்றாலும் உணரமுடிகின்றது

**பாலை**

தொல்காப்பியர் பாலை நிலத்தன்மை பற்றிக் குறிப்பிடவில்லை. குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும், முதுவேனிற் காலத்து வெம்மையான காரணமாக நிர் வளத்திற்கு குறைந்து மக்கள் நிலைத்து வாழ வசதியற்ற நிலை ஏற்படும் அந்நிலையே பாலை என்கின்றார். இளங்கோவடிகள் இதனை,

**முல்லையும் குறிஞ்சியும் முறையின் திரிந்து**
**நுல்லியல் பழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவங் கொள்ளும்**
**(சிலம்பு 11.64 66)**

என வரும் பாடலடிகளால் அறிய முடிகின்றது பாலைத்தன்மையானது, காலையும், மாலையும், நண்பகலன்ன கடும் கூரச் சோலை தேம்பக் கூல் மாற் நிரும் நிழலும் இன்றி நிலம் பயன் துறந்து புற்றும் மாவும் புலம் புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது என்ற பாலை நிலத்தன்மையினை நச்சினார்க்கினியார் விளம்புகின்றார்.

இப்பாலை நிலத்தில் வேட்டுவர்கள் வாழ்ந்துள்ளனர் இந்நிலத்தலைவனை விடலை, காளை, மிளி என்றழைத்துள்ளனர். தலைவி எயிற்றி எனப்பட்டாள். குடிமக்களும் ஆடவரை எயினர், மறவர் ,வேடர், கள்வர்,என்றும். பெண்களை எயிற்றியவர், மறத்தியர் என்றும் அழைத்தமை தெரிகின்றது.

**தொழில்கள்**

எயினர்களுடைய தொழில் வழிப்பறி செய்வதும் பகைவருடைய கால்நடையினைக் கவர்வதும் ஊர்களுக்குச் சென்று கொள்ளையடிப்பதும் ஆகும் பாலை நில வழியே செல்லும் வணிகர் கூட்டங்களையும் தனியே செல்லும் வழிப்போக்கர்களையும் மறைந்திருந்து தாக்கி வழிப்பறி செய்பவர்கள் குறிபார்த்து அம்பு விடும் ஆற்றலைப் பெற்ற இவர்கள் கூற்றுவனைப் போன்ற கொலைத் தொழில் புரியவர்கள்

**அத்தம் செல்வோர் அலறதத் தாக்கிக்**

**கைப்பொருள் வௌவுங் களவோர் வாழ்க்கைக்**

**கொடியோர் .....(பெரு.39 410)**

என்ற அடிகள் வழிப்போக்கரைக் கதனும்படி வெட்டி அவர்கள் உடைமைகளைப் பறித்துமையைக் காட்டுகின்றன

புறஇலக்கியங்களின் வழி ஐவகை நிலப் பிரிவுகளாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ,என்பவனம். அங்கு வாழ்ந்த மக்களையும் ,அவர்களது தொழில்களாக தேன் எடுத்தல், ஆநிரை மேய்த்தல் ,வேளாண்மை செய்தல் ,மின் படித்தல், வழிப்பறி செய்தல், என்பனப் பற்றியும் விரிவாகக் காணமுடிகின்றது.

# எஸ் .ரா. வின் சாக்கியனின் பல் சிறுகதையை முன் வைத்து

**முனைவர் அ மரியசெபதியான்**
உதவிப் பேராசிரியர்
சமுக அறிவியல் மற்றும்
மொழிகள் பள்ளி
வி ஐ டி பல்கலைக்கழகம்
வேலுர்

திருத்தமாக செய்யப்பட்ட எந்த ஒரு வேளையும் அழகுணர்வோடு இருக்குமானால் அது ஓவியம் அதே திருத்தமாக செய்யப்பட்ட எந்த ஒரு வேலையின் வெளிப்பாடு சிந்தனை சார்ந்து இருக்குமானால் அது படைப்பு ஓவியர் சினிவாசன்.

அழகுணர்வோடு இருக்கும் படைப்பாக சிந்தனையில் விரியும் ஓவியமுமாக எஸ் .ராமகிருஷ்ணனின் சாக்கியனின் பல் சிறுகதை அமைந்துள்ளது. எஸ்.ரா வின் எழுத்துக்கள் கட்டமைக்கும் உலகில் பயணம் செய்வது அலாதியானது எளிமையான வார்த்தைகளால் புனைந்துரைக்கும் உலகில் நாம் கரைந்துவிடுவது கலபம் வார்த்தைகள் நம்மைப் பிடித்து அழைத்துச் செல்லும் பாதை எங்கும் நாம் மறந்துபோனவற்றைத் தேடிக்கண்டுப்பிடிக்கும் முனைப்பல் நமது பயணம் வேகமெடுக்கும் படைப்பளிகளின் உலகம் நாம் காண அல்லது தேட மறந்தவற்றை வரலாற்றில் புதைக்கப்பட்ட நிகழ்வுகளைத் தோண்டி எடுத்து நமக்குப் படைப்புகளாகத் தந்துகொண்டிருக்கும் அவ்வகையில் எஸ்.ரா வின் சாக்கியனின் பல் சிறுகதையைக் கூறலாம் இச்சிறுகதை இச்சிறுகதையானது சீனாவிலுள்ள மூன்று மூன்று மஞ்சளர்களான லியு சகோதர்களிடமிருந்து தொடங்குகிறது தந்தையோடு விவசாயம் செய்த படி வளரும் அவர்களுக்கு ஒரு கோடை காலத்தில் சுவான் என்ற யாத்ரிகனின் கதையில் உள்ள புத்தனின் பல்லைத் தேடி எடுத்து நிலத்தில் விதைத்தால் அவ்விதை விதைக்கப்பட்ட நிலத்தில் விதைக்காமலேயே தானியங்களை அறுவடை செய்ய முடியும் என்று கூறக் கேட்ட அம்மூவரும் தனது தந்தை அறியாது அப்பல்லைத் தேடி தெற்கு நோக்கிப் புறப்படுகிறார்கள் என்பதாக சிறுகதையின் பயணம் தொடங்குகிறது

புத்தனின் பல் இருக்கும் இடம் பற்றி எதுவும் தெரியாத அவர்கள் நீண்ட பனிமலையில் அமைந்த மடாலயமொன்றில் உள்ள துறவிகளைக் கேட்டு தென் திசை நோக்கித் தமக்கு முன்னே கிளைத்துச் செல்லும் வணிகப்பாதையில் தங்களது பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தனர். முடிவற்று நிண்டு செல்லும் பயணத்தில் அவர்களது வயதை காலம் மெல்ல மெல்ல தின்றுகொண்டிருந்தது. ஓய்வுக்காகத் தங்கிய சிற்றூரின் மூவரில் முத்தவனுக்கு வாழ்க்கைத் துணை கிடைகின்றது குழந்தையும் பிறக்கின்றது சிறிது காலம் தங்கிச் செல்ல முடிவெடுக்கின்றனர் ஆறுவருடங்கள் கரைந்தோட மிண்டும் புத்தனின் பல்லைத் தேடி மனைவியும் குழந்தையும் அறியாது பயணத்தைத் தொடங்கினார்கள் கனவாகத் தெரியும் புத்தனின் பல் இருக்கும் இடத்திற்கு முடிவில் வந்து சேர்கின்றனர் மக்கள் கூட்டமுள்ள

அம்மடத்தில் பூர்ணிமை விழாவின் இறுதி நாளின் போது புத்தனின் பல் காட்சிக்கு வைக்கப்படும் அன்று இரவு திருட முற்பட்டு மடத்துறவிகளிடம் அகப்பட்டு விடுகின்றனர் நீண்ட வருடங்களுக்குப் பின்பு தமது வீடு திரும்பும் மூவரும் தமது வீட்டினருகே ஓடிய நதியின் பாதை மாறியிருக்கக் கண்டனர் அவர்களது தந்தை ஒரு மரக்கிளையைப் பற்றியபடி உயிர் துறந்திருந்தார் தந்தையின் கபாலத்திலிருந்து தெறித்து விழுந்த பல்லானது புத்தனின் பல்லைத் திருடும்போது உணர்ந்த உயிர்ப்பையும் குளிர்ச்சியையும் கொண்டிருந்தது

இப்பயணமானது சிறுகதைக்கு மட்டுமான புனைவுப் பயணம் அன்று வரலாற்று நெடுகிலும் புத்தனின் பல்லைத் தேடி உலகின் பல பகுதிகளில் இருந்தும் பயணக்கோடுகள் இந்தியாவின் தென்திசையையும் தாண்டி இலங்கை வரை நீண்டு செல்கின்றன அப்பயணக்கோடுகள் புத்தனின் பல்லை வைத்திருப்போருக்கும் அரசாளும் தகுதியினைப் பெற்றுத் தரும் என்று யாரோ ஒருவரால் வழிகாட்டப்பட்டிருந்தது புத்தன் என்ற ஆதி மனிதனைச் சுற்றிக் கட்டமைக்கப்படும் புனிதங்களும் கற்பதங்களும் சடங்குகளும் புத்தன் அறியாதவை புத்தனின் உடல் குசி நகரில் சிதையுட்டப்பட்டது உடல் தகனம் செய்யப்பட்ட இடத்திருலிந்து எடுத்த புத்தரின் இடது கோரைப்பாலை அவரது பெண் சிடர் கிமா கலிங்க மன்னர் பரம்மதாத்திற்குப் பரிசாகக் கொடுத்தார் அங்கிருந்து ஆரம்பக்கின்றது புத்தருடைய பல்லின் மிதான புனைவுப் பயணம்.

மொராக்கோ நாட்டைச் சேர்ந்த யாத்ரிகர் முகம்மது இபுன் பதுதா (கி ப 1340 1368) தனது பயணத்தின் போது இலங்கையிலுள்ள சிவனொளி பாதமலை ஸ்ரீ பாதமலை ஆதாமின் பாதம் என்றழைக்கப்படும் ராட்சத பாதம் அமைந்த இடத்தின் கிழ் உள்ள மலையடிவாரத்தில் கிரேக்கப் பேரரசன் அலெக்சாண்டரின் இலங்கை சென்றிருக்க வேண்டும் என்பது இபன் பாதுதாவின் கனிப்பு

வரலாற்றின் இடுக்குகளிலிருந்து புத்தனின் பல்லைக் கைபற்ற வந்தவர்களுக்கு மத்தியில் இலங்கையில் மகாவம்ச கால சந்திர பானுவும் சரித்திர கால ஆரியச் சக்கரவர்த்தியும் புத்தனின் பல் பாதுகாக்கப்பட்ட பேழையை அபகரித்துச் சென்றனர் என்பதும் வரலாறாகப் பதிந்துள்ளது

சின மிங்க் அரச வம்சத்தைச் சேர்ந்த ங்க் வு வின் 4 வது மகனாக ஜீ டி என்னும் எங்கில் அரசன் (கி ப 1411)ஜெங்க் முலம் இலங்கையின் மீது படைஎடுத்தான் அப்படை எடுப்பு புத்தனின் பல் மையப்படுத்தி இருந்தது மங்கோலிய அரச வம்சத்தைச் சேர்ந்த குப்பை கான் புத்தனின் பல்லைத் தேடியே இங்கு வந்ததை நினைவில் கொள்ள வேண்டும்

புத்தன் என்ற தனி ஒரு ஆதிமனிதனுடைய வாழ்வுவை இச்சமுகம் இரண்டு விதங்களில் அனுகுகின்றது புத்த தத்துவத்தின் நீட்சியாய் செல்லும் ஜென் பாதையை முதலாவதாகக் கொண்டால் புத்தன் என்ற ஆதி மனிதனைக் கடவுளாக்கி அவர் மீது புனையப்படும் நம்பிக்கை சார்ந்த விடயங்களின் தொகுப்புகளை இரண்டாவதாகக் கொள்ளலாம் அவ்வகையிலேயே எஸ.ரா வின் சிறுகதையும் இரண்டுவகையான கருத்துக்களை முன்வைக்கின்றது.

**ஒன்று**

பௌத்தம் அதன் அடுத்த படி நிலை வளர்ச்சியாக ஜன் வழியில் புத்தரின் வார்த்தைகளை விடுத்து புத்தனாகவே வாழ்தலை நோக்கிச் செல்கின்றது எஸ்.ரா வின் சிறுகதை இறுதியில் அவர்களது வீட்டின் அருகே ஓடிக்கொண்டிருந்த ஆறானது தனது வழியை மாற்றிக்கொண்டதாகக் கூறி இருப்பார் நதி என்னும் குறியீடு மூவருடைய வாழ்வாகக் கொண்டால் மூவரின் வாழ்வானது புத்தனின் பல்லைத் தேடிய பயணத்தில் முடிவில் தாமே புத்தனின் வாரிசுகள் தான் என்பதை உணர்ந்த தந்தையின் குளிர்ந்த கோரைப்பல்லைக் குறிப்பால் உணர்த்துகின்றர் தேடலின் முடிவு பௌத்தம் என்பதிலிருந்து ஜன் நோக்கித் திரும்புவதாகக் கொள்ளலாம் மகன்கள் முவரும் தமது தந்தையின் கபாலத்திலிருந்து தெறித்து விழுந்த பல்லைத் தொட்டுப் பார்த்து புத்தனின் பல்லைத் தொட்ட குளிர்ச்சியை உணர்தல் என்பது தந்தையும் புத்தனாகி விட்டான் என்பதாகவே புரிந்துகொள்ள முடிகின்றது புத்தனை வழிபடுதல் என்பது புத்தனாக வாழ்தலில் இருந்து வேறுபட்டது தந்தையின் பற்கள் புத்தனின் பல்லாகக் குளிர்ந்திருப்பது லி சகோதரர்கள் மூலம் நமக்கு குறிப்பால் உணர்த்துகின்றார் எஸ்.ரா.

**இரண்டு**

புத்தனின் வழிகாட்டுதலை விடுத்து புத்தன் மீது கட்டமைக்கப்பட்ட புனைவுகளினால் ஏற்பட்ட போர் மற்றும் சமயப் பூசல்கள் நிறைந்த வரலாற்றை இரத்தக்கறை வடியும் பசு பசுத்த தாள்களின் மீதே படிக்க நேர்கின்றது சிறுகதையில் வரும் லி சகோதரர்களின் மூத்தவனும் குழந்தையை பௌத்த இலக்கியங்களாகக் கொண்டால் அக் குழந்தைகளின் மீது விசப்பட்ட கற்கள் தமிழ் இலக்கிய வரலாற்றின் சமயப்பூசல்கள் நிறைந்த காலகட்டமாகக் கொள்ளலாம் இமயம் முதல் தென்குமரி வரை பரவியிருந்த பௌத்த மதம் இன்று பெயரளவில் மட்டுமே மிச்சமாக வரலாற்றுப் பக்கங்களின் மறைந்து போனதற்கு சமண பௌத்த மதங்களின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் காரணம் என்பது இலக்கியங்களின் வழி பெற முடியும்.

பொதுவாக மதங்கள் என்பது வழிகள் என்றே வரலாற்று நெடுக கற்பிக்கப்பட்டு வந்துள்ளதை நாம் அறிவோம் அவ்வழிகளில் செல்லும் மக்களுக்கு மற்ற வழிகளின் மீது வரும் உயர்வு மற்றும் தாழ்வு மனப்பாண்மை வழிகளை ரத்தச் சுவடுகளாக மாற்றி அமைக்கின்றன அவ்விதமே சமயப்பூசல்களை நாம் அனுக முடியும் சமயப் பூசலின் உச்சகட்டமாக என்.வி நாயக முருகனின் கவிதையைச் சொல்லலாம் பெண் சீடரான கிமாவின் கையிலிருந்து சென்ற புத்தரின் பல்லானது இன்று எங்குள்ளது என்ற கேள்விக்கு என் விநாயக முருகனின் கவிதை பதில் சொல்வதாக அமைகின்றது

**அந்த ஊரில்**

**புத்தனின் பல்**

**இருப்பதாகச்**

**சொன்னார்கள்**

**எந்த ஊரில்**

**எந்த இடத்தில்**

**அந்த பல்**

**விழுந்ததென்று**

**தெரியவில்லை**

**தினந்தோறும்**

**ஆயிரக்காணக்கான**

**பற்கள்**

**உதிர்ந்து கொண்டேதான்**

**இருக்கின்றன**

**நீளமான பற்கள்**

**தட்டையான பற்கள்**

**முனைமழுங்கிய பற்கள்**

**வளைந்த பற்கள்**

**எத்து பற்கள்**

**பால் பற்கள்**

**இவற்றின் இடையே**

**சரியாக அடையாளம்**

**சொன்னார்கள**

**சற்று நீண்ட கூரான**

**ரத்தம் வடியும் பற்களை**

குருதி வாடை வீசும் வரலாற்று பக்கங்களில் இருந்து விடுபட்டு உனது கடவுள் தன்மைதான்உணர் என்பதை இச்சிறுகதையின் முடிவு நமக்கு சொல்கின்றது.

புத்தனின் பல் இருக்கும் இடங்களாக அறியப்படும் உலகில் உள்ள மற்ற இடங்கள்.

1. Lingguang Temple of the Badach Park in Beijing,China
2. Buddha Memorial Center of the Fo Guang shan Monastery in Kaohsiung Taiwan
3. Shari&den(reliquary hall)of the Engaku&ji in Kamakura,Japan
4. Buddha tooth Relic Temple and Museum in Chinatown,Singapore
5. LU Mountain Temple in Rosemead,California
6. Nagarjunakonda, Museum on the island situated in the Nagarjunasagar Lake
7. Baoxiang temple Buddhist temple and monastery in Wenshang county,Jining city,Shandong province,China

# போகர் சித்தர் பாடல்களில் அறிவியல்

**க.இரமேஷ்,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
சேர்க்காடு, வேலூர் 632115

**முன்னுரை**

சித்தர் என்பவர் அனைத்துக் கலைகளையும் அறிந்தவர்கள். இவர்கள் எண் வகை சித்திகளான இமயம், நியமம், ஆதனம், பராணா யாமம், பரத்த யாகாரம், தாரணி, தியானம், சமாதி ஆகிய எட்டையும் கைவர கற்றவர்கள் சித்தர்கள். சித்தர்களை நவநாத சித்தர்கள் என்றும், மூலன் மரபல் வந்த பதினெண் சித்தர்கள் என்றும் இரண்டு வகையாக பிரிப்பர். பதினெண் சித்தர்களில் ஒருவர் போகர். இவருடைய பாடல்களில் உள்ள அறிவியல் செய்திகளைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**போகர்**

போகரின் காலம் 15 - 16 ஆம் நூற்றாண்டு ஆகும். இவருடைய குரு காலாங்கி நாதன் எனும் சித்தர் ஆவார். போகர் யோகம், ஞானம், தத்துவம், மருத்துவம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கியவர்.போகர் பழனிக்கு அடுத்துள்ள வைகா எனும் ஊரில் பிறந்தவர் என்று கொங்கு மண்டல சாதகம் கூறுகிறது. இவருடைய பிறப்பு பற்றி பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது. சிலர் இவரை சீனத்தவர் என்றும், சிலர் தமிழர் என்றும் கூறுகின்றனர்.

டி.வி.சதாசிவம்பிள்ளை அவர்கள் போகர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்றும், சதுரகிரியில் ககன குழிகையில் தேகசித்திப் பெற்றவர் என்றும் குறிப்படுகிறார். இக்கருத்தை மெய்பிக்கும் வகையில் பழனி மலையிலுள் கல்வெட்டுச் செய்தியும் அமைந்துள்ளது.

**அகத்தியர் பாடலில் போகர்**

**சித்தான சித்தமுனி போகநாதன்**

**சிறந்த பதினெண் பேரில் உயர்த்த சீலன்**
**கத்தனேனும் காலாங்கி நாதன் சீடன்**
**கனமான சீனபதிக்கு உகந்த பாலன்**
**முத்தான அதிசயங்கள் யாவற்றையும் தான்**
**மூதுலகில் கண்ட முதல்வன் சித்தன்**
**நித்தமும் மாசில்லா கடவுள் தன்னை**
**மாநிலத்தில் மரவாத போகர் தானே!**

என தன்னுடைய குருவான காலாங்கி நாதரை பார்க்க இவன் சீனதேசம் சென்றார் என இப்பாடல் கூறுகிறது.

### போகர் நூல்கள்

போகர் 64 நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் சில போகர் 1200, போகர் கருக்கடை நிகண்டு, போகர் ஜனன சாகரம், போகர் மலை வாகனம், போகர் பூஜாவதி, போகர் சப்த, போகர் எழுநூறு காண்டம் ஆகும்.

### போகர் சப்த காண்டம்

போகர் சப்த காண்டத்தை போகர் 7000 என்றும் அழைப்பர். இதில் 7 காண்டங்கள் உள்ளது. இந்நூலில் உள்ள 443 பாடல்களில் மருத்துவக் குறிப்புகள் பற்றி கூறப்படுகின்றது.

சந்திரனுக்கு இராக்கெட்டில் செல்லுதல் பற்றியும், சந்திர மண்டலத்தில் மனிதனின் எடை பாதியாக குறையும் என்பது பற்றியும் போகர் தன்னுடைய நூலில் குறிப்பட்டுள்ளார்.

**தட்டையிலே காத்தாடி தான் பறந்து சந்திரனார் மண்டலத்தின் அளவு மட்டும் நெட்டையிலே தான்**
**வாடும் நிலையான பட்ச சாதி பட்சத்தினால்**
**முட்டையிலே உள்ளூர்ந்த கருவை போல்**
**ஒருங்குடன் ஏற்றாகும் நெடுநேரம் தான்**
**சட்டையிலே நாற்பட்டு காற்றைக் கொண்டு**
**சடிதியிலே தாநெக்கும் பான்மை பாரே**

என்ற பாடலில் விண்கலம் தட்டையாக இருக்க வேண்டும் என்றும், முட்டை போன்ற வடிவத்தில் அமர்ந்துக் கொள்ள வேண்டும் என்றும், வெப்பத்தைத் தங்க பட்டால் ஆன ஆடையில் காற்றைப் புகுத்தி (நிரப்ப), அணிந்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறாது. மேலும், ஆகாயக் கூண்டு, நீராவி கப்பல், பாராசூட் போன்றவற்றை பற்றியும் குறிப்புகள் காணப்படுகிறது. பாராசூட்டை காற்றுக் குடை என்று கூறுகிறார்.

### போகர் எழுநூறில் இடம்பெற்றுள்ள செய்தி

கல்லெலி என்பது காட்டில் வாழ்வது. இது சுண்டெலியை விட அளவில் சிறியது. இந்த எலி வளையின் வாய்ப் பகுதியில் சிறிய சிறிய கற்களை சுற்றி வைத்திருக்கும். இந்த வளை இருந்தால், மக்கள் அதை தாண்டாமல் ஒதுங்கியே செல்வர். வளையை தாண்டினால், கால் தொடை இடுக்கான கவட்டையில் கட்டி வரும் என்பது உண்மை செய்தி. இதற்கான காரணம் யாருக்கும் தெரியாது. இந்த கல்லெலி பற்றிய வினாவுக்கான விடை சித்தர் நூல்களுள் ஒன்றான போகர் எழுநூறு என்ற நூலில் 693, 694 ஆவது பாடல்களில் காணமுடிகிறது.

கல்லெலி வளையின் உள்ளிருக்கும் போது, வளையின் வாய்ப் பகுதி சிறு சிறு கற்களால் மூடப்பட்டிருக்கும். இரவில் எலி மேயப் போகும் போது, ஒரு வேரை வாயில் வைத்துக்கொண்டு வளையின் உள்ளிருந்து வெளியேறும் போது வளையின் வாயிலில் உள்ள சிறு சிறு கறுகள் எல்லாம் வளையிலிருந்து வெளியில் வந்துவிடும். கல்லெலி இரவில் திரும்ப வந்து, வாயில் வேரை வைத்துக்கொண்டு மேயப்போகும். அப்போது வாயில் உள்ள அந்த வேரை கீழே வைக்கும். அதனை எடுத்து வந்து தூப தீபம் காட்டி வைத்துக்கொண்டு, பூட்டிய பூட்டுகளின் மேல் வைத்தால் பூட்டுகள் திறவுகோல் இல்லாமலே திறந்துக் கொள்ளும் என்பதை சித்தர் போகர் கூறியுள்ளார்.

ஆனால், அது என மூலிகையின் வேர் என்ற செய்தியை கூறவில்லை. மனிதனுக்கே தெரியாத மூலிகை வேரை ஒரு கல்லெலி தெரிந்து வைத்திருப்பது என்னே விந்தை!

கல்லெலி வளையைத் தாண்டினால் ஏன் கவட்டையில் கட்டி ஏற்படுகிறது என்றால் கல்லெலி வளையில் வைத்திருக்கும் வேர் காந்த சக்தி உடையது. நாம் பார்க்கும் காந்தம் இரும்பை மட்டுமே இழுக்கும். ஆனால், கல்லெலி வைத்திருக்கும் வேரோ, கல்லையும் சிதறச் செய்யும் சக்தி வாய்ந்தது. இந்த சக்தி வாய்ந்த மூலிகை வேரை வளையின் உள்ளே வைத்திருக்கும் போது, நாம் அந்த வளையை தாண்டும் நேரத்தில் மூலிகை வேரின் காந்தசக்தி கவட்டையில் படுவதால் நுட்பமான,

மென்மையான அப்பகுதியில் கட்டி தோன்றுகிறது.

### பழனி முருகப்பெருமானின் திருவுருவச் சிலை

முருகப்பெருமான் போகரின் எதிரிலே தோன்றி, உனக்கு அருள் கொடுத்த நான் எல்லோருக்கும் அருள் கொடுக்கும் படி உருவாக்க என்று கூற போகர் தன் சித்த வல்லண்மையால் நவ பாடாணங்களால் முருகப் பெருமானின் திருவுருவ மேனியை வடிவமைத்தார். பாடாணம் என்பது கொடிய நச்சுத்தன்மை கொண்டதாகும். அவற்றை நச்சுத்தன்மை அற்றதாக மாற்றி மருத்துவத் தன்மைக் கொண்டதாக மாற்றினார். கொடைக்கானலில் உள்ள பூம்பாறையில் எழுந்தருளியிருக்கும் குழந்தை வேலப்பரின் திருவுருவச்சிலையும் நவபாடாணத்தோடு ஒரு பாடாணத்தையும்சேர்த்து தச பாடாணமாக மாற்றியவர் போகரே ஆவார். இச்சிலைக்கு தினமும் சந்தனக் காப்பட்டு வைக்கப்படுகிறது.

### நவபாடாணங்களும் மருத்துவ குணங்களும்

நவபாடாணம் என்பது லிங்கம், பூரம், கந்தகம், வள்ளை பாடாணம், மிருதார் சிங்கி, ரசம், சிலாசத்து, வீரம், கவுரி பாடாணம் போன்ற ஒன்பது வகை பாடாணங்களால் உருவாக்கப்பட்டது பழனி முருகனின் திருவுருவச் சிலையாகும்.

### லிங்கம்

சிவன் திரிபுரத்தை எரித்த காலத்தில் நெற்றி கண்பொறி ரசம் இருக்கின்ற மலையில் பட்டு லிங்க பாடாணமாயிற்று என்று வரலாறு கூறுகின்றது. இது கனத்தன்மையுடையது. நெருப்பல் இட புகையும், தன்மையும், நீரில் கரையும் தன்மையும் உடையது. வாசனையும், ருசியும் கிடையாது. இதனை ஆண்குறி, ரசம், கர்ப்பம், சண்டகம் மணிராகம், வன்னி என்று வேறு பெயர்களாலும் அழைப்பர்.

இதன் மருத்துவ குணங்களாக நிலத்தில் எழுந்த பிணி நீங்கா கிரந்தி சலத்துடனே சூலை வெடித்தான் அகற்றும்.

**பழத்ததாம் சாதிலிங்கத்தின் குணத்தை சாட்டினேன்**
**சன்னிமுதல் இது சுரம்பு மேலெழுந்து**

இப்பாடல்களில் நீங்கா கிரந்தி சலநோய் தீரும் என்பதாகும்.

### பூரம்

இது ரசம் உப்பன் கூட்டால் செய்யப்படும் கூட்டுச் சரக்காகும். 64 பாடாணங்களில் ஒன்றாக கருதப்படாமல் இருந்தும் பாடாண் சரக்காகவே மருத்துவர்களால் கையாளப்படுகிறது. இது உப்புச்சுவையும், வெப்ப வீரியமும், கார்ப்பு பிரிவும் உடையது. கடுமையான நோய்களை எளிதில் நீக்கச் செய்யும். உடலில் உள்ள பித்த நீரை அதிகப்படுத்தும் தன்மையுடையது. சிறந்த கிருமி நாசினி செய்கையும் தேற்றும் தன்மையினையும் உடையது என்பதை பின்வரும் பாடலடிகளில் அறியலாம்.

**சசிவண்ண கற்பூரத்தில் சாதித்த கயஞ்சுவாசம்**
**பசுவெளிதாப சோபம் பௌத்திரம் பிளவை குட்டம்**
**பசிதரு கிராணியோடு வளரதி சாபமேகம்**
**இசிதரு மிசிவு பிலை இவை பல ரோகம் போமே**

பூரத்தினால் பௌத்திரம் பளவை குட்டம் போன்ற நோய்கள் நீங்கும். இதனை தூய்மை செய்து பயன்படுத்த வேண்டும்.

### கந்தகம்

பாடாணங்கள் 64 இல் ஒன்றாகும். இது காரிலை தாதம், பறையின் வீரியம், அதீத பிரகாசம், செல்வி விந்து, சக்தி, சக்தி பீசம், செந்தூரத்தூக்கு, ஆதி தேவியுரம், நாதம் , பொன்வருணை, இரச்சுரோனதம் என்று பலவகையாகக் கிடைக்கப்படுகின்றன. மலையில் பிறக்கின்ற சரக்காகவும் மருந்துவர்களால் கருதப்படுகின்றது. தாது, காவர, சங்கமப் பொருட்கள் இவற்றில் கலப்புற்றுள்ளது. மனமுடையதாகவும், கசப்புச்சுவையும், துவர்ப்பு சுவையும் உடையது. உடலினை தேற்றும் தன்மையுடையது. உடலின் வியர்வையினை பெருக்கும் தன்மையுடையது. மேலே உண்ணக் கொடுக்கும் கந்தகம் சிறுநீர், வியர்வை, பால் ஆகியவையின் மூலம் வெளியேற்றப்படுகிறது. சிறந்த மலமிலக்கியாகவும் செயல்படுகின்றது என்பதை மாதர் மகவை வளர்ப்பது போல உடம்பை ஆதரவாக தேற்றி யாக்கையினால்

மீதான மேவி சுடர் நோயின் வெப்பத்தை மாற்றுவதால் தேவியுர என்பதவுடல்........... தாய் குழந்தையை வளர்ப்பது போல கந்தகம் உடலினை வளர்க்கும் தன்மையுடையது. உடலில் எழுகின்ற வெப்பத்தினை தவிர்த்து, உடலினைக் காக்கும் தன்மையுடையதென தேரன் மருத்துவப் பார்த்ததாக செய்யுளில் குறிப்படப்பட்டுள்ளது.

**வெள்ளை பாடாணம்**

சங்கினைப் போன்ற ஒளியினையும், நிறத்தினையும் உடையதால் சங்கப்பாடாணம் என்று குறிப்பிடுவர். வெள்ளை பூண்டின் மணம் வீசும் வெட்டுவாய் கண்ணாடிப் போன்று மினு மினுக்கும் தன்மையடையது. பூமியிலிருந்து கிடைக்கக்கூடிய சரக்காக இது கருதப்படுகிறது. இது உடல் தேற்றியாகவும், நரம்புத் தளர்ச்சி நீக்கியாகவும் தமரகம், நுரையீரல் ஜன நேந்திரிய உறுப்புக்களுக்கு வண்மை தரும் பொருளாகும் செயல்படுகிறது. வெள்ளை பாடாணம் விடங்கடி தீரும் பூச வெள்ளை சுரம் போய் சன்னி தொல்லை தரும் நாசிப்புண் வாய்ப்புண் கிரந்தி போமுன்னே ஆசிக்கு ஆய் என்ற பாடலடி மூலம் அறியலாம்.

**மிருதா சிங்கி**

போகர் இதனை வைப்பன் கீழ் மூவகைப்படுவன என குறிப்பட்டுள்ளார். மிருதாசிங்கி, ரத்தசிங்கி, ஏமசிங்கி போன்ற மூன்று வகைகளாகும். மிருதா சிங்கியுடன் உடும்பு ரத்தமும், மற்ற சரக்குகள் சேர்ந்தது ரத்த சிங்கியாகும்.ரத்த சிங்கியுடன் தங்கம் சில சரக்குகள் சேர்ந்தது ஏமசிங்கியாகும். இது வைப்பு, துவர்ப்பு, குளிர்ச்சியுண்டாக்கி புழுக்கொல்லி ஆகிய செய்கைகளை செய்யும் என்பது பாடலடி மூலம் அறியலாம்.

**நிருதார சிங்கனது நல்ல வரைத்ததாகும்**
**உருவர் புடை கரபானோடு ஒருவிதமோ**
**சலசிரங்கு உண்ணும் தப்பாமல் ஆறிவிடும்**
**வேலொத்த கண்மயிலே**

மிருதார் சிங்கி உடம்பெங்கும் கிளைத்துப் பரவும் புடை கரப்பான் சிரங்கு கிரந்தி கூட்டம் கிரணம் ஆகியவற்றை போக்குமென்பது மேற்கண்ட பாடலடிகளால் அறியலாம்.

**ரசம்**

இரசத்திற்கு தாரம், தம், புண்ணியம், கர்ப்பம், காமம், சுத்திரன், சுக்கிலம், வேதம், மூலம், சிந்து, கனல், பூதம், நாகம், ஈசன் என பல்வேறு பெயர்களினை அறியலாம். (காரமே சூதம், புண்ணியம், கர்ப்பமாம் சாமம், சத்து, சூரியப் பகையாம் சாதி சூத்திரன், துள்ளி,ஈசன், வீரியன், சூழ்ச்சி, வெந்நீர், வெண்மருந்து, சீர் வரு விரதமென்று செப்பனார் ஒப்பலரோ). மேலும், இது அறுசுவையினை உடையது. இனிப்பனை சிறப்பாக கொண்டுள்ளது. எனவே இனிப்பு உடலினை வளர்ப்பது போல இதுவும் உடலினை தேற்றும் தன்மையுடையது. இது உலகில் தோன்றிய தாதுப்பொருட்களும், உயிர்ப்பொருள்களுக்கும் மேம்பட்டதாக உள்ளது. இப்போதும் ஏழாயிரம் இரண்டாம் காண்டத்தில் ரசம் ரசேந்திரன்,சூதம், மீசரகம், பிராதம் என ஐந்து வகைகளாக கூறப்பட்டுள்ளதை அர்த்தமாக்கும் அரசமளித்திடும் சுத்தமாக்கும் சுகத்தின் சுகத்தினை மிகத் தரும் புத்த மந்திர, பூத, பைசாசம் இத்தனைக்கும் இமயம் இனிதாகுமே. கமணம் பேகம் மூலமாய் புவனம் மீது பொருளும் அளித்திடும் சிவனும் அறிந்து செப்ப, உனது தவமே இயற்றினார் என்று சுத்தமாக்கும் சுகத்தினை மிகத் தரும் புத்த மந்திர பூத, பைசாச இத்தனைக்கும் இமயம் இனிதாகுமே. கவன வேகம் மூலமாய் புவனம் மீது பொருளும் அளித்திடும் சிவனறிந்து செப்ப, உனது என்ற தேரன் சேகரப்ப செய்யுளின் மூலம் அறம், பொருள், இன்பம் மூன்றையும் தருவிப்பதாகும்.

**கௌரி பாடாணம்**

சிவகாமி ஈஸ்வரி என்னும் வேறு பெயர்களின் மூலம் அழைக்கப்படுகிறது. தாளகத்தின் சக்தி என்றும், இயற்கையில் கிடைப்பது என்றும், செயற்கையில் தாளகத்திலிருந்து கிடைப்பது ஒரு வகை என்றும் நிறவேற்றுமைக் கொண்டு அவற்றை மூவகையாக பிரிக்கலாம். அவை 1.வெண்மை, 2. மஞ்சள், 3. சிவப்பு இதற்கு வெப்பம் அகற்றி, வாதம் அகற்றி செய்கைகளை உடையது. கீழ்க்கண்ட பாடல்களின் மூலம் காணலாம்.

**அவ்வரியோடு பாகல் இவையால் சுத்தி செய்து,**

**கௌரி பாடாணத்தை கண்டால் சௌரியம் செய்**
**வாதநோய் மந்தமோடு வந்த சுரங்கள் எல்லாம்**
**காதில் விழுந்தோடும் எனக் காண்**
என்று அறிவிக்கச் செய்கிறது.

**சிலாசத்து**

சிலாசத்து என்பது சீலை சத்து எனப் பிரித்து மலைகளின் இடுக்குகளில் இருந்து கிடைகக்க் கூடிய சத்து எனப் பொருள்படும். இதில் இரண்டு வகை உண்டு. அவை,

1. **கற்பூர சிலாசத்து**
2. **கோமுத்ர சிலாசத்து**

இது சூத்திரத்தினையும், ஆட்டு மாமிசத்தினையும் கரைக்கும் தன்மை உடையதால் இதை மாங்கிசதிராகி என்றும், லோகத்தினையும் எலும்பினையும் கரைக்கும் தன்மை உடையதால் இதனை அஸ்தி திராவி என்றும் அழைக்கின்றனர்.

**வீரம்**

மன்மத சங்கார காலத்திற்கு சிவன் நெற்றிக் கண்ணில் இருந்து, நெருப்புப் பொறி சுதம் இருந்த இடத்தில் அது கொழுந்து படர்ந்து வீரமாயிற்று. இது கைலாசத்துக்கு அருகே சூழ்ந்த மலையில் உற்பத்தியாகின்றது. இது மீனாட்சி மைந்தன் கொச்சி, வீரன் பூவிந்து நாதம், சேவகன், சரக்கு சுண்ணம், பீரங்கி பாசானம், சாரத்தின் சத்ரு என பல பெயர்களினால் அழைக்கப்படுகிறது. இது கொடிய நஞ்சாகும். எனவே தூய்மை செய்தே கையாள வேண்டும். இவற்றிற்கு கார்ப்பும், உப்பு சுவையும் உடையது. மேலும் வெப்ப வீரியமும் உடையது. இது உடல் தேற்றி கிருமி நாசினி அழுகல் அகற்றி ஆகிய செய்கைகளை உடையது.

**குன்மம்ஒடு குட்டம் கொடிய வனதிரட்டு**
**துன்மாமிச பெருக்கும் சூலைநோய் வன்மையுறு**
**காமிய புண்ணாதி நோய்கண்ட சவ்வீரமும்**
**சாமி நாதத்தை செறும்.**

குன்மம், குட்டம், சூலைநோய் துர்மாமிச பெருக்கம் போன்ற நோய்களை நீக்கும் தன்மையுடையது. நவபாடாணத்தால் உருவாக்கப்பட்ட முருகனின் திருமேனி மீது பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து பிரசாதமாக பழனியில் வழங்குகிறார்கள். இதனை உண்பவர்களுக்கு தீராத அனைத்து நோய்களும் தீர்க்கும் தன்மையுடையதாகும். இது பஞ்ச அமிர்தங்களை உள்ளடக்கியது. சிறுமலைவாழை, பேரிச்சை, தேன், கற்கண்டு, நாட்டுச்சக்கரை இவற்றினை ஒன்றாக்கப்பட்டு பஞ்சாமிர்தம் தயாரித்து முருகனின் திருமேனியில் அபடேகம் பட்டு வழங்கப்படுகிறது. அதனை உண்பதால் உடலில் வலு உண்டாகும் என்றும், வாயில் உண்டாகும் இளைப்பு நோய் போகும் என்றும், உடல் அழகு பசியும் தொனியும் உடலமைப்பும் உண்டாகும். காச நோய்க்கான களகாசம் உபசாவத்தையும் போக்கும் தன்மையுடையது. விந்துவினை இருக்கும் கெட்டி கட்டு மரணத்தினை உண்டாக்கும் கபத்திலிருந்து நோயினை போக்கும் தன்மையுடையது. இத்தகைய பஞ்சாமிர்தத்தினை கண்டறிந்தவரும் போகர் என்பதே குறிப்படத்தக்கது.

அறிவியல் செய்திகளான விண்கலம் முறைகள் குறித்தும், சந்திர மண்டலத்தில் மனிதனின் எடை பாதியாக குறையும் என்ற செய்தியும் போகர் தம் பாடல்களின் மூலம் குறிப்பட்டுள்ளார். மூலிகை மகத்துவம் நிறைந்த வேர்கள் குறித்தும், பாடாணங்களின் மருத்துவ குணங்களும், அவற்றின் பயன்களும் இவர் தம் நூல்களின் மூலம் அறிய முடிகிறது. போகர் தம் அறிவியல் மதி நுட்பத்தினை தம் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் என்பதை சான்றுடன் காணமுடிகிறது.

# அமுதத்தமிழும்அப்துல்ரகுமானும்

**கோ.சாந்தலட்சுமி**
முனைவர்பட்டஆய்வாளர்,
4/39-1,கணபதி நகர்,
கெஜல்நாயக்கன்பட்டி,சேலம்-1.
இமெயில் :30thangamail@gmail.com
mailto:30thangamail@gmail.com>

**முன்னுரை :**

“கல்தோன்றிமண்தோன்றாக் காலத்தேவாளோடு
முன்தோன்றிமூத்தகுடி”

என்கிறார்.புறப்பொருள் வெண்பாமாலைஐயனாரிதனார்.அவர்வழி நின்று தமிழ்மொழியின் தனிப்பெருமையையும், இன்றைய தமிழ்மக்கள் அறியாத சிறப்புக் கூறுகளையும் அணுவணுவாக அலசி ஆராய்ந்து கூறியுள்ளார் கவிக்கோ அப்துல்ரகுமான் அவர்கள். இவரின் கவிதைகளை வாசிக்கும் தோறும் தமிழ்மேல் காதலும் ’எம்மொழிசெம்மொழி என்ற இறுமாப்பும் நெஞ்சில் குடிகொள்கிறது.

கோவைமாநகரில் 23-27 ஜுன் 2010 உலகச் செம்மொழி மாநாட்டிற்காக தமிழின் செவ்வியல் பண்புகளை விளக்கும் கவிக்கோவின் தமிழமுதக்கலசத்தின் ஒருதுளியாம் எம்மொழிசெம்மொழி எனும் கட்டுரைத் தொகுப்பு. அதில் நான் பருகிய ஒருதுளி உங்கள்முன்.! ’எம்மொழி செம்மொழி என முதலுரையாய் அமைந்த கவிதையை ஆய்ந்து நோக்க, முதலுரையே முழுஉரையாய் உயிர்த்தெழுவதை உரித்தாக்குகிறேன் உங்கள்முன்.

**அமுதமொழி :**

ஒலிக்கடலில்முதன்முதலாய்

உதித்துவந்தபேரலையே!

கலைக்கடலைநாவினால்

கடையவந்தசெவியமுதே!

பாற்கடலை கடைந்து தேவர்கள் அமுது உண்டது போல கலைக்கடலை நாவினால் கடைவதால் வரும்தமிழ்,செவிக்குஅமுதாகிறது. இந்தக்குறியீட்டு உத்திமிகச்சிறப்பு! ஆம்! யோசித்தேன், தமிழ்எனும் தமிழே நாவினைச் சுழற்றிக் கடைந்தால் தானே சுகமாய் பிறக்கிறாள்.

அறிஞர்.பா.வே.மாணிக்கநாயகர்ஒருமுறை உலகப் பெருமொழிகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஆயிரம் சொற்களை எடுத்து, அவற்றை ஒலிப்பதற்காகச் செலவாகும் மூச்சை மூச்சுமானி கொண்டுஅளந்துபார்த்தார். அப்படிப்பார்த்ததில் சமஸ்கிருதத்தை ஒலிக்க அதிகமான மூச்சும், தமிழை ஒலிக்க மிகக்குறைந்த மூச்சும் செலவாவதைக் கண்டறிந்தார். ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனை மூச்சு என்று இயற்கை வரையறுத்துள்ளது. மூச்சை அதிகமாக செலவிடுகிறவனுக்கு ஆயுள்குறைவு. தமிழ் பேசும்போது மூச்சு மிகக்குறைவாகவே செலவாகிறது.

அமிழ்தத்தை உண்டவர்க்குப் பிணி,மூப்பு,சாக்காடு மூன்றும் வாரா என்கின்ற புராணங்கள்.அதனால்தானோ தமிழைசெவியமுதம்என்கிறார்கவிஞர். மேலும் திருவாசகத்தேன் எனவும், காதருந்தும்கள் எனவும் படிமமாக்குகிறார்.

**செம்மொழி :**

எம்மொழிக்கும்மூத்தவளே

எம்மொழியாய்வாய்த்தவளே

செம்மொழியாய்மொழிகளுக்குள்

செம்மாந்திருப்பவளே

செம்மொழிக்கான வரையறையாக பழங்கி ரேக்க ,இலத்தீன் இலக்கியங்களின் தொன்மை, ஒத்திசைவு, தெளிவு,தன்னடக்கம்,கண்ணியம்,இலட்சியம், பகுத்தறிவு,ஒழுங்கு கண்ணோட்டம் ஆகியபண்புகள் காணப்படுகின்றன. இவற்றோடு தனித்தன்மை, பொதுமைப்பண்பு,தாய்மை, நடுவுநிலைமை, உயர்சிந்தனை,இலக்கியவளம்,பண்பாட்டு வெளிப்பாடு ஆகியவற்றையும் பெற்று, தமிழ் செம்மொழியாய் செழித்து நிற்கின்றாள். 2004 செப்டம்பர் 17ஆம் நாள் மத்தியஅரசால் 'செவ்வியல்மொழி என அங்கீகாரம் பெற்ற முதல் மொழியாய் செம்மாந்திருக்கின்றாள். அதனாலேயே தமிழை உயர்மொழி, தனிமொழி, உயிர்மொழி, மெய்மொழி எனவும் கொண்டாடுகிறார் நம் கவிஞர். எம்மொழி செம்மொழி

எனக்கேட்டால் ,தலைநிமிர்ந்து

'எம்மொழி செம்மொழி'

எனச் சொல்லும் புகழ் கொடுத்தாய் எனக்கூறும்

இவ்வரிகளில் எம்மொழி செம்மொழி? என வினாவாகவும், எம்மொழி(எந்தன்மொழி) என விடையாகவும் இருசீர் வடிவக்கவிதையாய் இதயம் கொள்ளை கொள்கிறார். இங்கு தமிழைச் சிலிர்ப்பதா ..?இல்லை, கோர்த்தெழுதிய தமிழனைச் சிலிர்ப்பதா..?

**உயிர்மொழி உயர்மொழி:**

மேல்வாய்பிரசவித்த

மெல்லியஒலி,வளர்ந்து

பால்வாய்ப்பருவமுறப்

பைந்தமிழேநீபிறந்தாய்

இதனை கவிக்கோ பூமியின்அமிர்தம் என்னும் கட்டுரையில் நாக்கினைத் தந்தையாகவும், மேல்வாயினை தாயாகவும் உருவகப்படுத்தி,மேல்வாய் பிரசவித்த மெல்லியஒலி எனத் தாய்மையைப் படிமமாக்கி இருப்பது பெண்ணாகிய என்னை பெருமை கொள்ள வைக்கிறது.

மேலும்,வல்லினமும்மெல்லினமும்

வளமானஇடையினமும்

நல்லினமாய்ஒன்றுபட்டு

நடக்க வழி செய்தவளே! என்று தமிழ் எழுத்துக்களின் வல்லின, மெல்லின, இடையினப் பிரிவுகளின் சிறப்புகளை சிலாகிக்கிறார்.இப்பிரிவுகளில் வல்லினம் ஆண் எனவும், மெல்லினம் பெண் எனவும்-சிறப்பிப்பதுடன் வளமானஇடையினம் என்னும் வார்த்தையின் குறும்பை ரசிக்கும்போது இதழோரம் மலர்கிறது குறுஞ்சிரிப்பு!

**முப்பது ஒலிகளுக்குள் ஒப்பில்லாத மொழி :**

முப்பதே ஒலிகளுக்குள்

முழுவுலகும் அளப்பவளே

ஒப்பதே இல்லாத

உயர் இனத்தின் உயிர்மூச்சே

தமிழ் எழுத்துக்களை உயிர், மெய் என இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். உயிரெழுத்து பன்னிரண்டும், மெய்யெழுத்து பதினெட்டும் சேர்ந்து ஆக மொத்தம் முப்பது எழுத்துக்கள். வேறு எம்மொழியிலும் எழுத்துக்கள் இவ்வாறு வகை பிரிக்கப்பட்டுப் பெயரிடப்படவில்லை. உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் சேர்ந்தியங்குவதால் 'உயிர்மெய் எழுத்துகள்பிறக்கின்றன.

இலக்கணநூலார் உயிரெழுத்துக்களை ஆண்எழுத்து என்றும், மெய்யெழுத்துக்களை பெண்எழுத்து என்றும் கூறுகின்றனர். மனிதயினத்தில் ஆதாம் என்ற ஆணே முதலில் தோன்றியவர் என்றும் ஏவாள் என்ற பெண் அவருக்குப் பின்னால் தோன்றியவர் என்றும் பைபிளும், குர்ஆனும் கூறுவதை ஒப்புநோக்கி,

நயந்த மொழிகளிங்கு நாலாயிரமிருந்தும்

உன்னைப்போல் உயிர்மெய்யோடு இருப்பவர் யார்? என வினவுகிறார்.

**எம்மதமும் சம்மதமான மொழி:**

ஏசுமதத்தார் ஈந்ததொரு கொள்கை, மக்காம தீனாவின் மக்காதகொள்கை, சமண பவுத்தச் சமயத்துறவிகள் கொள்கை எனச்சமயங்கள் அனைத்தையும் சமமாக மதித்தவள்தமிழ்த்தாய் என்று மனம் நெகிழ்கிறார் கவிஞர்.

முடிவுரை :

உன்னாலே பிறந்தோம்

உன்னாலே வளர்ந்தோம்

அகம்நீ புறம்நீ ஆருயிரும் நீ

முகம்நீ முகவரிநீ முடியாத புகழும்நீ

என்று கூறி தமிழர்கள் தமிழினத்தின் தொன்மையையும், பெருமையையும் உணர்ந்து முகமும் ,முகவரியும் உடையவர்களாய் வாழவேண்டியஅவசியத்தையும் , அவசரத்தையும் ஆசானாய் நின்று அறிவுறுத்துகிறார். அவரின் வழிநடப்போம் அன்னை மொழிகாப்போம்!

# அண்ணாவின் சிறுகதைகளில் தொழிலாளர் சிந்தனைகள்

**ஆ.ராஜசேகர்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
த.பே.மா.லுத்தரன் கல்லூரி,
பொறையார்.

**முன்னுரை**

அண்ணாவின் படைப்புகள் பன்முகத்தன்மை கொண்டவையாகும். காப்பயம், நாடகம், கவிதை, நாவல், சிறுகதை, விமர்சனம், கட்டுரைகள், வாதம்-பரதிவாதம், கடிதங்கள் எனப் பல படைப்புக்களையும் காணமுடிகின்றது. இவற்றில் சிறுகதை என்பது மிகப்பெரிய எண்ணிக்கையுடையதாக 108 சிறுகதைகளை அண்ணா எழுதியுள்ளார். இக்கதைகளில் சமுதாய சிந்தனைகள், பெண் கல்வி, பெண்கள் மேம்பாடு, பெண் உரிமை, பகுத்தறிவு, மனித வளம், தொழிலாளர்கள், உழைப்பு, வேலை ஊதியம், ஆண்டான் அடிமைப் போக்குகள் எனப் பலவற்றையும் பற்றி எழுதியுள்ளார். இவற்றின் அடிப்படையில் குறிப்பாக இக்கட்டுரை தொழிலாளர்களைப் பற்றிய அண்ணாவின் சிந்தனைகளை ஆராய்கின்றது.

**திரு.வி.க. - பெரியார் - அண்ணா**

திரு.வி.க. 7.12.1917ல் தேசபக்தன் இதழைத் தொடங்கியுள்ளார். இதில் தொழிலாளர் சங்கத்தின் அவசியம் என்ற கட்டுரையை 6.9.1918ல் எழுதியுள்ளார். இதில் மேலை நாடான இங்கிலாந்தில் தொழிலாளர் நிலையையும், இத்தேவை இங்கும் வேண்டும் எனவும் குறிப்பட்டுள்ளார். மேலும் சென்னை தொழிலாளர் நிலை (10.3.1918), தொழிலாளர் கூட்டமைப்பன் தேவையைப் பற்றி 30.10.1918லும், தொழிலாளர் இயக்கங்களைப் பற்றி 29.1.1919லும், முதலாளிகளும் தொழிலாளிகளும் என்ற கட்டுரையை 5.12.1918லும் எழுதியுள்ளார். இந்த காலகட்டம் திரு.வி.க.வும், தந்தை பெரியாரும், காங்கிரஸ் இயக்கத்தில் பணியாற்றியதனால் நண்பர்களாக விளங்கியுள்ளனர். இதனால் இருவருமே தொழிலாளர் நலனில் அக்கரையுடையவர்களாகக் குரல் கொடுத்து வந்துள்ளனர். இது குறித்து தேசபக்தன், குடியரசு இதழ்களில் வெளிவந்த கருத்துக் குறிப்புக்கள் அண்ணாவிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன (திரு.வி.க. தமிழ்க்கொடை - 171-189-பாகம் 15).

**முதல் தொழிலாளர் சங்கம்**

இந்தியாவிலேயே முதல் தொழிலாளர் சங்கம் சென்னைத் தொழிலாளர் சங்கம் என்ற பெயருடன் 27.4.1918இல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன் துணைத் தலைவராக திரு.வி.க. பணியாற்றியுள்ளார். இக்காலக்கட்டத்தில் பெரியாரின் தொண்டுகளும், பணியும் மக்களின் பகுத்தறிவு சிந்தனையுடன் கூடிய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை முன்வைத்ததாக இருந்துள்ளன. இவற்றில் தொழிலாளர்கள் பற்றிய கருத்துக்களையும், மனித உழைப்பின்

தனித்துவத்தையும் பற்றிய கருத்துக்களையும் மக்களிடமும், ஆலைத் தொழிலாளர்களிடமும் திரு.வி.க.வும், பெரியாரும் பரப்பி வந்துள்ளனர். பற்காலத்தில் இவற்றையெல்லாம் அனுபவப்பூர்வமாக உணர்ந்த அண்ணா 1938 ஆம் ஆண்டு முதல் தான் எழுதிவந்த சிறுகதைகளில் சிலவற்றில் தொழிலாளர்களின் துயரங்கள் பற்றிய தனது சிந்தனைகளை எழுதியுள்ளார் (திரு.வி.க. தமிழ்கொடை 23/386). 11.10.1919இல் பெரியாரும் திரு.வி.க.வும் நண்பர்களாகியுள்ளனர்.

### முதல் தொழிலாளர் மாநாடு

அன்றைய சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை சென்னையில் லாட் கோவிந்ததாஸ் அரண்மனையில் 1920 ஆம் வருடம் மார்ச் மாதம் 21 ஆம் நாள் திவான் பகதூர். குந்தி கேசவப் பள்ளையவர்கள் தலைமையில் முதல் தொழிலாளர் மாநாடு தொடங்கியுள்ளது. இதில் திரு.வி.க.வரவேற்புரை ஆற்றியுள்ளார். இம்மாநாட்டில் தேசியத் தலைவர்களும், திரு.வி.க. உள்படத் தமிழகத் தலைவர்களும் ஆற்றிய உரைகளும், இது குறித்து விடுதலை, குடியரசு ஏட்டில் பெரியார் எழுதியத் தலையங்கங்களும், அவரது கருத்துக்களும் அண்ணாவிடம் மிகப்பெரியத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இக்கருத்துக்களையெல்லாம் பற்காலத்தில் நன்கு உணர்ந்தும், உள்வாங்கியும் ஆழ சிந்தித்த அண்ணா 14 ஆண்டுகள் கழித்து 1934 முதல் தான் எழுதியச் சிறுகதைகளில் பரவலாகப் பதிவு செய்துள்ளார் (திரு.வி.க. தமிழ்கொடை 16/ ப.267).

### தொழிலாளர் பற்றிய சிறுகதைகள்

அண்ணா எழுதியுள்ள 108 சிறுகதைகளில் குறிப்பாக ஐந்து சிறுகதைகளில் தொழிலாளர் குறித்த சிந்தனைகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. இவையனைத்தும் அக்காலத் தொழிலாளர்களின் சமூக நிலையைப் பரதிபலிக்கின்றன.

| | |
|---|---|
| செவ்வாழை | - 1949 |
| ரொட்டித்துண்டு | 1953 |
| பக்த பக்காத் திருடன் | - 1950 |
| பூபதியின் ஒருநாள் அலுவல் | - 1946 |
| பொங்கள் பரிசு | - 1966 |

என்பனவற்றில் உழவன் முதல் மில் தொழிலாளி வரையும் நிலவக்கூடிய ஆண்டான் அடிமைப்போக்கு, ஏழை-பணக்காரன் எனும் ஏற்றத்தாழ்வும், வேலை நேரம், கூலி குறைபாடுகள், ஆண் பெண் தொழிலாளிகள் எனும் ஏற்றத்தாழ்வும், பாரபட்சமான பணி, ஊதியம், நேரம் சார்ந்த நடைமுறைகள், இவற்றிற்கான தீர்வுகள், தனிமனித உழைப்பலும், குழு உழைப்பலும் நிலவுகின்ற பழி வாங்கும் போக்குகள் என்பன உள்படப் பல்வேறு சிந்தனைகளையும் இச்சிறுகதைகளில் காணமுடிகின்றது.

ரொட்டித்துண்டு என்ற சிறுகதை14.1.1953 இல் அண்ணா எழுதியுள்ளார்.இதில் ஆலை முதலாளி ராவ் பகதூர் ரங்கநாத பூபதிக்குரிய 'முதலாளிய குணம்' ஆணவம், உழைப்புச் சுரண்டல், ஏமாற்று வேலை உள்பட முதலாளி, தொழிலாளி வர்க்கச் சிந்தனைகளை அண்ணா குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

ஏழையின் வியர்வை சிந்தாமல் பூமிக்கு அடியில் தூங்கிக் கொண்டிருக்கும் வைரமும், தங்கமும், கடலுக்கு அடியிலே படுத்திருக்கும் முத்தும், மணியும் உனக்கு எப்படி கிடைத்தது (ப.624).

ஏழையின் கைத்திறன் இல்லாத ஒரு பண்டம் உண்டா? காட்டு (ப.624).

ஏழைகளைக் கசக்கிப் பழிந்து பணக்காரன் குவிக்கும் பவுன்கள் மூட்டை மூட்டையாக மாளிகைகளில் உள்ளன (ப.626)

இவை போன்ற சிந்தனைகள் ஏழைத் தொழிலாளியின் வறுமை, சரியான கூலி கிடைக்காத பாரபட்சமான நிலை போன்றவற்றை அண்ணா சுட்டிக்காட்டியுள்ளதை அறியமுடிகின்றது.

அண்ணா 1.5.1949இல் எழுதிய சிறுகதையாக செவ்வாழை விளங்குகின்றது. இதில் ஆண்டான் அடிமை முறையிலான தொழிலாளி - முதலாளி உறவில் பண்ணையார் என்ன சொன்னாலும் அதனை மறுக்கக் கூடாது. அவர் மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டும் என்ற பழக்கம் இருந்ததை அண்ணா புலப்படுத்தியுள்ளார்.

இக்கதையில் கூலித் தொழிலாளி செங்கோடன் பண்ணையார் பரந்தாமன் வயலில் வேலை செய்து வருகின்றான். அத்துடன் தன் வீட்டில் ஒரு செவ்வாழையை ஆசை ஆசையாக வளர்த்து வருகின்றான். இதன் பழத்தை செங்கோடன் குடும்பமே எதிர்பார்த்து காத்திருந்தது. இந்த நேரத்தில் பண்ணையார் பரந்தாமன் மருமகள், முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழா வந்தது. அதற்காக செங்கோடனின் செவ்வாழைக் குலையைக் கணக்கன் சுந்தரம் வெட்டி எடுத்துச்

சென்றான். பண்ணையார் வீட்டிற்கு என்றதும் மறுக்க முடியவில்லை. இதனால் செங்கோடனின் குடும்பமே வருந்தியது. இவற்றால் பண்ணையாருக்குத் தொழிலாளி பணிய வேண்டுமென்ற நிலையிருந்ததை உணர முடிகின்றது.

1966 ஆம் வருடம் பொங்கல் தினத்தன்று (14.1.1966) பொங்கல் பரிசு என்ற சிறுகதையை அண்ணா எழுதிய வெளியிட்டுள்ளார். இதில் ஒரு தொழிலாளியின் கூடுதல் பணிச்சுமையையும், அதற்குப் போதிய ஊதியம் தரப்படாததையும், கூடுதல் ஊதியம் தருவதாக முதலாளி வாக்குறுதி கொடுத்திருந்ததையும், அதை அவர் நிறைவேற்றாததையும் தொழிலாளியின் கடிதம் மூலமாக அண்ணா தெரிவித்துள்ளார். ஆனால் அந்த முதலாளி எந்தவிதமானப் பலனையும் தொழிலாளிக்கு வழங்காமல் கம்பெனி காகிதத்தில் கடிதம் எழுதியதால் கம்பெனி ஒழுங்காற்று விதி 76இன் படி நடவடிக்கை எடுக்க செயல்பட்டதையும் அண்ணா சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் முதலாளிகள் தொழிலாளிகளைப் பழிவாங்கும் போக்கு பல இடங்களில் நடப்பதை உணர முடிகின்றது. இதைச் சுட்டிக் காட்டுவதன் மூலமாக அண்ணா தொழிலாளர்களின் துயரங்கள் நீக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை முன்வைத்துள்ளதை உணர முடிகின்றது.

ஏழையின் சிரிப்பலே இறைவனைக் காண்போம் எனும் தாரகமந்திரத்தையும், உழைப்பாளர்களின் கண்ணீரைத் துடைக்கும் முற்போக்கு சிந்தனையையும் அண்ணா தன் உயிர் மூச்சாகக் கொண்டிருந்ததை அவரது பேச்சிலும், சிறுகதைகள் உள்ளிட்டப் படைப்புக்களிலும் காணமுடிகின்றது.

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காததினாலேயே மனிதன் ஏழையானான் என்ற கார்ல்மார்க்சின் சிந்தனையையும் (ப.19),

உழைப்பாளியின் திறமையை சம்பளம் தீர்மானிக்க முடியாது. நல்ல உழைப்பற்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் தகும் என்ற வேதாத்திரி மகரிஷியின் உரையும் (ப.21),

உழைப்பவனே உயர்ந்தவன் என்ற பெரியாரின் சிந்தனையையும் அண்ணாவின் சிறுகதைகளில் காணமுடிகின்றது (ப.64).

**முடிவுரை**

அண்ணா 108 சிறுகதைகளை எழுதியுள்ளார். இவை பன்முகத்தன்மை கொண்டதாக இருந்தாலும், அவற்றில் தொழிலாளர்கள் பற்றிய சிந்தனைகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

தொழிலாளர்களின் பணிச்சுமை, குறைவான ஊதியம், உழைப்பிற்கு ஏற்ற ஊதியமில்லாத ஏற்றத்தாழ்வு, பணியிடங்களில் நிலவும் அவமானம், உள்ளிட்டனவற்றைப்பற்றியும் எழுதியுள்ளார்.

ஆண்டான் - அடிமையையுணர்த்தும் முதலாளி-தொழிலாளி எனும் ஏற்றத்தாழ்வு, பண்ணையார் நிலங்களிலும், வீட்டிலும் உழைக்கும் தொழிலாளியின் அடிமை நிலை, முதலாளியை எதிர்த்து பேசமுடியாத செவ்வாழை செங்கோடன் போன்றவர்களின் தர்மசங்கடம் நிறைந்த சூழலைப் பற்றியும் அண்ணா உணர்த்தியுள்ளார்

# பெண் கவிஞர்களின் நவீனக் கவிதைப் புனைவுகள்

**மு.அபிராமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
(பகுதி நேரம்)தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி
நாமக்கல்-2

தமிழ்ப் பெண் கவிஞர்களின் நவீனக் கவிதைப் புனைவுகளின் செல்நெறி பற்றிய அடிப்படைத் தகவல்களை அளிக்கும் வகையிலும் இத்தகு போக்குகளுக்குக் காரணமாக அமைந்த பின்புலத்தை விளக்கும் விதத்திலும் இக்கட்டுரை அமைகிறது. பெண் கவிஞர்களின் கவிதைப் புனைவுகள், நவீனக் கவிதைகளும் பெண்ணியச் சொல்லாடல்களும், பெண்ணியக் கவிதைகளின் தன்மையும் தகைமையும், பெண்ணியக் கவிதையும் பெண்ணிய வாசிப்பும், பெண்ணியக் கவிதைகளின் புதிய போக்குகள், சமகாலச் சூழலோடு பொருந்தும் கவிதைப் புனைவுகள், நவீனக் கவிதைகளும் பெண்ணியப் புரிதல்களும் எனப் பல தலைப்புகளில் நவீனக் கவிதைகளின் தன்மை பற்றி விளக்கும் விதத்தில் இக்கட்டுரை ஆராய்கிறது

**பெண் கவிஞர்களின் கவிதைப் புனைவுகள்**

1990களில் நவீனத் தமிழ்க் கவிதைப் புனைவுலகில் பெண் கவிஞர்களின் பங்களிப்பு எண்ணிக்கையின் அடிப்படையிலும் வீச்சின் தாக்கத்திலும் வலுவானதாக உள்ளது. குறிப்பாக, மாலதிமைத்திரி, குட்டிரேவதி, சல்மா, கனிமொழி போன்றவர்கள் பெண்ணிய அறிவு சார்ந்த தளத்தில் இயங்குவது தமிழ்க் கவிதைத் துறைக்குப் புத்தொளி ஊட்டியுள்ளது.

பெண்ணியச் சிந்தனையாளர்கள் ‘ஆண்மைய’ச் சொல்லாடல்களின் தொகுப்பாக மொழியைக் கருதுகின்றனர். ஒரு படைப்பு ஆண்பால் வாசகரை முன்நிறுத்தியே உருவாக்கப்படுகிறது என்று திட்டவட்டமாகக் கூறுகின்றனர். அத்தகைய படைப்பால் பெண்பால் வாசகரிடம் ஆணுக்கு இசைவான தன்னிலை கட்டமைக்கப்படுகிறது. கல்வி, சமூகம், ஊடகம் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து இத்தகைய தன்னிலைக் கட்டமைப்பைச் செய்கின்றன. இத்தகைய சூழலில் ஒரு படைப்பாளியாக உருவாகும் பெண்பால் படைப்பாளர் உருவாக்கும் படைப்பும் தனித்த பார்வை அற்று ஆண்பால் படைப்பாளர் உருவாக்கும் படைப்பைப் போன்றே அமைகிறது.

**நவீனக் கவிதைகளும் பெண்ணியச் சொல்லாடல்களும்**

ஆணாதிக்க நோக்கில் பெண்ணின் உடல்சாரா ஆசைகள் அனைத்தும் இழிவானதாகவே கருதப்படுகிறது. ஆதலால் சமூக, பொருளாதாரத் தளங்களில் இருந்து ‘பெண் விடுதலை’ என்ற கருத்தாக்கம், இத்தகைய மாற்றுப் பார்வை - மரபானவையிலிருந்தும் விடுதலை பெறுதல் என்பதனை வலியுறுத்துகிறது. பால் சார்ந்த இத்தகைய ஆதிக்கத்திலிருந்தும் விடுதலை

பெறுவதாக அமைவதுதான் பெண்ணியப் பார்வையாக அமையும். இதனால்தான், பெண்களின் எழுத்தில் தங்களது உடம்பை எழும்படிப் பெண்ணியச் சிந்தனையாளாசுகள் பெண் கவிஞர்களை வற்புறுத்துகின்றனர்.

பெண் தன் உடலை எழுதுதல், பெண்மையச் சொல்லாடல்களை உருவாக்குதல், ஆணாதிக்கத்திற்கும் குடும்ப நிறுவனங்களின் அதிகாரத்திற்கும் எதிரான நிலைப்பாடு எனும் நவீனப் பார்வைகளை உள்வாங்கிக்கொண்டு மாலதி மைத்ரி, சுகந்தி சுப்பரமணியன், குட்டிரேவதி, சல்மா, வெண்ணிலா, உமாமகேஸ்வரி, சுகிர்தராணி போன்ற பெண் கவிஞர்கள் கவிதை படைத்து வருகின்றனர்.

**பெண்ணியக் கவிதைகளின் தன்மையும் தகைமையும்:**

பெண் தனது உடலைப் பற்றிக் குற்ற உணர்வும் தாழ்வு மனப்பான்மையும் கொள்ளும்படி ஆணாதிக்கச் சமூகத்தின் கருத்தாக்கங்கள் அமைகின்றன. இதனால் பெண்ணின் வேட்கைகள் மறைமுகமாக நனவிலி மனத்தில் தேக்கி வைக்கப்படுகின்றன. நனவிலி மனத்திலிருக்கும் இத்தகைய வேட்கைகள் கனவுகளைப் போன்று குழம்ப நிலையில் பெண் படைப்புகள் வெளிவருகின்றன.

நனவு நிலையில் கல்வி, பண்பாட்டு மரபு போன்ற தடுப்புகளால் இருத்தி வைக்கப்பட்ட படைப்புகளே வெளிப்படும். இவை, ஆண்பால் நோக்கில் அமைபவரை. இவ்வகையில் அமையும் பெண் எழுத்துக்களால் எவ்வித சலனங்களும் எழுவதில்லை. நனவிலி நிலையில் வெளிப்படும் படைப்புகளுக்குக் கருத்தியல் அடிப்படையில் எவ்விதத் தடையும் இருப்பதில்லை. இத்தகைய படைப்புகள் பெண் மைய நோக்கில் வெளிப்படுபவை. இவை பல்வேறு சலனங்களை எழுப்பவில்லை.

இதுபோன்ற அதிர்வுகளை ஆணாதிக்கச் சமூகத்தில் ஏற்படுத்துவதால்தான் வொ்சுஜினியா வுல்ஃப் போன்றவர்கள் நனவிலி நிலையிலிருந்து வெளிப்படும் பெண் எழுத்து முறையை ஆதறிக்கின்றனர். இவ்வெழுத்துக்கள்தான் ஆணின் சுய இருப்பை ஆண்நோக்கில் அமைந்த 'பெண்மை' கருத்தாக்கத்தை அழிக்கவல்லவை என்று கருதுகிறார்கள்.

**பெண்ணியக் கவிதையும் பெண்ணிய வாசிப்பும்.**

தற்காலச் சூழலில் தமிழ்ப் பெண் கவிஞர்களின் தீவிர படைப்புக்கத்தால் பெண்ணிய வாசிப்பு எனும் நிலையைத் தாண்டி, 'பெண் எழுத்தாளர்கள், அவர்களின் படைப்பு' எனும் நிலை எட்டப்பட்டுள்ளது. இதன் வழியாகப் ப்ரெஞ்சுப் பெண்ணியவாதிகள் விவாதித்த உடலை எழுதுதல் என்கிற போக்கு தமிழ்ப் பெண் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளன.

ஆணின் 'நான்' தன்னை இப்பிரபஞ்சத்தின் மையமாகக் கட்டமைத்துக் கொண்டிருக்கும் நிலையில் பெண்ணை 'மற்றவை'யாக்குகிறது. இதை மதம், தத்துவம், மொழி, புராணச் செய்திகள், வரலாறு போன்றன உறுதிப்படுத்துகின்றன. இந்நிலையில்தான் ப்ரான்சின் முதன்மையான பெண்ணியச் சிந்தனையாளராகக் கருதப்படும் ஹெலன்சிசு, "பெண் தன் உடலின் ரகசியங்களை, ஆணினின்றுமான வித்தியாசங்களை மொழிக்கு - பிரதிக்குக் கடத்த வேண்டும்" என்று குறிப்பட்டுள்ளார்.

இத்தகைய நடவடிக்கையாகத்தான் இன்று பெண்கள் தங்களின் தனித்துவத்தைப் படைப்பன்வழியாக நிறுவிவருகின்றனர். ஆண்மையக் கருத்தாக்கம் உருவாக்கியிருக்கும் 'பெண்மை' பற்றிய ஒழுங்குகளைக் கலைக்கிறார்கள். இதனால் பெண் எழுத்தாளர்கள் ஒடுக்கப்பட்ட தங்களின் பாலியல் சிக்கல்களிலிருந்து கவிதைகளைப் பெரிதும் புனைகின்றனர். இதன் அடிப்படையில் நவீனப் பெண் கவிதைகள் வெளிப்படுத்தும் பண்புக் கூறுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ஆண்மையக் கருத்தாக்கங்களுக்கு இசைவாக உணர்வுநிலையில் பெண் எழுத்தைத் தணிக்கை செய்துகொள்வதிலிருந்து விடுபடல். இதன்வழியாக ஆணாதிக்க மதிப்பீடுகள் அளிக்கும் குற்ற உணர்விலிருந்து மீறுதல்.

- பெண் மனம் என்பது பன்முகத் தன்மை படைத்தது. அதன் கற்பனை வெளி எல்லையற்றது. வகைப்படுத்துதல்களுக்குக் கட்டுப்படாமல் கலைந்து கொண்டிருப்பது.

- பொதுவான பாலியல் நிலையிலிருந்து வேறுபட்ட இருபால் பாலியலை ஆதரிப்பது.

- பெண்ணின் பேரின்பத்தை, பரவசத்தைக் கொண்டாடுவது

- ஆண்மைசாரா சொல்லாடலைத் தகர்ப்பது, பெண் பிரதிநிதித்துவம், பெண் உணர்வுப் பதிவை உருவாக்குவது.

- ஆணாதிக்கத் தாக்கத்தைக் கலைக்கும் வகையில் பெண் தன் உடலை விரும்புவது- போற்றுவது, உடலை எழுதுவது.

இத்தகு பண்புக் கூறுகளோடு நவீனத் தமிழ்க் கவிதைகளைப் படைத்த பெண் கவிஞர்களாக மாலதிமைத்ரி, உமாமகேஸ்வரி, குட்டிரேவதி, சுகிர்தராணி, சல்மா போன்றோரைச் சுட்டலாம்.

இவர்களின் படைப்புகளில் காணப்படும் பொதுமைக் கூறுகளாகக் கரிகாலன், “இவர்கள் தங்களைக் கண்டுபடிக்க முயற்சிப்பவர்களாகவும் இயற்கைக்கும் தம் உடலுக்கும் உள்ள நெருக்கத்தை, இசையைப் பாடுபவர்களாகவும் தங்களின் பெருகும் பாலியல் ஆற்றலை வெளிக்கொணர்பவாகளாகவும் தங்கள் பாலியல் மனத்தை வெளிப்படுத்து பவர்களாகவும் தங்களது தன்னிலையாக்கத்தைக் கட்டமைப்பவர்களாகவும் தங்கள் உடலை ஆராதிப்பவர்களாகவும் திகழ்கிறார்கள்” என்று வரிசைப்படுத்திக் கூறியுள்ளனா்.

### பெண்ணியக் கவிதைகளின் புதிய போக்குகள்

பெண்ணியக் கவிதைகளில் பெண்ணின் உடல் குறித்த தாழ்வான எண்ணங்களை அகற்றி அதைக் கொண்டாட்டத்தின் வெளியாக மாற்றிவிடுவதைக் காண முடிகிறது.

மதம் சார்ந்த கருத்தாக்கம், உடலின் வேட்கையான காமத்தை ஆன்மாவின்மீது படரும் இருளாகக் குறிப்படுகிறது. ஆனால் நவீனப் பெண் கவிஞர் குட்டி ரேவதி காமத்தை ஒயாக, நெருப்பாகத் தன் கவிதையில் சுட்டியுள்ளார்.

***“என் காமத்தை இதுவரை***

***நீ வருடிப் பாரசுத்ததுகூட இல்லை***

***அது அணையாது காக்க வேண்டிய***

***ஒரு சுடரைப்போலத் தெருவெல்லாம் அலைகிறது***

***பன்புதான் குப்பைகளை எரிக்கும்***

***நெருப்போடு சோசுகிறது”***

என்னும் கவி வரிகளில் காமத்தை உடலிலிருந்து சுடரும் ஒளியாகக் கருதுகிறார். அது குப்பைகளை எரிக்கும் நெருப்போடு சேர்ந்து பழைமைகளை எரியூட்டிப் புவிக்கு ஒளிட்டுகிறது.

இத்தகைய கவிதை வரிகளில் பெண்ணுடலை எழுதும் முனைப்பு வெளிப்பட்டுள்ளது. இவ்வாறு பெண்ணுடலைப் பெண்மொழியில் துணிந்து எழுதும் பெண் கவிஞர்கள் மத்தியில் குடும்பம், சமூகம், பண்பாடு கருதி மிதமான சொல்லாடல்களால் பெண்ணியக் கவிதை படைப்பவர்களாக மு.சத்யா, கனிமொழி, வெண்ணிலா, தேன்மொழி, இளம்பிறை, பிருந்தா போன்றோரைக் குறிப்படலாம். இவர்களது கவிதைகளில் வாழ்வின்மீதான விசாரணை, இயற்கை, குழந்தைகளின் புனைவுலகம், கிராமிய நினைவுகள் போன்றனவும் பாடுபொருளாக அமைகின்றன.

### காலச் சூழலோடு பொருந்தும் கவிதைப் புனைவுகள்

தற்கால நவீன வாழ்வின் ஓர் அங்கமாகிவிட்ட ‘பெண்கள் பணிக்குச் செல்லுதல்’ என்ற நிகழ்வில் பெண்களுக்கான பொருளியல் விடுதலையைப் பெரும்பான்மையாகச் சாத்தியமாக்கியுள்ளது. ஆனால், பெண்களுக்கான சமூக விடுதலை சாத்தியமாகவில்லை. குறிப்பாகப் பணிக்குச் செல்லும் பெண்களின் குடும்ப உறவுகளும் குழந்தைகளுடனான அவர்களின் தொடர்புகளும் பெருமைப்படும் வகையில் இல்லை. இது குறித்து வெண்ணிலாவின் கவிதை வரிகள்,

***“மணமிக்க பூச்சூடிக் கொள்கிறேன்***

***கூடுதலாய் முகப்பவுடரும்***

***புடவைகளுக்குக்கூட***

***வாசனைத் திரவியம் பூசி வைத்துள்ளேன்***

***வியர்வையைக் கழுவிக் கழுவி***

***சுத்தமாய் வைத்திருப்பதாய்***

***நினைத்துக் கொள்கிறேன் என்னை***

***அத்தனையையும் மீறி ஆடைக்குள்ளிருந்து***

***தாயின் வாசம் சொட்டுச் சொட்டாய்***

***கோப்புகளில் இறங்குகிறது.***

***அவசரமாய்***

***அலுவலகக் கழிப்பறையில் நுழைந்து***

***பீச்சி விடப்படும் பாலில் தெறிக்கிறது***

***பசியைத் தின்று அலறும்***

***குழந்தையின் அழுகுரல்”*** என்று சோகம் படர மொழிந்துள்ளன.

பெண்களின் வாழ்வியல் சோகங்களைச் சொல்ல மொழி துணைபுரியுமா என்ற ஐயத்தோடும் ஆழங்காண முடியாத அவலங்களை, துயரங்களைச் சொல்வதாகவும் அமைந்துள்ள கவிதையாகக் கனிமொழியின் பின்வரும் கவிதை உள்ளது.

***“எமக்கு என்று சொற்கள் இல்லை***

***மொழி எம்மை இணைத்துக் கொள்வதுமில்லை***

***உமது கதைகளில் யாம் இல்லை***

***எனக்கென்று சரித்திரமில்லை”.***

# மனுமுறை கண்ட வாசகத்தில் இராமலிங்க வள்ளலாரின் உரைநடைச் சிறப்பு

**முனைவர் மு.அமிர்தகடேசுவரர்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
உருமு தனலெட்சுமி கல்லூரி,
காட்டூர், திருச்சிராப்பள்ளி - 19.

**தோற்றுவாய்**

திருவருட்பிரகாச இராமலிங்க வள்ளல் பெருமானார் உரைநடைப் படைப்புகளுள் 'மனுமுறை கண்ட வாசகம்' மிகவும் புகழ் பெற்றதாகும். முழுவதும் உரைநடையால் அமைந்த இவ்விலக்கியத்தின்வழி வள்ளல் பெருமானாரின் உரைநடைத் தன்மையினையும், படைப்பாளுமையையும் அறியலாகிறது. இஃதை ஆய்வு செய்வதே கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**இலக்கியப் பாத்திரங்கள்**

திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி நடத்தும் மனுநீதிச் சோழன் மற்றும் மன்னனுடைய புதல்வன் வீதிவிடங்கன் இருவரும் முதன்மைப் பாத்திரங்கள் ஆவர். காலவல்லபன் எனும் மந்திரி, அரசி, தாய்ப்பசு, பசுங்கன்று, அமைச்சர்கள், கொலைத் தண்டனை நிறைவேற்றுவோர், குடிமக்கள் சிவன் மற்றும் சிவகணங்கள் எல்லாம் துணைமைப் பாத்திரங்களாக அமைகின்றனர்.

வீதிவிடங்கன் தேர்க்காலில் பசுவினது கன்று சிக்குண்டு இறக்க, தாய்ப்பசு அரண்மனை ஆராய்ச்சி மணி அடித்து மனுநீதிச் சோழனிடம் முறையிடுகிறது. மன்னன் எவ்வுயிரையும் தன்னுயிராய்க் கருதி, வீதிவிடங்கனைத் தன் மகனென மன்றோரம் செய்யாது, அவனைக் குற்றவாளியென தீர்ப்பளித்து, மன்னனே வீதிவிடங்கனைத் தேரொட்டிக் கொலைத் தண்டனையை நிறைவேற்றுகிறான். சிவபெருமான் காட்சியளித்து மன்னனுக்கு அருட் செய்கிறார். மனுநீதிச் சோழனின் முறைசெயும் புகழை உலகம் அறியச் செய்ய மன்னனுக்கு இச்சோதனையைத் தந்தது நான்தான் என்று சிவபெருமான் மன்னனிடம் கூறுகிறார். அனைவருக்கும் உயிரளித்து அருள் செய்வதாக மகிழ்ச்சியுடன் நிறைவு பெறுகிறது.

இஃது புராணமாகவும், வரலாறாகவும் வழங்கிவருவது சிலப்பதிகாரம் மூலம் அறியலாகும். மனு நீதிச் சோழன் முறைசெயும் மாண்பே இங்கு கருப்பொருளாதலால் வள்ளல்

பெருமானார் "மனுமுறை கண்ட வாசகம்" என்றே இதற்குத் தலைப்பிட்டுள்ளார். இ∴து முபத்திரண்டு உட்தலைப்புக்களை உடையதாக விளங்குகின்றது.

### இயற்கை வருணனை

வள்ளல் பெருமானாரின் உரைநடை இயற்கை நலம் பாராட்டுமிடத்து, கவிதை நடையாய்த் தோன்றுகிறது. "ஆய்" விகுதி வாய்ப்பாட்டு எச்சத்துடன் நீண்ட தொடர்களாகப் பெருமானார் எழுதுகின்றார். சோழநாட்டு இயற்கைச் சீர்மையை விளக்குமிடத்து பெருமானாரின் புனைவுகள் படிப்போரின் மனக் கண்கள் முன்பு இயற்கை எழில் நலம் விளங்கும் சோழ நாட்டை நிறுத்துகின்றன. அ∴து வருமாறு. **"கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய், காவிரி யென்னுந் தெய்வத் தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவுபடாத நீர்வளப்பமுள்ளதாய், வாழைச்சோலை, பலாச் சோலை, மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ் சோலை, கருப்பஞ் சோலை முதலிய பயனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்க, அசோகு, குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலான விருஷங்களால் நெருங்கப்பெற்று வண்டுகள் பாடுகின்ற மலர்ச் சோலைகளும், தாமரைத் தடாகங்களும், அல்லி, நீலம் முதலான புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளும், பொய்கைகளும், ஏரிகளும், குளங்களும் பலவிடங்களிலுமுள்ளதாய், செந்நெல் முதலாகிய பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கியுள்ளதாய்",**

### வரலாற்றுக் காலத்தைக் கண்முன்னே நிறுத்துதல்

திருவாரூர் நகரச் சிறப்பை ஒரு சொல்லோவியமாகவே பெருமானார் உரைநடையில் எழுதியுள்ளார். வரலாற்றுக் காலத்தில் ஒரு நகரில் அமையும், வீதிகளும் மாடங்களும் எவ்வாறு இருக்குமோ அதை அங்ஙனமே நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார். அ∴து வருமாறு, **'பாதாள லோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினால் சூழப்பட்ட இந்திரலோகத்தை எட்டிப் பார்க்கின்ற உன்னதமுள்ள கோபுரங்களையுடைய மதிலும், உய்யாவனம், நந்தவனம், பூஞ்சோலை முதலானவைகளும், தெய்வ தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், வசந்த வோடை, செங்குவளையோடை முதலான நீர்நிலைகளுமுள்ளதாய்',**

**தேர்நிலைகள், யானைக் கூடங்கள், குதிரைப் பந்திகள், சேனையிடங்கள், ஆஸ்தான மண்டபம், அரச மண்டபம், பாடல் மண்டபம், பரிசன மண்டபம், சித்திர மண்டபம், நிருத்த மண்டபம், விசித்திர மண்டபம், கணக்கறி மண்டபம், தேவாசிரிய மண்டபம், சித்திரத் தெற்றி, சிலம்பக் கூடம், ஆயுதச்சாலை, அமுதச்சாலை, அறச்சாலைகளுடையதாய் இரத்னப் பீடிகைகளும் கனக மாளிகைகளும், பளிங்கு மாடங்களும், மணிப் பந்தல்களும், மகர தோரணங்களும், மங்கல கோஷங்களுமுள்ள கடைவீதி, கணிகையர் வீதி, சைவர் வீதி, சைவியர் வீதி, அரசர் வீதி, அந்தணர் வீதி, தகபோனர் இருக்கை, சைவ முனிவர் மடம், உட்சமயத் தாருறையுள் முதலான வளப்பங்களையுடையதாய்",**

### பழமொழி, மரபுத் தொடர்களைப் பயனுறுத்தல்

வள்ளல் பெருமானார் கதைச்சூழல் மற்றும் உரையாடல் நிகழுமிடம் ஆகியனவற்றில் நன்றாக அவற்றினுக்குப் பொருந்துகின்ற வகையில் தமிழ் மொழியில் காணலாகும் பழமொழிகளையும், மரபுத் தொடர்களையும் பயனுறுத்தியுள்ளார். மனு நீதிச் சோழன், வீதிவிடங்கன், மக்கள் என பாத்திரங்களின் உரையாடலில் இவைகள் உணர்ச்சியைக் கூட்டுவனவாக அமைகின்றன. பெருமானார் பயனுறுத்தியவை வருமாறு.

**"கட்டிய வஸ்திரம் அவிழ்ந்தவன் கைபோல, தீராக் குறைக்குத் தெய்வமே முடிவு, வலம்புரிச் சங்கு விலையுயர்ந்த வெண் முத்தினைக் கருப்பங் கொண்டது போல, தூரதேசத்திற் போயிருந்த கப்பல் துறைமுகத்தில் வந்ததென்று சொல்லக்கேட்ட வர்த்தகனைப் போலவும், கூடிப்பிரிந்த மங்கையின் குரலோசையைக் கேட்ட**

**நாயகனைப் போலவும், தாகங்கொண்டு தவிக்குங் காலத்தில் சமீபத்தே தண்ணீருண்டென்று சொல்லக்கேட்ட தேச சஞ்சாரியைப் போலவும், கற்புள்ளவள் கணவனை உபசரிப்பது போல உபசரித்தல், இடியோசை கேட்ட நாகம் போல, எண்ணம் பொய்யாகும் ஏளிதம் மெய்யாகும், குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பானேனே, மரபழிக்க வந்த வச்சிராயுதமானேனே, கும்பகோனத்துப் பள்ளன் கொள்ளை கொண்டு போகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங் கொடுத்தான்"** என்பன குறிப்பிடத்தக்கன.

### உருவகம்

மனுச் சோழன் தன் குடிகளுக்கு எவ்வாறு விளங்கினார் என்பதைப் பெருமானார் விளக்குமிடத்து உருவக அணியை நன்கு ஆண்டுள்ளார். அவை வருமாறு, **"அறிவே ஆயிரங் கண்களாகவும், கைகளே கற்பக மாகவும், கண்களே காமதேனுவாகவும், திருமுகமே சிந்தாமணியாகவும், மனோதிடமே வச்சிராயுதமாகவும் கொண்டபடியால் இந்திரனை ஒத்தவராய்",**

### வள்ளல் பெருமானார் விரும்பும் அரசாட்சி

மனுச் சோழரின் அரசாட்சியைப் பெருமானார் புகழுமிடத்தில் வருகின்ற கற்பனை மிகவும் சிறந்து விளங்குகின்றது. பெருமானாரின் உயர்ந்த உள்ளம் மக்களாட்சி எங்கனம் அமைய வேண்டும் என்பதைக் கருதியது என்றும் பொருள்கொள்ள இடமுண்டு அ்.்து வருமாறு.

**"அவரது ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே, பூவேபறிபடுவது; புனலே சிறைபடுவது; காற்றே அலைபடுவது; கல்லே கடினமுடையது; மாவே வடுபடுவது; வாழையே குலைபடுவது; வண்டே மதுவுண்பது; பந்தே அடிபடுவது; பரியே கட்டுண்பது; நெல்லே குத்துண்பது; நெற்கதிரே போர்படுவது; வயலே வளைபடுவது; மாதரிடையே குறைபடுவது; தரித்திரமே தரித்திரப்படுவது; துக்கமே துக்கப்படுவது".**

### வாழ்வியல் செய்தி

பெருமானாரின் உரைநடையில் இடைஇடையே வாழ்வியல் செய்திகள் இடம்பெறுகின்றன. அவ்வகையில் வீதி விடங்கன் மனுச்சோழரிடம் தியாகராஜப் பெருமானைத் தொழ அனுமதி கேட்கின்ற நிகழ்ச்சி வருகின்ற இடத்தில் பின்வரும் செய்தி இடம்பெறுகின்றது. அ்.்து வருமாறு.

**"நெல்முதலான பயிருக்கு நீர்விடுவோரையும், குருடர்க்குக்கோல் கொடுப்போரையும், இரவில் வந்தவர்க்கு இடம் கொடுப்போரையும், அஞ்சி வந்தடுத்தவர்க்கு அபயங் கொடுப்போரையும், தாகங் கொண்டோர்க்குத் தண்ணீர் கொடுப்போரையும், பசிகொண்டு பரிதவிப்போர்க்கு அன்னங் கொடுப்போரையும், சேற்றில் விழுந்து திகைக்கின்றோர்க்குக் கை கொடுப்போரையும், ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரையேற்றுவோரையும், சத்திரங் கட்டித் தருமம் செய்வோரையும் தடுத்தாலும் - குருதரிசனம், சிவஞானி தரிசனம், சிவதரினசம் செய்வோரை ஒருக்காலும் தடுக்கப்படாது; ஆதலால், புத்திரனே! உனக்கு வேண்டிய சிறப்புகளுடன் சுகமாய்ப் போய் ஆண்டவனைத் தரிசனஞ் செய்து, சிவஞானமுந் தீர்க்காயுளும் பெற்று வருவாய்"** என்று கட்டளையிட்டார்.

### சொற்பொருள் முரண்நடை

வீதிவிடங்கன் கன்றினைத் தேர்க்காலேற்றிக் கொலை செய்தான் எனும் செய்தியைக் கேள்வியுற்ற பொழுது, மனுச்சோழன் தன் செங்கோல் தவறியதாகப் புலம்பும் இடம் வருகிறது. பெருமானார் அவ்விடத்தில் எதிரும் புதிருமாக சொல்முரண் அமையுமாறு படைத்திருக்கிறார். ஒரு வகையில் இ்.்து திரைப்படம் மற்றும் நாடகங்களில் வரும் வசனம் போன்று கொள்ள இடம் உண்டு அ்.்து வருமாறு. **"சேங்கன்றைத் தெருவில் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை, அளவுகோ லென்பேனோ! ஏற்றக் கோலென்பேனோ! கத்திரிக்கோ லென்பேனோ! கன்னக்கோ லென்பேனோ! குருடன்கோ லென்பேனோ! கொடுங்கோ லென்பேனோ! துடைப்பக்கோ**

**லேன்பேனோ! துலாக்கோ லென்பேனோ! மரக்கோ லென்பேனோ! வைக்கோ லென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுங்கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனோ! என்ன கோலென்றதா னெண்ணுவேன்!".**

**முன்வரலாறு**

மனுச் சோழருக்கு முன்பு உள்ள முன்னோர்களை, மனுச்சோழர் நினைவு கூர்வதாகப் பெருமானார் படைத்துள்ளார். அவ்வகையில் எமனுடைய கையிலிருந்த தன் நாட்டு மக்களின் உயிரை மீட்ட சைவச் சோழர் எனும் சோழ மன்னரை மனுச் சோழர் நினைந்து வருந்துவதாய்ப் படைத்துள்ளார்.

**நிறைவுரை**

வள்ளல் பெருமானாரின் உரைநடை அமைப்பு நீண்ட தொடர்களாய் "மனுமுறை கண்ட வாசகத்தில்" அமைந்துள்ளது. இலக்கிய இனிமையின் பொருட்டே இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார். செய்யுளில் சொற்களை அசையாக எழுதுவதைப் போலவே உரைநடையிலும் பெருமானார் எழுதுகின்றார். இது கவிதை நடையாகவும் அமைகின்றது. கற்பனைப் படைப்புத் திறனும், பழமொழிகள், மரபுத் தொடர்கள் பயின்று எழுதுதலும், உணர்ச்சியைக் கூட்டுவதற்கும் சூழல்களைப் பாமரரும் உணர்வதற்கும் பயன்தருகின்றன. அறம், அன்பு, அருள், கொல்லாமை, முறை வழுவாமை ஆகியன பண்புகள் உணர்ச்சி பெருக்காய் அமையுமாறும், ஓதுவோர் அவ்வுணர்ச்சியைப் பெருகின்ற வகையிலும் பெருமானார் உரைநடையை அமைத்துள்ளார். உவமையும், உருவகமும் கதைச் சூழல்களோடு தக்கவாறு பொருந்தியுள்ளன.

பெருமானாரின் இவ்வுரைநடைப்படைப்பு, ஒருவர் புராணக்கதை கூறுகின்றதைப் போலும், உரையாடல்கள் இடையிடையே பயின்று வருதலால், கேட்போர்க்கு நாடகத்தைச் சுவைப்பதைப்போன்றும் அமைந்துள்ளது. உரைநடையில் தனிமொழிகள்யாவும் உணர்ச்சி மிக்கதாய் அமைந்துள்ளன. "நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ", நட்டாற்றில் கைநழுவ விட்டேனோ" எனும் பாடல், வாசகத்தில் மனுச்சோழரின் தனிமொழியில் வருகின்றது.

வள்ளல் பெருமானாரின் "மனுமுறை கண்ட வாசக" உரைநடையில், இயல், இசை, நாடகமெனும் முத்தமிழ்க்கூறுகளும் பயின்று வருகின்றன. பெருமானாரின் வேறு பல உரைநடை படைப்புகளில் இருந்து "மனுமுறை கண்ட வாசகத்தின்" உரைநடைப் படைப்பு தனித்த பண்புடையதாகத் திகழ்கின்றது.

1. திருவருட்பா, உரைநடைப்பகுதி வெளியீடு, திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர், கடலூர் - 607 303

# புலம்பெயர்ந்தோர் தமிழ்ச் சிறுகதைகளில் கல்வி, பணி வாய்ப்பு, பணியிடம் தொடர்பான இன்னல்கள்

புலம்பெயர்ந்த தமிழர்கள் புகலிடத்தில் வாழ அவர்களுக்குக் கல்வியும் பணிவாய்ப்பும் இன்றியமையாத தேவைகளாக உள்ளன. புகலிடச் சூழலில் கல்வி பெறுவதும், பணிவாய்ப்பு பெறுவதும், பெற்ற பணியில் தொடர்ந்து செயலாற்றுவதும் எளிதாக இருப்பதில்லை. புலம்பெயர்ந்தோர் கல்வி, பணிவாய்ப்பு, பணியிடம் தொடர்பாக எதிர்கொள்ளும் பற்பல இன்னல்களைப் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் எடுத்துரைத்துள்ளன. அவற்றை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**ஜெ.அனிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்) ,
தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
நாமக்கல்-637 002.

**கல்வி, பணி சார்ந்த புலம்பெயர்வுகள்**

பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், டச்சு ஆகிய நாடுகள் தமது வல்லாதிக்கத்தை நிலை நாட்டுவதற்குக் கடல் கடந்து உலகின் பலநாடுகளைக் கைப்பற்றி, காலனித்துவ ஆட்சியை ஏற்படுத்தின. இவ்வாறு கைப்பற்றிய நாடுகளின் இயற்கை வளங்களையும், கனிமவளங்களையும் சுரண்டித் தமது நாடுகளுக்குக் கொண்டு செல்ல வேளாண் பண்ணைகளையும், தோட்டங்களையும், சுரகங்களையும் அமைக்கத்

இப்பணிகளுக்கு உழைக்கும் மக்கள் தேவைப்பட்டனர். இவர்கள் ‘உழைக்கும் மக்கள்’ என்று சுட்டப்படுவதைவிடச் ‘சுரண்டலுக்கு ஒத்துப்போகும் அடிமைகள்’ என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும். இம்மக்களை ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள நாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் அழைத்துச் சென்றனர். இவர்களது கடும் உழைப்பால் காலனி நாடுகளிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு பெருந்தோட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மக்களின் தியாகங்கள் குறித்து மாத்தாளை சோமு, “இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மக்கள், தோட்டம், தோட்டம் சார்ந்த பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள்தான் பின்னர் பெருந்தோட்டச் சமூகம் என உருப்பெற்றார்கள். இத்தகைய அவர்கள் கொடுத்த உயிர்த் தியாகங்கள் -விலை – கணக்கிலடங்கா” என்று குறிப்பிட்டுள்ளார்.

‘பெருந்தோட்டம்’ என்பது, தொழிலாளி வேலை செய்யும் இடம் மட்டுமல்ல. அத்தொழிலாளி வேறு எங்கும் சென்று விடாதபடி ஓர் எல்லைக்குள் சிறை வைத்திருக்கக் கூடிய ஓர் அமைப்பாகும். அந்த அமைப்பிற்குள்ளேயே அவர்களுக்குத் தேவையான கடை, மருத்துவமனை, வழிபாட்டுத்தலம் ஆகியன இருந்தன. இதனால்

இம்மக்கள் அந்நாட்டுத் தேசிய இன மக்களோடு தொடர்பற்றிருந்தார்கள். இதன் விளைவாக அவர்களது துன்பமான வாழ்க்கை வேறுயாரும் அறிய இயலாத வகையில் அமைந்தது.

**கல்வி, பணிசார்ந்த சிக்கல்களைப் படைப்பாக்குதல்**

இரண்டாம் உலகப்போர், சுதந்திரப் போராட்டம், இந்திய விடுதலை எனக் காலச்சூழல் பதற்றம் நிறைந்ததாக நிலவியபோது, இவர்கள் தாம் வாழும் நாட்டிலேயே ஓர் அந்நிய இனமாக அடையாளம் காணப்பட்டார்கள். அவர்களின் குடியுரிமை கேள்விக்குரியதானது. அத்தகைய காலச்சூழலில்தான் இம்மக்கள் மத்தியில் தொழிற்சங்கங்கள் உருவாயின. குடியுரிமை சம்பந்தமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தகைய காலக் கட்டத்தில்தான் பிரச்சாரம், துண்டு பிரசுரம், நாடகங்கள், வீதிப்பாடல்கள், பத்திரிகைகள் உருவாயின. கவிஞர்களும், எழுத்தாளர்களும், படைப்பாளர்களும் உருவாயினர்.

மலேசியா நாட்டில் வசிக்கும் தமிழர்கள் தாங்கள் அனுபவித்த, கண்ட, கேட்ட அனுபவங்ளையும், ஆதங்கங்களையும் கதையின் மையப் பொருண்மையாக்கி வடித்துத் தந்துள்ளனர். உழைத்து இளைத்த தமிழர்களுக்கு அந்நிய நாட்டில் உரிய மரியாதையும் உரிமைகளும் கிடைப்பதில்லை. நல்ல உணவும், உடையும் இருப்பிடமும் ஏழைத் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. உரியதொகை கொடுக்கப்படுவதில்லை. இவற்றால் அம்மக்கள் நிலமின்றி, வீடின்றி, வேலையின்றி வறுமையின்பிடியால் சிக்கி யாசிக்கும் அவநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மொழிச் சிக்கலின் காரணமாகத் தமிழ் மாணவர்களுக்குக் கல்வி உரிமை மறுக்கப்படுகிறது. ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கேட்கும் அகதிகள் அங்கு வேலைக்குப் போவதற்கோ, கல்வி கற்பதற்கோ அந்நாட்டுச் சட்டத்தில் இடமில்லை. பெரும்பாலும் அகதிகளாக ஜெர்மன் செல்லும் மக்கள் அங்குள்ள உணவு விடுதிகளில் குறைந்த ஊதியத்தில் பலமணிநேரம் உழைக்க நேரிடுகின்றது. நீண்டகாலமாக முகாம்களில் அகதிவாழ்வு வாழ்ந்தோர் பலர் மனநிலை பாதிப்புக்குள்ளானார்கள்.

**கல்வி சார்ந்த சிக்கல்கள்**

மாத்தாளை சோமு எழுதியுள்ள ‘ஒரு ஸ்கூல் கோயிலாகிறது’ என்ற சிறுகதையில், பெயர் சுட்டப்பெறாத ‘அவன்’ என்ற கதைமாந்தர் ‘எத்தகைய சூழலிலும் மாணவர்களின் படிப்பு பாதிக்கக்கூடாது’ என்ற கொள்கை உடையவராக விளங்குகின்றார்.

தோட்ட பாடசாலையில் பல ஆசிரியர்கள் பணியாற்றினார்கள். ஒருநாள் கூட்டத்தில், தலைமையாசிரியர் தோட்ட முதலாளியின் கோரிக்கையை முன் வைத்தார். அனைவரும் அமைதியாக இருந்தனர். ஒருவர் மட்டும் மறுப்புக் கூறினார். முதலில் மாணவர்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்தவிட்டுப் பின்னர் கோயில் கட்டலாம் என்றார். இது குறித்து அவர், “இந்தப் பள்ளியில் உள்ள பிரச்சினைகள் உங்களுக்குத் தெரியும். மாணவர்கள் வசதியாகப் படிக்க வகுப்பறைகள் இல்லை. இருக்கிற வகுப்பறைகளும் வசதியானவை அல்ல. இருக்கிற கட்டமும் மழைக்காலத்தில் அழுகிறது. வெயில் காலத்தில் சிரிக்கிறது. மேலும் வசதியான மலசல கூடங்கள் இல்லை. தண்ணீர் வசதி போதாது. பொது அறிவை வளர்க்க மாணவர்களின் தேவைக்கு லைப்ரரி இல்லை” என்று கூறித் தன் கருத்தை முன் வைத்தார். இது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அது ‘தோட்ட பாடசாலை’ என்பதால் அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர். இச்சூழல் தான்வேலை இழந்தாலும் பரவாயில்லை, மாணவர்கள் ஒழுங்காகப் படிப்பதற்குப் போதுமான வசதியினைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் ‘அவன்’ பேசினான். இதனால், அவன் பிற ஆசிரியர்களிமிருந்து விலகி, தன் கோரிக்கையை முதலில் நிறைவேற்றக் கூறுகிறான். அவன் என்ற கதைமாந்தர் தோட்ட முதலாளியின் தவறுகளைத் தட்டிக்கேட்கும் மனவலிமை மிக்க ஒருவனாக விளங்குகிறான்.

புலம்பெயர்ந்தோரின் கல்விபெறும் உரிமைக்கு எற்படும் இடையூரினை இக்கதையின் வழியாக மாத்தாளை சோமு காட்டியுள்ளார்.

பால்மரக்காட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வறுமையிலும், அறியாமையிலும் சிக்கித் தவிக்கின்றனர். கி.பி. 1923ஆம் ஆண்டில்தான் தொழிலாளர் சட்டப்படி, இந்திய அரசின் வேண்டுதலால் பிள்ளைகள் கல்வி கற்பிக்கும் நிலை தோட்டப்புறங்களில் ஏற்பட்டது. இச்சூழல் குறித்து ம. மதியழகன், “வறுமையும் அறியாமையும் கொண்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வருமானம் வருவதற்குரிய தம் தொழிலில் ஈடுபடுத்தினரேயன்றிப் பள்ளிக்கு அனுப்ப முன் வரவில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

ரெ.கார்த்திகேசு எழுதியுள்ள ‘மாணிக்கம் யோசிக்கிறான்’ என்ற கதையில், பால்மரக்காட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிலையும் அவர்களின் பிள்ளைகளின் கல்வி நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பால்மரக்காட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சம்பாதிக்கும் பணம் ‘கள்’ குடிப்பதிலேயே கரைந்துவிடுகிறது. அவர்களுடைய பிள்ளைகளின் படிப்பிற்கு எந்தச் செலவும் செய்ய முடியாத நிலை உள்ளது.

நன்றாகப் படிக்கும் மாணவர்கள் கூட பஹாசா மலேயாவினால் படிக்க முடியாமல் திணறுகின்றனர். அம்மொழியில் தேர்ச்சி பெற்றால்தான் மேற்படிப்பிற்குச் செல்லலாம். இதனை, “படிப்பிலும் அவன் சோடை இல்லை. ஆசிரியர்கள் பாராட்டும் அளவுக்கு நல்ல மார்க் வாங்கினான். பெரும்பாலான பாடங்களில் ‘பி’ கிரேடும் சிலவற்றில் ‘ஏ’யும் கூட வாங்கிவிடுவான். ஆனால், பஹாசா மலேயா மட்டும் அவனுக்குச் சாரியாக

வருவதில்லை. இந்த ஆண்டு எஸ்.பி.எம். பரீட்சையில் பஹாசா மலேயாவில் கிரேடிட் வாங்கிவிட்டால் இத்தோடு அவன் பள்ளி வாழக்கை முடியும். டியூசனுக்கே பணம் கொடுக்க முடியாத அண்ணன் தனியார் பள்ளியில் சம்பளம் கொடுத்து ஆறாம் படிவம் படிக்க வைப்பாரா?” என்ற வினாவோடு படைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். “நீ ஏண்டா இங்க உட்காந்துக்கினு புஸ்தகத்துக்கு காசு, பஸ்சுக்குக் காசுன்னு என் உயிர வாங்குற?” என்று ஒரு கதைமாந்தர் கூறுவதன் வழியாக அவர்களின் வறுமைநிலையை உணரமுடிகின்றது.

அத்தொழிலாளர்களின் பிள்ளைகள் குறைந்த அளவே கல்வி கற்கின்றனர். அதற்குமேல் கல்வியைத் தொடர முடியாதநிலை உள்ளது. அப்படிப் பாதியிலேயே கல்வியை நிறுத்தியவர்கள் ஏதாவது சிறுவேலையில் அமர்ந்து தங்களது வாழ்க்கையை நடத்துகின்றனர். இவ்வாறு அத்தொழிலாளர்கள் மட்டுமே பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் அவர்களின் பிள்ளைகளும் வறுமையில் சிக்கித் தவிக்கின்றனர் என்பதை இச்சிறுகதை சித்திரித்துள்ளது.

பொருளாதாரக் குறைபாட்டாலும் மொழிப் பிரச்சினையாலும் நன்றாகப் படிக்கும் மாணவர்கள் மேறபடிப்பிற்குச் செல்ல முடிவதில்லை. ஆதிக்க வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டுகின்றது. அவர்களுக்குரிய உரிமைகளைச் சரியாகத் தருவதில்லை என்ற கருத்தை இக்கதையின் வழியாகப் பெறமுடிகின்றது.

**பணிவாய்ப்பு பெறுவது தொடர்பான சிக்கல்கள்**

உழைப்பதற்காகத் தமிழகத்திலிருந்து ஏழைமக்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்றனர். அவ்வாறு சென்றவர்கள் உழைத்துக் களைத்தவர்கள் பலர். அவர்களுள் பலர் கொத்தடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர். அத்தகு சூழலிலும் உழைத்துப் பெற்ற பணத்தில் மதுவருந்தி ‘மயங்கி’ வாழ்வைத் தொலைத்தவர்களும் உண்டு. சிலர் உடல் உழைப்பைச் செலவு செய்யாமல் யாசித்தும் வருகின்றனர்.

புகல்சூழலில் யாசித்துப் பிழைக்கும் மக்கள் கூட்டத்தினரைப் பற்றிச் சை. பீர்முகம்மது, ‘சிவப்பு விளக்கு’ என்ற சிறுகதையினைப் புனைந்துள்ளார்.

“காலையில் பெரிய மார்க்கெட்டில் கையேந்திக் கொண்டு நிற்பான். மத்தியான வேளையில் ஏதாவதொரு கடையின் பின்புறமாக இருக்கும் குப்பைத் தொட்டியில். தலையை நுழைத்துக் கொண்டு எதையாவது பொறுக்கிக் கொண்டிருப்பான். எது எப்படி இருந்தாலும் மாலை நாலரை மணிக்கு சௌக்கிட்ரோட் வெள்ளை மாளிகையில் ஒரு பயிண்ட் அடிக்க வந்துவிடுவான். பிறகு நேரே மேம்பால மாளிகைக்குத் தூங்க வந்துவிடுவான். மீண்டும் மறுநாள் காலையில் பெரிய மார்க்கெட், குப்பைத்தொட்டி, கள்ளுக்கடை” என்று காளிமுத்து என்ற கதைமாந்தரை அறிமுகப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

நல்ல உடல் வலிமையோடு இருக்கும் ஒருவன் உழைத்து முன்னேற விருப்பமில்லாமல் சோம்பேறியாய், பிச்சையெடுத்து உண்பதைப் பெரிதாக எண்ணி வாழும் மனிதர்கள் இருக்கின்றார்கள் என்ற கருத்தினை இச்சிறுகதைகயின் வழியாக ஆசிரியர் சுட்டியுள்ளார்.

தமிழரான காளிமுத்தும், சீனரான ஆபெங்கும் பிச்சைக்காரர்களாகவே இக்கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஆபெஞ் உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணங்கொண்டு உழைக்கிறான். இதனை, “மறுநாள் காலையில் முனிசிபல் கார்பார்க்கிங் வழியாகக் காளிமுத்து போய்க் கொண்டிருந்தான். அங்கே கார்பார்க்கிங் நடுவில் நின்ற ஒரு பெரிய காரை ஆபெங் கழுவிக் கொண்டிருந்தான்” என்றும், “நான் பிச்சை எடுக்கிறதை விட்டுட்டேன். இந்தக் காடி கழுவுற தொழில்லே நால அஞ்சு வரும்படி வருது. கொஞ்சம் உடலை வளைச்சுவேலை செய்யணும் அவ்வளவுதான். நான் இப்ப இங்கேதான் படுத்துக்கிறேன். நீயும் இந்தத் தொழிலுக்கே வந்துடேன்’ என்று ஆபெஞ் படபடவென்று பேசினான். காளிமுத்து சிரித்துக் கொண்டான். ‘சேச்சே! நமக்கு இந்தத் தொழில் ஒத்து வராது. பழைய தொழிலே பழகிப் போச்சு’ என்றான்” என்றும் அவர்களது உரையாடல் வழியாக அவ்விருவருடைய உள்ளக் கிடக்கைகளை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**பொருளாதாரமும் தொழில்சார் சிக்கல்களும்**

மனித வாழ்க்கையைத் தீர்மானிப்பது பொருள்தான். மக்களுக்குத் துன்பத்தையும் இன்பத்தையும் கொடுப்பது பொருள். மக்களிடையே ஏற்றத்தாழ்வு உண்டாக்குவது பொருளேயாகும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பொறுத்தது. இயற்கையில் மக்கள் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர். இடையில் ஏற்பட்ட வர்க்கங்களுக்குக் காரணம் பொருளாதார முரண்பாடே ஆகும்.

மக்களிடையே சமத்துவம் வரவேண்டும் என்றால் மனிதர்களே மனிதர்களை மதிக்க வேண்டும். செல்வந்தர்கள் தங்கள் சொத்தைப் பொருள் இல்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். மக்கள் வாழ்க்கையின் பெரும்பகுதி, பணம் தேடுவதிலேயே முடிகிறது. பணம் உள்ளவர்கள் மட்டுமே இவ்வுலகம் சொந்தம் என்ற நிலை உருவாகி விடுகிறது. மானுட வாழ்க்கையின் ஆதாரமே பொருளாதாரத்தில் அடங்கியுள்ளது. இது குறித்து மாத்தாளை சோமு கூறும்போது, “இதற்குத்தான் மாமாவைத் தேடினேன். அவர் இருந்தால் அவருக்குத் தெரியும். மாரியம்மன் கோயில் தேருக்கு ஏதாவது நிதி உதவி செய்வார். பேச்சு சிங்களத்திலேயே தொடர்ந்தது. ஏனென்றால் கொடுக்க முடியாதா? என்ற அவள் உள்ளே போய் ஓர் உண்டியலை எடுத்து வந்து அவனிடம் கொடுத்துவிட்டுச் சொன்னாள். இதில் உள்ளதை எணிணப் பாருங்கள்” என்று நன்கொடை கொடுக்கும் மனிதப் பண்பை எடுத்துக் கூறியுள்ளார்.

பொருளாதாரம் என்பதற்குப் பல பொருளியல் அறிஞர்கள் இலக்கணம் வகுத்துக் கூறியுள்ளனர். செல்வத்தின் தன்மையையும், செல்வத்தைப் பெருக்கும் வழிகளையும் ஆராய்வதே பொருளாதாரம் என்பர். இக் கருத்தில் ஆடம்ஸ்மித், ரிக்கார்டோ, மில் போன்ற அறிஞர்கள் ஒத்த முடிவுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, "ஒரு குடும்பத்தில் இருக்கிற கணவன், மனைவி, வயதுக்குவந்த குமாரி – வாயும்வயிறுமாக உள்ளவள் - இப்படி எல்லோரும் ஒன்றாக உழைக்க வேண்டிய கட்டாயம். இது இவர்களின் தலையெழுத்து. இப்படி உழைத்தாலும் இவர்கள் இதனுள்ளேயே போராடிக் கொண்டிருக்க வேண்டியதுதான். அவர்களின் உலகம் அந்தத் தோட்டத்துக்கு, உள்ளேயே சுருக்கப்பட்டுவிட்டது" எனத் தொழிலாளர்கள் பொருளாதாரம் காரணமாக ஒரு குடும்பத்தில் அனைவரும் ஈடுபடும் கொடுமையை விளக்கியுள்ளார் மாத்தாளை சோமு.

முதலாளிமார்கள், தொழிலாளர்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் பயன்படுத்தித் தொழிலாளர்களின் வாழ்விடத்தை எரித்தும் மக்கள் ஒற்றுமையைத் தகர்த்தும் தொழிலாளர்களைத் தன்வசம் வளைக்கப் பார்க்கின்றனர். இந்நோக்கில் மாத்தாளை சோமு, "ஏழ்மையின் ஆழத்திலிருக்கின்ற அவர்களைக் குறைசொல்ல முடியாது. இருப்பதே ஒரே வேட்டியும் சேலையும் தான். அதைத்தானே உடுத்தமுடியும்" வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களைப் பல தந்திரங்களைக் கையாண்டு வளைக்கப் பார்கிறார் துரை. ராமுவின் தாய் மீனாட்சியின் மூலம் ராமுவுக்கு மீண்டும் வேலை தருவதாகச் சொல்லிவிட்டுத் தாயின் மூலமாக மகனை வளைக்கப் பார்க்கிறார்" என்று தொழிலாளர்களின் பொருளாதாரத் தாழ்நிலையையும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

முதலாளிகளை மார்கசு, எஞ்கெல்சு போன்றோர் 'பூர்ஷ்வாக்கள்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். அதாவது, நவீன முதலாளிகள் வர்க்கம் என்கின்றனர். இந்த நவீன முதலாளிகள் சமுதாயப் பொருள் உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரர்கள். கூலிக்கு ஆட்களை அமர்த்தி வேலை வாங்குபவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதனால், இலாபத்தின் பெரும்பகுதி மூலதனத்தில் சேர்க்கப்பட்டன. எனவே, முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து சுரண்டலையும் பிறரைப் பற்றிய கவனம் கொள்ளாத சுதந்திரத்தையும் ஏற்படுத்திவிட்டது.

## தொகுப்புரை

புகலிடச் சூழலில் புலம்பெயர்ந்தோருக்குக் கல்வி, பணிவாய்ப்பு போன்ற அடிப்படைத் தேவைகள் புகலிட அரசாங்கத்தால் மறுக்கப்படுகின்றன. இவற்றைப் புகலிடச் சிறுகதைகள் பதிவுசெய்துள்ளன.

புகலிடத்தில் உயர்க்கல்வி பெறுவது கடினமானதாகவும், தத்தமது கல்விப் பின்புலத்திற்கு ஏற்ற பணிவாய்ப்பு பெறுவது இயலாததாகவும் உள்ளன. இதனால் அவர்கள் தத்தமது வாழ்வியலை மேம்படுத்த இயலாதவர்களாக உள்ளனர். இதன் பின்விளைவாக அவர்கள் மனநிலைப் பிறழ்வுக்கு ஆளாகவும் நேர்கின்றது. இச்சிக்கல்களை விரிவாகப் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் எடுத்துரைத்துள்ளன.

## துணைமைத் தரவுகள்


1. அகிலன், 'கதைக் கலை'
2. அருணாசலம், க, கலாநிதி - 'இலங்கையின் மலையகத் தமிழர்கள்',
3. அலெக்சி டால்ஸ்டாய்,நடராசன், தி.சு. (மொ.பெ.ஆ.) 'எழுதும் கலை',
4. அறவாணன், க.ப 'ஈழம் தமிழரின் தாயகம்',


**ஆய்வுக்குட்படுத்தப்பெற்ற சிறுகதைகளின் தலைப்புகள், அவற்றின் ஆசிரியர்கள் பெயர்கள் வருமாறு :**

1 அன்னை அழைக்கின்றாள்
நீர்வை. பொன்னையன)

2. அன்னையும் பிதாவும் -மாத்தாளை சோமு

3. அகதி - விமல் குழந்தைவேல்

4 அரங்கேற்றங்கள்
ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

5. அவர்களின் தேசம் -மாத்தாளை சோமு

6. அவர்களுக்கென்று ஒரு குடில்
பொ.கருணாகரமூர்த்தி

7. அவன் ஒருவனல்லமாத்தாளை சோமு

8. அழியாச் செல்வம்
'சின்னருணா' அ. பழனியாண்டி

9. அமெரிக்கா-வ.ந. கிரிதரன்

10. அலையும் தொலைவு -கார்த்தி நல்லையா

11. அடைக்கலம் -சுதாராஜ்

12. ஆண்டபரம்பரை -டொமினிக் ஜீவா

13. ஆகாயம் -மாத்தாளை சோமு

14. இறகுகள்-சக்கரவர்த்தி

15. இடம் மாறிப் போன-லதா உதயன்

# புறநானூற்றில் மானுட நேயம்

**வி.நிஷா,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

**முன்னுரை :**

சங்க இலக்கியம் பண்டையத் தமிழர் வாழ்வை விளக்கும் கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறது. எட்டுத்தொகை இலக்கியங்களுள் ஒன்றாகிய புறநானூறு மக்கள் தம் வீரம், கொடை, கல்வி போன்ற செய்திகளை எடுத்துரைக்கின்றது. தகுதியும், திறமையும் மிக்க தலைமைக் கொண்ட நாடு நலமும், வளமும் பெற்று விளங்கும். சங்க காலம் ஒரு பொற்காலம் என்று போற்றப்பட்டதற்குக் காரணம் மன்னனும், மக்களும் மனித நேயம் நிறைந்தவர்களாக விளங்கியதாகும். போர்முறைகளில் மனித நேய வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் புறநானூற்று மன்னர்கள். மனித நேயத்தினை இவற்றின் வழிக் காணலாம்.

மனித நேயத்தில் உளவியல் :

சமூகம் என்பது ஒரு தனித்த கோட்பாடு அன்று. ஆங்கே எண்ணற்ற சூழ்நிலைகளில் எண்ணற்ற துலங்கல்கள் நிகழ்கின்றன. மக்கள் ஒரு சமூகமாக ஒன்றி வாழும் போது அவர்களிடையே எண்ணற்ற நடத்தைகள் காணப்படுகின்றன. இவை அனைத்தையுமே இரு வகையான சமூக நடத்தைகளை கொள்ளலாம். தனி ஒருவன் எத்தகைய செயல்களால் பிறறைத் தூண்டுகிறான் என்பது மட்டும் இல்லை. எத்தகைய தூண்டதலுக்கு அவன் எதிர் துலங்கலைச் செய்கிறான் என்பதும் சமூக நடத்தையே ஆகும்.

சமூக உளவியலாளர்கள் சமூகத் துலங்கல்கள் என்ற பகுப்பின் கீழ் இவ்வகையான நடத்தைகளை ஆராய்ந்து அவற்றை,

இரக்கவுணர்ச்சி (sympathy)
பாவிப்பு நடத்தை (imitation)
கருத்தேற்றம் (suggestion)
சிரிப்பு (laughter)

என்ற தலைப்புகளில் விளக்குகின்றனர்.

சமூக உளவியலின் மூன்று முக்கிய கொள்கைகளைக் குறிப்பவனாக,

இரக்கவுணர்ச்சி ( sympathy )
பாவிப்பு நடத்தை ( imitation )
கருத்தேற்றம் (suggestion )

ஆகியவை விளங்குகின்றன. பிளாட்டோ என்ற அறிஞர் உள்ளம் மூன்று நிலைகளில் இருப்பதாக கருதினார். அவை,

அன்பு கெழுமிய ( affection )
மன எழுச்சி நிலை (cornation )
அறிவு நிலை (congnition )

இக்கருத்தினை இவருக்குப் பின் மற்ற அறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே, மனிதனின் சமூக நடத்தையே இம்மூன்றினைக் கொண்டு விளக்கப் பலரும் முயன்றுள்ளனர்.

**இரக்கவுணர்ச்சி :**

மனிதன், தன் பிறர் மீது காட்டுகின்ற அன்பு, கழிவிரக்கம், இரக்கவுணர்ச்சி போன்ற தன்மைகளால் அவன் விலங்கினத்தினின்று வேறுபடுத்திக் காட்டப்படுகின்றான். உணர்வே இல்லாத மரக்கட்டை அன்று மனிதன். ஆனால் அதே நேரத்தில் அவன் தன் உணர்வுப் பெற்றுத் தனக்காகவே எதையும் சாதிக்கும் விலங்கும் அன்று. இவ்விரு பண்புகளுக்கும் இடையில் அவன் தன்னைப் போன்றே

பிறரையும் கருதிப் பொது நல நோக்கில் செயல்படுகிறான். இங்ஙனம் அவன் தன்னைப் போன்றே பிறரையும் கருதும் பண்பினால் ஒரு சமூகத்தில் ஒன்றி வாழத் துணை செய்யும் எத்தனையோ துலங்கல்களில் இரக்கவுணர்ச்சியும் ஒன்று.

**உளவியலின் போர் :**

சண்டைகள் மனித சமூகத்தினரால் எப்பொழுதுமே வரவேற்கப்படுவதில்லை. சமூகத்தின் எந்தவிதப் போராட்டத்திற்கும் நன்மைக்கும் போர் எழுவதை மக்கள் விரும்புவதில்லை. ஏனெனில் போரினால் அழிவும், நாசமும் மனிதச் சமூகத்தற்குப் புதிய தொல்லைகளும் பிரச்சனைகளுமே உருவாகின்றன. எனவே எல்லோரும் போரற்ற அமைதியான வாழ்க்கை நிலையையே எதிர்பார்க்கின்றனர். இருப்பினும் போர்கள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

போரின் காரணங்களைப் பற்றி அறிவும், போரின் விளைவுகளைப் பற்றிய உணர்வும் போர் எழாமல் எப்பொழுதுமே தடுத்து விடுவதில்லை.

போர் என்பது என்ற கேள்விக்கு நாம் எளிமையாக பதிலளித்து விடமுடியாது. எண்ணற்ற காரணங்களினால் எண்ணற்ற தேவைகளுக்காக நிகழுகின்றன. எனவே, போருக்கான காரணங்கள் தனித்து இவை என எளிதில் கண்டுபிடித்து விட இயலாது. என்றாலும், போர்கள் தங்களுக்கென காரணங்களைக் கொண்டே ஏற்படுகின்றன. மேலும் போரிடுகின்ற அனைவரம் அப்போரின் காரணங்களால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. தங்களின் தலைவன் கூறுகின்ற போரின் காரணங்களை வீரர்கள் மறுக்காது ஏற்றுக்கொண்டு போரில் ஈடுபடுகின்றனர். இக்காரணங்கள் தனி மனிதனின் தன்மான உணர்வைத் தொடுபவைகளாகவும், அத்தலைவனின் கௌரவத்தைப் பாதிப்பவனாகவும் இருக்கலாம். அல்லது அத்தலைவனின் தனிப்பட்ட சுயதேவை பூர்த்திக்காகவும் போர்கள் எழலாம். தலைவன் எடுக்கின்ற தீர்மானங்களில் சண்டை இடுகின்ற இனைவரும் பங்கு கொள்வதில்லை. அவர்கள் தீர்மானங்களைக் கூறும் போது, அதனை ஆராயாமல் அதன்படி நடக்கவே எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே போரினைப் பற்றி ஆராய்கின்ற போது, போரிடுவது மக்களல்ல, தலைவனே போருக்குக் காராணமாகின்றான் என்பதை நாம் அறிய வேண்டும். ஒரு நாட்டின் தலைவன், இங்ஙனம் எண்ணற்ற காரணங்களுக்குப் போரினை உருவாக்குகின்றான். நாட்டின் நலன் கருதி நிகழும் போரினை விடப் பெரும்பாலும் தனது அரசியல் நிர்வாகத்தில் ஊழல் ஏற்படும்போதும், உள்நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சி குன்றும் போதும், பொருளாதாரப் பிரச்சனைகள், வேலைவாய்ப்பு வசதிகள், தேவைகள் அதிகரிக்கும் போதும், சமயத்தில் அத்தலைவனின் பதவிக்கு ஆபத்து வரும் போதும் அதைக் காத்துக் கொள்ளவும் மக்களின் கவனத்தைத் திசை திருப்பவும் ஓர் அரசியல் தலைவன் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு போரினைத் தொடங்குகிறான்.

போர்கள் மண், பொன், பெண் ஆகிய மூன்று ஆசைகளினால் முக்கிய மனிதத் தூண்டல்களின் விளைவில் நிகழுகின்றன. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப்படுத்த எண்ணி, அரசாள முயன்று போரினைத் தொடங்கலாம். ஐம்பது சதவிகிதப் போர்கள் உலகில் இந்த உந்துதல்களின் விளைவாகவே ஏற்பட்டு ஈருக்கின்றன. ஒரு நாடு பொருளாதார வளர்ச்சி குன்றும் போது பிற நாட்டின் மீது படையெடுத்துப் போரிட்டு அந்நாட்டின் செல்வங்களைக் கவர்ந்து செல்கிறது. இந்நிகழ்ச்சிகளை நாம் அந்நிய நாடுகளின் படை எடுப்புகளின் மூலமும், கஜினி முகமது, கோரி முகமது போன்றவர்களின் படையெடுப்பு மூலமும் கண்டிருக்கிறோம். இவற்றையன்றியும் ஒரு பெண்ணின் மீது ஒருவன் கொண்ட ஆசைக்காகவும் போர்கள் எழுந்துள்ளன. சீதைக்காக இராமாயணப் போரும், பத்மினிக்காக சித்தூர் போரும், நிகழ்ந்திருக்கின்றன.

உரத்த சிந்தனை :

சங்க புலவர்கள் வளமான வாழ்வியல் சிந்தனைகளை எல்லாக் காலத்திற்கும் ஏற்றவாறு தொலைநோக்குப் பார்வையில் முன்வைத்தார்கள்.

நாடா கொன்றா காடா கொன்றா (187)
யாதும் ஊரே யாவரும் கேளிர் (192)
உண்டால் அம்ம இவ்வுலகம் (182)
வழிபடுவோரை வல் அறிதீயே (10)
நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே (186)

நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று மன்னன் தான் மக்களுக்கு உயிராவான். அதனால் மக்களுக்குத் தான் உயிர் போன்றவன் என்பதை அறிந்து செயல்படுதல் வேல்மிகு சேனைகளை உடைய அரசனுக்கு கடமையாகும். இப்பாடலின் கருத்தை நோக்குங்கால்.

மனித நாகரிகம் தோன்றிய காலம் முதல் பல்வேறு நாடுகளில் பற்பல காலங்களில் பல சிந்தனையாளர்களும், கவிஞர்களும் எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு எத்தனையோ கருத்துக்களையும் சொல்லி வந்திருக்கிறார்கள் என்பது உண்மை.

**முடிவுரை :**

பண்டைய தமிழ் பன்னர்கள் ஆட்சி வீரம் மிக்கதாய் இருந்தது. அவ்வீரத்தில் அதிகாரமில்லா அடக்கம் உள்ளடங்கி இருந்தது. போரிலும் மக்களுக்கு பாதிப்பில்லாத நெறிகள் பின்பற்றப்பட்டன. போர் நிறைந்த காலத்தில் பின்பற்றப்பட்ட மனிதநேய ஆட்சி சிறப்பிற்குறியதுடன் இன்று பின்பற்றப்பட வேண்டிய நெறியாகிறது.

1. புறநானூறு – ஔவை சு. துரைசாமிப்பிள்ளை
2. சமூக உளவியல் – டாக்டர். செ.ரா.பரமேஷ்

# நான்மணிக்கடிகையும் வாழ்வியல்மும்

**முனைவர் ப.பூஞ்சோலை &**
**முனைவர் போ.சத்தியமூர்த்தி**

உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை,
உதவிப்பேராசிரியர் , தமிழியல்துறை,
கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
உமயாள்புரம், முசிறி
மதுரை - 625

தமிழக வரலாற்றில் முதற் சங்கம் என்றும், இடைச் சங்கம் என்றும், கடைச் சங்கம் என்றும் மூன்று நிலையில் தமிழ்ச்சங்கம் இருந்தமை தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப் பெறுகின்றன. இதில் கடைச் சங்கமாகிய மூன்றாம் நிலையின் இறுதிக்காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி என்று தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் உறுதி செய்வர். [1] இக்காலக் கட்டத்திற்குப் பிறகு கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிக்கும், கி.பி. 6ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் தான் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை என்றும் அவர்கள் நிறுவியுள்ளனர். [2] பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நான்மணிக்கடிகை நூலில் இடம் பெற்றுள்ள தனிமனித ஒழுக்க நெறிகளைத் தொகுத்துத் தருவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நான்மணிக்கடிகை:**

104 பாடல்களைத் தன்னகத்துக் கொண்ட நீதிநூல் இது. ஒவ்வொரு பாடலிலும் நன்னான்கு உண்மைப் பொருள்கள் சொல்லப் பெற்றிருத்தலால் இது நான்மணிக்கடிகை என்னும் பெயர் பெற்றது. இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ள பாடல்களைப் பெரும்பாலும் கொண்டுள்ளது. தொல்காப்பியம் கூறியுள்ள எண்வகை நூல் வனப்புக்களுள் அம்மை என்ற வனப்பின்பாற் படும் இந்நூல் என்பது தொல்காப்பிய உரையாசிரியரால் குறிக்கப் பெறுகிறது. [3] இப்பதினெண்கீழ்க் கணக்குக் காலத்தைப் பொது அடிப்படையில் கூற முடிகிறதே தவிர, இத்தொகுப்பு யாரால் எப்பொழுது தொகுக்கப்

---

[1]. சி.வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழ்இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1977, ப. 9

[2]. மேற்படி, ப. 28

[3]. தொல்காப்பியம், செய்யுளியல் ,பேராசிரியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1985, ப. 575

பெற்றது என்பது தெரியவில்லை. இலக்கண உரையாசிரியர்களுள் குணசாகரர், பேராசிரிரயர். நச்சினார்க்கினியர் ஆகியோரைத் தவிர மற்றையோர் பதினெண்கீழ்க்கணக்கை எடுத்துக் காட்டுக்களில் குறிப்பிடவில்லை.

நான்மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பிநாகனார் ஆவார். இவர் விளம்பி என்னும் ஊரில் பிறந்தவர் என்பதும், நாகன் என்னும் இயற்பெயர் உடையவர் என்பதும் இப்பெயரால் அறியப் படுகிறது. இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது நூலில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்தாகிய முதல்இரு பாடல்களால் நன்கு புலனாகின்றது. மற்ற இவரின் வரலாறு எதுவும் தெரியவில்லை. இவருடைய காலம் கி.பி. 4ஆம் நூற்றாண்டாகக் கூறலாம். இந்நூல் நூலாசிரியரின் புலமைத் திறத்தையும், உலகியல் அறிவையும் நன்கு புலப்படுத்துகின்றது. திருக்குறளைப் போல இந்நூல் முறையாக அமையவில்லை என்றாலும் உலக இயல்புகள் அடிப்படையில் நீதிகள் நன்கு வலியுறுத்தப் பெறுகின்றன. அந் நீதிகளில் ஒரே கருத்து பல பாடல்களில் பலவேறு கோணத்தில் அமைந்துள்ளன. இந்நூலில் தனிமனித வாழ்க்கை உயர்ந்து வீட்டுநெறியைப் பெறுவதற்குப் பல நீதிகள் கூறப் பெற்றிருக்கின்றன. அவற்றை வகைப்படுத்தி ஆய்ந்து பார்த்தால் தனிமனித ஒழுக்கத்திற்கு இந்நூல் வரையறுக்கும் நீதிகளை அறிய இயலும்.

**பெண்ணியல் நீதிகள்:**

சமுதாயத்தில் பெண்மை என்பது வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவதாகும். எனவேதான் வள்ளுவரும் பெண்மையைப் பேணுகின்ற அதிகாரத்திற்கு வாழ்க்கைத் துணைநலம் என்ற பெயரை அமைத்துள்ளார். தனிமனித வாழ்வில் பெண்மை அறநெறியில் அமையுமானால் ஒரு இல்லம் சிறந்து விளங்கும். இல்லம் சிறந்து விளங்குமானால் சமுதாயம் சிறப்புறும். எனவேதான் நான்மணிக்கடிகை

**“மனைக்கு விளக்கம் மடவார் மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர் ”**
**(பா. 105)**

என்று குறிப்பிடுகிறது. இதில் வீட்டுக்கு ஒளி போன்றவர் பெண்கள் என்றும், பெண்களுக்கு ஒளியாக விளங்குவது அவர்தம் புதல்வர் என்றும் குறிப்பிடுகிறார். இதனையே திருவள்ளுவரும்,

**“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு”[4]**

என்று குறிப்பிடுகிறார். இதே கருத்தைப் பிறிதொரு இடத்தில் கூறும்பொழுது,

**“மனைக்கு ஆக்கம் மாண்டமகளிர் ”**
**(பா.20)**

என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. இதன் பொருள் நல்லியல்பு , நற்செயல்கள் இவற்றின் மாட்சிமைப் பட்ட பெண்மக்கள் இருந்தால் , மனைவாழ்க்கை உயர்வைத் தரும் என்பதாகும். இக்கருத்தையே எதிர்மறை அமைப்பிலும் நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது.

**“பாழொக்கும் பண்புடையாள் இல்லா**
**மனை” (பா. 101)**

**“மனைக்குப் பாழ் வாள்நுதல்**
**இன்மை” (பா. 22)**

என்றும், என்ற இரண்டு நீதிகளிலும் நல்ல பண்புடைய பெண் இல்லை என்றால் மனையாகிய இல்லறம் விணாகப் போய்விடும் அதாவது பாழாகிப் போய்விடும் என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. இதனால் செயலாலும் குணத்தாலும் அறநெறி தவறாத மகளிர் மனைக்கு உரியவர்களாக அமைய வேண்டும் . அவர்கள் இருந்தால் மனை சிறக்கும். அத்தகைய பெண்கள் இல்லை என்றால் இல்லறம் பாழாகும் என்பது பெறப்படுகிறது.

**பெண்மையின் பண்புகள்**

பெண்களுக்குரிய பண்புகளில் நாணம் இன்றியமையாதது என்பதைப் பண்டை இலக்கணம் முதல் இக்கால நீதி இலக்கியங்கள் வரை குறிப்பிடுகின்றன.

**“அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப”[5]**

என்பது பெண்களுக்குரிய குணங்களில் நாணம் இன்றியமையாதது என்பதைக் குறிப்பிடுகின்ற சூத்திரமாகும். இதில் நாணம் என்பதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும் பொழுது, “காமக் குறிப்பு நிகழ்ந்தவழி படுவதோர் உள்ள ஒழுக்கம்” என்று உரை எழுதுவார். எனவே உள்ள ஒழுக்கமாகிய நாணம் இன்றியமையாதது என்பதை அறியமுடிகிறது. இந்த நாணத்தின் இன்றியமையாமையை நான்மணிக்கடிகையும் நன்கு வலியுறுத்துகிறது.

**“பெண்மை நலத்துக்கு அணிஎன்ப நாணம்”**
**(பா. 11)**

---

4 . திருக்குறள், 60

5 . தொல்காப்பியம், களவியல், நச்சினார்க்கினியர் உரை, சூ.8

என்றும்,

**"பேணிய நாணின் வரைநிற்பார் நற்பெண்டிர்"**

**(பா. 90)**

**என்றும்,**

**'கொடுங்குழை**

**'நல்லாரை நல்லவர் நாண்உவப்பர் அல்லாரை**

**அல்லார் உவப்பது கேடு"**

**(பா. 56)**

என்று கூறப்பெற்ற நான்மணிக்கடிகையின் நீதிகள் பெண்மைக்கு நாணம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றன. முதல் நீதியில் பெண்களுக்கு அழகு நாணம் என்று கூறப் பெற்றுள்ளது. இரண்டாவது நீதி நாணம் ஒரு எல்லை எனப்பட்டு, அந்த எல்லையில் முன்பின் தவறாது பேணி வாழ்பவர்கள் பெண்கள் என்று கூறப் பெற்றுள்ளது. மூன்றாவது நீதியில் வளைவான காதணியை அணிந்த பெண்களின்பால் நாணத்தை நல்இயல்பினை உடையவர்கள் விரும்புவார்கள். நாணத்தை அல்லாத பெண்கள்பால் தீயோர் விரும்புவது தீயஒழுக்கமே ஆகும் என்று குறிக்கப் பெற்றுள்ளது. எனவே நான்மணிக்கடிகை பெண்களுக்கு உரிய பண்பாக முதற்கண் கூறுவது நாணப் பண்பாகும். அடுத்து பெண்மைக்குரிய பண்பாகக் கற்பு ஒழுக்கம் வலியுறுத்தப் பெறுகிறது.

**"பட்டாங்கே பட்டொழுகும்**

**பண்புடையாள் காப்பினும்**

**பெட்டாங்கு ஒழுகும்**

**பிணைஇலி - முட்டினும்**

**சென்றாங்கே சென்றொழுகும்**

**காமம்" (பா. 92)**

இப்பாடலுக்கு உரை எழுதிய உரையாசிரியர் "நல்ல பெண் காவல் இல்லாவிடினும் கற்பு ஒழுக்கத்தையே மேற்கொண்டு ஒழுகுவாள். நற்பண்பு இல்லாதவள் எத்தனை காவல் செய்யினும் தான் விரும்பியவாறே பிறரைக் காதலித்து ஒழுகுவாள். காம இயல்பு எவ்வளவு இடையூறுகள் இருந்தாலும் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும்" என எழுதுவார். [6] உரையாசிரியர் குறிப்புப்படி ஒரு பெண்ணுக்குக் காவலாக அமைவது கற்பு ஒழுக்கமேயாகும்.

**'கற்பெனப் படுவது கரணமொடு புணர**

**கொளற்குறி மரபில் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குறி மரபினோர்**

**கொடுப்பக் கொள்வதுவே"[7]**

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி திருமண வாழ்க்கை ஏற்றுத் தக்க கணவனோடு வாழ்வது தான் கற்பு என அறியமுடிகிறது. எனவே தக்க கணவன் நினைவில் வாழுகின்ற பெண்கள் கற்புடையவர் என்பதும், கணவனோடு பிற ஆடவரையும் எண்ணுகின்றவர்கள் கற்பு நிலை தவறியவர்கள் என்பதும் பெறப்படுகிறது. இக்கற்புநிலையை நான்மணிக்கடிகை நன்கு வலியுறுத்துகிறது. இதனை மேலும் வலியுறுத்த,

**"நி8ற நின்ற பெண் நன்று பீடு**

**இலா மாந்தரின்" (பா. 15)**

நான்மணிக்கடிகை நீதி கூறுகிறது. இதன் பொருள் பெருந்தன்மை அமையாத ஆண்மக்களை விட, கற்பில் நின்று அடக்கம் உடைய பெண்மக்கள் நல்லவர் ஆவார்கள் என்பதாகும். அக்காலத்தில் ஆண்மக்கள் ஆள்வினைத் தன்மை உடையவர் ஆதலால் பெண்களைக் காட்டிலும் ஆண்மக்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால் அந்த ஆண்மக்கள் பெருந்தன்மை இல்லாது இருப்பார்களேயானால் அவர்களைக் காட்டிலும் கற்புடைய பெண்மக்கள் உயர்ந்தவர் என்று நான்மணிக்கடிகை கூறுவது நினைவு கூறத் தக்கதாகும். .

பெண்கள் கணவனைத் தவிரப் பிற தெய்வங்களை வணங்குவதில்லை. எனவே கணவனையெ தெய்வமாகக் கொள்ளுகின்ற பண்பு பெண்களின் பண்புகளில் ஒன்றாகும். இதனைத் திருவள்ளுவரும்,

**"தெய்வம் தொழாஅள் கணவன்**

**தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை"[8]**

என்று குறிப்பிடுவார். இதனை நான்மணிக்கடிகை ,

**"அ.்.தன்றி அணங்கல் வணங்கன்று பெண்:**

**(பா. 91)**

என்று குறிப்பிடும். இதன் பொருள் முன் கூறிய மூன்று கருத்துக்கள் அல்லாமல் கணவன் அல்லாது வேறு தெய்வங்களைப் பெண்மக்கள் வணங்குதல் இல்லை என்பதாகும். எனவே திருக்குறளும் நான்மணிக்கடிகையும் வலியுறுத்தும் இப்பண்பு பண்டைக் காலத்தில் பெண்களுக்கு உரிய

---

[6]. தி.சு. பாலசுந்தரம் பிள்ளை,(இளவழகனார்), நான்மணிக்கடிகை உரை,கழகப் பதிப்பு, 1980, ப.82

[7]. தொல்காப்பியம், கற்பியல், சூ.1

[8]. திருக்குறள், 55

பண்பாக விளங்கியிருக்கிறது எனத் தெரிகிறது.

பெண்மைக்குத் தாய்மைக் குணம் உண்டு. மக்களைப் பெற்று பெருவாழ்வு வாழுகின்ற பெண்கள் பெருமையுடன் போற்றப் பெறுவார்கள். நல்ல தாய் அமைவது பதலவர்கள் முன்செய்த வினையாகும் என்ற கருத்தை நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.

**'தாய்என்பவள் முந்துதான்**

**செய்த வினை" (பா. 45)**

இதன் பொருள் - முற்பிறப்பில் தான் செய்த நல்வினைதான் இப்பிறப்பில் மேன்மையான தாயாக அமைவாள் என்பதாகும். இத்தாயை விட வேறு கடவுள் இல்லை என்பதையும் நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது.

**"ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்"**

**( பா. 57)**

இதன்பொருள் - தாய்க்கு நிகராக மதிப்பதற்கு உரிய கடவுள் வேறுஇல்லை என்பதாகும். எனவே பெண்கள் தாய்மைப் பேறு பெற்றுத் தெய்வப் பண்புடையவர்களாக விளங்க வேண்டும் என்பதை நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது என்று கொள்ளவேண்டும். இத்தகைய பெண்கள் கணவன்வழி நடப்பார்களே ஆனால் இல்லறத்திற்கு இன்பம் தருபவர்கள் ஆவார்கள் என்ற கருத்தையும் நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது.

**"வகைஉடைப் பெண்இனிது பேணி**

**வழிபடின்" (பா. 39)**

என்பது அக்கருத்தைக் கூறும் நான்மணிக்கடிகை வரிகளாகும். பெண்மக்கள் இனிய சொற்களைச் சொல்லும் பண்புடையவர்களாக விளங்க வேண்டும் என்பது நான்மணிக்கடிகை தரும் அறமாகும். திருவள்ளுவரும்,

**"தற்காத்துத் தற்கொண்டான்**

**பேணித் தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"[9]**

என்று சொற்காத்து என்ற சொல்லால் பெண்மக்களுக்குச் சொல் இனிமை வேண்டும் என்பதை வலியுறுத்துவார். இதனை நான்மணிக்கடிகை, "காதலி சொல்லில் பிறக்கும் உயர்மதம்" (பா.7) என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு தனிமனித வாழ்க்கையில் நான்மணிக்கடிகை பெண்களுக்கு உரிய ஒழுக்கங்களை வரையறை செய்து வாழ்வியல் நலமாக அமைய அறம் கூறியுள்ளது.

### ஆடவர் உயர்வு பெற வழி

நான்மணிக்கடிகையில் இடம் பெற்றுள்ள பாடல்கள் பொதுவான வாழ்வியல் முறைக்கு வேண்டும் நீதிகளைச் சுருக்கமாக ஒன்றிரண்டு தொடர்களால் சுட்டிக் காட்டுவதில் முதன்மை நூலாக விளங்குகிறது. தனிமனிதப் பண்பு உயரவேண்டும் என்ற அடிப்படையில் அந்நீதி முறைகள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன. சமுதாயம் நலம்பெற வேண்டுமானால் தனி மனித ஒழுக்கம் சீர்பெற வேண்டும்.

**"எள்ளல் பொருளது இகழ்தல் ஒருவனை**

**உள்ளல் பொருளது உறுதிச்சொல்**

**- உள்ளறிந்து**

**சேர்தல் பொருளது அறநெறி பன்னூலும்**

**தேர்தல் பொருளே பொருள்"**

**(பா. 53)**

இப்பாடல் தனிமனிதன் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கமுறைகளை வகுத்துச் சொல்கிறது. சமுதாயத்தில் வாழும் ஒருவன் நீக்குவதற்கு உரிய பண்பு எது என்றால் பிறரை இகழும் சொற்களை நீக்க வேண்டும். ஏற்றுக் கொள்வதற்கு உரிய பண்பு எது என்றால் பெரியோர் கூறும் உறுதிச் சொல்லாகும். உண்மை அறிந்து தெளிந்து கடைப்பிடித்தற்கு உரியது அற வழியாகும். அதுபோலப் பல நூல்களையும் ஆராய்ந்து தேர்தவதற்குரிய பொருள்கள் மெய்ப் பொருள்களாகும் என்ற நீதிகளை இப்பாடல் தருகிறது. எனவே தனி ஒருமனிதன் எக்காலத்திலும் தன்னைவிடத் தாழ்ந்தவர்களை இகழ்தல் கூடாது.

இதனையே வலியுறுத்துவதாக "எள்ளற்க என்றும் எளியர்:" என்று பிறிதோரிடத்திலும் கூறுகிறார். (பா. 3) அது போலச் சான்றோரைத் துணையாகக் கொண்டு அவர்தம் அறவுரைகளைக் கேட்டு வாழ்தல் வேண்டும் என்பதும் இங்கு கூறப்படும் நீதியாகும். பலநூல்களைக் கற்க வேண்டும் என்பதனையும், கற்றதனால் மெய்ப்பொருளை உணரமுடியும் என்பதையும் இப்பாடல் அறிவுறுத்துகிறது. தனிமனிதனுடைய ஒழுக்கம் சினமில்லாத வாழ்வாக அமைய வேண்டும். இதனை நான்மணிக்கடிகை, "வெல்வது வேண்டின் வெகுளி விடல்" (பா. 17) என்று குறிப்பிடுகிறது. இதன்பொருள் பிறரை வெல்ல வேண்டுமானால் தன்னிடத்தில் ஏற்படும் சினத்தை விடவேண்:டும் என்றும்,

"கெடுப்பின் வெகுளி கெடுத்து விடல்," (பா.82) என்றும் குறிப்பிட்டுத் தனி மனிதன்

---

[9]. திருக்குறள், 56

சினத்தை விட்டுவிட வேண்டும் என்ற அறத்தை நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது. இதனையே திருவள்ளுவரும்,வெகுளாமை என்ற அதிகாரத்தில் வலியுறுத்துகிறார்.

**"சினம்என்னும் சேர்ந்தாரைக்**
**கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்"[10]**

என்ற குறளும சினமானது தன்னை மட்டும் அழிக்காமல் தன்னைச் சார்ந்தவரையும் அழித்துவிடும் என்று சினத்தின் கொடுமையைக் குறிப்பிடுகிறது.

தனிமனிதன் மெய்ம்மை வாய்ச்சொல் உடையவனாக வாழ்தல் வேண்டும். பொய்யாமை அவனுக்கு வாழ்வு தரும். "புகழ் செய்யும் பொய்யா விளக்கம்" (பா. 24) என்று நான்மணிக்கடிகை பொய்யாமையின் பெருமையைக் குறிப்பிடுகிறது. அதாவது பொய்யாமையாகிய விளக்கம் எங்கும் புகழை உண்டாக்கும் என்பது அதன் பொருளாகும். இதனையே திருவள்ளுவரும்,

**"எல்லா விளக்கும்**
**விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு"[11]**

என்ற குறட்பாவில் விளக்காகப் பொய்யாமையைக் குறிப்பிடுவார். இதனையே பின்வந்த பக்தி இலக்கியமும் வலியுறுத்துகிறது.

**"பொய்யா நாவதனால்**
**புகழ்வார்கள் மனத்தினுள்ளே**
**மெய்யே நின்றுஎரியும் விளக்கே**
**ஒத்த தேவர்பிரான்"[12]**

என்று குறிப்பிடுகிறது. எனவே பொய்த்தலை நீக்கி மெய்ம்மையை விளக்காக்கி வாழ்க்கையில் ஒளியுடன் திகழவேண்டும் என்பது நான்மணிக்கடிகை காட்டும் நீதியாகும்.

தனிமனிதன் அறிவு நலம் பெற்றுச் சிறக்க வேண்டும். அவ் அறிவு நலம்பெறக் கல்வி நலம் பெறவேண்டும். கல்வி இல்லை என்றால் வாழ்க்கையே பாழாகும். எனவே பண்டைத் தமிழ் நீதி நூல்கள் அனைத்தும் இக்கருத்தை வலியுறுத்தும். நான்மணிக்கடிகையும் ,

**"தனக்குப் பாழ் கற்றறிவு இ.ல்லா உடம்பு"**
**(பா. 22)**

என்றும்,

"தனக்குஒன்று உறுவழி நிற்பது அறிவு"

என்றும்,

"ஒருவற்குக் கற்றலின் வாய்த்த பிறஇல்லை"

என்றும்,

"ஒருவன் மதிநன்று மாசறக் கற்பின்"

என்றும்,

"கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத
பேதையான் வீழ்வான்"

என்றும் கல்வியின் சிறப்பினைப் பற்றி நான்மணிக்கடிகை பலவாறு குறிப்பிடுகிறது. இவற்றின் மூலம் கல்வியறிவு இல்லாத உடம்பு வீணானது என்பதும், கல்வி துணையாக அமைந்து

வாழ்வில் துயர்களைக் கெடுக்கும், உயர்வைத் தரும் என்ற செய்திகள் இவற்றின் மூலமாகப் பெறப்படுகிறது. இதனையே திருவள்ளுவர் குறிப்பிடும் பொழுது,,

**"அறிவற்றம் காக்கும்**
**கருவி செறுவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அறன்"[13]**

என்று குறிப்பிட்டு, கல்வி அறிவானது அழிவு வராமல் காக்கக் கூடிய கருவியாகும் என்று குறிப்பிடுவதை நான்மணிக்கடிகை தொடர்களோடு ஒப்பிட்டுக் காணமுடிகிறது.

5. கல்வி அறிவுடைய தனிமனிதன் தன்னுடைய உணவு இன்பத்திற்காகப் பிற உயிரைக் கொன்று தின்பது மிகவும் குற்றமுடையதாகும் என்பதையும், நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. உண்பதைப் பற்றி நான்மணிக்கடிகை,

**"இனிது உண்பான்**
**என்பான் உயிர்கொல்லாது**
**உண்பான்"**
**(பா.61)**

என்றும்,

**"அலைப்பான் பிறஉயிரை**
**ஆக்கலும் குற்றம்**
**விலைப்பாலின் கொண்டு**
**ஊன்மிசைதலும் குற்றம்"**
**(பா.28)**

என்றும்,

10 . திருக்குறள், 306

11 . மேற்படி, 299

12 . சுந்தரமூர்த்தி தேவாரம், திருக்களிப்பாலைப் பதிகம், பா. 9

13 . திருக்குறள், 421

"ஊன் உண்டல் செய்யாமை

செல்சார் உயிர்க்கு" (பா. 40)

என்றும் குறிப்பிட்டு ஊன் உணவை உண்ணுதலைத் தனிமனிதன் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இப்பகுதியில் இனிய உணவை உண்பவன் என்று சொல்லப் படுபவன் உயிர்களைக் கொன்று உண்ணாது, காய்கறி உணவுகளையே உண்ணுபவன் ஆவான் என்பதை முதல் தொடர் விளக்குகிறது. அடுத்துப் பிற உயிர்களைக் கொன்று உண்பதற்காக உயிரினங்களை வளர்த்தலும் குற்றம். அவ்வாறு இல்லாமல் பிற உயிர்களின் ஊனை விலைக்கு வாங்கி உண்ணுதலும் குற்றம் என்று குறிப்பிடுகிறது. வள்ளுவரும் இந்நீதியை, புலால் மறுத்தல் என்ற அதிகாரத்தில் பலவாறு கூறுகிறார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக்

கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்"[14]

என்று எல்லா உயிராலும் போற்றிப் புகழக்கூடிய நற்பண்பாகப் பிற உயிரைக் கொன்று தின்னாமையை வலியுறுத்துவார். தனிமனிதன் தன் வாழ்க்கையில் அஞ்ச வேண்டுவதற்கு அஞ்ச வேண்டும். அதாவது தீய வினைகளைச் செய்வதற்கு அஞ்சுதல் வேண்டும். அஞ்சக் கூடாதனவற்றுக்கு அஞ்சக் கூடாது என்பதையும் நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது.

"அஞ்சாமை அஞ்சுதி அஞ்சுக "

(பா.27)

என்பது

நான்மணிக்கடிகையின் கூற்றாகும். இதனால் பழிபாவங்களுக்கு அஞ்சாமையைக் கண்டு அஞ்சுதல் வேண்டும் என்று விதியனை அது வகுக்கின்றது.. தனிமனிதன் வாழ்வு சிறக்க வேண்டுமானால் செல்வம் சேர்த்தலும் வேண்டும், செல்வம் இல்லாத வாழ்வு வறுமையை ஏற்படுத்தும். வறுமையும் தனிமனிதச் சிந்தனையை அழிக்கும். எனவே செல்வத்தைச் சேர்த்து அறம் செய்ய வேண்டும் என்று நீதி இலக்கியங்கள் குறிப்பிடும். நான்மணிக்கடிகையும் செல்வம் சேர்ப்பதைப் பலவாறு வற்புறுத்துகிறது.

"தத்தம் வளத்தனைய வாழ்வார் வழக்கு"

(பா. 73)

என்றும்,

"திருவின் திறல்உடையது இல்லை"

(பா. 32)

என்றும்,

"தன்னொடு செல்வது வேண்டின் அறம்செய்க"(பா.17)

என்றும் குறிப்பிட்டுச் செல்வத்தைச் சேர்த்து அறம் செய்ய வேண்டும் என்ற நீதியை வலியுறுத்துகிறது. இதனையே திருவள்ளுவரும்,

"செய்க பொருளைச் செறுநர்

செருக்குஅறுக்கும்

எ∴குஅதனிற் கூரியது இல்"[15]

என்று குறிப்பிட்டு, பகைவரின் படைக்கலத்தை எதிர்ப்பதற்குப் பொருள் போல மற்றும் ஓர் கருவி இல்லை எனக் குறிப்பிடுகிறார். இதனையே.

"பெரிதாகிய பகையை வென்று

பேணாரைச் தெருதலும்

------------------------------------------ ----------

-------தரும் எனப்

பிரிவெண்ணிப் பொருள்வயிற

சென்றநம் காதலர்"[16]

என்றும்,

"நண்ணார்த் தெருதலும்

தற்செய்வான் சென்றார்த் தருஉம்"[17]

என்றும்,

"செய்க பொருள் யாரும் செறுவாரைச் செறுகிற்கும்

எ∴கு பிறிதில்லை"[18]

என்று பிற இலக்கியங்களும் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்பதையும், செல்வத்தால் அறம் செய்ய வேண்டும் என்பதையும், செல்வத்தால் பகைவரை வெல்ல முடியும் என்பதையும் குறிப்பிடுகின்றன. தனிமனிதன் தனித்து வாழமுடியாது. பலரோடு ஒன்று சேர்ந்துதான் வாழவேண்டும். ஒற்றுமை என்பது மிக இன்றியமையாதது ஆகும். ஒற்றுமை இல்லை என்றால் கேடு விளையும். இதனை நான்மணிக்கடிகை குறிப்பிடும் பொழுது,

"மொய்சிதைக்கும் ஒற்றுமை

இன்மை ஒருவனைப்

பொய்சிதைக்கும் பொன்போலும்

மேனியைப் - பெய்

---

14. மேற்படி, 260

15. திருக்குறள், 759

16. கலித்தொகை பா. 11, வரி 2-4

17. கார்நாற்பது, பா.7

18. சீவகசிந்தாமணி, பா. 497

**கலம்சிதைக்கும் பாலின்**

**சுவையைக் குலம்சிதைக்கும்**

**கூடார்கண் கூடி விடின்" (பா.23)**

இப்பாடல் தக்கவரோடு ஒற்றுமை இல்லாமை ஒருவரது வலிமையை ஒழிக்கும். பொய்ம்மையான ஒழுக்கம் பொன் நிறத்தைப் போன்ற உடம்பின் அழகை வாடச் செய்யும். நிரப்பி வைக்கப் பெற்ற பாண்டம் சுத்தமாய் இல்லை எனில் பாலின் இனிய சுவையைக் கெடுக்கம். கூடாத் தகாதவரிடம் நட்புக் கொண்டு கூடினால் குலம் சிதைக்கப் படும் என்று குறிப்பிட்டு, ஒற்றுமை இல்லாமை வலிமையைக் கெடுக்கும் என்பதை வலியுறுத்தி, அதற்கு ஒத்த பிற நீதிகளையும் பாடல் கூறுகிறது. இவ்வாறு தனிமனிதன் ஒழுக்கத்தோடு விளங்கினால் அவனே தன்னுடைய குலத்திற்கு ஆசிரியனாகத் திகழலாம். மகனுக்கு அமைந்த தாயும் நல்வினையால் நல்லவளாக அமைவாள் என்பதை,

**"மேதக்க தந்தை**
**எனப்படுவான் தன்உவாத்தி தாய்என்பாள்**
**முந்துதான் செய்த வினை"**

**(பா.45)**

என்ற பாடற் பகுதியின் மூலம் நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது. சங்க இலக்கியமான புறநானூறும்,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக்**
**கடனே"[19]**

என்று வாழ்வாங்கு வாழ்ந்த தந்தையினுடைய கடமை புதல்வனைச் சான்றோன் ஆக்குதல் வேண்டும். அவ்வாறு சான்றோன் ஆக்குவதற்குத் தனிமனிதன் ஒழுக்கம் உடையவனாக வழிகாட்டும் உரிமை உடையவனாக அமைய வேண்டும் என்பது பெறப்படுகிறது. இவ்வாறு நான்மணிக்கடிகை தனிமனிதனாகிய ஆண்மகனின் வாழ்வு சிறக்கப் பல நீதி முறைகளை வகுத்தும் பகுத்தும் கூறுகிறது.

**முடிவுரை**

தமிழிலக்கியப் பாகுபாட்டில் நீதி இலக்கியங்கள் தனித்த ஒரு பெருமையினை உடையனவாகும். தமிழ்மொழியில் இடம் பெற்றுள்ள நீதி இலக்கியங்களில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் குறிப்பிடத் தக்கனவாகும். போற்றிப் புகழத் தக்கனவும் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்ற நான்மணிக்கடிகை குறிப்பி:டும் தனிமனித நிலையில் பெண்மைக்குக் கூறப்பட்ட நீதிகளும், ஆடவர் வாழ்வில் கூறப்பட்ட நீதிகளும் இதில் தொகுத்து உரைக்கப் பெற்றுத் தனிமனிதன் வாழ்வாங்கு வாழ அந்நூல் கூறும் நீதிமுறைகள் மறுவாசிப்பிற்கு உரித்தாக்கப் பெற்றுள்ளது.

---

19 . புறநானூறு, பா. 312

# சங்க இலக்கியங்களில் சோழர்களின் ஊர்ப்பெயரும் ஆட்சிச்சிறப்பும்

**முனைவர் கே.எம்.சுப்பிரமணியம்,**
துணைப்பேராசிரியர்,
வரலாற்றுப் பிரிவு,
தொலைதூரக் கல்வி இயக்ககம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்,
சிதம்பரம் - 608 002.

பண்டைய காலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆட்சி புரிந்து வந்தனர். சோழ மன்னர்கள் நம் தமிழகத்தில் பகுதியாகிய சோழ மண்டலத்தை ஆட்சி புரிந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றன.

கி.பி.3 நூற்றாண்டில் மகத நாட்டின் செங்கோல் செலுத்திய அசோக சக்கரவர்த்தியை உணர்த்தும் கல்வெட்டுகளில் சோழர் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. கி.பி முதல் நூற்றாண்டில் மேனாட்டிலிருந்து தமிழகம் வந்த வரலாற்று ஆசிரியரான தாலமி என்பவரின் வரலாற்றுக் குறிப்புகள் என்ற நூலிலும் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது[1] என்று தீ.வை சதாசிவ பண்டாரத்தார் கூறுகின்றார். இதன் மூலம் சோழர்கள் பழமையும் பெருமையும் வாய்ந்த குடியினர் என்பதை அவர்கள் போர் புரிந்த இடங்கள் ஆகியவற்றின் மூலம் காணலாம். சோழர் என்ற சொல்லுக்கு "கர்னல் ஜெரினி என்பவர் கோலா என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து சோழ என்ற சொல் வந்தது என்பர். இச்சொல்லுக்கு கருப்பு தென்னிந்தியர் என்பது பொருள். மேலும் சோழம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம். என்று கூறுவர்."[2] இக்கூற்றுப்படி சோழம் விளைவிக்கும் வளம் நிறைந்த நாட்டை உடையவர்கள் 'அர்' விகுதி சேர்த்து சோழர் என்று வழங்கப்பட்டிருக்கலாம் என்று தெளிவுபடுத்துகின்றது.

சோழர்கள் செங்கோல் செலுத்திய திருவுடையப் பெருநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், பழையாறை நகர் போன்றவையாகும். இந்நகரங்களில் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் தலைநகரங்களாக விளங்கியது.சோழநாடானது காவிரிக்கரையில் அமைந்துள்ள பகுதியாகும். இதன் தலைநகரம் திருச்சிராப்பள்ளி

மாவட்டத்திலுள்ள ‘உரையூர்’ ஆகும். சோழ நாட்டின் எல்லையாக வடக்கில் திருப்பதையும் தெற்கில் வெள்ளாறு, கிழக்கில் கடல், மேற்கில் பழனிக்கும் கருருக்கும் இடைப்பட்ட பகுதியைக் கொண்டமைந்திருந்தது. ஆனால் மேற்கு எல்லைப் பகுதி மட்டும் காலத்திற்கு காலம் மாறுபட்டிருந்தது என்பதை,

**“கடல் கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு**

**குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்**

**ஏனாட்டுப் பண்ணை யிருபது நாற்காதஞ்**

**சோணாட்டுக் கொல்லையெனச் சொல்”**[3]

என்ற பழம்பாடல் விளக்குகிறது. மேலும் கோட்டைக்கு கிழக்கு, கடற்கரைக்கு மேற்கு, தெற்கு வடக்கு ஆகிய எல்லைக்குட்பட்ட இருபத்து நான்கு காத தூர நிலப்பரப்பு சோழநாட்டின் எல்லையாக அமைந்திருந்ததை புலப்படுத்துகிறது.

**சோழநாட்டு ஊர்கள்**

பழந்தமிழகத்தைச் சோழர்கள் ஆண்ட நாடு பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. “சோழர்களுடைய ஊர்கள் வளத்தோடு இருந்தன.சோழர் காலத்தில் சிற்றூகளே அரசியல் வாழ்வின் மையங்களாகவும், சமூக அரசியல் பணிகளில் முதன்மையான திகழ்ந்தன”[4] என்று கூறுவர்.

**ஆவூர்**

‘ஆ’ என்பது பசுவைக் குறிக்கும் சொல். மேலும் இது ஆச்சாமரத்தையும் குறிக்கும். ஆவூர் என்பது சோழநாட்டில் உள்ள ஊர் ஊராக கொடுமுடி என்னும் சேர மன்னனை வென்று சோழன் கைப்பற்றிய ஊர் என்று கூறலாம். இதனை அகநானூற்றின் ஆமூர்க் கவுதமன் சாதேவனார் என்பவரின் பாடலில்,

**“சேண் விளங்கு சிறப்பின் - ஆமூர் எய்தினும்**

**ஆண்டு அமைந்து உறையுநர் அல்லர”**[5]

(அகம் - 145)

என்று தெளிவுபடுத்துகிறார். தன்மை உடைய நீண்ட மதில் சுவரை பெற்ற இவ்வூர் குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கே அமைந்திருக்கலாம்.

**ஆலமுற்றம்**

சோழ நாடானது கோட்டை மதில் சுவரையும், உயர்ந்த மாடங்களையும் கொண்டு விளங்கியது. சோழனின் ஆட்சி பகுதியில் ஒன்றாக அமைந்திருந்த ஆலமுற்றம் என்ற ஊரில் மூன்று கண்களையுடைய சிவபெருமான் கோவில் இருந்ததையும் சோழ மன்னர்களால் பாதுகாக்கப்பட்டது என்பதையும்,

**“நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்,**

**ஆலமுற்றம் கவின் பெறத் தைஇய”** [6]

(அகம் - 18)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளால் அறியமுடிகிறது. இப்பாடலின் மூலம் சோழர்களின் பக்திச் சிறப்பையும் கலை ஆர்வத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது.சோழ மன்னர்களால் கட்டப்பட்ட சிவாலயங்கள் இன்றும் காவிரி தென்கரைத்தலங்கள், வடகரைத்தலங்கள் என்று அமைந்திருப்பதைக் காணலாம்.

**இடையாறு**

கரிகாலன் கரிகாலச்சோழன் ஆட்சி ஊர் இடையாறு எனக் கருதலாம். இவ்வூரில் வறுமையில் தளர்வுற்றவர்களைச் சோழன் ஆதரித்தான் என்பதை அகநானூற்றுப் பாடல்,

**“நெடுங்கால் மாஅத்துக் குறும்பெறை பயிற்றும்**

**செல்குடி நிறுத்த பெரம்பெயர்க் கரிகால்**

**வெல்போர்ச் சோழன் இடையாற்று அன்ன**

**நல்லிசை வெறுக்கை தருமார்”**[7]

(அகம் - 93)

என்ற அடிகள் வழியாக அறியலாம். இதன் மூலம் சோழனின் கொடைச் சிறப்பைக் காண முடிகிறது. மேலும் சோழர்கள் ஆட்சி செய்த பகுதிகளான உறந்தை, குடவாயில், செல்லூர் ஆகிய ஊர்பெயர்கள் குறித்து அகநானூற்றின் 93, 44,220, 96, 356 ஆகிய பாடல்களில் காணமுடிகின்றது.

**சோழ மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு**

தமிழகத்தில் சோழ மண்டலம் நீண்ட எல்லைப் பரப்பை உடையது. சோழ அரசர்கள் இந்த பெறும் நிலப்பரப்பை ஆட்சி செய்தனர். சோழ அரசர்கள் கி.மு 3 நூற்றாண்டிற்கு முற்பட்ட சிபி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன், கி.மு 3 நூற்றாண்டில் சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, கி.மு இரண்டாம் நூற்றாண்டில் மனுநீதிச் சோழன், கரிகாலன் ஆகியோரும் கி.பி 1 முதல் கி.பி 300 வரை ஆட்சி செய்த சோழ மன்னர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

**சிபிச் சக்கரவர்த்தி**

சோழ மன்னர்களில் முதன்மையானவனாக சிபிச்சக்கரவர்த்தி

சோழன் திகழ்கிறான். சோழ மரபின் பெருமையை கூறும் இடங்களில் எல்லாம் சோழமன்னனை சங்கப்புலவர்களும் பிற புலவர்களும் வியந்து பாடியுள்ளனர் பருந்திற்கு அஞ்சி தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவினை காக்க தன் தசையை கொடுத்தான் இதனை,

**“நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்**

**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை”**[8]

என்ற பாட்டு வரிகளால் அறியமுடிகின்றது சோழனின் மனிதநேயத்தை படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் சிபிச்சக்கரவர்த்தியின் செயலை குறிக்கும் விதமாக கலிங்கத்துப்பரணியில்,

**“உடல் கலக்கற வரிந்து தசையிட்டும் ஒருவன்**

**ஒருதுலைப் புறாவொ டொக்கநிறை புக்க புகழும்”**[9] (புறம் - 39)

என்று கூறுகிறது. இக்கருத்தையொட்டிச் சிலப்பதிகாரத்தில்,

**“தன்னகம் புக்க குறுநடைப் புறவின்**

**தபுதி அஞ்சிச் சீரை புக்க**

**வரையா ஈகை உரவோன் மருக”**[10]

என்று விளக்குகின்றது இதனால் சோழன் பல்வேறு காலங்களிலும் பல்வேறு புலவர்களால் புகழப்பட்டுள்ளது தெளிவாக காணலாம்.

**தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன்**

சங்க காலத்தில் அரசர்களுக்கு வீர உணர்ச்சியை ஊட்டுபவர்களாக புலவர்கள் பல பாடல்களைப் பாடியுள்ளனர். தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் சிறந்த வீரன் என்றும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பிற்காலச் சோழ மன்னன் ஒருவனை நப்பசலையார் என்ற பெண் புலவர் வியந்து பாடியதை

**“............. சார்தல்**

**ஒன்னார் உட்கும் துன்னரும் கருந்திறல்**

**தூங்கெயில் எறிந்தநின் ஊங்கனோர் நினைப்பின்**

**அடுதல்நின்புகழ் அன்றோ”**[11]

(புறம் - 39)

என்னும் வரிகளால் அறியமுடிகிறது. அதாவது அசைந்து கொண்டிருந்த பகைவரது மதிலை அழித்த வீரவாளை அணிந்த தோளையுடையவன், அதனால் “தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்” எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இவன் தூங்கெயில் எறிந்த செயலை, சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி இடம் பெற்றுள்ள பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி**

சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியின் காலம் கிமு 200 முதல் 270 வரை ஆகும். இக்காலத்தில் மோரியர் என்பாரும், வடுகர் என்பாரும் வாழ்ந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. வடநாட்டு மன்னர்களாகிய மோரியர் தென்னாட்டிற்கு வருவதற்காக தமிழகத்தின் வடஎல்லையில் ஆட்சி புரிந்த வடுகரைத் துணையாகக் கொண்டு வருகை புரிந்தனர். இதனை,

**“கனைகுரல் இசைக்கும் விரைசெலற் கடுங்கணை**

**முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்**

**சென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு”**[12]

என மாமூலனார் பாடல் வெளிப்படுத்துகிறது. இங்ஙனம் தென்னார்க்காடு கூட்டம் வரை வந்தவரையும் மோரியர் மற்றும் கோசர்கள் இளஞ்சேட்சென்னி என்னும் சோழன் எதிர்த்து புரிந்தான் என்பதை (சிலப் - 62-65) அகநானூற்றுப் பாடல் 375 மூலம் அறிய முடிகிறது.

**கரிகாலன்**

சங்க காலத்தில் வாழ்ந்த சோழப்பேரரசர்களில் தலை சிறந்தவது விளங்கியவன் கரிகாலன். பண்டைய காலத்தில் “கரிகாலன” என்ற பெயரில் இரு சோழ மன்னர்கள் வாழ்ந்துள்ளனர். “இமயம் சென்ற கரிகாலனுக்கு முன்னிருந்த சோழர் இருவரைப் பாடியுள்ள பரணர் கரிகாலன் ஒருவனைப் பற்றி தம் பாடல்களில் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் இப்பரணர் இக்காலத்தவர் இல்லை. இதனால் அவர் கூறிய செய்திகள் செவிவழிச் செய்தியாக இருக்கலாம். இரண்டு கரிகாலனைப் பற்றி பாடிய புலவர்கள் அவர்கள் மேற்கொண்ட போர்கள், அவர்களின் பகை மன்னர்கள் ஆகியோர் வேறு வேறானவர் ஆவர். எனவே இரண்டு கரிகாலர்கள் ஆட்சி புரிந்தனர் என்பதனை மா. இராசமாணிகனார், **“இலங்கை மீது படையெடுத்த காலம் கிமு இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று மகாவம்சம் கூறுகின்றது.**”[13] கூறுகிறார். இதன் மூலம் காலம் கி.மு 160 முதல் 140 எனக் கூறுவர். சோழர் படையெடுத்தனர் என்று கூறுவதன் மூலம் அக்காலத்தில் வாழ்ந்த சோழன் முதல் கரிகாலனுடைய தந்தை அல்லது பாடலாக இருக்கலாம்.

முதல் கரிகாலன் கி.மு 120 முதல் கி.மு 90 வரை ஆகும். சோழ மன்னனை வெண்ணிக்குயத்தியார், கழாத்தலையார் ஆகியோர் பாடியுள்ளனர் இவன் சென்னி மரபைச் சார்ந்தவனாக அழுந்தூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் என்பதை,

**“காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்**

**ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்**

**இமிழிசை முரசம் பொருகளத்து ஒழிய**

**பதினொரு வேளிரொடு வேந்தர் சாய**

**................................................................**

**பொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே.”**[14]

கரிகாலன் வெண்ணி வாயில் என்ற இடத்தில் சேரன், பாண்டியன் ஆகிய இரு மன்னர்களையும் பதினொரு வேளிரையும் வெற்றி பெற்றான் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம். மேலும் கரிகாலன் குறித்து அகநானூற்றின் 125 126 மற்றும் புறநானூற்றில் உள்ள 65 66ஆவது பாடல்களில் செய்திகள் இடம் பெற்றுள்ளது இங்கு சுட்டத்தக்கது.

**போர்வைக் கோப்பெருநற்கிள்ளி**

போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, தித்தன் என்ற சோழனின் மகன். நாடிழந்து வறுமையுற்றுப் புல்லரிசிக் கூழையயுண்டவன். இவனது ஊரைக் கைப்பற்ற ஆமூர் மல்லன் வந்ததால் அவனைப் பொருது கொன்ற சிறப்பு மிக்கவன் என்பதை,

**“ஊர்கொள வந்த பொருநனொடு**

**ஆர்புனை தெரியல் நெடுந்தனை போரே”** [15]

என்ற பாடல் வழியாக அறியலாம். இப்போரானது விரைவாக நடந்து முடிந்த போராகும். மன்னர்கள் எவ்வளவு வறுமையுற்றாலும் தன் நாட்டினைப் பிறர் கைப்பற்ற வந்தால் போர் செய்து வெற்றியும் பெற்றனர் என்பது இதன் மூலம் புலனாகிறது.

**சோழன் நலங்கிள்ளி**

கரிகால் பெருவளத்தான் மகன் சோழன் நலங்கிள்ளி. இவன் பகைவர் அஞ்சுமாறு பெரியதொரு நாட்டை ஆண்டு வந்தான். இவரசனைப் பற்றி புறநானூற்றில் பத்து பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முதுகண்ணன், சாத்தனார், கோவூர்க்கிழார், ஆலத்தூர்க்கிழார் ஆகியோர் பாடிய பாடல்களின் இவ்வரசனின் வரலாறு புலனாகிறது. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரும் சோழர் குடியில் சிறப்புடைய முறைமையால் பொருளும், இன்பமும் அறத்தின் பின்னே தொன்றும் காட்சி போல இருந்தனர். வலிமை வாய்ந்த நலங்கிள்ளி வஞ்சினம் உரைத்து நெடுங்கிள்ளியின் ஆவூர் கோட்டையை முற்றுகையிட்டான். நலங்கிள்ளியின் போர் யானைகள் நெடுங்கிள்ளியின் ஊரைப் பாழாக்கின. இதனைக் கண்ட புலவர் கோவூர்க்கிழார்,

**“அறவையும் மறவையும் அல்லையாகத்**

**திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்**

**நீள் மதில் ஒருசிறை ஒடுங்குதல்”**[16]

என்று கோட்டைக்குள் ஒளிந்திருக்கும் நெடுங்கிள்ளியிடம் கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளுதல் நாணமுடைய செயலாகும் என்று கூறுகின்றார்.

**முடிவுரை**

சோழ நாட்டின் எல்லைகள், தனித்தன்மை தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளன. சோழ மன்னர்கள் ஆட்சியில் நடைபெற்ற போர்கள், சோழர்களின் கொடைத் தன்மை மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. வறுமையில் வாடிய புலவர்களை ஆதரித்தது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. நாட்டின் செல்வ செழிப்பும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. தி.வை. சதாசிவபண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி - 1, பக். 2.
2. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தமிழக வரலாறும் பண்பாடும், பக். 91.
3. ந.சி. கந்தையா, தமிழகம், பக். 83.
4. மேலது, பக். 187.
5. அகநானூறு. பாடல் எண். 159.
6. மேலது, பாடல் எண். 18.
7. மேலது, பாடல் எண். 93.
8. புறநானூற்று, பாடல் எண். 46
9. கலிங்கத்துப்பரணி, பாடல் எண். 190
10. சிலம்பு, வழக்குரை காதை, வரிகள் 62 - 65
11. புறநானூறு, பாடல் எண்.39
12. அகநானூறு, பாடல் எண்.181
13. மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பக். 34
15. புறநானூறு, பாடல் எண்.45
16. மேலது, பாடல் எண்.33.